


கணபதிதுணை.

# செங்குந்தர்

# குலப்பிரகாசிகை.

இஃது

கோவைச் சாரதாவிலாஸ செந்தமிழ்ச் சங்கக்
காரியதரிசி
சி. கு. நாராயணசாமி முதலியாரால்
பலசாத்திரங்களினின்றுந்
திரட்டியது.

முதற்பாகம்.

சென்னை:
தாம்ஸன் அண்டு கம்பெனியில்
பதிப்பிக்கப்பட்டது.

1908.

விலை அணா 12.] [All Rights Reserved.

உ

கணபதிதுணை.

# செங்குந்தர்

# குலப்பிரகாசிகை.

இஃது

கோவைச், சாரதாவிலாஸ செந்தமிழ்ச்சங்கக் காரியதரிசி,

சி. கு. நாராயணசாமி முதலியாரால்,

பலசாத்திரங்களினின்றும்

தொகுத்தும், புனைந்தும், புதுக்கியுந்தர

போளுவாம்பட்டி

கருணீகரும், வித்வானும், பேரூர் தேவஸ்தான மானேஜருமாகிய

ஸ்ரீமாந் ஆறுமுகம் பிள்ளையவர்களால்

பிழையறப் பரிசோதிக்கப்பட்டு

திருச்செங்கோட்டு

மகாநாட்டுச் செங்குந்தர்கள் தந்த அநுமதியின்படி

காளப்பட்டி

மிராசுதாரரும், தனிகருமாகிய,

ஸ்ரீமான்

கா. ரா. வெங்கடபதிநாயுடு அவர்களின்

தனசகாயத்தைக்கொண்டு

ம-ா-ா-ஸ்ரீ

சி. ந. வடிவேல் முதலியார் சி. பி. ஆறுமுகமுதலியா ரிருவர்களால்

சென்னை.


தாம்ஸன் கம்பெனி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1908

இதன் விலை 0—12—0.] [தபாற் சிலவு பிரத்தியேகம்.

PRINTED BY THOMPSON AND CO., AT THE "MINERVA" PRESS,
33, POPHAM'S BROADWAY.



# செங்குந்தர்

# குலப்பிரகாசிகை.

குலாபிமானிகளுக்கோர் விநய விஞ்ஞாபனம்.

ஐயா !

இப்பெயர் புனைந்த புத்தகமொன்று எம்மால் பல சாஸ்திரங்களினின்றும் தொகுக்கப்பட்டு, அச்சிலிருக்கிறது. இஃது நங்குல பூர்வீகத்தைப் பெரும்பாலும் விஸ்தரித்து விளம்பும் குலநூலாம். நம்மனோர் பெருமையும், புகழும், குன்றின்மேற்றீபமென்ன விருந்த கீர்த்தியும், காலாந்தரத்தில் மாறுபட்டு, பிரபஞ்சத்தில் நம்மவர் மரபைச், சாமானிய வகுப்புகளுள்ளொன்றாகக் கருதப்பட்டுவருவதற்காயின. நம்வர்க்கத்தினர்சிறப்பெத்தன்மையதென முன், நூல்களில் முழுதுமெழுதிய வித்வசிரோன்மணிகளின் கல்வித்திறன் ஏட்டுப்பிரதிகளாகவிருந்து சோர்ந்துபோனதால், நங்குலமுறைகளை நாமறிந்தொழுகுவதற் கேதுவில்லாம லொழிந்தன. இப்பெருங்குறையை இதுவரை நிறப்ப நினைத்தாரும் முடித்தாருமில்லாப் பாக்கியம்பெற்ற இப்பரதகண்டத்தின் ஆரிய சிரிய சீமான்களுக்குப்பொதுவாகவும், கற்றறிந்தவர்கவனத்திற்கோர் நினைப்புத்திரவு கோலாகவும், நங்குலத்தவர்க்குவேதவாக்கியமாகவுந்திரட்டிய இந்நூலின் அளவு பத்து அத்தியாயங்களாக வகுத்துச்செங்குந்தர் குலம் சிவகுலமெனவும், சிவநந்திகோத்திர வம்சாவளி யென்பதற்கு நிதரிசனமாக்கிப் பின்னுமேதோர் குறையும் நிகழாமல் நூலை நோக்கமிட்டவர்கள் இதற்கு விலையேகொடுக்க

வில்லையென்று மனங்குளிரும்வண்ணம், அரிய செந்தமிழ் நடையில் நம் ஆண் பெண்ணிருபாலாரும் படித்துணருமாறு, டிம்மி (8) பேஜ் சைசில், (14) பவுன் கிளேஸ் கடிதத்தில், (22) பாரமுள்ள (176) பக்கங்கள் கொண்டதாய், நாணயமான பைண்டுடன் புதிய எழுத்தில் நாகரீகமாகப் பதிப்பிக்கப்படுகிறது.

சுயநலங்கருதாது பொதுநலமொன்றையே கருதித்திரட்டிய கிரந்தமிதனை எளிதில், பொதுவில் எவரும் பெற்றுமகிழ்வதுடன், முக்கியமாய் இக்கொங்கு நாட்டின் கண்ணுள்ள பூந்துறை, காங்கேயம் முதலிய (24) நாட்டின் செங்குந்தர்களும் மஹாநாடாகிய காஞ்சிநாட்டினரும் அதன் கிளைநாட்டிலுமுள்ள குலாபிவிருத்தி கருதிய ஒவ்வொரு புண்ணிய சீலர்களும், அபிமானித்து ஆதரித்தல் கடமையாகும்.

இக்கிரந்தத்திற்கு நன்கொடையளிக்கும் சீமான்களின் நாமதேயத்தை இந்நூன்முகத்தில் அச்சிட்டு விளக்குவிப்போம்.

வறியர், செல்வர் எவரும் சுலபமாய்ப் பெற்றுணருமாறுஇதன் விலை. 0–12–0 அணுவாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. V.P.P. மூலியமாக அனுப்பப்படும். தபாற்சிலவு பிரத்தியேகம்.

இங்ஙனம்,

சி. கு. நாராயணசாமி முதலியார்,

செங்குந்தர் குலப்பிரகாசிகையின் ஆசிரியன், தாம்சன்தெரு,

கோயமுத்தூர்.

செங்குந்தர்

# குலப்பிரகாசிகையின்

## விஷயசூசிகை.

முதல் அத்தியாயம்.

## நவவீரர்களின் உற்பவம்.

இஃதில், நவவீரர்கள் உற்பவித்த காரணமும், அவற்றை விளக்குவதான வரலாறுகளும், கிரமமாக வழிநூலின்விதிவழியை அனுசரித்து, சார்புநூலாகவமைந்துள்ள பல சாத்திரங்களைமேற்கோளாகவெடுத்து விளக்கிநன்கு விவகரிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் அத்தியாயம்.

## நவவீரர்களின் பராக்கிரமம்.

இஃதில், தாருகன், பானுகோபன், வச்சிரவாகு, வீரமாகாளி முதலிய கொடியர்களை வெற்றிகொண்ட தன்மைகளையும், வேள்வித்தீயில் தோன்றிய ஆட்டுக்கிடாவை வள்ளிமணாளனுக்கு வாகனமாக்குவித்ததும், பிரமனைச்சிறையிலிட்டதும், இந்திரனைவென்றதும் முதலான பராக்கிரமங்களையும், தக்க ஆதரவுகளோடெடுத்து விளக்கி, வீரவாகுதேவராதியோரின் பெருமையையுணர்த்தி, கந்தன் றுணைவர், சிவகுமாரர், உபசுப்பிரமணியர், சேனாதிபதிகள், நந்திகணத்தவர் முதலிய சிறப்புநாமங்கள் இன்னோர்க்கு வந்தகாரணங்களையும், கிரமப்படி விரித்து, விவகரிக்கப்பட்டிருக்கிறது.

மூன்றும் அத்தியாயம்.

## செங்குந்தர் விஜயம்.

இஃதில், மனுகுலத்துவந்த முசுகுந்த வேந்தற்குத் துணைவராகவந்ததும், அங்ஙனம் வரஏற்பட்ட காரணமும், அக்கால நிர்ணயமும், தேவமாதர்களை மணந்துகொண்டதும், புத்திரர்களைப் பெற்றதும்முதலியவிஷயங்களைமுரணின்றி, அகஸ்தியர், போகர், தேரையர், கொங்கணர் முதலியமகான்கள் திருவாய்மலர்ந்த, சாத்

திரக்கோர்வைகளின்றும் சான்று கூறி, மற்றும் சில புராணங்களி னின்றும்மேற்கோளெடுத்தும், நன்கு விவகரிக்கப்பட்டிருக்கிறது.

நான்காம் அத்தியாயம்.

## செங்குந்தர் வெற்றி.

இஃதில், தேவேந்திரன் துன்பம்தவிர்ப்பதற்குத் தேவலோகஞ்சென்றதும், தியாகராஜமூர்த்தங்களைப்பூலோகத்தில் கொணர்ந்து பிரதிஷ்டை செய்ததும், நமனுரை வென்று பொற்கிளியை மீட்டியதும், சந்தானமாங்கனி கொணரச்சென்று பதினெண்தேயத்தரசர்களை வென்றதும், குமரனிட்ட சாபக்குறைதீர்ந்து கந்தமாதனஞ்செல்லுங்கால் அனகனுதியோர்க்கு அதுவரையும் அவர்கள் பெற்றிருந்த பல விருதுவரிசைக்கிரமங்களையுந்தந்து, காஞ்சிமுதலிய 72 நாடுகளைபட்டாபிஷேகஞ்செய்வித்து மநுநீதியோடு செங்கோல் செலுத்தும் வண்ணம் ஆக்ஞாபித்துச்சென்றதுமுதலிய விஷயங்களைத்தக்க நூலாதரவுகளோடு நன்குவிளக்கித்திருச்செங்கோடு, காங்கேயம், பவானி முதலிய நாடுகளில், வழங்கும் 24 நாடுகளின் பெயர்களும், கோத்திரம் முதலியவைகளையும், நலம்பெற விளக்கப்பட்டிருக்கிறது.

ஐந்தாம் அத்தியாயம்.

## செங்குந்த மன்னர்.

இஃதில், இலக்கத்தொன்பதின்மராகிய வீரவாகுதேவராதியற்கு ஆயிரத்துத்தொள்ளாயிரவர் புத்திரர்களென்றும், ஆயிரத்துத்தொள்ளாயிரவர் வருக்கத்தினரே செங்குந்தர்களென்பதும், அன்னோர்கள் அரசர்களாக வாழ்ந்துவந்தார்களென்பதற்கேற்றபிரமாணங்களும், அங்ஙனம் அரசுபுரிந்துவந்த தனியர், பிரணவர், கோளாந்தகர், புற்றிடங்கொண்டார், மதுகையர்,புலியூர்ப்பள்ளிகொண்டார், ஒற்றியூரதிபர், வீரர், நாராயணர், மணியர், முதலினோர் சரிதங்களும் செங்குந்த வேற்படையின் சிறிய சிறப்பும், பொல்லாஙகிய வல்லாளனை வென்ற வரலாறும், சிறப்புற விவரிக்கப்பட்டிருக்கிறது

ஆறம் அத்தியாயம்,

## செங்குந்தச் சிவானுபூதி மகான்கள்.

இஃதில், பெரிய புராணத்தில் திருத்தொண்டத்தனியடியார் அறுபத்துமூவரில், உற்பவகுல வரலாறு முதலியன குறிப்பில்லாமலிருக்கிற சிலஅடியார்களில், எறிபத்தர், திருமூலர், மெய்ப்பொருளுயனுர், பெருமிழலைக்குறும்பர், தண்டியடிகள், கூற்றுவர், நரசிங்கமுனையரையர், காரிநாயனுர், இடங்கழியார், கணம்புல்லர் முதலாயினோர் செங்குந்த மரபினர்களென்னும் விஷயத்தை சித்தாந்தப்படுத்தி எத்திறத்தவரின் ஆசங்கைக்கும் ஏற்ற பிரமாணங்களோடு நன்கு விவகரிக்கப்பட்டிருக்கிறது.

ஏழாம் அத்தியாயம்.

## செங்குந்தர் புலமை.

இஃதில்,செங்குந்தர் குலத்தில் தோன்றி, கீர்த்திவகித்துப்புகழ்நிறுவிய பொய்யாமொழிப்புலவர், படிக்காசுத்தம்பிரான், கச்சியப்பமுனிவர், கோனேரியப்பநாவலர், இரட்டைப்புலவர், ஒட்டக்கூத்தர், காங்கேயர், சிதம்பரசுவாமிகள், பகழிக்கூத்தர், பிறசை அருணசலசுவாமிகள், மார்த்தாண்டதேவர்முதலியபுலவர் பெருமான்களின் சரிதங்களைத்தக்க பிரமாணங்களோடு அவர்கள் வாழ்ந்திருந்தவிடம், காலம், சிறப்பு, குணம், கல்வி, சீலம், தவம், வாய்மை, அர்த்தியம், அவ்வவ்வமயங்களில், பாடப்பெற்ற அரியபாக்கள் முதலியவிஷயங்களைச்சரித்திர தோரணையுடன் பிறமரபினரின் கேள்விகளுக்கேற்ற சமாதானங்களோடும் விவகரிக்கப்பட்டிருக்கிறது.

எட்டாம் அத்தியாயம்.

## செங்குந்தர் சிறப்பு.

இஃதில், தெய்வீகமமைந்த ஈட்டியெழுபது என்னும் பிரபந்தம் பாடப்பெற்றதும், அஃதின்விரிந்தவரலாறும், தில்லைமாகாளியின்தேரோட்டுவித்ததும்,சிவாதிக்கம்வகித்ததும்,சீர்பாதந்தாங்குவதும், தில்லைநடராஜர்கொடியேற்றுவித்ததும், திருக்கழுக்குன்

றத்தில் கழுகுகளுக்கு அன்னமூட்டுவிக்கும் திருப்பணியையுடைத்தானதும், கனகதண்டிகை பெற்றதும், கருமாறிப்பாய்ந்ததும் முதலியவிஷயங்களைச் சரிதவழியின்றிப்பொருத்தமுறவமைத்தும், கைக்கோளர், காருகர், முதலியர், தந்துவாயர் முதலிய சிறப்புப் பெயர்கள் இவர்களுக்கு வழங்குவானேன் என்ற பிரசினைக்கு உத்தாரமும், அவற்றின் காரணங்களும், இவற்றிற்காதரவாகவமைந்த உபசரிதங்களையும், நூற்கோர்வைகளையும், விளக்கி நெய்தற்றொழிலை ஜீவனுதாரமாகக்கொண்ட மேன்மையையும் விவகரிக்கப்பட்டிருக்கிறது.

ஒன்பதாம் அத்தியாயம்.

## செங்குந்தர் தற்கால நிலமை.

இஃதில், இன்னோர்க்கு இயற்கையாய் ஏற்பட்டிருந்த ஒழுக்க நெறியினின்றுந்தவரியதால் விளைந்த சூத்திரத்தன்மையும், அவற்றை விலக்கிக் கொள்ளவேண்டிய முயற்சியின் விவரங்களும், அம்முயற்சியை அனுசரித்துவரின் ஏற்படும் நன்மைகளையும், நன்கு விவகரிக்கப்பட்டிருக்கிறது.

பத்தாம் அத்தியாயம்.

## செங்குந்தர் குலவொழுக்கம்.

இஃதில், நம்மனோர் அனுசரிக்கவேண்டிய விதிவிலக்குகள் ஆசாரிய சுவாமிகளாக விருக்கவேண்டியவர்களின் கடமை, போலிச்சுவாமிகளின் மாறுபாடுகள், அன்னோர்களை விலக்கவேண்டுவதவசியமெனவிருக்கும் அறிவிப்பு, நம்மரபினரிலேயே ஆசாரியப் பட்டம் பெற்றுக் கொள்ளலாமென்னும் விதிகள், சிவதீக்ஷை, பூணூல்தரித்தல், திருநீறணிதல், உருத்திராக்கமணி தரித்தல், முதலிய அனுஷ்டான விதிகளும், சுபாசுபகாலங்களில் நடந்துகொள்ளவேண்டிய கிரமங்களும், விவகரிக்கப்பட்டிருக்கிறது.

குறித்த 10 அத்தியாயங்களில் பல அடியார்களின் சரிதங்க

ளும் பாடல்களின்குறிப்புகளும், சுருக்கமாகக்காணப்படினும், நூல்முடிவின் கடை அத்தியாயங்களில், காலநிலைமையின் கூற்று கூடுமானவரை நன்மைகோரி எழுதப்பட்ட முக்கியாம்சங்களைப்படிப்போர் கவனிக்கவேண்டிய விஷயமாகும். (சுபம்.)

முற்றிற்று.

## இக்கிரந்தத்திற்கு மேற்கோளாக வெடுத்தாளப்பட்ட நூற்றிரட்டு.

1. கந்தபுராணம்.
2. கரூர்புராணம்.
3. செங்குந்தபுராணம்.
4. பெரியபுராணம்.
5. திருவிளையாடற்புராணம்.
6. பழனிப்புராணம்.
7. புலவர்புராணம்.
8. இலிங்கபுரா்ணம்.
9. சைவபுராணம்.
10. பேரூர்புராணம்.
11. ஞானப்பிரகாச சுவாமிகள் திருவாய்மலர்ந்த (6000) செய்யுட்களுடைய கந்தபுராணம்.
12. வல்லான் காவியமென வழங்கும் வீரநாராயணர்விஜயம்.
13. கந்தபுராணச்சுருக்கம்.
14. கந்தபுராண சங்கிரகம்.
15. திருக்குறள்.
16. மனுஸ்மிருதி.
17. அவிரோதவுந்தியார்.
18. கைவல்யம்.
19. இலக்கணக்கொத்து.
20. சூதசங்கிதை.
21. பார்வதிதேவியார் நந்தி முனிக்குத் திருவாய் மலர்ந்த ரேகைசாஸ்திரம்.

22. அகஸ்தியர் மரபுநூல்.
23. கருவூரார் (205.)
24. போகர் ஜாதி உற்பத்திநூல்.
25. திருவள்ளுவர் சுருக்கம்.
26. தொண்டமண்டலசதகம்.
27. கந்தபுராண அகவல்.
28. ஒட்டக்கூத்தர் சரித்திரம் அவத்தாரண்யதகனம்.
29. தில்லைக்கலம்பகம்.
30. ஈட்டியெழுபது.
31. கந்தவிரதவிலாசம்.
32. எழுப்பெழுபது.
33. செங்குந்தர் திருக்கை வழக்கம்.
34. செங்குந்தர் மரபுவிளக்கம்.
35. செங்குந்த மரபுவிளக்க வினவிடை.
36. செங்குந்தர் மான்மியம்.
37. செங்குந்தர் சங்கப்பட்டயம்.
38. செங்குந்தர் பிள்ளைத்தமிழ்.
39. செங்குந்தர் புகழ் மாலை.
40. செங்குந்தர் சிலாக்கியர் மாலை.
41. செங்குந்தர் மாலை.
42. செங்குந்தர் அம்மானை.
43. செங்குந்தர் அம்பா.
44. செங்குந்தர் வேல்பதிகம்.
45. சேனைத்தலைவர் மரபுவிளக்கச் சூராவளி.
46. வல்லான் விருத்தம்.
47. தனியன்கள்.
48. சிவஞானசித்தியார்.
49. இலக்ஷணக்குறவஞ்சி.
50. செங்குந்தமன்னர் குலதீபிகை.

# முடிபுரை.

ஐயன்மீர் !

பெரும்பாலாக நம்மரபின் பூர்வ வரலாற்றை உள்ளபடி விரிவாக விளக்கும் வசனநூல்கள் பொதுப் பிரயோஜனங்கருதி வெளியிட்டுபகரிக்கும் முயற்சியில் நங்குல வித்வான்களெவரும் முற்பட்டிருப்பதாக நங்கவனத்திற் கெட்டவில்லை. அங்ஙனமறிதாகப்பொது நலங்கருதிய இரண்டொருவர் வெளிவந்தாலும், அவர்களை முற்பட்டாதரிக்கும், குலாபிமானிகளும் முயற்கொம்பேயாம். இத்தகைய குறைபாடுகளையெல்லாமனேகமாக நிவர்த்திக்கவே பன்னெடு நாளிடைவிடா முயற்சியின் பேரில், இக்கிரந்தத்தின் முதற்பாகத்தை முதல்வனருள் முன்னிற்க முடிவுசெய்ததென்க.

இதனைத்தொடர்ந்த "இரண்டாம்பாகத்தையும்" விரைவில்வெளிப்படுத்த முயற்சிகொண்டிருக்கின்றேம் பரமன்றிருவருட்டன்மையெவ்வாறாக முடியுமோ ? யாமறியேம் நிற்க.

இக்கிரந்த விஷயமாக ஆரம்பத்தில் வெளியிட்ட விளம்பரப்படி இஃதை முற்றிலும் வெளியிடுவதற்கு சாத்தியப்படாததோடு நாமெதிர் பார்த்தபடி 22 பாரங்களில் அதாவது (176) பக்கங்களில் முடிவடையாமலும் போயிற்று ஆனதால் இந்நூலை இரண்டுபாகமாகப்பிறித்து முதற்பாகத்தில் செங்குந்தருற்பவம், செங்குந்தர் பராக்கிரமம், செங்குந்தர் விஜயம், செங்குந்தர் வெற்றி, செங்குந்தமன்னர், செங்குந்த மகான்கள், ஆகிய ஆறத்தியாயங்களையும் குறைவின்றி முடித்தும் ஏழாவது செங்குந்தர் புலமை என்னும் அத்தியாயத்தில் பொய்யாமொழிப்புலவர் சரிதத்தைத் தொடர்பின்றி முடித்தும் மற்றயபுலவர்களின் சரிதங்களை இரண்டாம் பாகத்தில் சேர்த்தும் எஞ்சிய மூன்றத்தியாயங்களாகும் செங்குந்தர் சிறப்பு, செங்குந்தர் தற்கால நிலமை செங்குந்தர் குலவொழுக்கமாதிய அத்தியாயங்களை விரிவுற முடித்தும் இந்நூலைப் பூர்த்திசெய்வேம்.

அரும்பிரயாசைப்பட்டுத்தொகுத்து முடித்த இக்கிரந்தத்தை அறிஞர்களன்புடனேற்று மகிழ்வாராகவும் குற்றமிருக்கின் உலகம் பொறுக்க,

இந்நூலை யானியற்றிக்கொண்டிருக்குந்தருணங்களில் என்னுடனின்றுதவி முயற்சிதளராதிருக்குமாறு பலசமயங்களிலெச்சரித்துவந்த எமதாப்தர் சி. வி. இராமசாமிமுதலியாரவர்களுக்கும், இக்கிரந்தத்திற்குவேண்டுமான நூல்களை விரும்பியபோதெல்லாம் தாமதமின்றியுதவிவந்த ம-ா-ா-ஸ்ரீ, S. அய்யாசாமிபிள்ளையவர்களுக்கும், இந்நூலை அச்சிட்டு முடிக்குமாறு வேண்டுமான முயற்சியும் சிரத்தையுங் காட்டிய நண்பர்காஞ்சிபுரம் ம-ா-ா-ஸ்ரீ, பி. சே. முருகேச முதலியாரவர்களுக்கும் என்னுளும் மீளாவாளாய் மெய்த்தொண்டு புரிய முற்றிலுங் கடமைப்பட்டிருக்கின்றேம்.

கோவை, மகரமீ 12௳

இங்ஙனம்,
இந்நூலாசிரியன்.

---

## விரைவி லச்சிடவிருக்கும் புத்தகங்கள்.

செங்குந்தர் குலப்பிரகாசிகையின் இரண்டாம்பாகம்.
செங்குந்தர் சிலாக்கியர்மாலை.
செங்குந்தர் மரபுவிளக்கம்.
செங்குந்தர் மரபுவிளக்க வினவிடை.
ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலா.
சிரச்சிங்காதனத்தலைவருலா.
குலோத்துங்கன் கோவை.
செங்குந்தர் மான்மியம்.

இங்ஙனம்,
சி. கு. நாராயணசாமி முதலியார்,
செங்குந்தர் குலப்பிரகாசிகையின் ஆசிரியன்,
நெ. 118, தாமஸ்வீதி கோயமுத்தூர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்.

இஃது

காஞ்சிபுரம் ஆடிசன்பேட்டை ஜவுளி பிரமுகர் மகா-ஶ-ஶ-ஸ்ரீ
செங்கல்வராய முதலியாரவர்கள் குமாரரும்,
காஞ்சிபுரம் மகாவித்வான் ஸ்ரீமத்
பூ. ந. கந்தசாமி முதலியார் அவர்கள் மாணாக்கரும்,
காஞ்சிபுரம் ஸ்ரீ சித்தாந்த சிவநேசத்திருக்கூட்டம்
ஸத்யவிரதசங்கம் முதலிய சபைகளின்
காரியதரிசியுமாகிய

மகா-ஶ-ஶ-ஸ்ரீ

## பி. செ. முருகேசமுதலியார் அவர்களியற்றிய

கலிவெண்பா.

சீரார் துகிர்க்கொடியுஞ் சேருந் தரளமுமே
யேரால மாயுதிக்கு மோர்கலிசூழ் பாரார்ந்த-
கற்றோர்க ளேத்துகின்ற கந்தரத்தை யானிப்போ
தெற்றுகின்றே னென்றே யெழுவதுபோன் முற்றுத-
வொண்டளிரு மொட்டு முயர்பூவு நற்காயுங்
கண்டனைய செங்கனியுங் கண்கவருந் தண்டலைசி-
னுற்றொளிரும் பொய்கையினி லுற்பலமுஞ் செங்கமல
மற்றதற்குக் கண்ணுங் கரமும்போற் பெற்றனந்தன்-
செஞ்சிரத்தி லென்றனது சீரடியைச் சேர்ப்பனென
வஞ்சர சுகூறுகின்ற வாண்மைக்கே யெஞ்சாது-
வெற்றிபெறு வேனென்றே வீரம் புகலிஞ்சி
சொற்பா தலமதனிற் றாயடியு மற்போரில்-
வென்றவர்கண் மேவும் விசும்பிற் றிருமுடியுஞ்
சென்றடைய நிற்குந் திருநகரங் கொன்றையணி-

செஞ்சடையான் மேவுந் திருத்தளிக ளாங்காங்கே
யஞ்சலஞ்ச லென்னு மணிநகரம் பஞ்சரத்தி-
லஞ்சுகமு நாகணவா யம்பறவை யுந்தினமு
மஞ்சலிலா தோத்தே யறைநகரம் விஞ்சையர்க-
ளேத்தி நிதம்பணியு மேராரும் பேருரென்
சீர்த்தி திகழ்பதியைச் சேர்நகர மார்த்தியுடன்-
செல்விருந் தோம்பி வருவிருந்து காத்திருந்து
பல்விருந் தோம்புகின்றபாவையர்க ளில்லந்தோ-
றுந்திகழு மேன்மை யுயர்நகர மென்னுளுஞ்
செந்திருவாழ் கின்ற திருநகரம் விந்தையுட-
னைந்தவித்தோர் வாழு மணிநகர மிப்புவியி
லிந்த நகர்க்கிணையா மென்னகருஞ் சுந்திரத்தி-
லொவ்வா தெனுநகர மோங்குபெருங் கல்வியினிற்
பைவா யனந்தனையும் பார்த்தின்னே னைவாயா-
லெந்தமக்கு நீயென் றிசைக்கும் பெருங்கலைசேர்
மைந்தரெலா மேவு மணிநகரஞ் சந்தஞ்சேர்-
யாழொலியு மின்னிசையும் யாதோ வெனவறியா
தேழிசையு மாத ரிசைநகரங் கேழ்கிளரு-
மஞ்சுதுஞ்சு மாடநிறை வண்கோவை மாநகரி
னஞ்சுமுக னீன்றளித்த வாறுமுகற் கெஞ்சலிலா-
தெம்பியராய்த் தோன்று மெழில்வீர வாகுமுத
லெம்பிரார்க் குப்புதல்வ ரென்றுதித்த பம்புநவ-
வீரர்க் குதித்தபெரு வீரரெனுஞ் செங்குந்த
தீரர்குலத் துற்பவஞ்செய் தீரனும் பாரி-
லுபசுப்ர மண்யகுலத் தோங்குகலைக் கோட்டுத்
தபமுனிவன் கோத்திரத்துத் தாழ்வில் சுபமுடன்வாழ்-
தண்முகமார் சண்முகற்குத் தாழ்விற் றவத்துதித்த
வொண்முகஞ்சேர் கல்வி யுயர்மதியா னெண்புவியிற்-
பாலனு வாயர்முதற் பண்பார் திருக்குன்றை

நூலரு வாயர்வரை நோன்மையதாய்ச் சாலவே-
யின்னிசையி னோடு மியற்றுந் தமிழ்மறையைப்
பன்னிடுவோன் சைவம் பதியுளத்த னென்னுடைய-
சீரார் திருநண்பன் சேருந் தவமுடைய
நாரா யணசாமி நற்குரிசிற் பாரதனி-
லெங்கும் புகழ்பெற்ற செங்குந்த நற்குலத்திற்
றங்கும் புகழையெலாஞ் சாற்றினா னிங்கவைதான்-
வெற்றிநவ வீரர்களி னுற்பவமவ் வீரர்கடாம்
பெற்ற பராக்கிரமம் பீடாரு முற்றவத்துக்-
குந்தர் விஜயமவர் கோதிலா வெற்றி
நந்தும் புகழ்சிறப்பு நற்புலமை யந்தமுள-
சீர்சிவானு பூதிச் செய்யரசிவ் வொன்பதா
மேர்செயத்தி யாய மியலாக நேர்மைக்-
குயி லுமிச்செங் குந்த குலப்பிர காசிகையென்
றிய லுமிதி னேதமெலா மெற்றி மயலொருவுந்-
திப்பியவிந் நூலைச் செயிர்தீர்த் தளித்திட்டா
னற்பரர்க்கே செய்யு மணியுளத்தான் றப்பார்-
சடையுடையான் பேரூர்த் தனியா லயத்துக்
கொடையுடைமா னேஜரெனுங் கோமா னடையுடைய-
வா றுமிகப் பிள்ளையெனு மார்திருநா மம்படைத்த
தேறுகலை வாரியுண்டா தீரனுங் கூறிருவர்-
சீர்த்தி திகழ்ந்தோங்கச் சிராயு ணேர்படுக
வார்த்தியுடன் மைந்தர்களு மார்ந்தொளிர்க நேர்த்தியுடன்
பேரூர்வாழ் பெம்மான் பிறங்கு திருவருள்சேர்
சீரூரென் றேத்துந் திகழ்கோவை யூரதனிற்-
பாரோர் புகழும் பண்பு திருவுளத்திற்
காரூருங் கண்டனடிக் கண்டு.

ஷை ஃது.

போளுவாய்ப்பட்டி கருணீகரும், பேரைப்பட்டி விநாயகர்மாலை
திருப்பேரூரந்தாதியாதிய கிரந்தகர்த்தரும்,
சுவேதகிரிப் புராணத்தமிழ்மொழிப்பெயர்ப்பாசிரியரும்
பேரூர்தேவஸ்தான மானேஜருமாகிய
ஸ்ரீமாந்
ஆறுமுகம்பிள்ளையவர்களாலியற்றிய

## கலிவிருத்தம்.

தரணியிற்சிறந்தபல்தலங்கடாமெலாம்
சரண்புகுந்தடிமையிற்சாற்றும்பேரைசூழ்
இரணியமாநதிசீரெனைத்துமாகிவந்
தருண்மிகுந்தன்பொடுமாடுங்கோவையில்

இனியவான்றமிழெல்லைகாண்டெழீஇ
கனிவினாற்கடைந்தளிக்குங்காசியான்
பனியினார்மதிபோலெணிப்பாவையர்
கனவினோர்கலந்தாற்றுங்கவினினான்

சொல்லும்வன்மையிற்றாய்மையில்வாய்மையில்
புல்லுஞ்சிந்தையன்போற்றுஞ்சதாசிவத்
தெல்லைபோற்றுமெழில்பெறுநூலெலாம்
செல்லுமாமதிசேர்திருப்போன்றுளான்

சைவமென்னுஞ்சமயஞ்சமயமென்
றெய்திவாழுமியைய்ந்தநல்லன்புளான்
செய்கையாவும்சிறந்தவர்செப்பவே
நொய்தினாற்றியநோக்கமிக்குற்றுளான்

ஆன்றமாச்சபையாவருமன்பொடும்
தோன்றுமாறுபசாரங்கள்சொல்லுமோர்
தோன்றலெங்கணும்தோன்றும்புகழினான்
ஈன்றவிப்புவிசெய்தவமென்னவே

சீர்திரிந்துற்றசெங்குலத்தின்மேன்மையை
பேர்சிறந்துறப்பெரும்பெட்பினாக்கினான்
கார்பறந்திடுங்கரங்காட்டுமின்கொடைக்
கோர்திருவிருந்தெனவுதவுபாலனே

வேறு.

போற்றுசெங்குந்தர்குலம்புரிதவத்தாற்போந்தநாராயணசாமி
சாற்றுமிச்செய்யகுலத்தின்வான்றகைமைச்சார்பெலா நூல்பல [வாய்ந்தே
தோற்றுமிக்கிரந்த வாயிலாத்தெளிந்தோர்சொற்பொருளுற்பவ [மெல்லாம்
தேற்றுவர்தேற்றுச்சிந்தைபோர்கேட்கிற்சிவனருட்குறியராச் [செயுமே

இஃது.

உடுமலைப்பேட்டை மகா-ா-ா-ஸ்ரீ பூ. ப. அ.
முத்துச்சாமிக்கவிராயரவர்களுடைய மாணாக்கருள்,
பெரியவாளவாடி

## பெ. மு. பொன்னுசாமி செட்டியாரவர்களாலியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

காமரங்களிசைகளிவண்டீட்டமுலாந்
 தண்மலர்கள் கமழுவோங்குங்
காமரங்கண் முகிலெடுத்தேமெனவுவந்து
 நிமிர்ந்தோங்கு காட்சிசேர்நன்
காமரங்கண்ணும் பொனிருப்புயர் கோய
 னகரம் வாழ்கன செங்குந்தர்க்
காமரங்கசண்முகமால் கனதவத்தில்
 வந்ததொரு கருணைமைந்தன்

தருமங்கைதவறுத தாருருசெங்
 குந்தகுலந்தரணிமீதிற்
றருமங்கைகெல்வியைப்போற்பொருள்விளங்கப்
 பலநூலின் தமிழைப்பாவேந்
தருமங்கைராவதனுதியரும்புத்
 தமுதமெனத்தந்தான்கல்வி
தருமங்கையருள்பெறுநாராயண
 சாமிக்கவிநற்றமிழ்வல்லோனே

இ ஃ து.

இந்நூலாசிரியர் மாதுலரும், இந்து யூநாநிவைத்தியருமாகிய

மகா-௱-௱-ஸ்ரீ

C. K. சண்முக முதலியாரவர்களாலியற்றிய

கலி விருத்தம்.

சீாளவெதுவரைசிறக்குமவ்வள
வோரளவுடையதாயொவிருமாப்பெரும்
நீரளவழகுடனின்றநேர்மையாய்
பேரளவில்லதாய்ப்பெற்றகோவையில்

தமிழின தருமையும்தகைமைசேர்பல
வமிழ்தினிமினிமைவாய்ந்தமைந்த நூனிறை
சிமிழெனும்புலவனுய்த்திகழும்சீர்த்தியாற்
கமழிலும்பலதிறங்காட்டுமேன்மையான்

சிர்சிறந்தோங்குசெங்குந்தவான்குலப்
பேர்சிறந்தோங்குநற்பெரியவான்சபைக்
கோர்விருந்தெனப்புகலுளத்தனுய்ச்சிவச்
சார்புடைச்சைவமேசமயமென்றதேர்

அறிவுடையருணலமடைந்தகேள்வியான்
சிறிதுமிதன்றியோர்செய்கையில்லவன்
நெறிபிரிந்திருந்தசெங்குந்தர்நேர்மையைப்
பெறுமுறைநினைந்தவர்பெருமையாவுமே

பலபெருநூலெல்லாம்பார்த்துநேர்தொகுத்
துலகுபகாரமாயுதவினுனிது
தலமுளவரையினுந்தழைகச்சால்புடை
குலநலமுடையவர்கொண்டுபோற்றவே

வேறு.

செங்குந்தர்குலப்பிரகாசிகையென்னச்செறிகடல்கடைந் தமுதளி
[த்த
சங்கமார்ந்தொளிரும்கரத்தனேரென்னதகைமையும்வாய்மையும்
[அன்பும்
பொங்கொளிதிகழும்புண்ணியகுணமும்பொருந்துநாராயணசாமி
அங்கையினெல்லிக்கனியெனக்காட்டுமரியநூற்பொருளெலாமா
[ய்ந்தே

கணபதிதுணை.

# சிறப்புப்பாயிரம்.

இஃது

திருக்கைலாயபரம்பரைச் செங்குந்தச் சங்கத்தலைவரும்
சிவாத்வித சித்தாந்தியும், காணுபத்யகத்ய நூலாசிரியருமாகிய

திருமழிசை

முத்துசாமி முதலியாரவர்களா லியற்றியது.

ஆசிரியப்பா.

ஓதுமினோது மினோது மினோது மின்
கோதில் செங்குந்தக் குலப்பிரகாசிகையை
ஓதுமினோது மினோது மினோது மின்
பண்டு சூர் தடிந்த பண்ணவற் கனுசராய்த்
தொண்டுபுரிவீரர்பின் றொன்மனுகுலத்து
வேந்தற் பாற்கிளைஞராய் மேவியுலகோம்பி
நீந்தரும் பகையை நீத்து நிலைகாத்து
முப்பானிரண்டற முற்றினு மோங்குபு
முதல் வருணத்து மூவர்கைதழிஇ
வைதிக விதியுலகியாண்டும் பரவ
விடுத்துச் சீர்த்தி விளக்கிய நந்தி
கோத்திரர் குலச்சீர் குறித்துள வாதலி
னோது மினோது மினோது மினோது மின்
மற்றிதை வரைந்த மாண்பன் யாறெனின்
பாவையர் பூவை யொடுபந்தாடல் புரிதருங்
கோவையம்பதியிற் கொண் மூவனையனுய்
விண்முகத்தவரும் வியக்குறும் வாழ்க்கைச்
சண்முகக்குரிசி றவப்பயனுகி
யளக்கருங் கீர்த்தியமைந்த தங்குலத்தை

விளக்கவந்து தித்த வித்வசிரோமணி
யெப்பொருள் யாவர் வாய்க்கேட்கினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறி வெனுந்தெய்வப்
பொய்யாமொழிக்குப் பொருந்திலக்கியமா
யெய்யாவைய்ய மின்புரத்தோன் றியோன்
மாற்றரு நிரப்பால் வருந்தியோனேற் றுழி
யேற்ற நாட்டானென விருத்தியாள் வள்ளல்
நாத்திகப்பூடை நசித்துலகியாண்டு
மாத்திகப்பைங்கூழ் வளர்த்திடு மண்ணல்
நாரமிக்கோங்குமே னன்ப நாராயண
சாமிவரைந்த சாதி நூலாதலி
னோது மினோது மினோதி மற்றவனையும்
வாழ்த்து மின் வாழ்த்து மின் வாழ்த்து மினீரே.

---

## சாற்றுக்கவிகள்.

ஸ்ரீ மருதாசலக்கடவுளுக்கடிமையும் பிள்ளைப்பிரபந்தமும்
பாடிய வடவழி வித்வான்
அருணசலக் கவிராயரவர்களா
லியற்றியது.

**கலித்துறை.**

வண்டாரும் பூங்குழற் காமாட்சியம்மை மலர்ச்சிலம்பி
லுண்டாகிய நவவீரர்களாதிய ருற்பவமுங்
கண்டோது காந்த முதலாம் புராணங்களின் முறையைக்
கொண்டேசைவாகம நூற்கவிரோதக்குண முணர்ந்தே. (1)

தாருகனுதிய தானவரியாரை யுந்தாக்கியம
ஞர்புகுமாறு செய்தொண் மகத்தியினுறுத்தெழுந்து
வீரியமேழகத்தின் பரியீய்ந்து விதிசிறையிட்
டாரியன் காதற்றுணைவருமாகுமவைவிரித்தே. (2)

மனுகுலத்தாள் முசுகுந்தனுக்கே துணைவந்துவளை
தனுகுலத் தொண்ணுதற்றே மடவாரினைச் சார்ந்தமையும்
பினுமகப் பேருற்றமையு முற்றேரையர் பீடுபெறு
முனிவரர்சாஸ்திரக்கோவைமுன் னூலின்முறைப்படியே. (3)

தன் றுயர் நீங்கிய விந்திரன்று னுறுந்தாரணிக்குட்
சென் றிலிங்கார்ச்சனை செய்திமலோகத்திற் சேர்ந்தவனைக்
கொன்றொரு பொற்கிளி மீட்டுவன் சாபக்குறைதவிர்த்து
நின் று செங்கோடு முதற்றலமாண்டிடு நேர்மையுமே. (4)

தள்ளார்விலக்கத் தொன்பதினேற்குச் சதம்பத்துடன்
றெள்ளாயிரவருக்கத்தினர் செங்குந்தர்தோற்றமெலாங்
கொள்ளாமதுகையர் புற்றிடங்கொண்டவர் கோளாந்தகர்
நள்ளார்தொழும்புலியூர்ப் பள்ளிகொண்டவர் நானிலத்தே. (5)

அறுபத்துமூன்றடியார் தமிலுற்பவமாதியற்ற
குறியிட்டமூலர் மெய்ப்பொருளுயர் கூற்றுவரோ
டெறிபத்தர்தண்டி காரிகணம்புல்லரிடங்கழியார்
முறையிட்டசெங்குந்தர் தோற்றத்தராகு முறைமையுமே. (6)

பொய்யாமொழி படிக்காசுயிரைட்டைப்புலவர் கச்சி
மெய்யா முனிவரர் கோனேரி கூத்தர் விரிபிறசை
ஐயா சிதம்பரர் காங்கேயராதியருங்கவிகள்
செய்யார் செங்குந்தர் பிறப்பிடங்காலமுஞ் செய்கையுமே. (7)

யீட்டியெழுபது பாடலுந்தில்லை யெழிலையைதே
ரோட்டிட வித்ததுங்கழுகாசலந்தன மூட்டிடலும்
ஆட்டுங்கொடி நடராஜருக்கேற்றலும் மாங்கனக
மூட்டியதண்டிகைபெற்றலுநெய்தற்றொழின்முதலியவே. (8)

கைக்கோளர்காருகர் நூல்வாயரென்பதின் காரணமும்
அக்கோலத்தாருக்கியற்கை யொழுக்கமவை முழுது
முற்காலத்தார்சொலு மெய்ந்நூனெறியின் முறைப்படியே
யிக்காலத்தன்னவர் தன்மையுஞ் சீருமெடுத்தெடுத்தே. (9)

நம்மரபோர்சை வாரியராக நலம் பெறலும்
இம்மரபோருக்கிணை மரபில்லையென்றே திருநீ
றும்மரபாலுருத்திரவக்கந் தீகைஷ யொண் ணூலணித
னன்மரபாலனுஷ்டானமுந் தானமு நன்மையுமே. (10)

இதுவரைநாமறிந்துய்வதற்கேது வின்றேமறைந்த
முதுநெறிச் செங்குந்தர் பெருமையெலாங் குன்றின்முடியிடத்துக்
கதுமனவேவைத்த தீபத்தைப் போற்கண்டு கதைவிரித்தான்
அதுமுதற் செய்யுண்முதற் பத்தத்தியாயத் தடங்கிடவே. (11)

மருக்கோலப்பைம் பொழிலும்பழனங்களும் வாவியுஞ்சூழ்
திருக்கோவை நன்னகர்வாழுஞ் செங்குந்தர் சிகாமணியா
யுருக்கோவையான சண்முகவேடவத்துற் பவித்த
கருக்கோவையான நாராயனசாமிக் கவிஞனன்றே. (12)

---

கோயமுத்தூர் லண்டன்மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
ம-ா-ா-ஸ்ரீ, ச. திருச்சிற்றம்பலம்பிள்ளையவர்கள் மாணுக்கருள்
கோ. ச. நடராஜம்பிள்ளை
அவர்களா லியற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

இசைபரவுந் திருக்கோவை நகருடையா னீசனடி யிணைகளேத்தும்
நசைமிகுந்ததிருவுளத்தானுயர்நாராயணனெனும்பேர்நன்குலாய்ந்தோன்
மிசைபுகழுஞ் செங்குந்தர் புகழ்வாய்மை தவங்கல்வி மேன்மைமற்றுந்
திசைபுகழச் செங்குந்தர் குலப்பிரகாசிகைநூலிற் றெரிவித்தானே.

---

ஷை தமிழ்ப்பண்டிதர் மாணுக்கருள்
ந. மு. ம. பழனியப்ப செட்டியார்
அவர்களா லியற்றியது.

---

கட்டளைக்கலித்துறை.

பூமலிகோவை நகரிற்செங்குந்தரிற் போந்துதித்தான்
ஞமமு நாராயணனெனப் பெற்றவனற்றமிழ் நூல்
தோமறவாராய்ந்தெடுத்தொரு தங்குலத்தூய்மையெலா
மாமலைத்தீபமென்றுரும் புகலவகுத்தனனே.

கும்பகோணம்

பென்ஷன் டிராயிங்மாஸ்ட்டர்

ம-ா-ா-ஸ்ரீ, தி. மு. முக்கண்ணாச்சாரியார் அவர்கள்

இயற்றிய

## அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

மணிகொழிக்குங் கடலாடை மாணிலத்தோர் திருவாண மருவா வண்ணம், பணிகொழிக்குந் துகிலளித்து எவ்வெவரின் மானமதைப் பாது காக்கும், அணிகொழிக்கும் பிறப்பினுயர் செங்குந்தர் குலவி ளக்க மாமான்றோர் நாலாம், திணிகொழிக்கும் பலசான்றுலத்தி யாய மொருபதில் சீர்த்திகழச் செய்தான்.

அன்னவ னியாரெனின் மணிகளகிற் றண்டம்பொற் குகைகளி யானைக்கோடும், பன்னிதியும் வீசுதிரைக் காஞ்சிவளத் திருக்கோ வைப் பதியில் வாழ்வோன், தன்னிகரில் செங்குந்த குலமணியாய்ச் சண்முகவே டவத்தின் வந்த, இன்னியலின் வரம்புகண்ட பெழில் நாரா யணசாமிப் புலவ ரேறே.

---

இஃது

கோவைச் சிவநேசச்செல்வ ரொருவர் கூறிய

## அகவற்பா.

விங்குநீர்ஞாலத் திலகொளிவிரிக்கும்
பாங்கனற்கமலப் பரிதியின்விளங்குந்
தெங்குநெல்லரம்பை செவ்வளமிகுந்த
கொங்குவென்னாட்டிற் கொன்னுதனன்னகர்
கோவையெனும்பதி மேவுமோர்திலதம்
சதமருளிடமப் பதியுயர்பேரூர்
மனுமுதலீறிற் றனிப்பொருளருளி
னிகழ்கிலை குலமிவை நிலையழி வாக்கற்

புகழ்நிலையெனினும் புன்மையினியலும்
பான்மையினீக்கும் பயன்றருமாசையான்
மாண்பொருளமைய மல்குநன் னூல்கணின்
றேதமின்மேற்கோ ளேற்புழியாண்டு
பேதமின் றுணர பிறங்குதன்குலத்தோர்க்
கவருறையிடங்க ணெங்கணும்பரவ
நவையில்வாசக நற்றமிழ்நடையி
னிலவசெங்குந்தர் குலப்பிரகாசிகை
யென்றொருநூலை இன்றமிழ்வல்லோர்
மகிழ்வுடனேற்ப வகுத்தனனவன்றான்
கோவையின் பதியிற்செங் குந்தர்மரபின்
மேவியமாமணி விஞ்சையரிலங்குஞ்
சாரதாவிலாச சற்சபைவிளங்க
சீரியபயிற்சி சிறக்கவாய்ந்துள்ளோன்
காமற்கடந்த கவினரு ராயுண
சாமிப் பெயரவன் சண்முகமழவே.



# முகவுரை.

செங்குந்தசிலாக்கியர்காள்!

நம்மரபினர் பெருமையும், புகழும், குன்றின்மேற் றீபமென்னவிருந்த கீர்த்தியும், காளடைவில் மலினமடையநேரிட்ட காரணம் குலாசாரங்களின்றும் வழுவி நடத்தலும் சிரப்புற்ற மேலான கிரந்தங்களை நாமாராய்ச்சி செய்யாததுமேயாகும். அத்தகைய நூல்களை அறிதற்கேற்ற சாதனம் கல்வியொன்றுமேயாமென்பது எவரும் ஒப்பமுடிந்தபக்ஷமாம். இத்துணை பெருமைவாய்ந்த கல்வியை நம்மில் பெரும்பான்மையோர் கல்லாமையான். நம்மத நூல்களைப்பேணுதலு மொழிந்தனர். இதனால் விளைந்த குறைகள் ஒன்றன்று பல, கிடைத்தற்கரிய நம்மத கிரந்தமானது எல்லா நலனுமிழைந்த இக்காலத்திற்றானே, இத்தசையடையுமாயில் பின்னர் இதன்கதி எவ்வாறாகுங்கொல்லோ! வென்று ஏக்கமுற்று மிக்கக்கவன்று இக்குறை தீர்த்தலே எனது கல்வியாலாயநலம் என்றுணர்ந்து அம்மார்க்கம் என்னையென்று பல்காலுஞ்சிந்தித்து, இந்நூல் நம் ஆண்பெண்ணிருபாலரும் கற்றுணருமாறு சுலப நடையிற் செய்தலே என்று தெளிந்து அரும்பிரயாசைப்பட்டுத் தேடிச்சேகரித்திருந்த அரிய நங்குலப் பிரபந்தங்களை பல்காலும்

ஆராய்ச்சி செய்து இதற்கு முன் வெளியேறிய பலநூல்களையுமா தாரவாக்கொண்டு நமக்குத்தெரிந்தவரை, முதனூலோடு எவ்வாற்றானுமுரணாது "செங்குந்தர் குலப்பிரகாசிகை" யெனும் நூலாகத்தொகுத்தனன்.

இக்கிரந்தத்தின் கண்ணே! செங்குந்த மன்னரின் சீர்சான்ற சிறப்பும், மேலோங்கிய கீர்த்தியும், சீலம், தவம், வாய்மை, கல்வி, இன்னனபிறவும் கிரமமாகவெளியிட வேண்டுமென்பதில் நமது கருத்து மிக சிரமமுற்றதென்பது தெள்ளிதில் விளங்கா நிற்கும் ஒவ்வோர் விஷயங்களையும் ஒழுங்குபெறத்திரட்டிக் காட்டவேண்டுமென்றதில் நீங்கா விருப்பமும், எனதுபேரை விளக்கக்கொண்ட துராங்காரமின்றி இந்நூல் இறந்துபடாது உலகில் நிலைபெற்று விழங்கவேண்டுமென்னும் பேராவலுமெம்பிடர் பிடித்துந்த புனைந்துளவிந்நூலை, நம்மரபின் நன்மைக்கோர் காரணமாமென நல்லோரான்மதிக்கப்படுமேல் அதனையே யான்கொண்ட சிரமத்திற்குக்கைம்மாறாகக் கருதியானந்திப்பேன்.

> குற்றமே தேரிவார் குருமாமுனி
> சொற்றபாவினுமோர் குறைசொல்வரால்

ஆகலின் அன்னோர் ஈண்டுதவறு கூறுதல் பெரிதன்றே!

இவற்றில் இலக்கணவழுஉக்களும், நம்மையறியாதேதெனும் பிழைகளுளவாயினும், பெரியோர் கிரந்தவழியென்பதையும், நம்மரபின் நன்மைக்கோர் நம்பிக்கை வாய்ந்தவழிகாட்டியென்பதையுமெண்ணி நம்மீதுமுனிவுற்றிகழாது இக்கிரந்தத்தை எங்குமுள்ள நம்மரபினரெவரும் புகழ்ந்து பரவச்செய்து வாழ்த்துவாரென நம்புகிறேன்.

மேதாவிகளானவர் இவற்றிலுள்ள குற்றங்களையேனும், வேறுவிசேடங்களையேனும், அன்புடனெனக் கறிவிப்பார்களாயின் அவர்கட்கு நன்றி கூறி பிழையைத்திருத்தி விசேஷமாக விளக்கி வெளிப்படுத்துவதுடன் அப்பேருபகாரிகட்கு என்றும் மீளாவாளாய் மெய்த்தொண்டுபுரிய முற்றிலுங்கடமைப்பட்டுளேன்.

25—2—07,
Coimbatore.

இங்ஙனம்,
சி. கு. நாராயணசாமி முதலியார்.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

# செங்குந்தர்,

# குலப்பிரகாசிகை.

## விநாயகக்கடவுள்காப்பு.

### கலி விருத்தம்.

சித்திபுத்தியெனுமிரு தேவிமார்
முத்திவேட்டுற மோகமொடின்முலைச்
சித்திவேட்டுறுஞ் சிந்துரத்தன்கழற்
சித்திவேண்டுது நூலிதுதேரவே.

### பரசிவத்துதி.

அன்பெனும் வலையிலமர்ந்தவர்வேண்டுமெரும்பணியாவையுமியற்றும், என்பது தோன்றவேனில்வேட்குடைந்தவின்றமிழ்க்கவிக்கிருமடவார், தன்வயிற்றாது சென்றனனதனுற்றமிழ்ச்சுவை சிறிதுமோர்ந்துணரா, வென்பொருட்டிந்நூலியைபுறவவன்றாளிறைஞ்சிவாழ்த்தெடுத்தினிதுய்வாம்.

### உமாதேவியார்.

எமன்றனையுதைத்தும் பெருவிடமயின்று மிறந்திடாதிருப்பதற்குரிய, தமனியத்தாலியுடையவளன்றிச்சங்கரன்புரிதொழிலைந்தும் சமனிலைபெறுமாறருட்செயுங்கண்ணுள் சத்தியேசிவமலாதிலையால், உமைதிருப்பாதமலர்தலைக்கொண்டேனுரைக்குமிந்நூற்சிறப்புறவே.

### கணபதி.

குறத்தியைக்கூடப்பிறந்தவர்க்களித்த கொள்கையைக் குவலயமறியா, மறத்தியல்பினர்க்கும்வரந்தருங்கருணைவாரியேவாழ்த்துநல்லன்பின், திறத்தினர்பலர்க்குமருள் தரல்வியப்போசிறியனேன்செப்புமிந்நூற்கு, அறத்தியனேக்கியருள்புரிவாயேலதுவியந்தேத்துமிவ்வுலகே.

# செங்குந்தர் குலப்பிரகாசிகை.

## சுப்பிரமணியர்.

வேண்டுவார்வேண்டும்வண்ணமேதருவான்வேலவனெனும்பொரு
ட்கிணங்க, ஆண்டகைவீரவாகுவொன்பதின்மராகியதுணைவரை
யரசன், வேண்டலுமுயிரென்றுதளித் தருவிளக்குவான்விளங்கு
செங்குந்தர், பூண்டநரகுமீண்டொளிதரும்படிசெய்புங்கவன்மல
ரடிபணிவாம்.

## வாணி.

பேசு மாமறை பெய்யு வென்
மூசு மாரிபொழிந்தபோன்ம்
மாசி னுமகண் மாணடி
யாசி யார்ப்ப வறைகுவல்.

## நவவீரர்.

அம்மைபதச்சிலம்புதிர்த்தநவமணிகணவமாதராகிநம்பன்
செம்மைதருமுகநோக்கநந்திகணத்தவர்புகுந்துசேர்ந்தகுனின்
றம்மைதிருக்கருணையினலவதரித்தோரறுமுகவற்றுணைவராகி
நம்மைமணந்தருள்சுரக்குநவவீரரடிவணங்கிநலங்கொள்வாமால்.

## இதுவுமது.

கந்தனவதரிக்குமுனமவதரித்தேசெங்குந்தங்கரத்திற்றாங்கி
கந்தனருட்டுணைவர்களாய்ச்சூரபத்மனாதியரைக்கடிந்துதேவர்
தந்தநகர்தனையருளிச்சதமகனேடயன்மாலுந்தாழ்ந்துபோற்றப்
பந்தமறுஞ்செங்குந்தர்குலம்விளங்கப்பண்ணுநவவீரரடிபணிந்து
[வாழ்வாம்.

## சைவசமயாசாரியர் நால்வர்.

சமணமார்கடல்தான்றொலைத்தாண்டவன்
அமிழ்திநேர்கவியாக்குமெய்யப்பனும்
தமிழிற்சங்கரன்றன்பணிகொண்டவர்
சமையுமார்பதந்தான்பணிந்தேத்துவாம்.

## போதகாசிரியர்.

அறனே யாகமுற் றருவி னுருநற்
குருவைக் கூறுது நெறியி னேரவே.

## அவையடக்கம்.

விண்ணளந்துகணக்கிடுவார்போலிந்தச்செங்குந்தர்வியப்பெல்லாரும்
எண்ணளந்துசொலநினைந்தவென்போலுமொருபேதையில்லையாலே
பண்ணளந்தபாவலர்கள்பாவறியாச்சிறியேனைப்பகையாதன்பிற்
கண்ணளந்துபார்த்தருளிற்காக்ஷிபெறவிந்நூலுங்காண்பர்தாமே.

உ

திருச்சிற்றம்பலம்.

# செங்குந்தர்

# குலப்பிரகாசிகை.

## முதல் அத்தியாயம்.



### நவவீரர்களின் உற்பவம்.

உலகின்கண்ணுள பருப்பதங்களுக்கெல்லாம் சிறந்து விளங்குவது கைலை. அது, பதினெண்பிரிவினையுடைய தெய்வ சமூகங்களும் விரும்பியுறையும் பெருமிதம் வாய்ந்து, இயமாதிய எண்வகையோகத்தின் வழிநிற்கும் அருமறை முனிவர் அன்புடன் வாழும் தவத்தானமாய்ச்சிறந்து விளங்கி அநேகமாயிரம் யோசனை பரந்து ஆகாயமளாவ வளர்ந்த ஒரு பெருங்குலாசலம் “மந்தரகிரி, பூர்வம் பாற்கடல் கடைந்து அமுதத்திற் புரண்டதாயினும் வெண்மைநிறம் பொருந்திற்றில்லை, நான் அப்படிப்பட்ட பிரயாசமொன்றுமின்றிச் சுயமாகவே அந்நிறம் பொருந்தியிருக்கிறேன்” என்று அதை நகைக்கின்றதுபோலத் திக்கெட்டினையும் தனது களங்கமற்ற காந்தியினால் வெண்மை நிறமாக்கி விளங்கிக்கொண்டிருக்கும். அத்தகைய மேன்மை வாய்ந்த பருப்பதத்தின்கண், வித்யாதராதிகணங்களுடன் இந்திரனும், வசிஷ்டர் முதலிய பிரம நிஷ்டர்களும், மாலயனாதிய சிவகணங்களும் பூதகணங்களும் வணங்கிச் சிரத்திற் கூப்பிய கரத்தினர்களாய்க் குறிப்பறிந்துநிற்க, ஆன்மாக்களிடத்தே பதிந்த கைம்மாறற்ற பெருங்கருணையினாலே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐம்பெருந்தொழில்களையும், இயற்றுவியற்றிவரும் அருட்பெருஞ்சோதியாகிய சிவபெருமான், நவரத்தினங்களாலிழைத்து தேவதச்சனாற்செய்யப்

பட்ட மகாமண்டபத்திலுப்பண். ஆயிரங்கோடி சூரியரைப்போலப்பிரகாசிக்கும் பல சிங்கங்களால் தாங்கப்பெற்ற விமானத்தில், வெண்ணீறபூக்கதிருமேனியும், கொன்றையும், கங்கையும், மூன்றாம்பிறைச் சந்திரனையுந் தாங்கிய ஜடாமகுடமும், எண்ணில்லாத பிரம்ம விஷ்ணுக்களிறந்தவென்புகளைச் சாக்ஷியாகவணிந்த சிரமாலையும், சந்திரசூரியாக்கினியென்றுதிரிநேத்திரங்களும், ஆலகாலவிஷத்தையுண்ட நீலகண்டமும், மான் மழு அபயவரதமென்னும் நான்கு திருக்கரங்களும், புலித்தோலாடையும், யானைத்தோல்போர்வையும், அரவாபரணமுமுடையசொரூபத்தோடு, அருட்சத்தியாகிய உமாதேவியார் இடப்பாகத்தில் வீற்றிருக்கக் கொலுவீற்றிருந்தருளு நாள்களினேனர்நாள் விஷ்ணுமூர்த்தி, பிர்மா. தேவேந்திரன், அஷ்டவசுக்கள், ரிஷிகள், தேவர்கள் முதலிய யாவரும். சூரபன்மனால் மிகவும் மெலிந்து வாடி மகமேருவில் கூட்டமாகச்சேர்ந்து கைலையை நோக்கி நடந்து அதிகாரநந்தி தேவரால் வழிவிடப்பெற்று விஷ்ணுமூர்த்தி முதலணியாகச் சிவபெருமான் சன்னிதானத்தில் சென்று திருவடியில் விழுந்து வேதவாக்கியங்களால் ஸ்தோத்திரம் செய்வாராயினர்.

கந்தபுராணம் உற்பவகாண்டம்

திருவவதாரப்படலம் (36) கவி.

முன்னதின்முன்னெனமொழிதபேயெனிற்
பின்னதின்பின்னுமாப்பேசநிற்றியா
லன்னவையேயெனிலொழிந்ததல்லையோ
வென்னெனநின்னையானேத்துகின்றதே.

புல்லியபுரம்பொடித்ததுங்காமனை
யொல்லெனவெரித்ததுமுனக்குச்சீர்த்தியோ
வெல்லையில்விதிமுதலெனைத்துமீண்டுநின்
னல்லருளாணையேநடத்துமன்மையால்.

எங்களைமுன்னரேயியல்பிவீந்தனை
யெங்களையிவ்வரசியற்றுவித்தனை
யெங்களோடொருவனென்றிருந்திநின்செய
லெங்களினறிவரிதென்றுபோற்றினர். 38

இவ்விதமாகத்துதித்து மெய்நடுங்க, உரோமஞ்சிலிர்ப்ப, கண்களினின்றானந்த அருவி பெருக, கைகளைச்சிரசின்மேற்குவித்து சர்வ அண்டாண்டங்களுக்கும் ஆதாரமாகிய சிவபெருமானே! அடியேங்கள் யாவருக்கொடுங்கோல் செலுத்துஞ்சூரனால் எங்கள் பதங்களெல்லாமிழந்து மகமேருவின் சாரலில் அநேக காலமாய் ஒழிந்துக்கொண்டிருக்கிறோம். சூரன் சிரேஷ்ட

புத்திரனுகிய, பானுகோபன் கையிலகப்பட்ட சயிந்தன் முதலிய தேவர் யாவரும் பலவித சின்னப்பட்டு சிறையிலிடப்பட்டும் மதுமாம்ச குடங்களை யெடுக்கப்பட்டும் இன்றும் அவனுல் படுகின்ற வருத்தம் சொல்லிமுடியாது ஆதலால் தங்கள் ஒப்பற்ற சொரூபமாக ஒரு குமாரனைத்தரவேண்டுமென்ன அதுகேட்ட பரமசிவம் தமது பழமையாகிய ஆறுமுகத்தோடு விளங்கினர் அம்முகமாறனுமுள்ள நுதற்கண்களினின்றும், ஆறக்கினிப்பொறிகள் தோன்றின அத்திபம்பொறியானது,

ஷை படலப் (46) கவி.

மாதண்டங்குலவுநேமிவால்வளை வயிரவொள்வாள்
கோதண்டமபர்த்தோன்வேதாகுறித்துணர்வரியசோதி
வேதண்டமபரவிற்றென்னமேதனிசூழ்ந்துவின்போய்
மூதண்டங்காறுஞ்சென்ற முதல்வன்கண்ணுதலிற் செந்தீ.

அதுகண்ட தேவர்கள் பயந்து நாற்றிசைகளிலுஞ் சிதரியோடினர்கள். வாமபாகத்திலிருந்த உமாதேவியாரும் பயந்து, தமதுதிருவடிச்சிலம்பு வொலிக்க நடனென்று தாக்கி, நவமணிகளுதிரும்படி தமது திருமாளிகையை நோக்கி ஓடினர். உடனே தேவர்கள் வேண்டுகோளால் அத்தீயை தமது திருக்கரத்தடக்கி, அக்கினிதேவனையும், வாயுதேவனையும், அழைத்து அவர்கள் கையிற்றந்து கங்கையில் விடச்சொல்லினர்.

ஷை படலப் (96) கவி.

அருவமுமுருவுமாகியநாதியாய்ப்பலவாயொன்றாய்ப்
பிர்மமாய்நின்றசோதிப்பிளம்பதோர்மேனியாக
கருணைகூர்முகங்களாறுங்கரங்கள்பன்னிரண்டுங்கொண்டே
யொருதிருமுருகன்வந்தாங்குதித்தனனுலகமுய்ய.

இவ்விதமாக கங்கையில் ஆறுமுகத்தேவர் பிறந்ததை தேவர்கள் கண்டு கார்த்திகை மாதர்களையழைத்து அமுதங்கொடுக்கச் செய்தனர். இஃதிங்ஙனமிருக்க, பரமன் நெற்றி விழிகளினிடமாகத் தோன்றியவனற்பொறி சரவணப்பொய்கையில், பிள்ளையுருப்பெற்றதென பார்ப்பதியார் தெரிந்துகொண்டவராய், நிர்மலக்கடவுளாகிய பரமன் என்னிடத்திற்றமதருளினைப்பெற்ற திருக்குமாரனைப் படைக்கவொட்டாமற் றடைசெய்த போன்னகர்க்கிறைவனுகிய இந்திரன், பிர்மன், விஷ்ணு மற்ற தேவர் முதலியவர்களுடைய தேவிமார்களுக்கு இத்தின முதற்புத்திர சந்தானமில்லாமற் போகக்கடவதெனக் கோபித்துச்சபித்தனர். அவ்வாறே விண்ணவர்கள், கியுகள் விர்த்தியடையாமல் அதுவரையித்தோற்றிய தொகை முப்பத்து முக்கோடி தேவர்களென்றும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளென்றும்; நாளதுவரையிற் பேசவிருக்கின்றனர்.

இங்ஙனம் இமவான் புத்திரி சாபமீந்து பரமசிவத்தினது பவுத்திரமாகிய சன்னிதானத்தில் சேர்ந்து கர்த்தனே! தேவர்களனைவரும் பணிந்து தமது குறைபாடுகளை விண்ணப்பஞ்செய்து வேண்டிய காரணத்தினால் தேவரீர் கடாட்சித்த சுயஞ்சோதிப்படிவமாகிய பொறிகளினது உஷ்ணத்தினாற்பயங்கொண்டு சரீரமுற்றும் வெம்பிப்பதைத்த காரணத்தினால் தேவரீரைப் பிரிந்தோடிய யான் எமது நாதனே! நீர் அப்பொறிகளைப்போக்கிய படியால் மீளத்திருச்சபைக்கு வந்தேனென்று பார்ப்பதியார் விண்ணப்பஞ்செய்த காலத்திற், சிவபெருமான் அம்மையிடத்திற் கிருபையுற்றுக் கரங்களை நீட்டி வரவழைத்துத் தமதிடப்புறத்திற் சேர்த்தருளினர்.

இப்பிரகாரஞ் சிங்காதனத்தில் வீற்றிருந்த பார்ப்பதியார் முன்னமோடிய காலத்திற் சிலம்பினின்றும் சிதறிக்கிடந்த மணிகளானவை எமதிறைவன் முன்னர் பிரகாசித்திருந்தன.

அங்ஙனஞ் சிதறிக்கிடந்த மணிகளினொளியுட் சிவபெருமானனுக்கிரக விசேடத்தாற் பார்ப்பதியார் சுந்தரவடிவமானது பிரதிபலித்து விளங்கின. அங்ஙனம் விளங்கிய உமையவள் திருவுருவங்களைப் பரமன் பார்த்தருளி வாருமென்றழைத்த காரணத்தில் உலகங்களிற் புகழநின்ற ஒவ்வொருவகை மணிகளிடத்திலும் ஒவ்வொரு சத்தியாகத்தேவர் செய்த புண்ணிய பலத்தினால் நவசத்திகளும் ஏகமுகமாய் வெளிவந்தனர்.

பார்ப்பதி தேவியாரையொத்த சுந்தரவடிவங்களைப் பெற்றுதித்த நவசத்திகளும் பரமசிவத்தினது திருவடிகளிற் சேவித்து நின்று அத்தேவருடைய மங்கள கரமாகிய ரூபலாவண்யங்களைப் பார்த்துப்பார்த்து மனந்தளர்ந்து மையல்கொண்டு மனப்பூர்வமாக இச்சித்தமாத்திரத்தில் தட்சணமே கர்ப்பங்களைக்கொண்டனர். இச்செய்கைகளனைத்தினையும் உமையவள் திருஷ்டாந்தமாகக் கண்டமாத்திரத்தில் உருத்திர சங்கார மூர்த்தியெனக்கோபித்து எனக்கு மாறாக சக்களத்திகளான காரணத்தினால் மேலோங்கிய கற்பங்களுடன் பலகாலமிவ்வாறே இருக்கக்கடவீர்களென்று சபித்தனர்.

க. பு. துணைவர் வருபடலம் (11) கவி.

ஆவதெல்லையினடுக்கமுற்றஞ்சியேயங்கண்
மேவுமாதர்மெய்வியர்த்தனரவ்வியர்ப்பதனிற்
றேவதேவனதருளினாற்றினகரத்திரள்போல
ஒவிலாவிறல்வீரர்களிலக்கர்வந்துதித்தார்.

இக்கொடுமையான சாபமொழியைக் கேட்டமாத்திரத்திலவர்கள் மிகவும் நடுங்கிஅச்சங் கொண்ட வெம்மையினால் தேகமுற்றிலும் வியர்த்தொழுகிய ஜலப்பெருக்கினிடையில், தேவதேவோத்தமனாகிய பரமன்றிருவருளினால்

சூரியர் கூட்டம்போல் சலனமற்ற வீரபராக்கிரம ஜயசாலிகளாகிய இலட்சம் பிள்ளைகள் அவதரித்தனர்.

௸ படலம் (12) கவி.

வடித்தனைப்பொருங்கண்ணினர்வியர்ப்பினில்வந்தார்
கடுத்தமானவரோரிலக்கத்தருமசனி
கடுத்தசொல்லினர்பொற்றுகிலுடையினர்கரத்தி
லெடுத்தவாளினர்பலகையராகியீண்டினரால்.

இவ்விதமாக மாவடுவினையொத்த நேத்திரங்களையுடைய நவகன்னியர் வேயர்வையினிடத்துத்தோற்றிய பலசாலிகளாகிய இலட்சம்பேர்களும் சோடைபிடிகளையொத்த உரத்த சொற்களோடு பொன்னுடையிடையிற்றரித்து கரங்களிலொப்பற்ற வீரவாள்களைத்தாங்கிச் சபையெங்குமிடமின்றி நெருங்கிப் பரமனைக்கண்டவுடன் சமீபத்திற்போய் உபய சரணாரவிந்தங்களுஞ் சிரங்களிற்பட தீர்க்கதண்டன் சமர்ப்பித்து நாவினுக்கினிப்பைத்தருங் கடவுளினது அளவற்ற திருநாமங்களைத் துதித்தவர்களாய் கரங்களைக் கூப்பி நின்றனர் அவர்களை சர்வக்கியனாகிய பரமன் கிருபையாகப்பார்த்துச்சொல்லுகின்றனர்.

குமாரர்களே கேட்பீராக! நீங்களனைவரும் ஜயசாலிகளாக விளங்கி இந்திரன் முதலிய தேவர்களுக்குப்பகைவராகிய இராட்சதரைக் கண்டதுண்டமாகச்சங்கரித்து வேரறக்களையவிருக்கின்ற நமது திருக்குமாரனாகிய குமாரசுவாமிக்குப் படைத்துணைவராகவிருக்கக் கடவீர்களென்று அனுக்கிரகஞ்செய்து வேண்டிய புஜபல பராக்கிரமத்தையும் பெறத்தந்தனர். இவ்வாறு வரம்பெற்ற இலட்சத்தவர். பக்தி விசுவாசங்களில் மேம்பட்டவராய் சிவத்தொண்டு புரிந்து பரமன் சன்னிதானத்தினின்றும் நீங்காமலிருந்தனர்.

இங்ஙனமிருக்க முன் பார்ப்பதி தேவியாராற் சபிக்கப்பெற்ற நவகன்னியர்களும் நந்திதேவரம்சமாகிய கருப்பவாதனையைப் பொறுதவர்களாய்ச் சிவபெருமானைப்பணிந்து சுவாமி! இனி அடியேங்களால் இக்கருப்பவாதனையைச் சகிக்கமுடியாது. தேவரீர் திருவுளத்தமைத்து அருள்செய்யவேண்டுமெனப் பிரார்த்தித்து நின்றனர். அப்போது வேண்டுவார் வேண்டியதே யீயும் பரமகருணாநிதியாகிய சிவபெருமான் தமதிடமாக வீற்றிருந்த உமாதேவியாரைப்பார்த்து உனது பாதாரவிந்தங்களி லணியப்பெற்ற சிலம்பினின்றும் முதிர்ந்த நவரத்தினங்களினொளியிலுன் சாயலிற்

பிறந்த பின் கன்னியர்கள் வருந்துதல் உன்திருவருளுக்கழகாகுமோவென, அம்மைபார்புன்முறுவல் கொண்டவராய் அப்பெண்களை நோக்கி நீங்கள் மிக வேண்டுகின்றீர் போதுமென்றருள் சுரந்து நீவிரனைவரும் ஒப்பற்ற வீரர்களைத் தந்தருள்வீரென வநுக்கிரகிக்க உடனே அவ்வொன்பதின்மரும் மறைவிடஞ் செல்ல அவர்கள் கருப்பங்களுட் பிரவேசித்துச் சிவபெருமானைச் சிந்தித்து யோகத்திலிருந்த நந்திகணத்தவர் ஒன்பதின்மரும் திருவவதாரம் செய்து ஸ்ரீசிவபெருமான் சந்நிதியிற் பணிந்தெழுந்தஞ்சலிபஸ்தர்களாய்க் கைகூப்பி நிற்கப்பரமசிவம் பார்ப்பதி தேவியை கடைக்கணித்து

கந்தபுராணம்

துணைவர்வருபடலம் (35) கவி.

உதிதருமத்திறல்வீரரியாணைமேலம்மையுடனுறைந்தநாதன்
பதமலர்கள்பணிந்தெழலுமவர்க்கண்டுபார்ப்பதியைப்பரிவா
னோக்கி
மதியுமிகு திறலுமெழின்மானமுங்கையெனப்பெறுநம்
மைந்தரின்னோர்
புதியரலர்நந்திதனிக்கணத்தவரென்றுன்சுருதிப்பொருளாய்
நின்றான்

(36)

தேவியதுகேட்டுமைந்தர்க்கயிலருளவவர்க்கெல்லாஞ்சிவன்
வெவ்வேறு
தாவில்சுடர்ப்படைகளுதவிவியர்ப்பில்வருமோரிலக்கந்தனயரோடு
நீவிர்களுமொன்றிநுங்கட்கிறையவனுஙயசேனைநீங்கலின்றி
யேவலவன்பணிந்தனசெய்தொழுகுதிரென்றுனவருமிசைந்
துதாழ்ந்தார்.

இவர்கள் சாமான்யர்களல்ல நந்தி கணத்தவர் ஒப்பற்ற பலசாலிகள் பாரெனத்தேவியார் திருவருள்சுரந்து அவர்களொவ்வொருவருக்கும் † செங்குந்த மீந்தருளி வாழ்த்தச் சிவபெருமான் அவ்வாறே ஒப்பற்ற பிரகாசம் பொருந்திய வாளாயுதங்களைத்தந்து நீவிர், உங்கள் துணைவர்களாகிய இலக்கம் வீரர்களோடு சேர்ந்து வாழ்ந்து உங்களுக்கெல்லாம் இறைவனாகிய கந்தவேளுக்கினிய அவன் பணி புரிந்து வாழ்வீரென அவ்வாறே வாழ்ந்திருந்தனர்.

---

† இதனை. சலம்பிரியாதருட்டுச்சாவற்கேதனமெனுஞ்ஞான்றும்
வலம்பிரியாதசெவ்வேட்குறுதுணையாகமன்னுட்
குலம்பெறவந்தாரென்றங்கொடியுமைதந்தவீட்டி
நலம்பெறுமிந்தக்குந்தப்பரிசுபோனுட்டிலுண்டோ
எனவருஞ்செட்டியெழுபதின்திருவிந்தத்தானுமறிக

"நவசத்திகளாவன."

மாணிக்கவல்லி, தரளவல்லி, புருடராகவல்லி, கோமேதகவல்லி, வைடூரியவல்லி, வயிரவல்லி, மரகதவல்லி, பவளவல்லி, நீலமணிவல்லி முதலினோரென்ப.

இவர்களிடத்து முறையே, வீரவாகு, வீரகேசரி, வீரமாமகேந்திரன், வீரமாமகேச்சுரன், வீரமாபுரந்தரன், வீரராக்கதன், வீரமார்த்தாண்டன், வீராந்தகன், வீரதீரனுமாக அவதரித்தனர்.

இவற்றிற்கு உதாரணம்.

கந்தபுராணம் துணைவர் வருபடலம் (25) கவி.

பேரவாகுவையுடையவனிளவல்பேரருளால்
சூரவாகுலம்வானவர்பெருவகைதொலைப்பா
னேரவாகுறுஞ்செம்மணிப்பாவைதன்னிடத்தில்
வீரவாகுவந்துதித்தனனுலகெலாம்வியப்ப.

விரளவல்லியார்தந்திருசூரிவியன்படையாங்
கரளவல்லிருளகற்றுவானெழுந்தவொண்கதிர்கள்போற்
றிரளவல்லினையனையபூண்முலையுடைத்தெய்வத்
தரளவல்லிபாற்றோன்றினன்வீரகேசரியே! 26.

மக்கள்வானவர்க்கருந்துயர்புரியும்வல்லவுணர்
தொக்கவீரமாமகேந்திரம்பொருவளந்தொலையச்
செக்கர்நூபுரபுட்பராகத்திபாற்சிறப்பாற்
றக்கவீரமாமகேந்திரன்வந்தவதரித்தான். 27.

ஆதவத்தனிக்கடவுளும்வடவையாரழலும்
சீதளப்புதுமதியமும்வெள்குறத்திகழ்கோ
மேதகத்தமர்பாவைபால்விண்ணவர்புரியும்
மாதவத்தினால்வீரமாகேச்சுரன்வந்தான். 28.

தானமாநிலத்தேவர்கண்மகிழ்வுறத்தகுவ
ரானபேரெலாமுடிவுறவறந்தலையெடுப்ப
கானல்வைடூரியமின்னிடைக்கழற்கான்
மானவீரமாபுரந்தரனென்பவன்வந்தான். 29.

சூரராக்கமுந்துணைவர்தமாக்கமுஞ்சூழுந்
தீரராக்கமும் வானவரேக்கமுஞ்சிதைய
வாரராகமழ்கொன்றைவேணியனருளதனால்
வீரராக்கதன்வந்தனன்வைபிரமெல்லியல்பால். 30.

சுரகதத்தனிமால்வரையெடுத்தொருகணத்தில்
புரகதத்தினையிழைத்தவனருளினற்புணரி
குரகதத்திடைபைங்கனல்கொம்மெனவெழல்போற்
மரகதத்திபால்வீரமார்த்தாண்டன்வந்தனனே. 31.

மையன்மாக்கரிவாம்பரிவிரவிய மணித்தேர்
வெய்யதானவர்பஃறொகையிமைப்பினில்விளிய
மொய்யினூர்த்தடுமானவள்பவளமாமொழிப்பேர்
தையறன்வயின்வலியவீராந்தகன்சனித்தான். 32.

கந்துதித்திடுவிபனரமடங்கடலுங்கடலின்
முந்துதித்திடுமாலமும்வட்டவையுமுரண
நந்துதித்தநற்களமணிபாவைநற்றவத்தால்
வந்துதித்தனன்வீரதீரப்பெயர்வலியோன். 33.

என வருவனவற்றானுணர்க.

## நவவீர உற்பவ விளக்கத்திற்கு பிரமாண நூல்களாவன.

### ஈட்டி யெழுபது (4) கவி.

பாதநூபுரத்திற்றேவிசாயைகண்டமலன்கொண்ட
காதலாற்கருப்பமாகுங்கதிர்நவமணிமாதர்க்கண்
மேதகுவீரத்தோடுமென்மீசையோடும்வந்த
மாதவவீரவர்க்குத்தலைவரித்தலைவர்மாதோ.

எனவும்.

### செங்குந்தர் மான்மியம்.

சிவைபதச்சிலம்பி னுதிர்மணிவல்லித்தெரிவையோடொன்ப துமடவார்
சிவபிரான்றன்னைநோக்கினர்கருப்பஞ்சேர்ந்துநம்வீரவாகுடனே
நவவயவரையீன்றெடுத்தரன்னோர்நல்லகுந்தாயுதம்பெற்றே
உவமையில்குகனற்றுணைவராய்ச்சூரனொடுகிளைவென்றுல களித்தார்.

எனவும்.

### வீரநாராயணர் விஜயம்.

ஆதியிடத்தேயுதித்தவாறுபொறிகண்டஞ்சியகன்றுதன்றோண்
பாதமலர்நூபுரத்துநவமணியினினத்தினிறம்பரித்துக்காட்டி
யேதினவசத்திகளாமிவ்விளையாட்டருளுகின்றவிறைவியென்னும்

திதிலருட்டில்லையுறைசிவகாமசுந்தரிதாள்சென்னிசேர்ப்பாம்
எனவும்.

செங்குந்தர் மாலை (29) கவி.

மருவந்தபூங்குழன்மாதுமையாளொண்மணிச்சிலம்பி
னுருவங்களொன்பதிலொன்பானுமையுருவுற்றரனற்
கருவுந்ததோன்றியகாரணத்தாற்கந்தவேளுக்குப்பின்
செருமுந்துசூலப்படையான்றருமைந்தர்செங்குந்தரே.

எனவும்.

செங்குந்தர் பிள்ளைத்தமிழ், செங்கீரைப்பருவம் (3) கவி.

இந்திரன்முதற்றேவர்யாவருங்கயிலைமலையிறைவன்முன்னின்றுசூர, னிகலிற்படும்பாடனைத்தையுமொழிந்திடநம்மீசனருளமிரங்கித், தந்திடுநுதற்கண்ணினழலெழுப்புஞ்சுடர்தனைக்கண்டு பார்வதியுளந், தனிலஞ்சியோடவவள்பாதச்சிலம்பிணைகள்தாக்க நவமணிகள்சிதறப், பைந்தொடிமடைந்தையர்களொன்பதின்மராகியேபரமனைக்கண்டவுடனே, பரிவுகொடுகெர்ப்பமாய்விரவாகுவினுடன்பண்பாகவந்துதோன்றிச், செந்திருவிளங்கவேவவந்தலட்சம்வீரர்செங்கீரையாடியருளே, சேவலங்கொடியாளர்மேவிடுந்தயவாளர்செங்கீரையாடியருளே.

எனவும்,

பழனிப்புராணம்-நவவீரர் துதி.

பாலொளிவெண்ணீற்றினர்செம்பவளவொளிச்சடையினர் பார்வதிதம்பாலர்
சூலொளிவாட்பலகையர்சூர்முதறடிந்தவேற்கிறைவன்றுணைவர் தூய
வாலொளியசூரெயிற்றர்வீரவாகுவைமுதல்மணியின்றோற்றம்
போலொளிரொன்பதின்மரையும்விரைமலர்தூயத்தூய்ப்ப ணிந்துபோற்றுவாமால்.

எனவும்.

மதுரைப்புராணம்.

சாம்பவிசிலம்பிற்பூத்தசாயலூர்வசிகொண்மாதர்
சாம்பவன்கருணையாலேதந்தசெங்குந்தமாக்கள்
தேமபொளிவீதிதன்னிற்றிருவலகியற்றுவோர்கள்

வேம்பலர்மன்னன்போலவமேதினிபிறந்துவாழ்வார்.

எனவும்.

இலக்ஷணக்குறவஞ்சி.

கண்ணிகள், இராகம் மத்தியமாவதி, அடதாளம்.

பேரானவன்னகர்க்கம்மா — நல்ல
பெலவாதிபதிகளம்மா
வீராதிவீரர்களம்மா — பதினெண்
விருதுபடைத்தோர்களம்மா.
தோராதோராயிரத்துத்தொள்ளாயிரம்பேர்கள்
சீரானசெங்குந்தர்தேவிசேவடிவந்தோர்.

எனவும்.

செங்குந்தர் திருக்கை வழக்கம்.

—வெய்ய
வனற்பொறியாலானனனைத்தரவக்
கனற்பொறிக்கஞ்சுற்றெழுந்தகௌரி—புனைச்சிலம்பி
ளென்பான்மணிசிதறவொன்பானுமையுருக்க
ளன்பாயவற்றாடவதரித்தே—யின்பாயவ்
வண்ணலருள்பெறலுமவ்வவர்பானந்திகணப்
பண்ணவர்சூலாகவுமைபார்த்துறக்கி—நண்ணூறுசூல்
தோற்றுவகைசபிக்கத்தோமினவசத்திகணு
மேற்றூராய்வேர்ப்பவதிலேயிலக்க—ராற்றலொடு
பொன்னுடையும்வாளுமுறப்போந்தமலற்போற்றியவன்
மன்னுடையதொண்டில்வயங்கமினுர்—துன்னுறுசூல்
பன்னுளுமாற்றூராய்ப்பாண்டரங்கனுற்பரைத
னின்றுரருள்பெறலுமியோகுவிடுத்—தன்னுர்
நிறங்கொடுபொன்னுடையொடுநீளாயுண்மீசைத்
திறங்கொடொருங்கேயொன்பதின்ம—ரறங்குலவப்
பண்டுமோனுந்திப்பதுமத்தவதரித்த
வெண்டிருக்கணன்போலினிதுதித்துத்,

எனவும்.

செங்குந்தரம்மானை.

மாவடியிலேவிளங்கும்வல்லிகாமாட்சித்தாய்
சேவடியிலேயுதித்தார்செங்குந்தரம்மானை
சேவடியிலேயுதித்தார்செங்குந்தராமாயிற்

பாவடியினின் றுபசப்புவதேனம்மானை
பசித்தவருக்கன்னமிடபசப்பாரோவம்மானை.

எனவும்.

சேனைத்தலைவர் மரபுவிளக்கச்சூராவளி.

வேதமொருநான்கும்வியந்தேத்தும்வெள்ளிமலை
மாதுமையாள்பங்கன் மகிழ்ந்தளித்த—போதமிகு
கந்தவேட்கெம்பியராக்கன்னியுமைகாற்சிலம்பின்
சந்தமணிமாதர்தரத்தரையில்—விந்தையொடு
வந்தநவவீரர்மரபார்செங்குந்தரென்றே
எந்தவுலகுமினிதுணரச்,

எனவும்.

பார்வதிதேவியார் நர்திமுனிக்கித் திருவாய் மலர்ந்த
ரேகைசாஸ்திரம் அந்திவரைச்சூலம்.

பூவில்நவகன்னியர்மேல்மையல்கொண்டு
பொறியதனால்கருத்தரித்தார்அதையான்கண்டு
மேவிடுமிப்புவியதனில்பிறக்காநிற்க
விளம்பினேன்கிரியருகில்நவமாம்கன்னி
கூவிநின்றார்குகன்அரக்கர்குலமழிக்க
கூர்வடிவேல்தாங்கியபின்துணைவராக
தாவியங்குயென்னருளால்சிலம்புதன்னில்
தான்உதித்தவீரரிடகுலமாய்வந்தோன்.

எனவும்.

அகஸ்தியர் மரபுநூல் (150) கவி.

பாரப்பாஇன்னமொருசெய்திகேளு
பண்பானபுலஸ்தியனேபண்புள்ளோனே
சாரப்பாசண்முகற்கிளேபோரான
சருவாகசத்தியுடபுத்திரரையா
தாரப்பாநந்திகணத்தவருமாகி
தருவாகநவவீரர்மரபில்தோன்றி
வாரப்பாவீரசிங்கராயர்தானும்
வளமானவீரசிம்மாசனத்தோன்பாரே.

எனவும் வருவனவற்றனுமுணர்க.

இதுகாறுங்கூறிவந்த பிரமாண முகத்தால் நவவீரர்களினுற்பவம் வி

ளக்கமாயின. இனி இந்நவவீரர் குமாரக்கடவுளுக்குத் துணைவராக நின்று புரிந்த அறிய செயல்களையும் கூறுவோமாக.

முதல் அத்தியாயம் முற்றிற்று.

## இரண்டாம் அத்தியாயம்.

## "நவவீரர்களின் பராக்கிரமம்."

பார்ப்பதியாரின் பாதச்சிலம்பினின்றுமுதிர்ந்த நவமணிகளிற்றோன்றிய நவவீரர்களையும், இலக்கத்தவரையும், சிவபெருமான் சரவணபவனுக்குப்படைத்துணைவர்களாக விருக்கும்படி கட்டளையிட்டனரென்று மேலத்தியாயத்திற்கூறினவாறே, அன்னோர் கந்தவேளுக்குப் படைத்துணைவர்களாகவிருந்து நடத்திவந்த அரியபல செயற்களைப்பற்றி, சிவானுபூதிச் செல்வராகிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், † பன்னீராயிரம் திருவிருத்தங்களால் திருவாய் மலர்ந்த கந்தபுராணத்தில் "கந்தவிரதப்படலம்" திக்கு விசயப்படலம் "திசாபலனப்படலம்" முதலிய படலங்களில் விஸ்தரித்துப்பேசியிருக்கின்றர். இப்புராணத்தை ஆதியில் அச்சிட்டு வெளிப்படுத்த முன்வந்த மேதாவிகளான பொறுமைகொண்ட புல்லியர். நவவீரர்களின் சிறப்பை விளக்குவதான திக்கு விசயப்படலத்தையும் திசாபலனப் படலத்தையும் அடியோடொளித்துக், கந்தவிரதப்படலத்திலுங் கையிட்டு சில கவிகளையுமாறுபடுத்தி வெளியிட்டனர். அதனுல் அன்னோர்களின் பராக்கிரமச்செயல்களொன்றும் பிற்காலத்தம் மரபினர் அறிந்துகொள்வதற்கேதுவில்லாமற்போயின. எனினும் கிடைத்தமட்டில் அவர்கள் வீரத்தன்மையை விளக்குவதான இரண்டொரு சரிதங்களை சுருக்கமாக விதன்கீழ்க்கூறிமுடிப்பாம்.

---

† இதனை. அந்தப்புரமுமறுகான்குசோட்டகத்தாருமொன்றாய்க்
கந்தப்புராணம்பன்னீராயிரஞ்சொன்னகச்சியப்பர்
தந்தப்பல்லக்குச்சிவிகையுந்தாங்கியச்சந்நிதிக்கே
வந்தப்புராணமரங்கேற்றினர்தொண்டமண்டலமே.
எனவரும் தொண்டமண்டல சதகத்தாலுணர்க.

இக்காவிதனை, 10346 செய்யுள்களாக்கி, "கந்தப்புராணம் பதினாயிரஞ்சொன்ன கச்சியப்பன்" எனவும் வழங்குகின்றனர்.

## (1)

## யாகத்தீயில் தோன்றிய ஆட்டுக்கிடாவை, வள்ளிமணாளனுக்கு வாகன மாக்குவித்தாரென்பது.

பரமசிவத்திற்குப் பிரீதிதரத்தக்கதாக நாரதமாமுனிவர் தான் விரும்பிய பயனைப்பெற்றுச் சந்தோஷிக்க வேதத்திற் சொல்லிய விதிவழாது செய்தயாகத்தில், மந்திர மாறுபாடுகளினாற் செக்கர் வானத்தினையொத்த தேகத்தினை வாய்ந்த ஆட்டுக்கிடாவொன்று, யாகங்களெனப் பலவற்றையேற்படுத்திக்கொண்டு நம்முடைய வருக்கங்களை வகையறத்தினந்தோறும் மாய்த்து தின்கின்றனர், இக்காலத்திற் சகலரும் ஓரிடத்திற் கூடியிருப்பதால்,இவர்களைவழைந்துகொண்டு கொல்வேனென நிச்சயித்து, அக்கினிக்கொழுந்தாகிய குதிரை வாகனத்தின்மீது ஆரோகணித்தெழுந்தது போலத்தோன்றின.

இங்ஙனந்தோன்றிய ஆட்டுக்கிடாவானது, ஊழிகாலத்திற் சராசரப் பிரபஞ்சங்களனைத்தையும் நாசஞ்செய்ய வெழாநின்ற பிரசண்டமாருதமும், வடவாமுகாக்கினியும், வானத்திற்பரவிய மேகங்களிடத்துண்டாய் முழங்கும் இடிக்கூட்டமும், ஒன்றிற்கலந்து ஒருருக்கொண்டு வந்த தொப்ப ஆர்ப்பரித்து, அவிர்ப்பாகம் பெற வந்த தபதியர் முதலினோரைத் தனது கூர்மைபொருந்திய கொம்புகளால் துன்பப்படுத்தி, வருத்திவருவதையாற்றாத இருடியரும், தேவர்களும், நானாவிடங்களிலோடி யொளித்துச் சிதறினர், வேள்வித்தலைமை வகித்த நாரதர் இதனையறிந்து, சிந்தாக்கிராந்தராய் மனோவேதனை மேலோங்க, யேது செய்வதெனத்தோற்றாராய் முடிவில், பராக்கிரமசாலிகளான நவவீரருடன், இலக்கத்தவரோடு கந்தகிரியில் வீற்றிருக்கும் குமாரசுவாமியிடம் முறையிட, கந்தவேள் திருவுளங்கனிந்தவராய் அஞ்சல்மின் என அபயஸ்தம் அளித்து, தமதிளவலான வீரவாகு தேவரை விளித்து அக்கினியில் தோன்றிய அவ்வாட்டுக்கிடா எங்கிருப்பினும் தேடிக்கொண்டுவரக்கடவை என்றாக்கியாபித்தனர். விடைபெற்ற வீரவாகுதேவர், மண்டலாகாரமாய்க்கடல்சூழ்ந்திருக்கும் பூவட்டத்தெல்லையும், சப்தலோகங்களில் தேடியும், காணாது, பிரமலோகத்தில் தமக்கெதிர்ப்படுவோரொருவருங் காண்கிலனேவென விறுமாந்து திரியும் அவ்வாட்டை, ஆக்கிரமித்து முறுக்கொண்டு வயிரத்திலும் வலிதாயிருக்கின்ற அதன் கொம்புகளை வலித்து, ஒரு நொடியிற் குமாரக்கடவுள் முன்னிலையிற்சேர்த்,தவர்க்கு வாகனமுமாக்குவித்தனர். பின்னர் நாரதமுனிவர் எஞ்சியாகத்தை நிறைவேற்றி மகிழ்ந்திருந்தனரென்பது சரிதம்.

இவற்றிற்குப் பிரமாணம் கந்தபுராணம்
தகரேறுபடலம் (21) கவி.

ஆடலந்தொழின்மேற்கொண்டேயனைவருமிறியச்செல்லு
மேடமஞ்சுறவேயார்த்துவிரைந்துபோய்வீரவாகு
கோடவைப்பற்றியீர்த்துக்கொண்டுராய்க்கைலைகண்ணி
யேடுறுநீபத்தண்டாரிளையவன்முன்னருய்த்தான்.

எனவும்.

ஈட்டி யெழுபது (6) கவி.

ஓதியவேள்வியிலுவப்பநாரதன்
போதவேதகர்தனைப்பொங்குதீத்தர
வேதனைப்படுப்பதைவிரைந்துகட்டியே
சேதனக்குதவினதிருச்செங்குந்தமே.

எனவும்.

வீரநாராயணர்விஜயம் தேவசாட்சிச்சருக்கம் (87) கவி

நந்தாவிசையாழதுபயிலுநன்னரதனுன்முன்னேம்புஞ்
செந்தீக்கொடுத்தவொருதகர்மாத்திரமடங்கக்கைப்பற்றிக்
கந்தாமுருகாவீதார்ந்துகாவாயுலகமெனக்கொடுத்த
சிந்தாவென்றிவீரர்குலச்செல்வமாகத்திகழ்கின்றேன்.

எனவும் வருவனவற்றானுமுணர்க.

## (2)

## இந்திரனை வென்றனரென்பது.

ஓர் முனிவர் முருகக்கடவுளால் முத்தியடைவான் கருதியாகஞ்செய்ததை யுணராத பிரமன், அந்தயாக பலனுக்காகத்தனது பதவியை அவர்க்களிப்பான் கருதித், தேவரைக்கொண்டு அவரை அழைக்க, அக்கால் அவர்தாம் வேண்டியது. பிரம்ம பதவியன்றென்று மறுக்க, அதற்காற்றுதவராய்த் தேவர்கள் அம்முனிவரை யெதிர்க்கையில் முருகக்கடவுளின் சகோதரர்களாகிய வீரவாகு தேவர் முதலிய வீரர்கள், அத்தேவர்களுடனெதிர்த்து அவர்களை புறமுதுகாட்டி ஓடும்படி செய்து, வெற்றிகொண்டனரென்ப.

இவற்றிற்குப்பிரமாணம் ஈட்டி யெழுபது. (21) கவி.

பரகதிவேள்விபண்ணுமிருடிதன்பான்மைபாரா
வரகதிதந்தையேவுமமரரைமடியநூறி

யிரதமோடிவுளிவேழமியாகதானத்துக்கிந்து
சிரமணிமகுடம்பெற்றசெங்குந்தர்போலுமுண்டோ.

எனவும்.

வீரநாராயணர்விஜயம் தூதரைச்சருக்கம் (16) கவி.

முத்திக்காமகம்புரிந்தமுனிவரனுக்கிடராற்று
மத்திக்காரூர்திமுதலமரர்தமைப்புறங்கண்ட
சத்தித்தாவொருகுந்தப்படையாளர்தரியலனைக்
குத்தித்தான்றலையறுக்கக்குதித்தெழுந்தாருதித்தழுந்தார்.

என வருங்கவிகளானுணர்க.

இன்னும் இதன் விரிவையுணர விரும்புவோர் செங்குந்த புராணத்தில் காண்க.

## (3)

## பிரமனைச் சிறையிட்டனரென்பது.

ஒருநாள் தேவர்களனைவரும் கைலாசத்திற்குச்சென்று சிவபிரானைத் தரிசித்துத்திரும்புகையில் அங்கிருந்த முருகக்கடவுளை தேவர்களெல்லாம் வணங்கிச்செல்ல,பிரமன் மாத்திரம் அச்சிவ குமாரனை சிறு பிள்ளையென்று அலட்சியம் செய்து வணங்காதேக, முருகக்கடவுள் அதனையுணர்ந்து பிரமனுக்கு அறிவு வருவிக்க எண்ணி, பிரமனை அழைத்து! உட்காருவாயென்றிருத்தி உன்னைப்பார்க்குமிடத்தில் நான்கு சிரங்களும், நீண்ட தாடிகளும், கரங்களில் அக்குமணியுங், கமண்டலமுங் கொண்டிருப்பதால், அதிக மகிமையினைவாய்ந்த மகத்துவமாகக் காணப்படுகின்றனை. ஆதலால் தினந்தோறும் செய்துவரும் தொழிலைச்சொல்லக்கடவை யெனக் கேட்டனர். அதற்கு நான்முகன் ஆதியிற் பரமசிவம் சிருஷ்டித்தொழில் புரிவதற்காக வென்னைப் படைத்தபோது அளவிறந்த வேதங்களையும், அவைகளுக்கு பாஷியமாகிய ஆகமங்களையும் அருளிச்செய்தனர். அவைகளிற் சிறிதறிந்துளேனென, முருகக்கடவுள் அங்ஙனமாயின், வேதங்களுக்கெல்லாம் முந்திய பதமென்னை! சொல்லெனப்பிரமன் ஓம் என, அதற்குப்பொருளென்னையெனப், பிரமன் பொருள் சொல்லத்தெரியாது விழிக்கும்போது வீரவாகுதேவர் அவன் சிரங்களிற் குட்டி காலிற்றளையிட்டுச் சிறையிடை வைத்தனரென்ப.

இவற்றிற்குப்பிரமாணம்.

கந்தபுராணம் அயனைச்சிறைபுரிபடலம் (14) கவி.

எட்டொணுதவச்சுடிலையிற்பயனினைத்தேற்றே

கட்டுரைத்திலன்மயங்கலுமிதன்பொருள்கருதா
சிட்டிசெய்வதித்தன்மையதோவெனச்செவ்வேள்
குட்டினனயன்குமாமுடிகளுங்குலுங்க.

ஷை (15) கவி.

மறைபுரிந்திடுஞ்சிவனருண்மதலையாமலர்மே
லுறைபுரிந்தவன்வீழ்தரப்பதத்தினுதைத்து
நிறைபுரிந்திடுபரிசனரைக்கொடேநிகளச்
சிறைபுரிந்திடுவித்தனன்கந்தமாஞ்சிலம்பில்.

எனவும்.

ஈட்டி யெழுபது (7) கவி.

பொதியமால்வரைக்குறுமுனிதேறவும்பொருள்சொன்ன
மதியையாறெனவுடையவோர்மூவிருவதனத்தான்
கதியையாற்றியுங்குணத்தொடுபழகியுங்காணு
விதியைமேவலர்நடுங்கிடத்தளையிடுமிளர்குந்தம்.

எனவும்.

செங்குந்தர் திருக்கை வழக்கம்.

அரும்பிரணவப்பொருளையாயாவயற்குப்
பெருந்தளைச்சிக்கஞ்செய்பெருமைக்கை.

எனவும்.

வல்லான் காவியம் தூதரைச்சருக்கம் (13) கவி.

நகம்படைத்தவொருமாதுதந்தவயநற்படையார்
சகம்படைத்தநான்முகனைச்சாமியுரைகாப்பவவ
னகம்படைத்துவிலங்கிட்டவதிவீரராக்ரமத்தோ
டிகம்படைத்துவல்லான்மூர்த்தினியறுக்கவெய்துகின்றார்.

என்வும் வருவனவற்றானுமுணர்க.

## (4)

## வச்சிரவாகுவை வென்றனரென்பது.

தேவர்கள் வேண்டுகோளால் சூரசம்மாரஞ்செய்யவெழுந்த குமாரதேவர் கிரவுஞ்சகிரியையும், தாருகாசூரனையும் சம்ஹரித்து தேவகிரியில் சிலநாளிருந்து பின் திருக்கேதாரம், காசி, ஸ்ரீசைலம், திருவேங்கடம், திருவாலங்காடு, காஞ்சிபுரம், திருவண்ணமலை, திருவெண்ணைநல்லூர், விருத்தாசலம், சிதம்பரம், முதலான ஸ்தலங்களை வணங்கி, காவேரிகடந்து கு

மாரபுரியில் வசித்திருந்து திருச்செந்தூரிக்கெழுந்தருளி விசுவகர்மாவினாற்சமைக்கப்பட்ட ஆலயத்தின்கண் கொலுவீற்றிருந்து, சூரபன்மனுடைய சம்மதியறியும்படியாக வீரவாகு தேவரை தூதேவினர்.

கந்தபுராணம் மகேந்திரகாண்டம்.

வீரவாகுதேவர் கந்தமாதனஞ்சேல் படலம்.

வெந்திறலவுணரீண்டும்வீரமாமகேந்திரத்தில்
சுந்தரத்திருவின்வைகுஞ்சூரபத்மாவின்முன்போய்
எந்தைநீயருளிற்றெல்லாமிசைத்தவனுள்ளநாடி
வந்திடுகின்றேனென்னாவணங்கையேதொழுதுபோனான்.

என்னுஞ்செய்யுளின்படி விடை பெற்ற வீரவாகுதேவர்.

(18) கவி.

அலங்கலந்திரைகொணேமிஅகன்கரைமருங்கின்மேரு
விலங்கலினுயர்ந்தகந்தமாதனவெற்புதன்னில்
பொலன்குவடுச்சிமீதுபொள்ளெனவிவர்தலுற்றான்
கலன்கலன்கலனென்றம்பொற்கழலமர்கழல்களார்ப்ப.

இவ்விதமாக கந்தமாதன கிரியிலேறிநின்று, அக்கிரி குலுங்கும்படியாகவெழுந்து கடலிற்பாய்ந்து வீரசிங்கனை வதைத்து, இலங்கையைக் கடலில் அமிழ்த்தி, அதிவீரனையதஞ்செய்து, மகேந்திரஞ்சென்று, கீழ்க்கோட்டையில் காவல் கொண்டிருந்த கயமுகாசூரனை காலனூருக்கு அனுப்பிவிட்டு, அந்நகரத்துட்சென்று, சிறைப்பட்டிருந்த இந்திரன் குமாரனாகிய சயிந்தனைக்கண்டு தேற்றி, சூரனானவன் நவமணிகளாலிழைத்த சிங்காதனத்தில் அசுரகூட்டங்கள் புடைசூழ எவருமெதிரில்லாமலிறுமாந்து வீற்றிருந்த கொலுமண்டபத்தைக்கண்டு, ஷண்முகக்கடவுள் கிருபையால் சூரனுக்கெதிரில் ஒரு இரத்தின சிங்காதனமிருக்கவியந்து, வெற்றிவேல் வாழியென்று வீற்றிருந்தார். அதுகண்ட சூரன் நீயார்? யெனக்கெதிரில் அச்சமில்லாமல் வந்திருக்கிறாயென்ன, வீரவாகுதேவர், நெருநல் நின்னிளவலாகிய தாருகாசூரனையும், கிரௌஞ்சகிரியையுந் தொலைத்த, வேலாயுதத்தைக்கொண்டருளும் முருகக்கடவுள் தூதன், வீரவாகுதேவனென்பேன், நின்னையும் இக்ஷணமே எமனுலகத்திற்கனுப்ப, இந்த வேலை விடுவதற்குமுன், உன் பேரில் கருணைவைத்து, தேவர்களைச் சிறையிலிருந்து நீக்கிவிட்டு வாழ்வதிஷ்டமா? அல்லது சாவதிஷ்டமா? தெரிந்து வாவெனவென்னைத் தூதாயனுப்பினரென,

உதாரணம்.

கந்தபுராணம் மகேந்திரகாண்டம் அவை புகுபடலம் (107) கவி.

அண்டராற்றலைவவ்வியதாரகனவி

யுண்டகொற்றவேலிருந்ததுவிடுத்திடினுனையும்
கண்டதுண்டமதாக்குமாலறநெறிகருதி
தண்டம்வல்லேயில்புரிந்திலனித்துணைதாழ்ந்தான்.
கெடுதலில்லதோரமரர்கள்சிறையிடைகிடப்ப
விடுதல்செய்தனைபலனுகமவர்தமையின்னே
விடுதலுய்வகையாகுமான்மறத்தில்விரைந்து
படுதலேநினக்குறுதிபாமுடியமப்பரிசே. 108.

இவ்விதமாக வீரவாகுதேவர் சொன்னமாத்திரத்தில் சூரனுடைய கண்கள் சிவந்து கோபநகைகொண்டு ஆயிரமுகங்களுடைய எங்களை ஓராறு முகமுடைய பாலகனு? வென்று தேவர் சிறை மீட்கப்போகிறுன். இது, நன்று! நன்று!! என்று பரிகசித்தான் அதுகேட்ட வீரவாகுதேவர் சுப்பிரமணியக்கடவுள்பெருமைகளை அநந்தவிதமாகப்புகழ்ந்து, இன்னமுங்கேட்பாயாக! எமது தேவர் பெருமையை,

ஷை படலம் (131) கவி.

எங்கணும்பணிவதனங்களெங்கணும்விழிகள்
எங்கணுந்திருக்கேள்விகளெங்கணுங்கரங்கள்
எங்கணுந்திருக்கழலடிஎங்கணுமவ்வடிவம்
எங்கணுஞ்செறிந்தருள்செய்புமறுமுகத்திறைக்கே.

என்றுகூற சூரனதிக கோபங்கொண்டு, ஆயிரம் ராக்ஷதரை நோக்கி! வீரவாகுதேவரை பிடிக்கும்படி எவினன். வீரவாகுதேவர் அவர்களைச்சின்ன பின்னப்படுத்த, அதுகண்ட சதமுகன் வந்தெதிர்த்தான். அவனையுங்கொன்று, காவல் காத்துநின்ற கணக்கற்ற அசுரர்களை மாய்த்து, பின்னுமாயிரம் ராக்ஷதரை அதஞ்செய்து வீரவாளுக்கிரைகொடுத்து, அந்நகரத்திலுள்ள மாடகூட முதலானவைகளை தூள்தூளாகும்படி செய்து, ஆகாயத்திலெழும்பினுர். அங்கிருந்து வச்சிரவாகு பின்தொடர்ந்து எதிர்க்க, அவனைப்பலவிதமாய் வாட்டி அவன் பிடரியைப்பிடித்து அவனது தேகத்திலுள்ள மாமிசாதிகளைச்சேதித்து, மிகுந்த நின்ற † முதுகுத்தண்டெலும்பை, வீரமகேந்திர புரகோபுரத்தினுட்டி விளையாடி அங்குநின்று மீண்டுந்திருச்செந்தூரையடைந்து நடந்த விருத்தாந்தங்களை, ஷண்முகநாதருக்கு விண்ணப்பஞ்செய்தனராக.

இவற்றிற்குப்பிரமாணம்.

வீரநாராயணர் விஜயம்.

தம்பாரோகணச்சருக்கம் (72) கவி.

என்றேயிறும்பூதுகொண்டாருளெழிறஞ்சையிறைவேம்பனீ

---

† இதனைச்சிலர், சுப்பிரமணியக்கடவுளுடன் நவவீரர்கள் பாலப்பருவத்தில் பல அண்டங்களிலும் மலைகளினுச்சியிலுஞ்சென்று விளையாடியதை இக்கால் இம்மரபினர்கள் அவற்றை மெய்ப்பிக்க உயர்ந்த கோபுரங்களிலேறி விளையாடி வருகின்றனரெனக்கூறுவாருமுளர்.

தொன்றேமுனுள்வானிலுருவிச்செல்சூர்மேலையுறகோபுரத்
தென்றாழிலவன்சேய்வெனென்பேற்றியதிலேறியினிதாடுவோர்
தொன்றுயகுலமன்னுவேமுக்குமரிதென்றுசொலிச்சொல்லுமே.

எனவும்.

செங்குந்தர் மாலை (94) கவி.

தகரிவர்வேள்விடத்தூதாய்மகேந்திரந்தன்னிறபுக்கி
யகலரும்வெஞ்சிறைக்கண்படுமும்பரையாதரித்தே
யிகல்செயுஞ்சூர்கடைச்சேய்முதுகென்னைத்தமீட்டியெனச்
சிகரியினட்டிநின்றுடியவீரியர்செங்குந்தரே.

எனவும்.

செங்குந்தர் திருக்கை வழக்கம்.

—காணேர்க்கு
மெண்ணிழியக்கோலோச்சுமேந்தல்சூரன்சபையில்
விண்ணிழிச்சிங்காதனத்தில்வீறுங்கை—யண்ணலன்கோண்
முந்தெதிர்ந்தோர்நீதிமொழிந்தவணின்றேயகல
வந்தெதிர்ந்தோர்தம்மையெலாம்வாட்டியகை—சிந்து
கதமுகனென்றென்னூர்கவன்றபுறங்காட்டுஞ்
சதமுகனைச்சாய்த்தவடல்சால்கை—யிதமனுவுக்
காணுதசூரன்பற்காவலரைக்கட்டழித்துச்
சேணுடைவிட்டெறிந்ததிப்பியக்கை—*கோணுய்த்
துடித்துயிர்கண்மாளச்சீர்துன்னுநகரியாவு
மிடித்ததர்களாக்குமிடியேய்கை—பிடித்தல்விடாச்
சோகுகளைப்பல்விதித்ததோற்றமெனச்சார்சகத்ர
வாகுகளையோர்நொடியுண்மாய்த்திடுகை—யூகன்
கடைக்கால்வெங்நென்னைமேற்காண்சிகரிநாட்டி
† நடைக்காலனினடிக்குநன்கை,

எனவும்.

கந்தபுராண அகவல்.

மதமிகுவச்சிரவாகுவென்பவனை
அதமுறச்செய்து அவன்முதுகெலும்பை
கம்பமதாகக்காசினியோர்கள்
சம்பிரமமாய்ப்புகழ்தழைத்தமகேந்திர
மாபுரிக்கோட்டைவாலுல்குத்தர

* கோணுய் = நேரின்மையாய்.
† நடைக்காலனில் = கூத்தாடுமியமனைப்போல.

கோபுரந்தன்னில்கோணாமல்நாட்டி
நாற்றிசைதனக்கும்நரம்பதைக்கயறாய்
பார்த்தவாமகிழும்படியதைக்கட்டி
அங்கைகள்தன்னை அஷ்டமாதிரியாகப்
புங்கமாய்ப்பூட்டிபொற்புறுசிரசை
மிக்கவேவீரகண்டாமணியாக
தக்கசீர்கம்பம்தன்னிலேமாட்டி
கச்சிமாநகர்வாழ்காமாக்ஷிதன்னை
நிச்சயமாகநினைந்துவுச்சரித்து
வாகுள்ளவீரவாகுவென்பவரும்
வேகமாய்கம்பமீதினிலேறி
காதலாயனந்தக்கரணங்களைப்போட்டு
விண்டுவைப்போலவிஸ்வரூபங்கொண்
டெண்டிசையதிரயிலங்கையில்குதித்து
ஆழிமாமுகனை அங்குசங்கரித்து
கோளரியெனவேகுதித்துமேலெழும்பி
செந்தின்மாநகரைச்சீருடன்நோக்கி
கந்தவேளருகில்கடிகிவந்தனரே.

அன்றியும் இன்னோர் கந்தவேற்கடவுளருக்குச் சேனாதிபதிகளாகவிருந்த வக்காலத்துச்செய்த இத்திருவிளையாடலை மானவதனுக்கொண்டு மானிலத்தில் தோன்றியவிக்காலத்தும், அவ்வரிய காட்சியை இப்பூதலத்தோரும் கண்டதிசயிக்கும்படி காஞ்சீபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம், கும்பகோணம், தஞ்சைமாநகரம், அவிநாசி, கொரட்டை, மடவளாகம், திருவிரிஞ்சிபுரம், திருவாலங்காடு, சோளிங்கபுரம், சிவபுரம், தொந்திபுரம், ஆகிய சிவதலங்களிலுள்ள, வானமட்டுமுயர்ந்து சிறந்து விளங்கும். உன்னத கோபுரங்களில், தமக்குப்பூர்வ மேற்பட்டிருக்கும் நாடுகள் எழுபத்திரண்டையும் அளவுபடுத்தி (72) அடி உயரமுள்ள வேணுஸ்தம்பமொன்றை கோபுரத்தின் மேல்நாட்டி அத்தம்பத்தின் நுனியிலிருந்து, ஷண்முகப்பெருமானை வாழ்த்தி அரிய வித்தைகளை, அரங்கிற்செய்து, அகிலத்தோர் யாரும் இஃது அதிசயம்! அதிசயம்!! எனக்கொண்டாடிக் கரங்கொட்டிச் சிரக்கம்பஞ்செய்து ஆர்ப்பரிக்க தமது கீர்த்தியை வானதியின் பெருக்கென நிலைநாட்டிவருகின்றனர். ஆனமையால் இன்னோர் பூமியில் நட்டுக்கட்டாத்தன்மையினால் நட்டுக்கட்டார் என்றும், அவ்விளையாட்டுக்கு முதன்மையாயிருத்தலால் நாயன்மார்களென்றும் பெயர் பெற்றனரென்ப.

நேசச்சேழியனுஞ்சேரனுஞ்சோழனுநின்றுமெச்ச

வாசத்தவண்டைமல்லாரிகள்கொட்டிவங்தேசவையிற்
பாசத்தினூற்பனேமேற்கம்பம்வீக்கியப்பார்த்திபர்தங்
தேசத்திலேநட்டுக்கட்டியுமாடுவர்செங்குந்தரே.

என்பனவற்ருலுமறிக.

## (5)

## * பானுகோபனை வென்றனரென்பது.

எமதாண்டவனுகிய அறுமுகப்பெருமான் இலட்சத்தொன்பது வீரர்களும், தேவர்களும், அவரவர் வாகனங்களிலூர்ந்துவர, பூதகணங்கள் முன்செல்ல மகேந்திரபுரிக்குச்சென்று, விசுவகர்மனையழைத்து ஒரு பாசறைகட்டுவித்து அதற்கு எமகூடமென்று பெயரிட்டு அதன் நடுவிலிருக்கும் மகாமண்டபத்தில் வீற்றிருந்தார். இவ்வைபவத்தைக்கேள்வியுற்ற சூரன் தனது மூத்த மகனுகிய பானுகோபனை, முதனுள் சண்டைக்கு அனுப்ப அவன் அனேக அசுரப்படைகளோடு வருவதை குமாரக்கடவுளறிந்து வீரவாகுதேவரை நோக்கி! நமது சேனைகளைக்கூட்டிக்கொண்டுபோய் பானுகோபனுடன் போர்செய்யுமென, வீரவாகுதேவர் தமதாண்டவர் கட்டளையைசிரசாக வகித்துச்செல்ல, பானுகோபனெதிர்த்து பலவித தேவப்படைகளாலும், மாயப்படைகளாலும், நெடுநேரம் போராடி வீரவாகுதேவர் விடும்படைகளால் சகிக்கமாட்டாமல்,

கந்தபுராணம் யுத்தகாண்டம்
முதனுள் பானுகோபன் யுத்தப்படலம் (360) கவி.

வென்றிடலரிதினிவீரவாகுவைச்
சென்றனன்முதுநகர்தெய்வதப்படை
மன்றவுந்தந்திவன்வன்மையாற்றுவன்
நின்றிடல்பழுதெனநெஞ்சினுன்னினுன்.

என்று சொல்லி மறைந்தனன். அப்போது வீரவாகுதேவர் முதலிய கணங்களெல்லாம் ஷண்முகநாதர் சன்னிதானம் வந்திருந்தனர். இரண்டாம்நாள், சூரபன்மன் சேனுசமுகங்களோடு ரதாரூடனுகவந்து, பூதப்படைகளையும், வீரப்படைகளையும், வருத்தப்படுத்தினுன். அதைஷண்முகப்பி

* சூரியனை வெற்றிகொண்ட காரணத்தால் பானுகோபனெனப் பெயர் பெற்றனனென்ப.

இதனை, பூட்டியதேரோடும்பொலிந்தபாநுவை
யீட்டியதொட்டிலினிறுக்குமைந்தனை
மூட்டியசமரிடைமுடித்துமாசறத்
தீட்டியவீரர்கைச்சிறந்தகுந்தமே.

ரானறிந்து, ரதாரூடராகச்சென்று அசுரப்படைகளைக்கொன்று, சூரனையும் ஆவிசோரும்படி வாட்டினர். அவன் சகிக்கமாட்டாமல் மாயமாக கரந்தொளிந்தனன். வீரகணங்களும், பூதகணங்களும், தேவகணங்களுந் தோத்திரம் செய்யும்படியாக பாசறை வந்துசேர்ந்தார். மூன்றுநாள் பானுகோபன் தன் தந்தையைப்பெற்றவளாகிய மாயை நினைத்தான் அவள் பிரத்யக்ஷமாகிவரக்கண்டு தன துகுறைபாடுகளை விண்ணப்பித்துக்கொண்டனன். அவள் செவியேற்று என்னடா பாவமூர்த்திகளாகிவிட்டீர்கள்? இப்போதாகிலும் தேவர்கள் சிறையை விடுவதே தகுதியென்று சில நீதிவசனங்களைச்சொல்லக்கேளாது தனது கருத்தை நிறைவேற்றலேவேண்டுமென்று சொல்ல அவள் ஒரு மாயைப்படை கொடுத்து மறைந்தனள். உடனே பலரணவீர அசுரசேனைகளோடு புறப்பட்டு வந்தெதிர்த்தான். அப்போது ஷண்முகரிடம் விடைபெற்ற வீரவாகு முதலிய வீரகணங்களும், பூதகணங்களும்வந்தெதிர்க்க, அந்தப்பாவி பலகணைகளாலும் வருத்தப்படுத்தக்கண்ட முதல்வீரர், அவனுடைய படைகளையெல்லாம் வேரறுத்து, அவனையுங் கைகாலாடவொட்டாமல் சரமாரி பொழிய, அதனைப்பொருக்கமாட்டாமல் ககனமார்க்கத்திலெழும்பி மறைந்திருந்து மாயைப் படையை விட்டான். அந்தப்படையானது வீரவாகு முதலிய வீரர்களையெல்லாம், ஒருங்கே கட்டிக்கொண்டுபோய் கடலில் வைத்துக்கொண்டது. இந்த விவரீதத்தை அறுமுகப்பிரான் நாரதராலறிந்து தமது சத்திவேலை விடுத்தார். அந்தப்படைஅதியுக்கிரமாகச்சென்று மாயைப்படையைகண்டித்துக்கடலினின்றும் வெளியே கொண்டுவந்து ஸ்வாமி சன்னிதானத்திற்கு அழைத்து வரும்போது, வீரவாகுதேவர் மகேந்திரத்தைக்கண்டு கூறுவார்.

கந்தபுராணம் யுத்தகாண்டம்
நகர் புகுபடலம் (2) வது கவி.

கண்டனுமெயிற்றில்தின்னகல்லெனகலிப்பகண்கள்
பண்டுதீப்பொறிகள்காலவாய்புகையுமிழநாசித்
துண்டமதுயிர்ப்பமார்பந்துண்ணெனவியர்வுதோன்ற
திண்டிறல்மொய்ம்பின்மேலோன்செயிர்த்திவைபுகரலுற்றான்
வெஞ்சமர்க்காற்றலின்றிவெறுவிப்போய்விண்ணினின்று
வஞ்சனைபுரிந்துநம்மைமாயத்தால்வென்றமீண்டு
முஞ்சனனிருந்தகள்வன்உயிர்குடித்தன்றியையன்
செஞ்சரண்தன்னைக்காணச்செல்லுவதில்லையானே. 3.

நன்னகரிழிப்பனின்றுநண்ணலன்மதலைநேரில்
அன்னவன்றனையும்யானேஅடுகுவன்அடிகிலேனேல்
பின்னுயிர்வாழ்க்கைவேண்டேன்யான்பிறந்தேனுமல்லேன்
என்னெருகிலையும்யானும்எரியிடைப்புகுவனென்றான். 4.

சூளிதுமுதல்வன் கூறத்துணைவரும்பிறருங்கேளா
வாளரியனையவீரவடையலர்க்கழிந்தேம்வாளா
மீளுதல்பழியதாகும்வென்றிகொண்டல்லாலெந்தை
தாளினைக்காண்பதுண்டோசரதமேயிதுமற்றென்றார்.

கண்டபொழுதே கண்களினின்றுந் தீப்பொறி பறக்க, வாயினின்றும் புகைக்கிளம்ப, மூக்கினின்றும் பெருமூச்சுவர, மார்பினின்றும் வெயர்வு தோன்ற, பற்களை நரநரவென்று கடித்துக்கூறுவார். வெவ்வியராகிய சண்டைக்குப்பொருக்கமாட்டாமல் பயந்து ஆகாயத்திலெழும்பி, எங்களை வஞ்சனைசெய்து வென்று மீண்டுபோயிருந்த திருடனாகிய பானுகோபன் உயிரைக்குடித்துத் தாகந்தீராமல் எமது ஷண்முகப்பெருமான் சிவந்த திருவடியைக்காண யான் போகமாட்டேன். இந்நகரை அழித்துவிடாமல் எமது ஐயன் முன்வருகேன். அந்தப்பாவியையும் யானே கொல்லுவேன். அப்படிக்கொல்லாவிட்டால் உயிரோடிருக்கமாட்டேன், யான் சிவபெருமானுக்குப்பிறந்தவனுமல்லேன், யானுமென் வீரவாளும் அக்கினிப்பிரவேசமாவேன், என்றும் பிரதிக்கினை செய்தான். அதுகேட்டுத் தம்பிமாரெல்லோரும் எளிய சிங்கத்தைப்போன்ற பகைவருக்கு அழிந்து பிழைத்து சும்மா போவது பழியாகும் வெற்றிகொண்டல்லாமல் நமது ஆண்டவரைக்காணக்கூடுமோ? தாங்கள் சொன்ன சத்தியமே எங்களுக்குஞ் சரியென்று யாவரும் மகேந்திரநகரத்துள்ளே புகுந்து மாடகூடங்களையெல்லாந்தும்சப்படுத்தும்போது சூரன்மகனாகிய இரயாசூரன் வந்தெதிர்த்தான், அவனைக்காலனூர்பதிக்கனுப்பிவிட்டு, அக்கினிமுகனை பக்ஷணஞ்செய்து, மூவாயிரம் பிள்ளைகளின் மூளையுரிஞ்சி வீராவேசத்தோடு நிற்கையில், பானுகோபன் வந்தெதிர்த்து பெரும்போர்செய்தான், அவன் சேனைகளையுஞ்சின்னபின்னப்படுத்தி, அவன் ரதம், வில், அம்பு, முதலானதும் பொடியாக்க, அவன் வாளேந்தி ஒடிவருவதைக்கண்ட வீரவாகுதேவர், ரதத்தைவிட்டுக் குதித்தோடிப்போய் எதிரில் நின்று நெடுநேரம் போராடும்,

கந்தபுராணம் பானுகோபன் வதைப்படலம் (141) கவி.

அன்னகாலையிலிளையவனறுமுகத்தமலன்
பொன்னின்சேவடி புந்தியிலுன்னியேபுகழ்ந்து
மின்னுவாள்தன்வாட்படைவீசியேவிரைந்து
துன்னலன்வலத்தோளினைவலியொடுந்துணித்தான்.

துணித்தகாலையில்வலதுகைதன்னெடுந்தொடர்ந்த
பணித்தனிச்சுடர்வாளினையிடக்கையாற்பற்றி
மணித்தசும்புகொள்மொய்ம்புடையவுணர்கோன்மற்றுந்
தணிப்பருஞ்சினந்தனனெடுமுயன்றனன்சமரே. 142.

தீயவன்றனிமுயற்சியைநோக்கியேதிறலோன்
தூயவாள்கொடேஅன்னவன்இடக்கையைதுணிப்ப
மாயதொல்படைவிடுத்திடுவேனெனமதித்தான்
ஆயகாலையிலறிஞனுமவன்றலையறுத்தான். 143.

வாளில்அங்கவன்அடுதலும்சென்னியும்வரைநேர்
தோளும்யாக்கையும்வீழ்ந்தனன்சூரியபகைஞன்
நாளுலந்தனன்அவனுயிர்வௌவியேநடுவன்
ஆளிமொய்ம்பனைவழுத்தியேதென்புலத்தடைந்தான். 144.

சூரன்மாமகன்முடிந்ததுமுனிவருஞ்சுரரும்
ஆரும்நோக்கியேஆடினர்பாடினர்ஆர்த்தார்
வீரவீரநீயாமெனவிளவலைவியந்து
மாரியாமெனஅவன்மிசைபொழிந்தனர்மலர்கள். 145.

வீரவாகுதேவர், ஆறுமுகப்பெருமானை மனதில் நினைத்து ஒளி பொருந்திய வாளினால் அவன் வலக்கையை அறுத்தார். அழகிய பொன்னாபரணத்தையுடைய வலிபொருந்திய அசுரன், மறுபடியும் கையில் வாளாயுதம் பிடித்துத் தணியாத கோபங்கொண்டு சண்டை செய்யவந்தான். அதுகண்டு தூய்மையாகிய வாளாயுதங்கொண்டு அவ னிடதுகையையுந் துணித்தார். அவன் பழமையாகிய மாயைப்படையை விடுவேனென்று நினைத்தான் அவன் தலையை அறுக்க, அறுபட்ட பானுகோபன் தலையும், மலைபோன்றதோள்களும், உடலும் பூமியில் வீழ்ந்தன. அப்போது காலனானவன் சிங்கத்தைப்போன்ற வீரவாகுதேவரை வாழ்த்தி, அவனதுயிரைப்பிடித்துக்கொண்டு எமபுரமே போயினான். இவ்விதமாகச் சூரன்மகன் மடிந்தபோது ரிஷிகளுந் † தேவர்களும் ஆநந்தக்கூத்தாடிப்பாடி ஆரவாரித்து வீராதிவீரன் நீயேயென்று வீரவாகுதேவரைப்புகழ்ந்து, அவன்மேல் மேகவருஷம்போல் கற்பகமலர்களைச் சொரிந்தார்கள். அதன்பின் வீரவாகுதேவர் தமது, தம்பிமாரோடும் வந்து ஷண்முகப்பெருமான் தெரிசனஞ்செய்து நின்றகாலையில், குமரவேள் வீரவாகுதேவரை விளித்து அன்பனே! நின் வெற்றித்திறத்தினைக் கண்டு மிக வியந்தோமென்று கொண்டாடி சுரிகையும், வயிடூர்யக்கொத்தும், பட்டாடையும் தந்து நின் வெற்றிப்பாட்டினை என்றும் விளக்குவதற்குக் காரணமாகும் சேவற்கொடியையும் தந்தோமென்று ஆசீர்வதித்ததாக புராணசரிதம்.

---

† இதனை குறையினைக்கடவுளர்கூறக்கேட்டவர்
துறையினைநிறுவியேசூர்தடிந்துநான்
மறையினைவழுவறவளர்த்துத்தேவர்கள்
சிறையினைமீட்டது திருச்செங்குந்தமே.

என்பனவற்றானுணர்க,

ஆவக்குடாக்கடன்மாயேந்திரத்திலவுணர்சிரங்
கூவப்படவெட்டிநின்றவஞ்ஞான்றுகுமரன்மெச்சி
யேசவச்சரிகையும்பட்டாடையும்வயிரேர்யக்கொத்துஞ்
சேவற்கொடியுங்கெடியும்பெற்றார்களிச்செங்குந்தரே.

என வருஞ்செங்குந்தர் மாலைத்திருவிருத்தத்தானுமறிக.

இவர்கள் சூரனை வென்றதற்கு நிதரிசனமாக இதுகாறும் காஞ்சிபுரம், சிதம்பரம், திருத்தணிகை, சுப்பிரமணியக்கடவுள் படைவீடுகளான திருவேரகம், திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை, திருவாவினன்குடி, திருச்செந்தூர், குன்றுதோறாடல் என்னும் ஆறு க்ஷேத்திரங்களிலும், மற்றும் அத்தேவர் திருக்கோயில்கொண்டெழுந்தருளும் தலங்கள்பலவற்றிலும், ஒவ்வோர் வருடமும் பிரதி ஐப்பிசி மாதங்களில் வரும் சுக்கிலபக்ஷ சஷ்டித் திதியில் சூரசம்ஹார மஹோத்சவம் † இம்மரபினராலேயே நடைபெற்று வருவதும் பிரமாணமாம்.

## (6)

## வீரமாகாளியை வென்றனரென்பது.

சூரபத்மனுடன் போர்புரிய மகேந்திரபுரிக்கு சுப்பிரமணியக்கடவுளுடன் சேனைத்தலைவர்களாகச் சென்றகாலையில், அமர்க்களத்தில் வீரவாகுதேவர் விடும் கொடிய அஸ்திரங்களுக்காற்றாத அங்கிமகாசூரன், அளவற்ற பூதப்படைகளையும், அவற்றிற்கதிபதியாக ஓர் வீரமாகாளியையும் துணைசேர்த்து வீரவாகுதேவர்மேல் எதிர்க்கும்படியேவினன். அங்ஙனம் ஏவப்பட்ட பூதப்படைகள் வடவாமுகாக்கினியொப்பச் சீறிவந்தெதிர்ப்பதைக்காணச்சகியாத வீரவாகுதேவர், கோபங்கொண்டெழுந்து அப்பூதப்படைகளைச் சின்னபின்னப்படுத்திச் சேனைக்கதிபதியாகவந்த வீரமாகாளியைக் கூந்தல் பிடித்தீர்த்துச்சுழற்றி ஆகாயத்திலெறிந்து பின்பு அவளடைக்கலம்புக விடுத்தனரென்ப.

---

† இதனை ஆதியிற்சிவபெருமான்புதல்வர்தீரர்
அயில்கொளும்நவவீரர்மரபாரென்றும்
சாதியிற்செங்குந்தரெனப்பெயர்வாய்ந்து
சகலசிவஸ்தலங்கடோறுமிவர்கள்சென்று
கோதிலாக்குகனினவல்வேடம்பூண்டு
குமரவேளுடன்கூடியின்றகாறும்
பூதலத்திற்சூரனைசம்மாரஞ்செய்து
புகழ்பெற்றவுற்சவமேபோதுமாதோ.

எனவரும் தனியனாலுமறிக.

இவற்றிற்குப்பிரமாணம்.

கந்தபுராணம் பானுகோபன் வதைப்படலம்.

நோக்கினன்மொய்ம்பினுனேன்மைபூண்டுளான்
றூக்கணங்காமிவடன்னதாவியை
நீக்குதல்செய்வதுநீர்மைத்தன்றெனுத்
தூக்கினனவள்வலிதொலைக்கவுன்னுவான். 1.

இடித்தெனவுரப்பினனெண்கைதன்னையு
மொடித்தனனுமெனவொருகையாலுறப்
பிடித்தனன்மற்றொருபெருங்கையாலுரத்
தடித்தனன்காளிவீழ்ந்தவசமாயினள். 2.

கரங்கொடுசேவகன்கல்லென்றெற்றலு
முரங்கிழிவுற்றனளுமிழ்ந்தசோரிநீர்
தரங்கமதெறிகடறன்னைப்போன்றுலா
யிரங்கியதவடியர்யாவர்கூறுவார். 3.

எனவும்.

வீரநாராயணர்விஜயம் எழுச்சிச்சருக்கம் (28) கவி.

எனவோதலுமருகேயவர்க்கிருந்தோர்களிற்சிலவர்
முனமாமுருகொடுமெய்திச்சூர்முனைவாட்டிமற்றவன்சே
யினமோடுவிடுத்தோங்கியவெணிற்கூளியையிறைமைக்
கனமோடொழித்தார்க்கிங்கிவன்கனமோபெரிதென்றார்.

எனவும் வருவனவற்றானுமுணர்க.

இதுகாறும்பேசிவந்த சரிதங்களால் நவவீரரின் சிறந்த பராக்கிரமம் விளக்கமடைந்தன. இனி கந்தன்றுணைவர், சிவகுமாரர், உபசுப்பிரமணியர், சேனுதிபதிகள், நந்திகணத்தவர் என்னும் சிறப்புப்பெயர்கள் வந்த காரணமும், முறையே சிலவாதாரங்களோடு விளக்கி, முசுகுந்தச்சக்கிரவர்த்திக்குத் துணைப்போந்து புரிந்தவரிய செய்கையையும் சிறிது சொல்வாம்.

(1)

கந்தன்றுணைவர் என்பதற்குப் பிரமாணம்.

வீரநாராயணர் விஜயம் தூதரைச்சருக்கம் 1(2) கவி.

ஆறுமுகவேடுணையாயண்டமெலாஞ்சென்டாடுஞ்
சீறுபுலிக்கொடியுடையசெயவேந்தரந்தரத்திற்
பாறுலவுஞ்செங்குந்தப்படைபாளர்வல்லான்றன்
வீறுபெறுந்தலையாறுக்கவெளிவந்தார்வெளிவந்தார்.

என வருங்கவியானும்.

காணுநின்றார்க்கருளுங்கயிலைப்பரற்கானபல
பூணாரமாளிகைமெய்க்காவல்பூண்டவர்பூதலத்தி
லாணுளராகிச்செவ்வேளுக்குத்தம்பியராகிநின்றோர்
சேணுடுதன்னைக்குடியேற்றிவைத்தவிச்செங்குந்தரே.

எனவருஞ் செங்குந்தர் மாலைத் திருவிருத்தத்தானுமறிக.

(2)

சிவகுமாரர் என்பதற்குப் பிரமாணம்.

வல்லான் காவியம் எழுச்சிச்சருக்கம் (29) கவி.

வேறோர்சிலரதுகேட்டவைமெய்யேயிவர்மேனா
ணீறுகுறவெயின்மூன்றெரிநிமலன்சுதராகி
மாறுவருளறுமாமுகன்வழங்கப்பெறும்வகையா
லீறுகுறவமர்சாய்த்தனரினியாங்கொலென்றிசைத்தார்.

எனவும்.

செங்குந்தர் மாலை (29) கவி.

மருவந்தபூங்குழன்மாதுமையாளொண்மணிச்சிலம்பி
னுருவங்களொன்பதிலொன்பானுமையுருவுற்றரனாற்
கருவுந்தத்தோன்றியகாரணத்தாற்கந்தவேளுக்குப்பின்
செருமுந்துசூலப்படையான்றருமைந்தர்செங்குந்தரே.

என்பனவற்றாலறிக.

(3)

உபசுப்பிரமணியர் என்பதற்குப்பிரமாணம்.

வீரநாராயணர் விஜயம் தேவசாட்சிச்சருக்கம் (109) கவி.

வலமுலாமுபசுப்பிரமண்ணியர்
குலமுவாவியகோமணியன்னவன்
றலமுலாவுபராயணமன்றபோ
பலமுலாவியபான்மையிற்றோன்றினேன்.

என வருவனவற்றால்.

இராமனுக்கிளையோராகிய இலக்குமணை இராமாநுசரென்றும், இந்திரனுக்கிளையோராகிய விஷ்ணுவின் அம்சநுக்கு† உபேந்திரரென்றும் வழங்குவது போன்று, இவர்களுக்கு குமாரானுசர்களென்றும் உபசுப்பிரமணியர்களென்றும், வழங்குவது மரபென்க.

---

† இதனை. ஒருகாலத்தில் விஷ்ணுமூர்த்தி தேவேந்திரனுக்குத்தம்பியாகத் தோன்றிய திருமாலின் அவதார விசேஷமாம். இவற்றின் சரிதையை கந்தபுராணம், குமாரப்புரிப்படலம், 44-வது கவியில், "யான்முதற்றோன்றினனெனதுபின்னவன்" எனவருஞ்செய்யுளானறிக.

(4)

சேனாதிபதிகளென்பதற்குப்பிரமாணம்.

செங்குந்தர் மாலை (27) கவி.

ஞானபரணர்நவவீரர்தங்குலநாகரிகர்
மானபரணர்மதிக்குந்தயாளர்மகேந்திரத்திற்
றானபதிகமுற்றேதூதுசென்றவர்சண்முகன்றன்
சேனாதிபதிகளுஞ்சேனையுமானவர் செங்குந்தரே.

என்பனவற்றானும்.

கருவூரார் (205) ல் (25) கவி.

சாதியாமின்னமொருமார்க்கங்கேளு
சாங்கமுடையானுரைப்பேன்மைந்தாபாரு
ஆதியாம்வீரகேசரியாந்தேவர்
அன்பானபரிதிகுலஜாதியாகும்
நீதியாம்சேனைக்குத்தலைவரென்று
நிஷ்களங்கமாகவல்லோநூல்கடோரும்
பாதியாம்சடைபணிந்ததம்பிரானும்
பகர்ந்துவைத்தநூல்தனிலேகாணலாமே.

எனவருஞ்செய்யுளானுமறிக.

(5)

நந்திகணத்தவரென்பது.

கந்தபுராணம் உற்பவகாண்டம் துணைவர் வருபடலம்.

அந்தமில்விளையாட்டுள்ளவறுமுகக்கடவுடன்னை
தந்திடுமெல்லையன்னோன்றனையந்தலைவராக
முந்தியவிறல்சேர்மொய்ம்பன்முதலியவிலக்கத்தொன்பா
னந்திதன்கணத்தினோரைநங்கைபாலுதிப்பச்செய்தான்.

எனவும்.

செங்குந்தர் மாலை (56) கவி.

தவகணநாதர்பணிகயிலாயத்தலவதிப
ருவகையினீன்றவெங்கந்தனுக்கென்றுமுறுந்துணைவர்
நவகணவீரர்க்கிலக்கத்தவர்க்குநிநாகரிகர்
சிவகயிலாயபரம்பரையாரெனுஞ்செங்குந்தரே.

எனவும்.

போகர்ஜாதி உற்பத்திநூல் (32) கவி.

பண்பானபுலிப்பாணிமைந்தாகேளு
பகருகின்றேன்நவவீரர்வர்க்கந்தானே
தண்பானசிவசத்திசிலம்பில்த்தோன்றி
தருவாகநந்திகணத்தவருமாகி
திண்பானசெங்குந்தர்வம்சமாகும்
திடமுள்ளவளவகுலமணமேசூட்டி
எண்பானசகஸ்திரநூற்றென்பான்பாலர்
இணங்கியேஉலகிலரசியற்றினரே.

எனவும்.

அகஸ்தியர் மரபுநூல் (36) கவி.

பாரப்பாஇன்னமொருசெய்திகேளு
பண்பானபுலஸ்தியனேபண்புள்ளோனே
சாரப்பாசண்முகற்கிளையோரான
சருவாகசத்தியுடபுத்திரரைய்யா
காரப்பாநந்திகணத்தவருமாகி
தருவாகநவவீரர்மரபில்தேன்றி
வரரப்பாவீரசிங்கராயர்தானும்
வளமானவீரசிம்மாசனத்தோன்பாரே.

எனவும்.

செங்குந்தர் திருக்கை வழக்கம்.

—யின்பாயவ்

வண்ணலருள்பெறலுமவ்வவர்பானந்திகணப்
பண்ணவர்சூலாகவுமைபார்த்துறக்கி—நண்ணூறுசூல்
தோற்றுவகைசபிக்கத்தோமினவசத்திகணு
மேற்றூராய்வேர்ப்பவதிலேயிலக்க,

எனவும்.

செங்குந்த வேல்பதிகம்.

சிவநந்திகணநாதராதிநவவீரராய்ச்
சித்ரமணவூரிலெய்தித்
திவ்யகுலோத்துங்கனஞ்சமஸ்தானந்
தெரிந்தனந்தங்கூத்தயர்
இவனந்தியாமென்னவாயிரத்தொண்டலைக
ளீய்ந்*திசைப்பெறுகுந்தவேல்

* இசை ஈட்டி எழுபது; பரணி, உலா முதலியன.

ஏகம்பதெய்வீகத்திருவுலாச்சொன்னதி
விரட்டையர்கடுதிகுந்தவேல்
நவநந்திவீரரேமுதலியர்களாமென்ன
ஞானப்பிரகாசவள்ள
லுவினன்மழுவெடுத்தும்மாலைபிள்ளைத்தமிழ்
நவிலப்பெறுங்குந்தவேல்
துவநந்திருத்தெய்வமாகிமனுவாகியுஞ்
சொல்லிலங்காக்குந்தவேல்
சுந்தரசுகந்தவேல்கந்தனுக்கிளையவேல்
தூயசெங்குந்தவேலே.

எனவும்.

வீரநாராயணர்விஜயம் தூதரைச்சருக்கம் (6) கவி.

சிவநந்திகணத்தலைவராவிளங்குந்திறல்வேந்தர்
தவந்தேவர்புரியவருட்சத்திபதச்சிலம்புமணி
நவமங்கைமாரிடமெய்ம்மீசையுடனிலத்துற்
பவங்கொண்டார்வல்லானைத்தலையறுக்கப்படைகொண்டார்.

(இ-ள்) இரண்டாஞ்சம்புவாகிய நந்திகணதிபர்களாயிருந்து தேவர்கள் தவம்புரிந்த காரணத்தினலே அருட்சத்தியாகிய உமாதேவியாருடைய திருவடிச்சிலம்பினின்று திரந்த நவரத்தினங்களிந்றோன்றிய நவமாதர்களிடத்திலே சரீரவளர்ச்சியுடனும் மீசையுடனும் இந்நிலவுலகத் துதித்தவர்களா சப்புகழோங்கிய வல்லபமுள்ள அரசர்கள்.

செங்குந்த மரபினர் பிரமசிருஷ்டியிலகப்பட்ட ஏனைய மரபினரைப் போன்றவர்களல்லரென்பான். "சிவநந்திகணத்தலைவர்" என்றும் இவர்கள் பிரதமத்தில் நிலவுலகத்திற்கு வினை சம்பந்தத்தால் வந்தவரல்லரென்பான், "தவந்தேவர்புரிய" என்றும், அவ்வாறு வந்தகாலத்தும் மானிடர்கள் வயிற்றில் அவதரித்தவர்களல்லரென்பான். "சத்திபதச்சிலம்புமணி நவமங்கைமாரிடம்" என்றும், இவ்வீரர்கள் சிசுக்களாய்ப்பிறந்து அதன் பின் வயது வளரவளரச் சரீரவளர்ச்சியடைந்தவர்க ளல்லரென்பான். "மெய்ம்மீசையுடனிலத்துற்பவங்கொண்டார்" என்றும் கூறினர்.

இத்தகைய உதாரணங்களால் செங்குந்த வீரர் நந்திதேவரம்சையென்பது பெறப்பட்டன.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

## மூன்றாம் அத்தியாயம்.

# செங்குந்தர் விஜயம்.

## முசுகுந்தவேந்தற்குத் துணைவராக வந்தாரென்பது.

ஆயிரத்தெட்டண்டங்களும், இருபத்தேழு சதுர்யுகமும், ஒருகுடைக்கீழ் தனியரசுபுரிந்த ஒப்பற்ற வல்லபமுடைய சூரபத்மன், தாருகன், சிங்கமுகன், பானுகோபன் முதலிய அசுரகுலத்தை அறவேயொழித்துத், தேவர்களுக்குற்ற இடுக்கண்களைந்து வானுடுகுடியேற்றி, கந்தவேற்கடவுள் தேவலோகஞ்சென்று, தெய்வயானையைத்திருமணஞ்செய்ய, அதுதருணம் அம்மஹோற்சவத்தினைக் கண்டு களிக்கும்படி அம்மணப்பந்தரில் வந்திருந்த தேவகூட்டங்களில் முந்தியிருந்த அரம்பை மாதர்கள் நந்திகணத்தவரான, இலக்கத்தொன்பதின்மரின் அதிரூபலாவண்யங்களைக்கண்டு மோகித்தனர். இவர்களும் தேவமாதர்களின் எழில்நலங்களைக்கண்டு இச்சித்தனர். இஃதைக்குறிப்பாலுணர்ந்த குகப்பெருமான், இலக்கத்தவரை விளித்துச் சகோதரர்களே! தேவமாதர்களைக் காதலித்தீர்களானதால் அவ்வினைக்கீடாக நீவீர் மானவாம்சங்கொண்டு, மானிலத்திற்சென்று, அத்தேவமாதர்களை மணந்து அவ்வின்பத்தினை யனுபவித்துப்பின்னர் நம்மை நோற்று நம்பதம் சேர்மின்களென்று திருவாய் மலர்ந்தனரென்பது புராணகதை.

உதாரணம்.

கந்தவிரதவிலாசம் சுப்பிரமணியர் சொல்விருத்தம்.

அந்தநாள்சூரபத்மவசுரனைக்கொன்றுநாகம்
வந்துதெய்வானைதன்னை மணஞ்செயும்போதக்கூட்ட
முந்தரம்பையர்களும்மைமோகமேகொண்டாரன்னோர்
சுந்தரநீங்கள்கண்டத்தொடர்பிதெம்மிளவலீரே.

எனவரும்கவியானும்.

கலிங்கதேசத்தில் தோன்றிய சுகுமாரியென்னும் ஓர் அந்தணன்மகள் வைராக்கியத்தோடு சிவபத்தியிற்சிறந்து, முறைவழாது சிவபூஜை செய்துவருநாளில் ஒரு நாள் சிவார்ச்சனை செய்தற்பொருட்டுப் பூக்கொய்தற்கு நந்தவனஞ்சார்ந்தபொழுது அன்னவளை விதுமனென்னுங் கந்தருவன் கண்டு காதலித்துத் தனக்கு மனைவியாம்படி பலாத்காரம் செய்ய, அதற்குவுடன்படாது;அவனை நீ விடாப்பிடி கொண்டமையால் குரங்காகுகவென்று சபித்தனள். அங்ஙனமே அவன் முசுவாய் மலைகள்தோறும் திரிந்து இமயமலையைச்சார்ந்து வில்வவிருக்ஷத்தில் தாவும்போது உதிர்ந்த சருகுகள் அவ்வில்வமூலத்தில் அமர்ந்திருக்கும் சிவலிங்கத்தை மறைத்தமைக

ண்ட உமாதேவி அம்முசுவை நோக்கி! நீ எம்பெருமான் திருவுரு மறையச்சருகுகளை உதிர்த்ததனால்; உனக்குச் சுகுமாரியின் சாபம் தீர்ந்தபின்பும் முசுமுகமட்டும் நீங்காதொழிக என்று சாபமீந்தனர். அதுகேட்ட சிவபிரான் தேவியின் கோபத்தைத்தணித்து, எப்படிப்பட்ட தீமையையும் நீங்கச்செய்வதான வில்வபத்திரத்தை, எமது உருவத்தின்மீது வீழ்த்திய நல்வினையால் இம்முசுவுக்கு உலகமுழுவதும் ஆளும் ஆட்சியை யாம் கொடுப்போம், என்று அதினெதிரிலே தோன்றி இறைமையை ஈந்து மறைந்தருளினர். அவ்வருளால் அக்கந்தருவன் பூலோகத்தில் புண்ணிய பூமியாகிய கருவூரில் மனுகுலத்தில் மாந்தாதாவென்பவருக்கு குரங்குமுகத்தோடு புத்திரனாகத்தோன்றி அவ்விராஜதானியைச் சிற்றரசனாகவிருந்து பரிபாலித்து வந்தான், இஃதிங்ஙனமிருப்ப, பின்பொருநாள் முசுமுகன் தனது குலகுருவாகிய வசிஷ்டமுனிவரிடத்திற்சென்று வணங்கி, எனது குலத்தை விளக்கத்தோன்றிய கோதறுமுனிவரே! எனது முன்னோர்கள் திக்குவிஜயஞ்செய்து, சக்கிரவர்த்தியென்று திருப்பேர்சூட்டி செங்கோல் செலுத்தியதுபோல், நானும் செங்கோலோச்சும் ஆசையுளேன். அனுக்கிரஹித்தருளல் வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, வசிஷ்டமுனிவர் கருணை சுரந்தவராய் அரசனே! சுத்தப்பிரம்மமென்று அர்த்தந்தராநின்ற சுப்பிரமணியக்கடவுளைக்குறித்து அருமையாகிய சஷ்டிவிரதத்தை, அனுஷ்டிப்பாயாகில் அக்கடவுள் உனதபீஷ்டத்தைப் பூர்த்திசெய்வாரென்று மொழிந்தனர். அரசனும், ஆசான் ஆக்ஞைப்படி அறுமுகவனைக்குறித்தருந்தவமியற்றினன். தவத்திற்கிரங்கிய சண்முகப்பெருமான் இலக்கத்தொன்பான் வீரர்களோடும், பூதகணங்களோடும் மயில்வாகனரூடராய்ப் பிரத்யக்ஷமாகி, நீ வேண்டும் வரம் யாது? என்று அவ்வரசனை வினவ? அவன் இவ்வீரவாகுதேவாதிய தேவரீரனுசர்கள் யாரும் துணைவர்களாமாறு கிருபைபுரிய வேண்டுமென்றிரக்க, அதுகேட்ட கந்தவேள், நவவீரர்களை நோக்கி! நீவீரிவ்வரசன்பாற்சென்று இவனுக்குத்துணைவர்களாக விருக்கக்கடவீர்களென கட்டளையிட,

கந்தபுராணம்

கந்தவிரதப்படலம் (30) கவி.

முழுதருட்புரிதருங்கடவுள்சொல்வினவியேமுடிவதில்லாச்
செழுமதித்தண்குடைச்சூர்குலந்தனையடுந்திறலினேங்கள்
பழிபடப்பானுவின்வழிவருஞ்சிறுமகன்பாங்கராகி
யிழிதொழிற்புரிகிலோமெனமறுத்துரைசெய்தார்யாரும்வீரர்.

அதுகேட்டு அவ்வொன்பதின்மரும் அதற்கிசையாராகித்தேவரீருடையதுணைவரும், ஆயிரத்தெட்டண்டங்கட்குமதிபனாகிய சூரபன்மனாகிய தேவகண்டகரையெல்லாம் போரிலொழித்து வெற்றிகொண்டிருக்கும் யாங்கள்,

இச்சி[illegible]ன் பாங்கரெய்தி, இவனுற்பணிக்கப்படு மிழிதொழில்களை ப்புரிகி[illegible]ன மறுக்க, அதற்கு முருகவேள் சினந்து,

டி படலம் (31) கவி.

[illegible] நாயகனவர்மொழிதனைத்தேர்ந்துநம்முரைமறுத்தீ
ர[illegible] தோர்பான்மையானீவிர்மானுடவராயவனிமன்னன்
[illegible]னைநாயகருநற்றுணைவருமாதிர்பின்றலைவனேக
வானுளோர்புகழவேநோற்றுநம்பக்கலில்வருதிரென்றான்.

நீவீர் நமதாணையை மறுத்ததனுல், அதுவேகாரணமாகப் பூமியிற்சென்று மானுடவடிவங்கொண்டு இவ்வவனிவேந்தன்பாற் றுணைவராதலே வேண்டுமென்று கூற,

டி படலம் (32) கவி.

ஐயன்வாய்மொழியினல்வீரமொய்ம்புடையவனுதியானோர்
துய்யமானிடவராய்த்தொல்லைநாளுடையதோர்சுதனமேற்று
மெய்யெலாம்வியர்வுறப்பதைபதைத்தேங்கியேவிழுமமிக்குப்
பொய்யரேம்பிழைபொறுத்தருடியாவென்றுபொன்னடிபணிந்தார்.

அக்கால் நவவீரரும் பயந்து தொழுதெழுந்து சுவாமி! அறிவிலேங்கள் செய்த பிழையினைப்பொருத்துக் காத்தருளல் வேண்டுமென்றிரந்து அம்முசுமுகச்சோழனுக்குத் துணைவர்களாமாறு மானவவுருவேற்று நின்றார்கள்.

அதுகண்ட சண்முகதேவர் திருவுளமிரங்கி அவர்களைப்பரிந்து நோக்கி! இவ்வேந்தனிடம் ஓராயிரவருஷமட்டும் இம்மானவவடிவமாய்ச் செங்குந்த மன்னரென்னுஞ் சிறப்பு நாமத்தோடு இவன் சுற்றத்தினருந்துணைவர்களுமாகப்பாம்பரை பெருகநின்று பின்னர் நம்மை நோற்றுவானவ வடிவமாகி நம்பகலிற் சேர்மின்களெனத் திருவருள் செய்ய உடனேயவர்கள் தம் பின்னவராகிய இலக்கத்தவரோடு தமது ஈட்டி யென்னும் படையுடன் முசுமுகச்சோழன் பக்கலிற்போய் நிற்க,

டி படலம் ( * ) கவி.

இன்னணமவரொழுகுறலுமெம்மிறையுலகிறையைநோக்கா
நின்னுறும்பெயரின்மற்றிவருறும்வேற்பெயர்நிறுவியாண்டுஞ்
சொன்னயம்பெறமுசுகுந்தவேந்தாகெனச்சொற்றிநற்று
யென்னநின்றன்மறைதன்னினும்பன்னெணுவியல்பினின்றான்.

அதுகண்ட குமாரக்கடவுள் காவலனை நோக்கி! இவ்வீரர் நமக்குத் துணைவர்களாய் சூரபத்மனுதியரைக்கொன்று அவர்களுதிரத்தாற் சிவந்திருக்கும் குந்தப்படைகளைக் கரத்திற்கொண்டு யினியுனக்குத் துணைவர்களாகவிருப்

யதுவ்மன்றி உன் சேனைகட்கும் காவலராகவிருக்கப் பட ால் இன்றுமுதலிவர்கட்குச் சேங்குந்த மன்னரோன்றும், சே பரோன்றும், பெயர்வ ழங்குக. நீ இவர்களை நம்மிடத்தில் வரப்பி கப் பெற்றுக்கொண்டனையாதலின் இதுமுதலுன் பெயராகிய முசு று நிலமோழியோடு குந்தமென்னு வடுமோழியைப் புணர்த்தி உ ர் மூவுலகத்தினரு முசுகுந்தனனேன்றழைக்கக்கடவர். எனத் திருவா மலர்ந்து பூதகணங்களோடு மயில்வாகனத்தினை நடத்தித்தமது கந்தவெற னுமவர்களுள்ளக்கோயிலினும் நற்றுயையெயாப்ப நண்ணியிருந்தனர்.

இவ்வரிய பேற்றினைப்பெற்ற முசுகுந்தவேந்தன் கொங்கு நாட்டில், திருவருட்பாவென்னுஞ்சிறியவமிர்தத்தை வாய்க்கப்பெற்றுள்ளசிவதலங்களேழனுட்சிறந்ததும், எறிபத்தநாயனுர், கருவூர்த்தேவர், சிவகாமியாண்டார் முதலிய பலவான்றோர் திருவவதாரஞ்செய்ததும், கர்ப்பபுரியென்னுந் திருநாமங்கொண்டதுமான கருவூர் நகர்க்கு அவர்களை அழைத்துவந்து அவர்களுறைவதற்குப் பலவழகிய அரண்மனைகளும், மடவளாகங்களும் விதிப்படி சிற்பசாஸ்திரிகளைக்கொண்டு நிர்மாணித்து அவற்றிற்பல சிறப்புக்களுடன் வீரவாகுதேவராதிய வொன்பதின்மரையும் இலக்கத்தவரையுமிருத்தி,

(37)

அன்னதோர்காலந்தன்னிலரம்பையரவனியாளு
மன்னவர்தம்பாற்றேன்றிவளர்தலும்வாகைமொய்ம்பின்
முன்னவன்முதலோர்க்கெல்லாமுசுகுந்தவேந்தனந்தக்
கன்னியர்தம்மைக்கூவிக்கடிமணமியற்றுவித்தான்.

தமதுறவினரரண்மனைகளிற் சிறுமியராயவதரித்திருந்த தேவமாதர்களை அவர்கட்கு முறைப்படி கடிமணம் புரிவிக்க.

(38)

அந்தமில்வன்மைசான்றவசடலம்புயத்தோன்புட்ப
கந்தியென்றுரைபெற்றுள்ளகன்னிகைதன்னைவேட்டுச்
சிந்தையின்மகிழ்வாற்சேர்ந்துசித்திரவல்லியென்னும்
பைந்தொடிதன்னையன்பாற்பயந்தனன்பதுமமின்போல்.

(39)

அத்தகுபொழுதிற்பின்னையனகனேசனகனென்னும்
புத்திரர்தம்மைநல்லப்புவனியாண்முசுகுந்தற்குச்
சித்திரவல்லியென்னுஞ்சீர்கெழுபுதல்விதன்னை
மெய்த்தகுவதுவைநீரால்விதிமுறைவழாமலீய்ந்தான்.

(40)

ஏனையவீரர்தாமுமியல்புழிவழாமல்வேட்ட
தேனிவர்குழலாரோடுஞ்சிறந்தளல்வாழ்க்கைபோற்றி
பானலங்குதலைச்செவ்வாய்ப்பாலரைநீலவேற்கண்
மானனையாரைநல்கிமனுகுலத்தொன்றியுற்றார்.

அவர்களுட் சேட்டரான வீரவாகுதேவர் தமது மனைவியாகிய புட்பகந்தி தேவியரால், சித்திரவல்லியென்றொருபெண் மகவையும், அனகன் சனகன், என்னும் இரண்டாண்மகவுகளையுந் தர இவ்வாறே மற்றய வீரர்களும், தத்தமது மனைவியர்களால் ஆயிரத்தெண்ணூற்றுத் தொண்ணூற்றெட்டு ஆண்மகவுகளையும் அளவற்றபெண் மகவுகளையுந்தர, வம்மக்கள் பலரோடிலக்கத் தொன்பதின்மரும் மனுகுலந்தழைக்க வாழ்வுற்றிருந்து அம்முசுகுந்தச் சோழனோடு, திக்குவிஜயஞ் செய்யச்சென்று இவ்வுலகின் கண்ணுள்ள மன்னர் மண்டலீகர்களையெல்லாம் வென்று அச்சோழனுக்குச் சக்கிரவர்த்தி யென்னுஞ் சிறப்புப்பெயரையுந் தந்து துணைவரென்னும் பெரும்புகழையும் எங்கும் நிலைபெறச்செய்தனர்.

இவற்றிற்குப் பிரமாணம்

ஈட்டி யெழுபது (30) கவி

முந்தைநோன்பினுன்முருகவெண்முசு
குந்தனுக்கொன்பான்குமரரைத்தர
வந்தவீரரிவ்வகிலம்வென்றிசை
தந்தகுந்தரித்தகுசெங்குந்தமே.

எனவும்

செங்குந்தர் திருக்கை வழக்கம்.

—தன்னிகரின்

மாமனுவின்றன்குலத்துவண்டமிழுநல்லறமுஞ்
சேமமுறவந்துலகாள்செம்பொற்கை—யேமவுல
காயிழையாராதித்தனுர்குடியிற்றோன்றிடவச்
சேயிழையாரைமணந்தசெல்வக்கை—கோயிழையாச்
சிறொடுலகாள்சிறைமுகற்குத்தம்படைகொள்
பேரோடுபெண்கொடுத்துப்பேணுங்கை.

எனவும்

கந்த விரத விலாசம்.

அல்லவொன்றில்லாநந்தமவையுளீரெவைக்குமேலாம்
வல்லபமிகுந்தவீரர்வளர்த்திடுஞ்சிறந்தசித்ர
வல்லியையரசர்க்கிந்துமணமதுமுடித்தார்பின்னர்
மல்லலம்புயத்துவீரர் *மனுகுலத்தொன்றிவாழ்ந்தார்.

எனவும்

கந்தபுராணம் கந்தவிரதப்படலம் (29) கவி.

நோற்றல்கூடியமுசுமுகனும்மினுமெம்பா
லேற்றமேதகுமன்பினுனெழுகடற்புவியும்
போற்றவைகுவானீவிர்களாங்கவன்புடையே
யாற்றல்சான்றிடுதுணைவராயிருத்திரென்றறைந்தான்

எனவும்

சேங்குந்தர்மாலை (99) கவி

அந்தமுமாதியுமில்லான்பணிகொண்டறுமுகன்பால்
வந்தனையாற்றித்தமைவரப்பெற்றமனுகுலத்தோன்
சொந்தமதாமுசுப்பேரருகேதங்கடொல்படைப்பேர்
செந்தமிழ்நாவலர்கொண்டாடவைத்தவர்செங்குந்தரே.

எனவும்

செங்குந்தவேல் பதிகம்.

செய்யமயிலேறுமுருகையனுடனுகவே
தென்னுடுவருகுந்தவேல்
தேவதனுவங்குதரிமானவதனுப்பெற்றிச்
செகமிகுந்திடுகுந்தவேல்.

எனவும்

---

* இதனை. தெருண்டோருள்ளக்குருமணியாய்த்திகழுங்குமரன்வரத்தாலும்
சரண்டாவிறையோன்றருமணியேயென்னச்சட்டிவிரதமெனு
மரண்டான்கொண்டதினமணியின்குலப்பெண்கொண்டமுறையாலு
மிரண்டாம்வருணத்தவராகியிருந்தார்வீரரிருநிலத்தில்.

எனவருஞ் செங்குந்த புராணம், மானவ காண்டம் மணம்புரிபடலம் (34) கவியானுமுணர்க.

செங்குந்தர் பேரிய கட்டியம்.

பொருளோங்குதண்டமிழ்ப்புகழோங்கமனுகுலம்
போந்துலகையாண்டகுந்தம்
பொன்னுலகர்பரவுமுசுமுகமன்றனது பெயர்
போற்றவுறவேற்றகுந்தம்.

எனவும்

அகஸ்தியர் மரபு விளக்கம். (106) கவி

என்னவே இன்னமொருமார்க்கங்கூர்வேன்
எழிலானகண்மணியேயெழில்வல்லோய்கேள்
நன்னவேநவவீரர்மரபுதானும்
நவிலுவேன்நாற்றிசையுங்கீர்த்தியோங்க
கன்னவேகந்தவேள்சாபத்தாலே
கனமானமனுகுலத்தில்தோன்றியுற்றூர்
அன்னவேமுசுகுந்தர்க்கவனிதன்னில்
அன்பாய்ச்சாமந்தராயிருந்தார்பாரே.

எனவும்

தேரையர் மரபு விளக்கம். (80) கவி.

ஆமப்பா இன்னமொருசெய்திசொல்வேன்
அப்பனே செங்குந்தர்வகுப்பைக்கேளு
தாமப்பாதரணிதனில்மனுமாந்தாதா
தருவாகசந்ததியில்வந்துதோன்றி
சாமப்பாநவவீரதேவர்தானும்
சார்வாகப்படைத்துணையாயவனிமீதில்
காமப்பாகந்தருடசாபத்தாலே
கனமாய்ச்சாமந்தராயிருந்தார்பாரே.

எனவும்

கொங்கணர் 716-ல் நந்தீசர் மரபு (22) கவி.

மறைவானநந்தீசர்மரபேதென்றால்
மார்க்கமுடன்செங்குந்தகோத்திரமாகும்
நறைவானநவகன்னிமகன்தானாகும்
நலமானவீரவாகுதேவனென்று
தறையினிலேதேவக்ஷத்திரியனென்று
தருவாகவம்மிசத்தின்பேரும்பெற்று

உறைவான முசுமுசுனும்வளவனுக்கு
உண்மையாம்துணைவரென்றேதோன்றலாச்சே.

எனவும்

வல்லான் காவியம் நூதரைச்சருக்கம் (20) கவி.

மட்டலராரணிசோழன் றுணையாளர்மானிலத்தார்
திட்டனிவனெனவாடுஞ்சூகரத்தின்கொடியானை
வெட்டிமணிமுடிபறிக்கவேண்டுமெனப்பன்னிருவர்
தட்டறவேபுறப்பட்டார் தரணியுயப்புறப்பட்டார்.

எனவும்

இச்செங்குந்த மரபினர் சோழன் முதலிய வேந்தர்கட்குத் துணையாவாரென்பதை.

ஆரஞ்செறியுமகலப்பூரூரனரிச்சந்திரன்
வீரஞ்செறிபுருகுற்சன்முசுகுந்தன்வெற்றிநள
னீரம்புணர்கார்த்தவீரியன்சோழனெழிற்சேழியன்
சேரன்முதலரையர்க்கணியானவர்செங்குந்தரே.

எனவருஞ் செங்குந்தர் மாலைத்திருவிருத்தத்தானுமறிக.

இவர்களிவ்வாறு மானவதனுப்பெற்றகாலம் ஆயிரத்தெட்டண்டங்களும், இருபத்தேழு சதுர்யுகமும், ஒரு குடைக்கீழ் தனிக்கோலோச்சி தேவர்களை வருத்தி வந்த சூரனை சம்ஹரித்தற்பொருட்டு சரவணப்பொய்கையில் உற்பவித்த சண்முகநாதரின் துணைவராகக் கிரேதாயுகத்தில் தேவதனுவாகப்பிறந்து, தேவக்ஷத்திரியர்களெனத் திருநாமம் வகித்து பின் கிரேதாயுக முதலிலிருந்தே பூமியில் செங்கோல் செலுத்திய மனுச்சக்கிரவர்த்திக்குப்பத்தோன்பதாவது பட்டத்திற்குப்பின்னே முசுகுந்தச்சக்கிரவர்த்தி அரசுபுரிகாலத்தில் கிரேதாயுகத்தில்,சுப்பிரமணியதேவர் கட்டளைப்படி செங்குந்தங் கைக்கொண்டு, மானவ க்ஷத்திரியர்களாகி மானிலத்தில் வந்தார்களென்பது நூல்வழி.

இங்ஙனம் அவனுக்கு உதவிபுரிய வந்த நவவீரர்களின் சந்ததியாகிய † ஆயிரத்துத்தொள்ளாயிரவர் வருக்கத்தினரே செங்குந்தர், சேனைத்தலைவர், முதலியார், காருகர், கைக்கோளர், தந்துவாயர், எனவழங்கும் வரலாறு இவற்றானுணர்க.

---

—நண்ணரிய

† இதனை. "வோராயிரத்துத் தொள்ளாயிரரென்றூழிமுதற்
பேரா நிமந்தப்பெருமையராம்"
எனவரும் இரட்டைப் புலவர் தெய்வீக உலாவானுமறிக.

நாமிதுகாறும் ஆராய்ந்தறிந்த சரிதமுகத்தால் செங்குந்தவீரர் முசுகுந்தச் சோழர்பிரானுக்குத் துணைவராக வந்த வரலாற்றைக்கூறினோம். இனி இவ்வேந்தனுக்குத் துணைவராகவிருந்து செய்துவந்த அரிய நன்மைகளையும் விளக்குவோமாக:—

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

நான்காம் அத்தியாயம்.

## செங்குந்தர் வெற்றி.

## தியாகராஜ முகூர்த்தங்களைப் பூலோகத்தில் ஸ்தாபித்தனரென்பது.

மேலத்தியாயத்திற்கூறியபடி தேவ மாதர்களை மணந்து புத்திரர்களைப்பெற்று மங்களமாய் வாழ்ந்து வருங்கால் முசுகுந்தவேந்தற்குத்தாம் துணைவராக வந்த காரணம் மனத்திலெழவும், வீரவாகுதேவர் தம்பிமார் இலக்கத்தெண்மரும் புடைசூழ, ஜெயமுரசமார்ப்ப, வெற்றிச் சங்கந் தொனிக்கப் போர்க்கோலமாகவெழுந்து இப்பூமண்டல முழுதுஞ் ஜெயங்கொண்டு, திரைதராதசில அரசர்களைக்குந்தமானது இரத்தந்தோய்ந்து சிவப்பேறும்படியாகச்சண்டையினால் வென்று வெற்றிச்சங்கமுழங்க உலகமெங்கணும், "வேலுமயிலுமென்னு" முத்திரைபதித்துக்கீர்த்திக்கொடிநாட்டிசகலதேச மன்னர்களும் தங்களரசனைப்பணிந்து திரை செலுத்த முசுகுந்தமன்னர் சக்கிரவர்த்தி முடிபுனைந்து பழமைபோல் இலக்கத்தவர் அரசனிடம் அமைச்சர்களாகவிருந்தனராக.

இங்ஙனமிருக்கப் பொன்னுலகில் வலாசுரனெனும் ஓரவுணபாதகனால் நேரும் கொடிய துன்பத்தை ஆற்றாத வானவர் மிகவருந்தி, மனமெலிந்து, தேவர்கோனாகிய இந்திரனிடத்து முறையிட்டனர். வச்சிரபாணி தமது படைகளோடுஞ்சென்று வலாசுரனோடு நெடுநாட்போர்புரிந்தும் அவனைப் புறங்காணக்கூடாமையால் வாடி, இக்கொடியோனை வெற்றி கொள்ளும் மார்க்கமியாதெனச் சிந்தித்திருக்குமளவில், வானவர் குரு பிரகஸ்பதிதேவர் சதமகனைநோக்கி வருந்தற்க, பூலோகத்தினிடை குமாரக்கடவுளின் இளவலர்களான நவவீரர்களை முசுகுந்தவேந்தன், சாமிநாதரின் சஷ்டி விரதத்தினை நோற்று துணைவராகப்பெற்றுத் திக்குவிஜயஞ்

செய்து சக்கிரவர்த்தியாகிச் செங்கோலோச்சி வருகின்றனன். அவ்வன்
பனைத்துணைவனாகக்கோரின், இவ்வலாசூரனை வெற்றி பெருவதற்கு அறி
தாகாதெனக்கூறினர். அயிராவதன் அகங்களித்து வீணாகானப் பிரவர்
த்தர்களான கந்தர்வர்களைப் பூலோகத்திற்கனுப்பி முசுகுந்தச் சக்கிரவர்த்
தியை அழைத்து வரும்படி கட்டளையிட்டனர், கந்தர்வர்கள் பூலோகம
டைந்து, முசுகுந்தவேந்தரிடம் ஆகண்டலனின் அபிப்பிராயத்தைஅறிவித்
தனர். அதனைச்செவியுற்ற முசுகுந்தமன்னன், நவவீராதியோருடன் தே
வலோகமெய்தி. வலாசூரனது நாட்டிற்சென்று, அவனுடன் கடும்போர்
புரிந்து அவன் சிரத்தைத்துணித்துத் தேவர்களுக்குற்ற இடுக்கண் தவிர்
த்துத் தேவேந்திரனுக்கு "வலாரியென்னுந்" திருப்பெயருஞ் சூட்டினர்.
இன்னோரின் புயவல்லமைக்குப் பொன்னுலகவாசிகள் போந்தவானந்
தங்கொண்டு பூமாரி பொழிந்தனர். பின்னர் நவவீரருடன் முசுகுந்த
வேந்தர் தேவர்கோனிடம் விடைபெற்றுத் திரும்புகையில் இந்திரன்
மகிழ்ச்சியுடன் உமக்கு வேண்டியதை வினவிற், றருகின்றதாகச் செப்ப
எமக்கு மற்றொன்றும் வேண்டாம், நீர் பூஜிக்கின்ற தியாகராஜப் பெருமா
னைத்தரல்வேண்டுமென்றிரக்க இந்திரனுக்குத் திருமாலாற் கொடுக்கப்ப
ட்ட மூர்த்தமாகலின், அதைக்கொடுக்கமனமில்லாமல் அது தனக்குக்
கிடைத்த வரலாற்றினைக் கூறுகின்றான்.

பூர்வம் நாரணன் தனக்குப் புத்திரசந்தானமேற்கப் பெருமதி சூடிய
பெம்மானைக்குறித்துப் பெருந்தவமிழைத்தான். தவத்திற்கிரங்கிய முக்
கண்ணன் பார்பதியாளொடு விருஷப வாகனாரூடராய்க் காக்ஷியளித்து
மாலே! நீ எதனை விரும்பித்தவமியற்றினை அவற்றைக்கேள் தருவோ
மென்றுகூற கோபாலன், தேவர் தனக்கோரு புத்திரனைக்கடாக்ஷித்தலே
விருப்பமென, அண்ணலாகிய அப்பரமேட்டி அவ்வரமளிக்க, வரத்தைப்
பெற்ற மாயோன், பார்ப்பதியைத்தனக்கிளையவளென்றுகருதியோ? தன்
னைப்போ லரனுக்குச்சத்தியுமிவளென்றெண்ணியோ ? நினைக்கமரந்தோ?
அரனைமட்டும்பணிய அதுகண்ட விமலை மிகக்கோபித்தெழுந்து, என்னை
வணங்கா நெறிநிலைக்குகந்தவன் பிரிங்கிரிஷியேயாகும், ஆனமையால்நீ
பெறும்பிள்ளை கர்த்தராலழியக்கடவதென்று சபித்து பரமனுடன் பார்
ப்பதியுமறைந்தனள். இச்செயலுணர்ந்த விண்டு மனம்வருந்தி பின்னரும்
பரமனையும், பார்ப்பதியையும், கந்தவேளையும் பசும் பொன்விமானத்தி
லெழுந்தருளச்செய்து, ஆகமவிதிப்படி அன்னோர்களைக்குறித் தருந்தவ
மியற்றினன். கண்ணனது தவத்தை வியந்தகங்கைவார்சடையன், இடப்
பாகத்தமர்ந்த உமையவளோடுங் குமரவேளுடன் காக்ஷியளிக்க, கார்வண்
ணன் கண்டுமகிழ்ந்து வணங்கலும், பார்ப்பதி, கேசவா ! நீ புத்திரனைக்
குறித்துப்புரிந்த தவத்திற்கிரங்கினோம். நினக்குதிக்கும்பிள்ளை அரூபமா
கவிருப்பானெனக்கூறி சூலபாணியுடன் கைலைநண்ணினர். ஜனார்த்தன

அரவிந்தவழியாகப் பாலகனைப்பெற்று காமனெனும் பெயரிட்டு நித்யானந்த வாழ்வைப்பெற்ற நிர்மலத்தருங்கூட அவனதாக்கினையின் கீழஞ்சி மலர் வாழிகொண்டு பேதைமடவார் பெருஞ்சைன்யங்களுடன் பூதலந்தன்னில் புரவலாக்கினன். இஃதிங்ஙனமிருக்க, அரக்கர்களின் அவதியை ஆற்றாதவானவர் கைலையையடைந்து, பரமனிடம் பகர்வோமெனச்சென்றனர். அக்காலத்தில் கர்த்தன் பதுமாசனமிட்டு எவற்றை விரும்பியோ †யோகுபுரிந்து கொண்டிருந்தனர். பரமனருட் பெருதலுக்குத் தேவர்கள் பலநாள் காத்துப்பயன் படாமையாலும், மாற்றலரின் துன்பத்திற்காற்றாதவராயும், தேவர்களொருமித்துக் கர்த்தாத தவங் குலைவதற்கு மன்மதன் மலர் வாழியன்றி மற்றெதனாலு மாளாதெனக்கருதிக் காமனைக்கொண்டு கடுங்கணை தொடுக்கவும், கர்த்தன் சினந்து கனல் வீழிதிரக்க மதன் வெந்து சாம்பராயினன். பின்னர் இரதிதேவியாளின் வேண்டுதலுக்கருள்சுரந்த பரமன், அனங்கனை அருபமாகப்படைத்தனன். அதுமுதல் இவ்விமானத்தைத் தாமோதரன் தனது மார்பிடைவைத்துப் பாற்கடலில் ஆலிலையின் கண் அரிதுயிலமர்ந்தனர். இங்ஙனமிருக்க, வானுலகில் வாற்கல்வியென்னும் அசுரனொருவன் வானவரைவருத்திவர அவ்வவதியையாற்றாதஆகண்டலன் பாற்கடலில் பள்ளிகொண்டபஞ்சாயுதனிடம்முறையிட, கமலைகேள்வன் கருணைமீக்கொண்டு கருடவாகனத்திவர்ந்து, சரலோக மெய்திச்சூரனைக்கொன்று திரும்புகையில், பத்மநாபன் பார்ப்பதியும், குமரவேளும் பரமனும் வீற்றிருக்கும் இப்பசம்பொன் விமானத்தை எனது கரத்தில் தியாகமாகக் கொடுத்து, இதனைப் பூஜித்துவரக்கடவாயெனப் பணித்தேகினர். அதுமுதலிதுவரை அவ்விமானத்தை என்னால் பூஜித்துவரப்படுகிறது. என்று சொல்லி, அதையொத்ததாகவே தேவதச்சனைக்கொண்டு சிருஷ்டித்துக்கொடுக்க, சிவபிரான் திருவருளால் அம்மூர்த்தமல்லவென்று தடுக்கையில், வேறொன்று கொடுக்க, இவ்வாறு ஆறு முகூர்த்தங்கள் செய்துக்கொடுத்தும், வேண்டாதிருப்பதை நோக்கி முடிவில் எழாவதாய்த்தான் பூ சி க் கு ம் மூர்த்தியையே கொடுத்தவுடன்

---

† இதனை. சனகர் முதலிய முனிவர்கள் நால்வர்கைலாசகிரியையடைந்து கடவுளை அடிதொழுது, "எங்களுக்கு தத்துவஞானத்தை உபதேசித்தருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்க, சிவபிரான் கருணைகொண்டு அவ்வெள்ளி மலையின் தென்சிகரத்திலே கல்லாலமரத்தினிழலில், தக்ஷிணாமூர்த்தி வடிவமாய்த்தனியே எழுந்தருளியிருந்து அவர்களுக்குச்சரியை, கிரியை, யோகம் என்னும் மூவகை நிலைமையையும் முதலிற் போதித்து, பின்னர் நான்காவதாகிய ஞானநெறியையும், அனுக்கிரகிக்கக்கருதி, அது இத்தன்மையதென்று அறிவிக்குமாறு, சின்முத்திரையாகப் பிடித்த திருக்கையோடு ஒரு கணப்பொழுது மௌனமாய் எழுந்தருளியிருந்தனரென்ப.

அம்மூர்த்தங்களேழையும் பெற்றுக்கொண்டு பூவுலகிற் சிறந்துள்ள, திருவாரூர், திருநாகைக்காரோணம், திருநள்ளாறு, திருக்கோளரியூர், திருவாய்மியூர், திருக்காறாயல், திருமறைக்காடு முதலிய சப்தக்ஷேத்திரங்களில் ஸ்தாபித்தனரென்ப

இவற்றிற்குப்பிரமாணம்

கந்தபுராணம், கந்தவிரதப்படலம் (117) கவி.

நன்றெனவிடைகொண்டு நானிலத்திடையிழிந்து
தென்றிசையாரூர்தன்னிற்சிவனுறைபூங்கோயில்புக்கு
மன்றல்கமழ்தண்டுளவோன்வழிபடவீற்றிருந்தோரை
வென்றிபரியனைமீதில்விதிமுறையாற்றுபித்தான்

(118)

கடனாகைநள்ளாறுகாறாயல்கோளரியூர்
மடனுகமுத்தீனும்வாய்மியூர்மறைக்கான
முடனகுந்தலமாறிலோராறுவடிவுகொண்ட
படநாகமதிவேணிப்பரஞ்சுடரையமர்வித்தான்

(119)

இப்படியேயொருபகலினெழுவரையுந்தாபித்து
மெய்ப்பரிவில்வழிபாடுவிதிமுறையாற்புரிவித்துச்
செப்பரியபுகழாரூர்த்தேவனுக்குவிழாய்ச்செய்வான்
முப்புவனங்களும்போற்றுமுசுகுந்தன்முன்னினனால்

எனவும்

ஈட்டியெழுபது (31) கவி

விண்டுமார்பத்திடையிருத்திவேலைக்கௌரிபணிமாறப்
பண்டுபூசித்திடுங்காலையாகண்டலன்போய்ப்பாற்கடலின்
வண்டுழாய்மாயனைவணங்கிவானிற்பழிச்சுந்தியாகரைமேற்
கொண்டுபோந்துபாரின்முசுகுந்தற்குதவுஞ்செங்குந்தம்

எனவும்.

செங்குந்தர்மாலை. (69) கவி

அன்னப்பரியுடையோனைச்சிறையிட்டவாண்மையர்வேட்
குன்னபடாதமைவாகனந்தந்தவரோர்முசுவென்

மன்னற்குறவினராகித்தியாகர்தம்வைப்பிளேட்பல்
சின்னத்தொடேமணிற்செய்தசிரேட்டருஞ்செங்குந்தரே

எனவும்.

வீரநாராயணர் விஜயம்.

போராடற்சருக்கம். (1) கவி

மாநகரத்திறைபால்விடங்கரெழுவரைக்கரத்தால்வாங்கிவீர
வாகுமுதனவவீரருடனூர்முதற்றலத்தில்வைத்தசீர்த்த
மாகனமாங்குலமகிபாநீலமலர்க்கண்ணனங்கவலியின்பாதி
போகநுகர்ந்தினிதிருந்துஞ்சோழனிடத்துட்சினமேபொங்கி
[நின்ருன்

எனவும்.

செங்குந்தர் திருக்கை வழக்கம்.

—மாசனங்க
ளொத்தவிடமென்றறவோரோதுமாரூர்முதலாஞ்
சத்தவிடங்கள்சமைத்திடுகை

எனவருவவற்றனுமுணர்க

## ஏமனை வென்றனரென்பது.

இங்ஙனம் முசுகுந்தச் சக்கரவர்த்தி வீரவாகு தேவராகிய துணைவர்களைக்கொண்டரசியற்றிவருங்கால் ஓர் பிரளயமுண்டாகிச் சராசரங்களெல்லாமழிவெய்தவும் அவரத்துணைவர்களோடு கிளியுருக்கொண்டு பறந்து சொர்க்கலோகஞ்சென்று காலங்கழித்திருக்கையில் ஓர் நாள் சிவதரிசனார்த்தமாகக் கைலையங்கிரியையடைத்து நந்திதேவரனுமதிபெற்றுத் திருவோலக்கத்தின் கண் சென்று உமாபரமேச்சுரரை வணங்கிநிற்க, அவரை சிவபிரான் பார்த்தருளி நீ இங்ஙனம் யாதுவேண்டிவந்தனையென வினவ, அதற்கவர் தாம் வருவதற்கேதுவான காரணத்தைக்கூற, அது கேட்ட கங்காதரக் கடவுள் பிரளயமிப்போது, நீங்கினமையால் இனியுலகிற் சென்றரசியற்றலாமெனத் திருவாய்மலர, அதற்குச் சக்கிரவர்த்தி யானுலகிற்சென்றியாவர் பாலரசியற்றுவேனென்று முறையிட, அப்போதுமாபதிபிரளயத்தான் மாண்ட உயிர்களை யெல்லாம் பிரமனுற் பழயபடி சிருஷ்டிப்பித்துணர்த்த, அக்காலரசரேறுதிரிபுராந்தகமூர்த்தியைத் தீர்க்கதெண்டஞ்செய்தெழுந்து சுவாமீ! அடியேன் தேவரீர்குமாரர்களாகிய வீரவாகு தேவராதிய துணைவர்களால் உலகின்கணுள்ள பலவரசர்களையெல்லாம் வென்று ஏகசக்கிராதி பத்தியங் கொண்டிருக்கின்றேனுயினும் இதுகாறுமெனக்கில்லற நடத்தற் பாலாளாய பத்தினியில்லாமையால் இனி

யானுலகிற் சென்றிராச்சிய பட்டாபிஷேகஞ் செய்துகொள்வதெவ்வாறென்று விண்ணப்பஞ் செய்ய, அது கேட்ட சதாசிவப்பெருமான் வீரவாகு தேவரைக்கூவி ஒ உப சுப்பிரமணியனே! இவ்வரசனுக்குனது புத்திரியைப்பாணிக்கிரகணஞ்செய்து கொடுத்திடுகவென்றுத்திரவு செய்து சக்கிரவர்த்திக்கு விடைகொடுத்தருளினர்.

உடனே வீரவாகுதேவர் சுரேந்திர குமாரனாலுஞ் சுரேந்திர காந்தையினாலுஞ் சன்மானிக்கப்பட்டுள்ள தமது தம்பியராதியவாடவர்க்கும் தாராமாதிய பெண்டீருக்குஞ்சிவபெருமானுடைய அருளுப்பாட்டினையுணர்த்தி அரிபிரமேந்திர ராதியவமரர்கண் முன்னிலையில் வசிட்டராதிய முனிபுங்கவர்களைக்கொண்டு திலீபச்சக்கரவர்த்தி குமாரனாகிய முசுகுந்தச்சக்கரவர்த்திக்கும் தமது குமாரத்தியாகிய சித்திரவல்லிக்கும் திருக்கல்யாணமஹோற்சவத்தினை நடாத்தி நிறைவேற்ற, அஃது நிறைவேறியபின், சக்கரவர்த்தியானவர், பூவுலகிற் செல்லுமாறுத்தேசித்தவராய், தன்மாதுலனாகியவீரவாகு தேவருக்கறிவிக்க, அவர் தமது தம்பியர்க்கு மனைமக்களாதிய சுற்றத்தினர்க்குமதனைத் தெரிவிக்க, அஃதுணர்த யாவரும் பிரயாணமாகுங்கால், இந்திராணியானவள், தன்னிட மமுதபோஜன முண்டருமறையாதிகள் பயின்றுள்ள ஓர் பொற்கிள்ளையினைத்தனக்குச் சொர்க்காதிபத்தியத்தையளித்த வீராதி வீரர்களுடைய அருமருந்தன்ன குமாரத்தியுஞ் சக்கரவர்த்தி மனையாளுமாகிய சித்திரவல்லிக்குப் பரிசாகத்தந்தாசீர்வதித்தனுப்ப, பின்னரச்சக்கரவர்த்தி தம்பதிகோலத்தராய், வீரவாகு தேவராதிய ரோடுகைலையங்கிரியையடைந்து அம்மையப்பரைவணங்கி விடைபெற்றுப் பழையபடி பூவுலகில் வந்து அழிதலுற்ற வரண்மனையாதிகளை விசுவகன்மனைக்கொண்டு புதுக்கி மாண்டுயிர்த்த மானிடர்யார்க்கும் வருணாச்சிரம தருமங்களை விதித்து இராச்சிய பட்டாபிடேகம் பெற்றரசியற்றி வந்தனர்.

அக்கால்புலோமசையிடத்தினின்றுஞ் சித்திரவல்லிபெற்று வைத்திருந்த பொற்கிள்ளையை இயமன் மனைவியிச்சித்து தன் கணவனுக்கறிவிக்க, அவனதுகேட்டு நடுங்கி யச்சித்திரவல்லியின் றந்தையருடைய ஜெயவீர பராக்கிரமத்தினை கூறிப்பயமுறுத்த, அதற்கவள் சற்று மிணங்காளாயவனோடிச்சலிக்க, அது பொறாத காலன் பின்வரும்விளைவையறியானாய்த்தனது தூதரையேவி அதனைக்கவர்ந்து வரச்செய்து தன் மனைவிக்குக் கொடுக்க, பின்னர்தாதியராற்கிள்ளை காணாதொழிந்ததைச் சித்திரவல்லி கேட்டுத் தனது கணவனுக்கறிவிக்க, அவர் சில தூதராலஃதிருக்குமிடமுணர்ந்து வீரவாகுதேவருக்குத்தெரிவிக்க, அவருடனே இவ்வுலகின்கணுள்ள உயிர்களினுடலங்களைக் கழித்து அவ்வுயிர்களைக் கவர்ந்தெரிகின்ற நரகிற் கிடத்திக்கொல்லுகின்ற அவ்வியமனுயிரும் பதைபதைக்கும்படி (எனதருமைப்புதல்வியுமிவ்வுலகடங்கலுக்குஞ்சக்கரவர்த்தினியுமாகிய சித்திரவல்லியால்வளர்க்கப்பெற்றிருந்த கிளிப்பிள்ளையை உனது தூதர்கள் திருடிப்

போயினதாகக் கேட்டோமாதலால் அதனையிந்நிமிடங் கொணர்ந்து வந்துசேரக்கடவாய்.) என்றோர் திருமுகம் வரைந்து அத்திருமுகத்தைக் கருதி யாவரும் நடுங்கும்படி வீரத்தைச் செலுத்தி அகோராத்திரமென்னுந் தேவப்படையில் வைத்தவனுக்கனுப்பினரெனவறிக. அத்திருமுகத்தினைக்கண்டநமன் தன் மனைவியினிடம்போய் அதனைப்படித்துக்காட்டி, என் காதலி! இதனை வரைந்துவிடுத்த வீரவாகு தேவனையுமவன்றுணைவர்களையும் சாமானியராய் நினையற்க, அவர்களை வெல்லுதற்கயனாதியமூவர்க்குமரிதாகும், ஆகவினிக்கிள்ளையைக்கொடு, நான் சென்று அவர்களை வணங்கித் திருப்பிக்கொடுத்துவருகின்றேன், என்றிதவாய்ப் பலவிதங்களிற்கூறியுமவள் கொடுக்கமனமில்லாதிருந்தமையால் அச்சமனென்றுந் தோன்றாதவனாய் "உமது திருமுகத்திற்கண்டெழுதியுள்ளகிள்ளைமீட்டுமெங்ஙனந்திரும்புதலரிது" என்று பதிலெழுதி அவ்வத்திரத்தின் மூலமாகவே விடுத்தனன். அதனைக்கண்ட வீரவாகுதேவர் உடனே தமது சகோதரர்களோடுசதுரங்கச்சேனைகள் புடைசூழ வெளிக்கொண்டு சமனாவதிப்பட்டினஞ்சென்று முற்றுகைசெய்து இயமனோடு கடும்போர்விளைத்து வென்று அவனைத்தமது தேர்க்காலிற்கட்டிக் கொணர்ந்து தங்கள் மருமானெதிரில் நிறுத்த, அதுகண்ட சக்கரவர்த்தி மனதிரங்கி அந்த நமனைக் கட்டவிழ்த்து விடச்செய்ய, அவன்றனது தூதரையேவித்தன் மனைவசத்திருக்குங் கிள்ளையைத் தருவித்துக்கொடுத்துச் சமாதானஞ் செய்துகொண்டு தனது பட்டினஞ்செல்ல, அக்கிள்ளையைச் சக்கரவர்த்தி கையேந்திச் சென்று தன் மனையாளுக்கழித்து மகிழ்வித்தனரென்பதே.

இவற்றிற்குப் பிரமாணம்

ஈட்டி யெழுபது (32) கவி.

பிள்ளையாருயிர்க்குறுந்துணையாத்தனிப்பேறெய்துங்
கிள்ளையாரிவண்கொடுவருகென்றுடலங்கிரிக்
கொள்ளையாருயிரெரிநரகுறவடுங்கூற்றுயிர்நனிசோர
வள்ளியாவருநடுங்கத்தந்திருமுகமே செலுத்தொண்குந்தம்

எனவும்

வீர நாராயணர்விஜயம் எழுச்சிச்சருக்கம் (30) கவி

மற்றுங்குளசிலராதைமறுத்தீங்கிவர்மறுவா
லுற்றோங்கியகுலமெய்த்திதமுழைவாழ்மகளுவக்கப்
பெற்றோங்கியகிளைக்காப்புவிபிறங்காருயிருனுவோ
னுற்றெங்கவிடுத்திட்டதையுணர்ந்துள்கலீர்போலும்.

எனவும்

செங்குந்தர் மாலை (2) கவி.

விரகாகவேதங்கைவேலைவிட்டேபலவெற்றிகொண்டோர்
பரகாரியங்களிற்பாவாடஞ்செய்யப்பயங்கருதார்
நரகாதிபாகின்முனும்வருவேஞ்சமர்நாளைக்கென்று
திரமாகவேநமற்கோலைவிட்டோர்களுஞ்செங்குந்தரே.

எனவும்

கந்தவிரதவிலாசம்.

கனமிகுநடுவசெங்கோற்கடவுணீதருமநீங்கி
தினகரன்குலமாந்தாதாசேய்மனைக்கிள்ளையுந்தன்
மனையகங்கொடுத்தனன்றேவல்லைபதனுப்பவேண்டு
மெனநவமந்திரிமார்களெழுதியநிருபமீதே

எனவும்

திருக்கை வழக்கம்.

போரோடு

கொள்ளையிறைக்காலன் குடும்பினிகொண்டுற்றிருந்த
கிள்ளையினைமீட்டபெருங்கீர்த்திக்கை.

எனவும்

செங்குந்தர் பிள்ளைத்தமிழ்.
சிற்றிப்பருவம் (1) கவி,

பூவிற்சிறந்ததிருமாதும்புகலனல்வேதக்கலைமாதும் [ம்பில்
பொன்னாட்டுயர்ந்தசசிமாதும்போற்றுமுமையாள்திருச்சில
மேவிப்பிறந்துகாலனுடன்பெரும்போர்விளைத்தவிறலோர்கள்
விளங்குமுகத்தில்மென்மீசைமிகவேபடைத்தபெரியோர்கள்

கந்தபுராணம் தக்ஷகாண்டம்
கந்தவிரதப்படலம் (41) கவி.

சித்திரவல்லியென்னுஞ்சீருடைச்செல்வியங்கோர்
தத்தையைவளர்த்தலோடுந்தண்டகத்தருமன்றேவி
யத்தினிக்கிளியைவெஃகவாங்கவன்றாதர்போந்து
கைத்தலத்ததனைப்பற்றிக்கடிதினிற்கொடுபோயினார்

(42)

அவ்வழிகிள்ளைகாணுளாயிழையயர்தலோடு
மெவ்வழிபொயிற்றோவென்றிறையவனுலகினுடி
மைவழிகின்றமேனிமறலிதன்றுணைவியானுள்
கைவழியமருந்தன்மைகதுமெனவுணர்ந்தானன்றே.

(43)

பூதலம்புரந்த செங்கோற்புரவலன்வீரமொய்ம்ப
னுதியர்தம்மைக்கூவியங்கனந்தாண்டவன்னே
ரேதமில்கரிதேர்வாசியெல்லையின்மறவர்சுற்ற
மேதியங்கடவுண்மூதூர்விரைந்துபோய்வளைந்துகொண்டார்.

(44)

தன்னகர்வளைதலோடுந்தருமன்வந்தேற்றகாலை
யன்னவனொடுபோர்செய்தேயடுமுரண்டொலைச்சியம்பொன்
வன்னமென்கிள்ளைதன்னைவாங்கினர்மீண்டுந்தங்கண்
மின்னுளமகிழநல்கிவேந்தற்குவிசயஞ்செய்தார்.

எனவருவனவற்றானுமுணர்க—

வீரவாகுதேவர் புத்திரியும், முசுகுந்தச்சக்கரவர்த்தியாரின் பத்தினியும், மனுகுலம் விளக்கவந்தமணியன்ன சித்திரவல்லிதேவியாருக்குச் சந்தானவிருத்தியில்லாக்குறையை முன்னிட்டு அரசர் மிகவருந்தி, இலக்கத்தவரோடு இத்துக்கத்தினைக் கலந்து கொண்டாடினர். வீரதீரதேவர், முசுகுந்தமன்னர்க்குச் சக்கரவர்த்தி திருமுடிபுனைவிக்க திக்குவிஜயஞ்செய்யச்சென்ற காலையில், கேரள தேயத்தரசனிடம் சந்தானமாந்தருவொன்றிருப்பதாகக் கேள்விப்பட்டுளோனாதலால் அதனை இக்ஷணமே கொண்டு வருவேனென சேனாசமுகங்களுடன் குடகு நாட்டையடைந்தனர். அந்நாட்டு வேந்தன் வீரதீரதேவரின் திடும்பிரவேச வருகைக்குத் திக்பிரமை கொண்டானெனினும் குணக்குன்றமன்ன கோலமுடையராதல்பற்றி பரவசத்துடன் எதிர்கொண்டு பணிந்து தேவர் ஈண்டெழுந்தருளிய காரணத்திற்கருள் சுரத்தல் வேண்டுமென்றிரைஞ்சி நின்றனன். வீரதீர தேவர், குடகு நாட்டதிபரே! புத்திரோற்பத்தியின் நிமித்தமாக யாகமுன்னிலையில் சந்தானமாந்தருவொன்று நீர் பெற்றிருப்பதா

கவறிந்து அதன் மாங்கனி ஒன்று நம்அரசர்பெருமானுக்குப் பெற்றுச்செல்லுவோமென நாமிங்குற்றனம். ஆனமையால் விரைவில் தயைபுரிதல் வேண்டுமென்று விளம்ப, கேரளவரசன் லோப குணத்தால் மதிமயங்கி எக்கியமுன்னிலையில் பெற்ற மாந்தருவின்கனியை மற்றயோர்க்கு கொடுக்க வியலாதெனக் கண்டித்துரைத்தனன். வீரதீரதேவர் வெகுண்டெழுந்து, சேரதேய வேந்தனைச் சிறைபிடித்து தந் தேர்க்காலில் கட்டி அவனது வில், கொடி, முதலிய தசாங்கங்களையும் பரித்துச் சந்தானமாந்தருவையும் பூமியோடு பெயர்த்தெடுத்து அதனைக் கொடாதெதிர்த்த பதினெண் மலையாளங்களையும், பதினெண்கடிகையில் வென்று அத்தேயவரசர்களே அவைகளை மூட்டைகளிலிட்டு முடியிற் சுமந்துவரச்செய்து வெற்றிச்சங்க முழங்க, கருவூரடைந்து, முசுகுந்தமன்னரிடம் தாம் கொண்டு வந்த சந்தானமாந்தருவையீந்தனர். மன்னர் பிரான்மனக்கவலை நீங்கி, மாங்கனி பெற்று மகிழ்ந்து மங்கை கையிற் கொடுத்தனர். அவளதையுண்டு வயறு வாய்த்தனள். பின்னர் பலங்காயிலிச்சையுண்டாக வதுவுங் கொண்டு வந்து கொடுக்கப்புசித்து அவ்விச்சை நீங்கி தசமதியுமுற்றி நல்ல சுபமுகூர்த்தத்தில் ஓராண்குழவியைப் பெற்றெடுத்தனள். சூரிய குலத்தில் தோன்றியதால் சூரியனுதித்துவந்ததுபோல் சாமுத்திரிகாவிலக்கணங்கள் நன்கமைந்திருத்தல்கண்டு முசுகுந்தமன்னர் அப்பிள்ளைக்கு "அங்கிவன்மன்" என்னும் நாமகரணமிட்டு வேதவேதியருக்கு விதிப்படி தானம் வழங்கி பழமைபோல் அரசுபுரிந்துவந்தனரென்ப.

இவற்றிற்குப்பிரமாணம்

வல்லான் காவியம் எழுச்சிச்சருக்கம் (31) கவி.

அந்தாமரைத்தவிசாள்புரையருமைத்திருமகட்காச்
சந்தானமாங்கனியும்பலதழைகாயிவைவேண்டி
வந்தார்க்கவைதாராதிறுமாப்பவவர்தலைமே
லுந்தாவமைத்தீண்டுற்றதையுணர்ந்துள்கலிர்போலும்.

ஈட்டியெழுபது (33) கவி.

வடிவேலெடுத்தமனுதுங்கவளவன்றேவிவெதுப்பாற
முடிவேள்வியிற்செந்தீத்தருகான்முளைமாங்கனிக்காக்குடநாட்டைச்
செடிவேரறுத்துச்சிறையிட்டுச்சென்னிவியப்பத்திறைபோலக்
கொடிவாண்முரசுகளிறுபரியிரதங்கொடுக்குஞ்செங்குந்தம்.

எனவும்.

செங்குந்தர் மாலை (100) கவி.

நாமாபுகல்வதிவர்வீரமம்மம்மநான்முகனு
லாமாவிதற்குக்கரிகேரளவிறையஞ்சவைத்துத்
தாமாகத்தங்குலக்கோதையிச்சித்தசந்தானமெனுந்
தேமாங்கனியைக்கொணர்ந்தளித்தார்களிச்செங்குந்தரே.

எனவும்.

செங்குந்தர் திருக்கைவழக்கம்.

——பிள்ளையினைத்
தந்தானகம்போற்றமையுங்குடநாட்டுச்
சந்தானமாமகட்குத்தந்திடுகை—யுந்து
சிலையாற்கனிகாய்கடேடிப்பதினெண்
மலையாளம்வென்றுகொணர்மாண்கை,

எனவும்.

"கந்தபுராண சங்கிரகம்"

(70)

சீரளகத்துச்சித்திரவல்லிசெழுங்கருப்பங்கொளாமையினாற் கேரளதேயத் தரசன்வைத்திருக்குங் கிளைந்தசந்தானமாங்கனிக்கங், கேரளவற்றபெருமையினேலையெழுதினரவன்கொடாமையினாற், பேரளவற்றசேனைபோடேகிப்பெயர்த்தனர்கொணர்ந்தனர்தருவை.

(71)

முரணினர்தருவையரனுறவைத்துமுதிர்கனிகாரிகைக்கீந்தார் பருணிதர்புகழுங்கருப்பமதடைந்தாள்பைந்தொடிகனிகளுக்கு வந்தா, டரணியின்மலைநாட்டுள்ள தென்றறிந்துதரும்படியொற்றரைவிடுத்தா, ரரணினரவரைத்தடுத்தனர்வந்தேயறைதலுஞ் சினந்தனர்வீரர்.

(72)

கேட்டலும் வீரர்படையொடுஞ்சென்றேகிரிக்குறுமன்னரைவிளித்தே, வாட்டலுமவர்கள்வணங்கியாமடிமைமலைபடுநாடுமதென்றே, நீட்டலும் பெற்றேயவர்தமைக்கொண் டுசெழுங்கனிவகைவகையாகக், கூட்டலுங்கொணர்ந்துகுமரிகைக்கொடுத்துக் கொற்றமும்வேந்தனுக்கீந்தார்.

எனவருவற்றானுமுணர்க—

இங்ஙனஞ்சிலகாலம் செங்கோலோச்சி வாழ்ந்திருந்தபின்னர் முதன்மை பெற்ற வீரவாகுதேவர் முசுகுந்தச்சக்கரேஸ்பரரை விளித்து வேந்தே! சுப்பிரமணியக்கடவுள் திருவாணையின்படி ஓராயிரவருடங்களும் நமக்கு இன்றோடு முடிந்தன. நாம் தேவலோகஞ் செல்லவேண்டும். ஆனமையால் அரசர் எங்களுக்கு உத்திரவுதரல்வேண்டுமென்று கேட்க முசுகுந்தமன்னர் வீரவாகுதேவராதியரை நோக்கி! மனுகுலந்தழைக்கவந்த மணிவிளக்கனையமாதவர்களே! உங்களால் யானிதுவரை பெற்றுவந்த பேருதவிக்கு யாது கைம்மாறளிக்கப்போகின்றேன். ஆயின் தங்களாலேயே எனது குமாரன் அங்கிவன்மனை சிங்காதனமேற்றித்திருமுடிசூட்டிக் களிக்கவேண்டுமென்ற விருப்பமுமுளதால், நீவிர்திருவருள்சுரந்து அதனை முடித்தருளல்வேண்டுமென்றிரைஞ்ச வீரவாகுதேவர் தம்மிளவலர்களோடு இதனையாராய்ந்து நன்றெனக்கொண்டு அங்கிவன்மனுக்கு அஷ்டமங்கலமுழங்க ஆகமவிதிப்படி அரசமுடிபுனைந்து, மற்ற தம்புத்திரபௌத்திராதிகளுக்கு ஐம்பத்தாறு தேயங்களை எழுபத்திரண்டு நாடுகளாகப்பிரித்து, அந்நாடுகளாகிய தாமரைக்கமலத்திற்குப்பொகுட்டுப்போன்ற காஞ்சிபுரமகாநாட்டிற்கு இளவரசாக அனகமூர்த்திக்கும் பட்டாபிஷேகஞ்செய்து சிங்காதனத்திலெழுந்தருளிவித்து முன்னொருக்கால், அத்தலத்தில் உமாதேவியார் சிவபெருமானைக்குறித்துத் தவமியற்றவந்தபோது அப்பதியை நான்கெல்லையாக வகுத்து கீழ்புரத்தெல்லையாகியசிவபுரத்தில் நந்திதேவரையும், தென்புரத்தெல்லையாகிய தொந்திப்புரத்தில் கணபதியையும், மேற்புரத்தெல்லையாகிய விரிஞ்சிபுரத்தில் கந்தநாதரையும், வடபுரத்தெல்லையாகிய சோழிங்கபுரத்தில், வயிரவரையும், காவலாக வைத்திருந்த காரணங்கருதி நமது மாதா விதித்தவண்ணமே அரசாங்கம் விதிக்கத்தக்கதென்று நினைத்து, அக்கமலத்திற்கு அகவிதழ்போன்ற மேற்றிசை, தென்றிசை, வடதிசை, கீழ்திசை ஆக இந்நான்கெல்லைகளுக்கும் முறையே, சனகன் கௌமாரர், கஜகோளர், சிவசங்கரராமிவர்க்கு முடிசூட்டி அதன் புறவிதழ்போன்ற மற்ற நாடுகளை சிவபுத்திரர்களுக்கு முடிசூட்டி இவ்விதமாக எழுபத்திரண்டு நாடுகளுக்கும் அதிகாரங்கொடுத்து இதுவே உங்களுக்கு க்ஷத்திரியத்தொழிலென்று கூறி குமாரர்களே! இதுமுதல் நமது இராஜதானியில் இவ்வீரசெங்குந்தர்களில் நாடு ஒன்றுக்கு ஒவ்வொருவராக வரவழைத்துக்கொண்டு அரசுபுரிவதோடு இவ்வுலகில் ஆகமவிதிப்படியுள்ள பூந்தொடுத்தல், தைத்தல், ஓதுவித்தல், எழுதல், நெய்தல் ஆய ஐந்துவித சிறந்த தொழில்களுள் சிரேஷ்டமானது நெய்தல் தொழிலேயாகையால் புனிதமாகிய, இந்நெய்தற்றொழிலையே ஜீவனாதாரமாகக்கைக்கொண்டு நமது தமையரும் நங்குலதெய்வமுமாகிய சுப்பிரமணியக்கடவுளைச் சதாசிந்தித்து, கொலை, களவு, கள், காமம், பொய் முதலிய பஞ்சமா பாதகங்களை அறக்கடிந்து நீங்கள் யாவரும் சிவசொருபமாகிய திருவெண்ணீறு, உருத்திராக்கமாமணியணிதல், ஜெபம், பஞ்சா

க்ஷிர உண்மைவிளக்க முதலிய ஆசாரங்களை வழுவில்லாமலனுஷ்டித்து வரக்கடவீர்களென்று திருவாக்களித்து, ஸ்ரீ சிவபெருமான் கொடுத்த, வீரவாள். வெற்றிச்சங்கம், கொன்றைமாலை, வில், அம்பு, அம்புராத் தூணி, கத்தி, கேடையம், டங்கா, வெங்கலக்கொம்பு, நகரா, காகள மென்றுசொல்லாநின்ற பஞ்சவர்ணதாரை, லவண்டை, ஜெயபேரிகை, பார்ப்பதியார்கொடுத்த செங்குந்தம், ஷண்முகதேவர்கொடுத்த கோழிக் கொடி, விஷ்ணுமூர்த்திகொடுத்த கெருடக்கொடி, பிரமதேவன் கொடுத்த அன்னக்கொடி, முசுகுந்தர்கொடுத்த முத்துக்குடை, வெள்ளைக்குடை, மகுடதோரணம், புலிக்கொடி, வெள்ளைப்பாவாடை, சாமரை, சாம்பு ராணிக்கலசம், பகல்தீவத்தி, அறுகால்பீடம் தேவேந்திரன் கொடுத்த வாடாதமாலை, தேவசிம்மாசனம் முதலான பலவிருதுகளைக் கொடுத்து ஆசிர்வாதஞ்செய்து இலக்கத்தொன்பதின்மரும், அறுமுகக்கடவுளைக் குறித்தருந்தவமியற்றி அவரருள் பெற்று கந்தமாதனமேகினர். இவர்களுடன் முசுகுந்தச்சக்கரவர்த்தியும் சென்றனராக, இப்பால் அங்கிவன்மன், முறைப்படி எழுபத்திரண்டு நாட்டுச்செங்குந்தத்தலைவர்களையும் மந்திரிகளாகக் கொண்டு மனுநீதி வழாது அரசுசெலுத்தி பிதாவாக்கிய பரிபாலனமாக் பாவமில்லாத தொழிலாகிய நெய்தற்றொழிலையே கைக்கொண்டு வாழ்ந்திருந்தனரென்ப.

இவற்றிற்குப்பிரமாணம்.

கந்தபுராணம். கந்தவிரதப்படலம். (125) கவி.

துங்கமிகுமுசுகுந்தன்றொல்கயிலையடைந்தபின்ன
ரெங்கள்விறன்மொய்ம்பினனுமிலக்கருடனெண்மர்களுந்
தங்கள்சிறூர்தமைவிளித்துத்தத்தமதுசிறப்புநல்கி
யங்கிவன்மன்பாலிருத்தியரியதவமாற்றினரே.

(126)

மாதவமெண்ணிலவியற்றிமானுடத்தன்மையைநீங்கி
யாதிதனிலடலெய்தியருண்முறையாலனைவர்களு
மேதகுசீர்க்கந்தகிரிவிரைந்தேகிவேற்கடவுள்
பாதமலர்பணிந்தேத்திப்பத்திமைசெய்துற்றனரே.

(127)

நூறொழியீராயிரரினுவவுமுவர்ச்சிறூர்மறையோ
னுறெழுமுன்மூவருணரறுதொழிலேற்றறநூலிற்
கூறுநெறிபிறழாக்கைக்கோளரெனச்சிறந்தனரா
லீறில்சிவன்முகத்துதித்தவிருங்குரவரீட்டம்போல்

எனவருவனவற்றானுமுணர்க—

## (72) நாடுகளாவன.

### க—வது சிவபுர நாட்டிற்குக்கிளை நாடுகள்.

(1) மேல்படப்பை, கீழ்படப்பை, ஆத்தஞ்சேரி.
(2) மாஞம்பதி, செம்பாக்கம், மூணத்தொன்று, அகரம்.
(3) முன்னூர், பரமேசுரமங்கலம், மதுராந்தகம்.
(4) திண்டிவனம்.
(5) வக்கரைப்பத்து.
(6) திருவக்கரை, புதுச்சேரி, ஒழுகரை.
(7) திரிபுவனம், நல்லாத்தூர்.
(8) திருப்பாலூர்.
(9) மிடையாத்தூர், திருவெண்ணைப்நல்லூர்.
(10) பனமூலை, அனந்தபுரம்.
(11) வழுதிலைப்பட்டு.
(12) மாப்பரை, வரமாசூர்.
(13) பட்டணம், கருங்குழி.
(14) மன்னூர்கோவில்.
(15) பாளையம்.
(16) குப்பாக்கம்.
(17) சம்பை, திருவரங்கம்.

### உ-வது தொந்திபுர நாட்டிற்கு கிளை நாடுகள்.

(1) முருகமங்கலம்.
(2) திருவாமாத்தூர்..
(3) திருவண்ணமலை.
(4) செங்குரிஞ்சி.
(5) கச்சித்திரல்.
(6) சேலம்.
(7) திட்டகுடி.
(8) திருமலைப்பாடி.
(9) திருக்கோவல்.
(10) திருநாகேச்சுரம்.
(11) திருச்செம்பள்ளி.
(12) சீர்காழி.
(13) மாப்பிள்ளைக்குப்பம்.
(14) தேவூரு.
(15) காட்டூர்.
(16) போலகம்.
(17) நல்லாச்சேரி.

### ஙு-வது விரிஞ்சிபுர நாட்டிற்கு கிளை நாடுகள்.

(1) ஆமூர்.
(2) வாணியம்பாடி.
(3) கொரட்டை.
(4) தருமபுரி.
(5) பவானி.
(6) தாரமங்கலம்.
(7) ஏழாநாடு.
(8) புகழாரை.
(9) பூரதிரை.
(10) திருச்செங்கோடு.
(11) வையாபுரி.
(12) அவிநாசி.
(13) நஞ்சுண்டகுடி.
(14) வகவங்கபாளையம்.
(15) கருவூர்
(16) நாமக்கல்.
(17) காங்கேயம்.

## ச-வது. சோளிங்கபுர நாட்டிற்கு கிளை நாடுகள்.

(1) திருத்தணிகை.
(2) தெளிநாடு.
(3) நெறிநாடு.
(4) திருவடிநாடு.
(5) திருமழிசை.
(6) கொந்தம்பாக்கம்.
(7) திருக்காவ‌த்தி.
(8) தொண்டமாநாடு.
(9) வரைநாடு
(10) வெங்கட்டகிரி.
(11) திருப்பதி.
(12) ஜெந்நாதம்.
(13) சீட்டம்பள்ளி.
(14) செம்புரம்.
(15) வரதபுரி.
(16) சந்திரகிரி.
(17) காசி என்பவைகளே.

---

இவற்றிற்குப்பிரமாணம்.

திருச்சேய்ஞலூர், சுத்தசைவாசாரியராகிய ஞானப்பிரகாச சுவாமிகள், திருவாய்மலர்ந்த, ஸ்ரீகந்தபுராணம் காளியைப் பிலத்திலிட்ட படலம்.

(88) கவி

காஞ்சிபுரத்துற்றனற்புரமென்றோதுங்
கருதுசிவபுரனாடீரொன்பதென்னும்
வாஞ்சையாக்தொந்திபுரநாடீரொன்பாம்
வகுக்கரியவிரிஞ்சிபுரநாடீரொன்பாந்
தீஞ்சொலுறுசோளங்கிபுரம்பானெட்டுஞ்
சேர்ந்தெழுபத்திருனடுஞ்செகத்திலாக்கி
யாஞ்சிலாதின்னட்டினமெல்லா
மறைகுவேனவ்வழினீர்கேண்மினென்ன.

(89)

மன்னுசிவபுரனடுபடப்பைமானும்
பதிமதுராந்தகந்திண்டிவனத்தினேடு
முன்னுமக்கரைபுவனையுயரதிகைனடு
மொளிர்வெண்ணை நல்லூரும்பனைமூலநல்ல

சென்னைவழுதலம்பட்டுபெரையபுரநாடு
செய்யமன்னார்கோவில்பாளையமுஞ்சீர்யாம்
பன்னரியசம்பையொடுகுபாகமும்பரந்த
பதிபுவனகிரியினோடுபதினெட்டுனாடாம்.
(90)

தொத்திபுரமுருகமங்கலமுமாத்தூர்
தொன்மைனாடருணகிரிகுறிஞ்சிதிருக்கச்சி
நந்திலாசேலமொடுதிட்டைமலைபாடி
நற்செந்திருப்பெருமாள்கோவினாகேசுர
மெந்தைசெம்பொன்பள்ளினாடுசீர்காழி
யெழில்மாப்பிள்ளைக்குப்பமிகல்நல்லசேரி
பந்தமுறுபோலகங்காட்டேருனாடு
பண்டுதேவூரினொடுபதினெட்டுனாடாம்.
(91)

தீதிலாவிரிஞ்சிபுரமாமூருநாடுந்
திகழும்வாணியன்பாடிகொரட்டையெனுமூரும்
ஆதியாந்தருமபுரிபவானினாடெங்கு
அரியதாராமங்கலமேழினூரும்
நீதியாரைனாடுபூரதிரைனாடு
நிகரில்செங்கோடுவையாபுரியுநீடு
கோதிலவினாசிகொங்கெழிற்குடகுனாடு
குணநாமக்கல்கருவூர்காங்கயமீரொன்பாம்.
(92)

சோளங்கிபுரநாடுதணிகைதெளிநெறியுஞ்
செய்யதிருவடியுமேழிசைகுந்தர்பாக்கங்
காளத்திதொண்டமகிழ்வறைவேங்கிடகிரியுங்
கழிசிட்டம்பளிசெம்புரஞ்சகன்னாதம்
மாளாதவரதபுரிவங்காளனாடு
வளர்சந்திரகிரிகாசியெனுநாடிரொன்பா
மாளுநீவிரிந்தவெழுபத்திரண்டு
மாருனசெம்முகத்தண்ணறம்மருளால்.

எனவும்.

## கங்காபவானிக்கு இலக்ஷிமிதேவி திருவாய் மலர்ந்த இலக்ஷணக் குறவஞ்சி.

### கங்கை சொல் விருத்தம்.

மதிமுகவனிதையாரேவண்மைசேர்நான்குநாட்டிற்
கிதமுறுங்கிளைநாடின்னமெழுபத்திரண்டுண்டென்றுய்
சதிருடனவைகள்யாவுந்தானறிந்திடுவதாக
விதிதமாயெந்தனுக்குவிரைவினில்விளம்புவாயே.

### குறத்திசொல் அகவல். இ—ம். ஆரபி.

தார்புனை நந்தியின் தயையினல்நாளுஞ்
சீர்புனைந்தோங்குஞ்சிவபுரநாட்டின்
வளங்கொளுங்கிளைநாடுவருமுறைசொல்வேன்
விளங்கிவாழ்ந்திடுநல்மேல்படப்பை
பழுதிலாக்கிழப்படப்பையாத்தஞ்சேரி
வழுவிலாமூன்றுமோர்மாநாடதென்பர்
பயில்வுறுமானும்பதிசெம்பாக்கமு
முயர்வுறுமூணத்தொன்றகரமுமின்
நான்குமோர்நாடுநலந்திகழ்முன்னூர்
மேன்மைகட்பரமேசுரமங்கல
மும்மதராந்தகமூன்றுமோர்நாடு
வம்பவிழ்திண்டிவனஞ்சாரமோர்நாடு
பரிவுகொள்வக்கரைப்பத்துமோர்நாடு
திருவக்கரைப்புதிச்சேரியொழுகரை
இவைபத்துநாடுஇயல்திரிபுவன
முவகைகொள்நல்லாத்தூருமோர்நாடு
திருவதிப்பாலூர்சேரவோர்நாடு
தெரிதருமிடையாத்தூர்திருவெண்ணைநல்லூர்
கனந்தருமோர்நாடுகருதுபனமூலை
அனந்தபுரமுமோரழகுகொள்நாடு
பரவிவாழ்வழுதிலைப்பட்டுமோர்நாடு

மருவுமாப்பறையவரமாசூரென்னும்
திட்டமாயிரண்டுந்திகழுவோர்நாடு
பட்டணங்கருங்குழிபரவுமோர்நாடு
குறைவில்லாமன்னுறுகோவிலோர்நாடு
நெறியானபாளையம்நெடுந்தனிநாடு
சரியானகுபாகந்தனிநாடுஜம்பை
திருவாங்கமிரண்டுஞ்சீர் பெறுநாடு
பண்பதாயிப்படிப்பதினேழுநாடும்
வண்மைகீழ்ப்பாலில்வளர்ந்திடுகின்றதா
லுண்மையாயவைகளுக்குளபெயரெல்லாம்
நன்மையாயுரைத்தேன்நயந்துகேளம்மா.

### கங்கை சொல் விருத்தம்.

தவமிகுந்தோங்குகின்றதாயேகீழ்ப்பாலின்வாழ்
சிவபுரநாட்டைச்சார்ந்தசிருளகிளைநாடெல்லா
முவமையாயுரைத்தாயின்னமோங்குதென்னுட்டிலுள்ள
செவையொடுகிளைநாடெல்லாந்தெரிந்திடவுரைத்திடாயே.

### குறத்தி சொல் அகவல். இ—ம். ஆபி.

கங்கைவேணியனுர்காதலால்வந்த
ஐங்கரனருளாலழகோங்கிவாழும்
திருத்தொந்திபுரமெனும்தென்னுட்டைச்சார்ந்த
கருத்துள்ளகிளைநாட்டின்கணக்கினைச்சொல்வேன்
முருகமங்கலநாடுமுகிவோர்களேத்தும்
திருவைமாத்தூர்நாடுதிருவண்ணுமலைநாடு
கோதிலாவாதூர்செங்குறிஞ்சியோர்நாடு
தீதிலாக்கச்சித்திறல்தனிநாடு
சேலத்துநாடு திட்டக்குடிநாடு
பாலொத்ததிருமலைப்பாடிமாநாடு
செந்திருப்பெருமாள்சீர்கோவில்நாடு
கெந்தமார்திருநாகேசுரநாடு
திருச்செம்பள்ளிநாடுசீர்காழிநாடு
ரிசுத் தபா ணமாப்பிளைக்குப்பநாடு

தேவூருநாடுதிகழ்காட்டூர்நாடு
பூவாருஞ்சோலைசூழ்போலகநாடு
சீருள்நல்லச்சேரியோர்நாடு
பாரினிலிப்படிப்பதினேழுநாடு
மாதியாய்த்தென்னாட்டிலறைபெயர்தன்னை
தீதிலாதுரைத்தேன்தெரிந்துகொள்ளம்மா.

### கங்கை சோல் விருத்தம்.

கூறியதென்னாட்டுள்ளகுணமெலாந்தெரிந்தேனின்னம்
விறிவாழ்விரிஞ்சிநாட்டின்விளங்கியகிளைநாடெல்லாம்
பூறுவசவிஸ்தாரங்கள்புன்மைகளொன்றில்லாமல்
தேறிடவுரையுமம்மாதெரிவையேயெந்தனுக்கு.

### தூரந்தி சோல் அகவல். இ—ம். ஆரபி.

சிவசுப்பிரமணியர்செயுங்கிருபையாலே
விவரமாய்விளங்கும்*விரிஞ்சிமாநாட்டி
னுளகிளைநாடெலாமுண்மையாய்ப்புகல்வே
னளிமுரண்சோலைசூழாமூர்நாடு
வாணியம்பாடிமாநாடதொன்று

---

* இவ்விரிஞ்சிபுர நாட்டிற்குக் கிளைநாடுகளாகச் சம்பந்தப்பட்டிருந்த பவானி, திருச்செங்கோடு, அவிநாசி காங்கேயம், வையாபுரி, முதலியநாடுகள், கொங்கு நாட்டுக்குச் சம்பந்தப்பட்டிருக்க அதனை வழங்குதலொழிந்து, நவீனமாகச் சில வருடங்களுக்கு முன்னம் கொங்கு நாட்டினுட் பிரிவென (24) இருபத்திநான்கு நாடுகளை ஏற்படுத்தி, அவற்றிற்கு இருபத்திநான்கு ரிஷிமூலங்களைக் கோத்திரமாக்கி மணவினையாதி சுபகாலங்களில், நாட்டின் பெயர் வழங்கிப் பெரியதனம், நாட்டாண்மை, பந்துவர்க்கம் முதலிய வரன் முறைப் படித் தாம்பூலம் வழங்கிச் சுபங் கொண்டாடிவது வழக்கத்திலிருக்கிறது.

(24) நாடுகளாவன:—(1) தென்னகரநாடு (2) பூந்துறைநாடு (3) ஆறநாடு. (4) தலைநாடு. (5) காங்கேயநாடு. (6) வேங்கலநாடு. (7) தட்டயநாடு. (8) அண்டநாடு. (9) வையாபுரிநாடு. (10) வாரக்கநாடு. (11) நல்லுருக்கநாடு. (12) பொன்குலிக்கிநாடு. (13) நரையநாடு. (14) வடகரைநாடு. (15) குருப்பநாடு. (16) பூவாணிநாடு. (17) ராசிபுரநாடு. (18) அறையநாடு. (19) மணல்நாடு. (20) கிழக்குநாடு. (21) வாழவந்திநாடு. (22) வக்கநாடு. (23) காணப்பட்டிநாடு. (24) ஆனைமலைநாடு, என்பனவே.

நாணயக்கொறட்டை நல்லநாடொன்று
தருமபுரிநாடு தளர்விலாதோங்கும்
திருமலபவானிநீண்டநாடொன்று
வழுவிலாதாரமங்கலநாடு
இழிவிலாநல்லதோரேழநாடு
புகழார்ரைநாடுபூரதிரைநாடு
திகழ்கின்றநற்றிருச்செங்கோடுநாடு
வாழ்வுகொள்நல்லவையாபுரிநாடு
தாழ்விலாதவிநாசிதனிநாடதொன்று
நஞ்சுண்டவூர்நாடுநலமிகுந்தோங்குங்
கஞ்சமலர்த்தடக்காவல்பாளையநாடு
நத்தக்கருவூர் நாடொன்றுமேலும்
முத்தமநற்கருகூர்காங்கேயநாடு
நறுமலர்ச்சோலை சூழ்நாமக்கல்நாடு
முறுதியாயிப்படியுளபதினேழு
முறைத்தனன்மேல்நாட்டினுறும் வளமெல்லாம்
கருத்தினிலறிந்துகொள் கன்னிநீயம்மா.

### சங்கை சொல் விருத்தம்.

படவரவல்குற்செவ்வாய்பைந்தொடியாரேநீயும்
குடகுநாடதனைச்சார்ந்தகொள்கைகளெல்லாஞ்சொன்னாய்
திடமுளவளநாட்டிற்குச்சிறந்திடுங்கிளைநாடெல்லா
மடவுடனறிவதாயென்னன்னையேயுரைத்திடாயே.

### குறத்தி சொல் அகவல் இ—ம். ஆரபி.

திகழ்காளவயிரவர்திருவருளாலே
புகழ்கொண்டசோளிங்கபுரஞ்சூழ்ந்தபரவை
நாட்டினுக்கிளைநாடுநானிலமதனில்
தாட்டியாயுளதின்சரித்திரங்கேளாய்
தளர்விலாவளர்திருத்தணிகைமாநாடு
தெளிநாடுநெறிநாடுதிருவடிநாடு
எழில்பெறுந்திருமேழிசையொருநாடு
பழுதிலாக்கொந்தம்பாக்கமோர்நாடு

அழிவிலாதிருக்காளத்திமாநாடு
விழுவிற்றெண்டமாநாடுமகிழ்வறையநாடு
வேங்கடகிரிநாடுவிண்ணோர்கள்யாருந்
தீங்ககன்றிடுநல்லதிருப்பதிநாடு
செகன்னுதநாடுசிட்டம்பளிநாடு
தகைவானசெம்புரந்தழைத்தோங்குநாடு
வரதபுரிநாடுவளர்சந்திரகிரிநாடு
கருதுவோர்வினைதீர்க்குங்காசிமாநாடு
இப்படிவடநாட்டினிற்பதினேழா
னெப்பியபெயரெலாமோர்குறைவின்றி
தப்பிலாமறைகளிற்சாற்றியபடியே
செப்பினேனிவையெலாந்தெரிந்துகொள்வாயே.

எனவருவனவற்றனுமறிக.

இனி இவர்கள் அரசுபுரிந்தவரலாறுகளையும் முறைப்படி விளக்குவோமாக.

நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

## ஐந்தாம் அத்தியாயம்.

# செங்குந்த மன்னர்.

மேல் விவகரிப்பாலனவற்றால், நவ வீராதியோர்கந்த வேளை நோற்றுக் கந்தமாதனஞ் செல்லுங்கால், அனகனுதியோனைக் கூவிக்காஞ்சி முதலிய எழுபத்திரண்டு (72) நாடுகளை மனுவிதிவழாது செங்கோலோச்சுமாறு சட்டளையிட்டுச் சென்றது விளக்கமாம். இதனை வலியுறுத்துமாறு பிற்காலத் திருந்த சிற்றம்பல நாடிகளாதீனம், சுத்த சைவராகிய திருச்செய்ஞலூர் "நாவினன் மழவேடுந்த ஞானப்பிரகாச சுவாமிகள்" தாம் திருவாய்மலர்ந் தருளிய "வல்லான் காவியம்" வீர நாராயணச் சருக்கம், 2-வது கவியில்.

" அந்நகரிருந்தாளீச னடியவர்க்கடியன் செங்கோன்
மன்னவராஞ் செங்குந்த மரபினுலகமெங்குஞ் "

எனவும், ஷை விஜயம் தூதனைச் சருக்கம். 35-வது கவியினும்.

" மன்னவனுக்கினிதானமைந்தர்களுமவர் குலத்தா
ரேந்நிலமுமரசர்களுமிறைவர்களு மவர் குலத்தார்."

எனவும், ஷை. விஜயம் தேவசாட்சிச் சருக்கம். 7-வது கவியினும்.

தானையுடன்சென்ற மரிற்சயங்கொண்டு மீண்டிடுதன்
மானமிலாவிவற்காமோ மன்னவனே யெங்குலத்து
மேன்மையினரை யிரண்டு வேந்தர்களுண்டன்னவரோ

எனவும், கூறினராக.

இதன்றியுமிவர், காஞ்சிகுமர கோட்டத்தடிகள் அருளாக்ஞை மேற்கொண்டு திருவாய்மலர்ந்தருளிய ஸ்ரீகந்தபுராணம், தேவகாண்டம், காளியைப் பிலத்திவிட்ட படலம். (92)-வது கவியினும்,

அன்றன்பத்தறுதே யத்தரசரீன்ற
வரிவயமைமணஞ் செய்தச்சுதருக்கெல்லா
மின்றிந்தனுடெங்கு மேகினீவீர்
ரிறைசெய்து வீசனடியாரைப்பூசித்
தென்றென்று மறவாது முருகவேளை
யிதையத்திலேயுன்னி யிருத்திரானல்
நன்றென்றுமாறுது நீடுவாழ்வீர்
நாடொறு மென்ன விறை நவற்றினுனல்.

எனவும் பிரமாணப்படுத்தினர்.

அன்றியும்,

பண்பான புலிப்பாணி மைந்தாகேளு
பகருகின்றேன் நவவீரர் வர்க்கந்தானே
தண்பான நவசத்தி சிலம்பில்தோன்றி
தருவாக நந்தி கணத்தவருமாகி
திண்பான செங்குந்தர் வம்சமாகும்
திடமுள்ள வளவகுலமணமே சூட்டி

எண்பாண சகஸ்திர நூறொன்பான்பாலர்
இணங்கியே உலகிலரசியற்றிஞரே.

என, போகர்ஜாதி உற்பத்திநூல். (32) கவியினும்,

நளராஜபூபதி நவரத்ன வீரர்
நன்மையுருமிப்புவியில் வல்லோராகி

எனவரும் திரு வள்ளுவர் சுருக்கம் (26-வது) கவியினும்,

வேணுட்டமோர் பன்னிரண்டிற் கருணைவிளங்கத்தன்னோர்
தாணுட்டமுற்ற திண்டம்பியபைப் பெருந்தாரணியி
வாணுட்டங்கொள்ள விடுப்பவவர் வழியாக வந்தோர் [தரே.
சேணுட்டுக் கொப்பெனுஞ் சோணுட்டையாண்ட விச்செங்குந்

எனவருஞ் செங்குந்தர்மாலைத் திருவிருத்தத்தினும்,

செங்கோனடத்தும் வளவனிட்ட சிக்காதனத்திலினிதிருந்த
நங்கோன் கவியே கவியென்று நாட்டிக்கவிபுன் களைகளைந்து
வங்கோ டமுங்கன்னுட மாராட்டிரங்குச் சரஞ்சினங்
கொங்கோடெங்குந் தரத்திறையே கொள்ளுமின்னர் குந்தம்.

எனவரும், ஈட்டி யெழுபதின் திருவிருத்தத்தினும்,

துங்கமிகு முசு குந்தன்,

எனவரும் கந்தபுராணத் திருவிருத்தத்தினும்,

சீரணிபயோதரிகவு மாரிமகமாயி தேவிபாதச்சிலம்பிற் [புரக்க
செம்மையுடனே வந்து பூமிதனையாளுமோர் செங்குந்தரைப்

எனவருஞ் "செங்குந்தர்பிள்ளைத்தமிழ்க்" காப்புப்பருவம். (10) கவியினும் இம்மரபினர் அரசுபுரிந்து வந்தனரென்பது கரதலா மலகமாம்.

மேலும் கி.பி. 610 644. 710-ம் வருஷங்களில் காஞ்சியை அரசுபுரிந்து வந்த பல்லவர்கள் காலத்தில், செங்குந்த மரபினர். குறு சில மன்னராகவும், சேனைத்தலைவராகவு மிருந்தனரென "தக்ஷிண இந்தியா" சரித்திரம், "பலிஜவாரு புராணம்" முதலிய நூல்களைக் கொண்டும் விவகரித்திற்கிடமிருக்கிறது. அல்லாமலும், கி. பி. 905-ல் தஞ்சையைப்பரிபாலித்திருந்த பராந்தகச்சோழன் காலத்தும், செங்குந்த குலத்தினர், சிற்றரசர்களாக விருந்து பொல்லானெனும் வல்லானைப் பராந்தகச் சோழனுக்குப் பிரதிநிதி

ளாகச் சென்று வென்று வந்ததாகவும், அக்காலத்துத் தஞ்சை வேம்பனெனு மொரு செங்குந்தன், பராந்தகச் சோழனுக்கு மந்திரித்தொழில் புரிந்து வந்ததாகவும், வீரநாராயணர் விஜயத்தால் விளங்குகின்றன.

இம்மரபினர்க்கு இக்காரணத்தானன்றே தேவாம்சவிருதும் மானவாம்ச விருதும் இரண்டும் வழங்கி வருகின்றன. இவ்வாறிரண்டும் இம்மரபினர்க் குண்டென்பதை.

"நங்கையர் வேய்த்தோள்பழகு நாகணே வாயேகுந்த
வங்கையர் தங்கேதன நீ யாய்ந்துரையாய்—துங்கமிகு
காவலொடுவைகித் தாங்காதலர் மெய்காக்குமெழிற்
சேவலொடு வேங்கையுமாந்தேர் :

என்னும், திருநாகை முத்துக்குமார தேசிகாருளிய "செங்குந்தர் தசாங்க வெண்பா"வானுந்தெளிக.

இதுகாறுங் கூறிப்போந்த பிரமாணங்களன்றி, மற்றதேச சரித்திரங் களிலேனும், "சேப்பேடு"சிலாசாசநம்" முதலிய சாதனங்களிலேனும், இம்மரபினர் அரசு புரிந்ததாகவேதேனும் ஆதரங்களுளவோவெனச் சிலர், வினுவுதலுங் கூடும். அவற்றிற்கேற்ற சமாதான மிதன் கீழ் சிலவரைவாம்.

சேர, சோழ, பாண்டியர் முதலிய மூவரசர்களும், ஆந்திரர், மஹ ராஷ்டிரர், பல்லவர், மொஹலாரர், போன்றவரசர்களும், நம்மிந்திய நாட் டைப்பல வருஷங்கள் ஆண்டுவந்திருப்பதாகச் சிலகாரணங்களாலறிகிறோம். பிரபலமாயாண்ட சேர சோழ பாண்டிய வரசர்கள் ஆட்சிக்குப்பின்னிட்டுப் பெரும்பான்மையோர் பட்டமடைந்து நின்றவர்கள், பல்லவரும், ஆந்திரநும், மொஹலாயர்களுமே. இவ்வரசர்கள் பெரிதும்பொருண் மோகங்கொண்டு ஒருவனை யொருவர் தாக்கி வெற்றிகொளும் நாட்டமன்றி நாட்டினர்க்கொரு வாற்றானும் நன்மை செய்ய முற்பட்டாரில்லை. இங்ஙனஞ் சுய நலங்கருதிய வரசர்கள் தேசத்தின் மீதடுத்தடுத்துப் போர்க்கெழுந்த படையெடுப்பால் ஆங்காங்கு பல கலாபங்கள் விளைவதற்கேதுவாயின. இஃதால் இன்னோர் பிரஸ்தாபங்கள் பிரபலப்பட்டு அக்காலத்திருந்த நாட்டு வித்வான்கள் அவற் றைப் பிற்காலத்தினருணருமாறு சரித்திரமாக வெழுதிவைத்தனர். அவற் றைப்பேராதரவாகக்கொண்ட அவ்வம்மரபினர்தத்தம் அரசர்களின் வல்ல பங்களைக்குறித்து நிகழ்காலத்தில் பிரபல சரித்திரங்களை வெளியிட்டுக்கொண் டார்கள். இதுபோல்அக்காலத்துச் செங்குந்தர்கள் அரசாட்சி பிரபலப்பட் டுச் சிறப்படைந்திருக்குமேல் அவரறைக்குறித்து மேன் சரிதக்காரர்கள் எழு திவைத்திருக்கக்கூடாதெனச் சிலர் நினைக்கவுங்கூடும். அவற்றிற்குக்காரணம்.

திருக்கைலாயபரம்பரையினரும், சிவநந்தி கோத்திரவம் சாவளியினரு மாகிய செங்குந்தர்களே, நவவீரர்களும் அவர் முன்னவராகிய இலக்கத்தவரும்

சுப்பிரமணியதேவர் திருவாணையின்படி முசுகுந்தவரசர்க்குத்துணைவராகப் போந்து அவ்வரசனுக்கு அளவற்ற நன்மைகளை விளைத்துத்தாம் தேவலோகஞ்செல்லு முன்னிலையில் முசுகுந்த வேந்தரரண்மனைகளில் வினைப்பயனால் வந்துற்பவித்திருந்த தேவமாதர்களை மணந்து அவர்கள் மூலமாக ஆயிரத்துத் தொள்ளாயிரவரைத்தந்து அப்புதல்வனாதியோர்க்குக்காஞ்சி முதலிய (72) நாடுகளை நமது மாதாவிதித்தவண்ணம் அரசுபுரிந்து வரக்கடவீர்களென்று கட்டளையிட்டுச்சென்ற தங்கள் பிதுர்வாக்கிய பரிபாலனார்த்தத்தை நிலைநிறுத்தலே தமக்கின்றியமையாக்கடனெனக்கொண்டு, அவர்கள் வகுத்துக் கொடுத்தருளிய நாடுகளன்றி வேறு நாடுகளைக் கண்ணெடுத்தும் பாராமல் தங்கள் நிலைகளில் ஒரு சிறிதும் தவறுதல் நேராமல் அரசுபுரிந்திருந்ததால் இன்னோர் அரசாட்சியைக்குறித்து அக்காலத்திருந்த தேசசரித்திரக்காரர்கள் எழுதிவைப்பது அதி முக்கியமல்ல வென விட்டிருக்கலாமென்பதே மேற்குறித்த சங்கைக்குத்தரமாம். இதனை விட்டுச்சிலர் வாய்மதம் பேசி வீணேயொழிகின்றனர்.

அம்மரபினர் தொண்டநாட்டின் கணரசாண்டாமை அதனி ராஜதானியாகிய காஞ்சியினும், கமலாயம், சிதம்பரமுதலிய தலங்களினுமுள்ள சிலாசாசனங்கள் செப்பேடுகளாதியவற்றில் சந்தேகமறக்காணலாம்.

இத்யாதி காரணங்களால் செங்குந்தமரபினர் செங்கோலேந்தி உறுபகை யொடுக்கி உலகோம்பித்திறை பெற்றுப்புகழ் பெற்றிருந்ததாக விளங்குகின்றது.

இங்ஙனம் புகழ்பெற்றிருந்தவரசர்கள் யாவரென ஆராயுமிடத்துப்புற்றிடங்கொண்டார்" மதுகையர்" "பிரணவர்" "தனியர்" "கோளாந்தகர்" "புலியூர்ப்பள்ளிகொண்டார்" "மணியர்" "வீரர்," "நாராயணர்" ஒற்றியூரதிபர் முதலினோரும்" திருச்செந்தூர் * சுபனென்பவரும் சோழதேசத்திலரசாண்ட †கௌதனென்பவரும், திருவிடைமருதூர் ‡ படைமருதனென்பவர்களுமே" யெனத் தெரிகிறது.

---

* சுபனென்னும் செங்குந்தவரசன் திருச்செந்தூரை ஆண்டனனென்பதை.

ஆழநீள் கடற்குமாங்கோ ரம்பிமேற் சென்றேயப்பாற்
சூழ்திருச் செந்தூருற்ற சுபனென்பான் றுணையாக்கொண்டு
வாழிராசாதி ராசமன்னவன் மருவலான்ற
னீழநாடொரு நாடன்னிற்றிறை கொண்டீண் டுற்றகுந்தம்.

† கௌதனென்னும் செங்குந்தமன்னன் சோழதேசத்தைப் பரிபாலித்தானென்பதை.

மச்சநாடுடைய கோமேல் வங்கநாடாளுமன்னன்
குச்சரவரசற்காக சமரமேற்கொண்டு கொற்றக்

இவ்வரசர்களின் சிறந்த சரிதையினைக் கூறுவது "வீரநாராயணர் விஜயம் "ஈட்டியெழுபது" முதலிய பிரபந்தங்களே. எஞ்சிய கோவை உலா மடல், பரணி மான்மியம் புராணமிவைகளிருந்தவிட மறியாதொழிந்ததால் நம்மரபினர் பூர்வசரிதங்கள் நாம் காணக்கிடைப்பது அருமையாகி முடிந்தது. ஆகவே கிடைத்த ஆதரவைக்கொண்டேனும் விளக்குவது சிறந்ததாமெனவெண்ணியும், அவ்வரசர்களின் சரிதங்களை நங்குலத்தவர் கண்டு வக்க வேண்டுமெனு மவா மேலீட்டானும், அவற்றை விதன்கீழ்ச்சுருக்கமாக வரைய முயன்றதாமென்க.

## (1) திருக்காஞ்சித் தனியரெனும் அரசர் சரிதம்.

கடல்சூழ்ந்த விந்நிலவலயத்திற்கோர் திலகம்போன்ற புண்ணிய பூமியாமிந்த பரதகண்டத்துச் சிறப்புற்றுத் திகழுந்தொண்டை நன்னாட்டில், அம்மையறம் வளர்த்தகச்சிப்பதியில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதரின் இணையடிகளில் பிடையறாத சிந்தை வகித்தவரும், செங்குந்தர்மரபுக்கோர் தீபம் போன்றவரும் மாவிருட்சத்தின் கீழுள்ள தேவ சிங்காதனத்திவர்ந்து உலகாண்டுவரும் ஒப்பற்றவல்லப மமைந்தபதும வண்ணரெனும் மன்னவரின் தவப்பேற்றால் வந்த தனியரென்னும் அபிதானமுடைய இளவரசர் செங்கோலோச்சிவருங் காலத்தில் வேற்றரசர்களாகிய துளுவர், சீனர், சிங்களர், கலிங்கர், அவந்தியர், ஒட்டியர் முதலிய மாற்றலர்கள் தனியரின் அரசாங்கத்தைக் கைப்பற்றுவான் கொடியது ரெண்ணங்கொண்டு நால்வகைச் சேனைகளையுஞ் சன்னைகப்படுத்திக் காஞ்சியின்மீது படையெடுத்துப் போர்க்கோலங்கொண்டுவந்தனர். இத்தகைய பெருஞ்சைன்யங் கட்டுத்தலைவாரகக் கூர்ச்சரதேசத்தரசனும், போரில் வல்லவனாகிய குடகுநாட்டரசனும், இருபக்கத்திலும் முற்பட்டு நின்றார்கள். அப்பொழுது சத்தித்த சிரந்த சங்கநாதமும், எக்காளத்திற்றோன்றுமொலியும், பெறும்பரையின் கோஷ்டமும் தனியரென்னும் அரசிளங்குமரனின் செவியிற் பட்டன.

---

கைசலியாமற் கொல்லுங்காலையிற் கௌதமனென்பான்
உச்சினி தொடங்கிப்போர் செய்குந்தம்போலுலகிலுண்டோ.

‡ படைமருதனென்னுஞ் செங்குந்தவேந்தன் திருவிடைமருதூரில் செங்கோலோச்சினனென்பதை.

இடைமருதூரிற் சாபமேந்திய சிறக்கையானை
புடைமருதடியின்வீழப் பொருதியே புறங்கொடாத்
விடைமழுவுடையான் பாதமென்கமலத்திற் சேர்த்த
படைமரு தன்கைக்குந்தம் போலினிப் பாரிலுண்டோ.

எனவரும் ஈட்டியெழுபதின் திருவிருத்தங்களானு முணர்க.

அகஸ்மாத்தாக நமது கோட்டையின் மதிலையடுத்துக்கேட்குமிப்பேரொலிபோரொலியாகத்தானிருத்தல் வேண்டுமெனக்கொண்ட மனத்தோடு வெளிவருவாராயினர். அது தருணம் காவல் வீரரும் சேனாதிபதிகளும் அதிவிரைவாக வெதிர் தோன்றி ராஜ மண்டலேஸ்வரா ! அழகமைந்த நமதரண்மனையின் மதிற்புறத்தே பெருஞ்சைன்யங்கள் புடைசூழ்ந்து அறைகூவிப்பறையறைந்து ஆரவாரிக்கின்றனர். எனக்கூறினர். இதனைச்செவியேற்ற தனியரசர் '' கோபாவேசத்தராய் புயங்கள் மலைபோல் பெருக்க வயரக்கவயமணிந்து சேகரம் புனைந்த சென்னியராய், கழற்காலினராய், விற்கையினராய், உடைவாளேந்திப்போருடைதரித்துத் தேர்மீதேறிப்போர்க்களஞ் சென்றனர். அரசருடைய சைன்யங்களானவை வரிசை வரிசையாகப்போர்க்களத்திற் புகுந்து பகைவர்களாகிய மறுபுலத்தவர்களைக்குதயமைந்து நீண்ட வில்லை வளைத்துக்கூறிய அம்புகளைப்பிரயோகித்து முனை முகத்திலெதிர்த்தார்கள். இருபடைகளிலும் பேரிடங்கா முரசு முதலிய வாத்தியங்கள் முழங்கவும் பிரமுகாளுடைய கரங்களில் பிடித்திருக்கும் விற்றொனியும் வீரகண்டாமணித்தொனியும் மேலாகி அதிர்த்தன. காலாட் படைகளின் வரிசையே காலாட்படைகளின் வரிசையே கலந்து கதாயுதத்தை வீசின. குதிரைப்படைகளின் வரிசையைக்குதிரைப்படைகளே தாக்கி வாளாலெறிந்தன. யானைப்படைகளின் வரிசையை யானைப்படைகளே முசலப்படை யாற்றாக்கின. முறையே கொடித்தலைவர், குடைத்தலைவர், அணித்தலைவர், ஆயுதத்தலைவருமெதிர்த்துப் பற்கடித்து விற்பிடித்து இரண்டு புயமென்னும் வெற்பெடுத்து மற்றொடுத்து, மண்டல முதலிய விண்டலமதிரச்சண்டை புரிந்தார்கள்.

இவ்வாறு இரண்டு சைன்யங்களும் எதிர்த்துப்போர் புரிவதையும் தனது சைன்யங்கள் சகிக்கலாற்றாது வருந்து வதையுங்கண்ட நந்தனியர் உறை நீத்துவாளோச்சி யெதிர்த்தோரை இமைப்போழ்தில் விண்ணுலகேற்றல் சிங்கவேறனையகச்சியப்பதி வெற்றியமைந்த தனியர்க்கெளிதே. அவர் தம் கையேந்திய வில்லைக்குணத்தொனிசெய்து கொடுமையும் கூர்மையுமான அத்திரங்களைப்பிரயோகித்து இடியேறெனவார்த்து அரத்த மழை பொழிவித்தமையின் உற்பாதம் யாது விளையுமோவென விண்ணோரு மயிர்த்தனர். தனியரின் அஸ்த்திரம் சிறிது போழ்தில் பல ராவியைக்கொள்ளைகொண்டு பிரளயகால உருத்திர மூர்த்தியோவென விளங்கிற்று. கரிகளும், பரிகளும், காலாட்படைகளும், சேனாவீரர்களும், மூலைக்கொருவராய்ப்பறந்தனர். மற்றவர் உலக வாழ்வினை மெய்யென வெண்ணியோ ? அன்றி யொருங்கேகின் துறகத்திடம் பேர்தாதென்றோ ? வோட்டெடுத்தார். குடகுநாட்டரசனும், கூர்ச்சரதேச மன்னனும், தனியரை யெப்படியும் வெல்வோமென்றுகொண்டிருந்த விரதமழிந்தவராய் மனஞ்சோர்ந்தனர். அத்தருணத்தில் வேலேந்திய நந்தனியர், கூறிய வேறுவேறு அஸ்த்திரங்களை வெகு முனிவுடன் பிரயோகித்து அவர்

கைக்கொண்டிருந்தவில், வாள், கதை முதலியவைகளை முறித்து சரீத்தணிந்திருந்த கவசத்தையும் பிளந்தனர். இளமை யமைந்த மன்மதன்போன்ற தனியரேவுகின்ற அஸ்திரக்கட் காற்றுதவராய் மண்ணுலக விச்சை நீத்து விண்ணுலகுய்த்துனர். உடனே பகைவர்களாயுள்ளவரும் அவ்வாரல்லாத மற்றயரும் மின்னென மறைந்தனர். பெருங்காற்றிற்குமுன் பிரகாசிக்கின்ற தீபம் நிற்பது முண்டோ ?

இக்கொடுமையான போர் புரிந்து தன்னை வெல்லக்கூடியவரெவரென்னு மாண்மையால் அப்பெரிய போர்க்களத்தில் தனியாக ஜயசங்க மூதிய காரணத்தால், அங்கிருந்த பெரியாரெவரும் ஒருமுகமாய் இந்நாட்டைப்பரிபாலனஞ்செய்யும் மன்னவர் தனியரென்னும் பெயர் பெற்றிருப்பினும் இன்று கொண்ட வெற்றியால் * இது முதல் இப்பெயரே காரணப்பெயராக விருக்கவென வாசிமொழிந்தனர்.

இவ்வரசர் இத்தகைய வல்லபமுடையாரேன்பதை,

இனிமாநிலத்திற் கண்டதில்லை கேட்டேயிருத்தலன்றிபெரும்
பனிமால் வரையுமைநாக முன்பின் படைதானெடுத்தாலு
முனிமாறுண்டோநடுநின்று முடிப்பான்கச்சித்தனியன்வட்டத்
தனிமாநிழற் கிழ்ச்செங்குந்தஞ் சரணுகதிக்கு வைகுந்தம்.

எனவரும் ஈட்டியெழுபதின் திருவிருத்தத்தானு முணர்க.

## (2) ஒற்றியூரதிபரெனும் அரசர் சரிதம்.

அலைகடல் சூழ்ந்த நிலமகட்கினிய முகமென மிளிரும், பரதகண்டத்து விளங்கும் தமிழ் நாடனைத்தினுக்கு மோரணிகலாய்ச் சிறப்புற்றுக் கலைமகளும் திருமாதும் கலந்துரவாடும் பெற்றியதாய்த் தியாகராஜ முகூர்த்தங்கள் திருக்கோவில் கொண்டெருந்தருளிய தலங்களேழினுள்ளொன்றுய்ப் பக்தகோடிகளும் பண்டிதரும் பாமாலை சூட்டப்பெற்றதாய்ச் சிறந்த முத்துக்களைக்கரையிலொதுக்கும் பரந்த பாராவாரமுடையதாய்ச், சதாவேதங்கள் கோஷிக்கின்ற பெருமையினையு முடைத்தான திருவொற்றியூரின் கண் ஆன்மாக்களுய்தற் பொருட்டருண்மிக்கூர்ந்து வடிமாம்பிகை யாரெனுந்தேவியாரை வாமபா

இங்ஙனம் இவ்வரசர் காரணப்பெயர் பெற்று ரென்பதை,

*இனிவெம்முனைக் கணெதிர்வார்களேவரென வெங்களத்திலுலவாத்
தனியங்கிருந்து சயசங்கமூது சதுராலெவர்க்கு முதியோர்
பனிவந்த நாக்களினியிந்த நாடு பரிபாலனஞ் செயரசன்
றனியன்னெனுஞ்சொலுரை தந்தவேந்தறகை யெற்குரைத்தறரமோ.

என வருவன வற்றனு முணர்க.

கத்திருத்தி, மாணிக்கத்தியாக ரெனுந்திருப்பெயர் புனைந்தெழுந்தருளிய சிவபெருமானின் இணையடித்தொண்டனும் தேவிபாதச்சிலம்பில் தோன்றி மரபினனும்,சுதாகனெனும் அரசன் தவத்தாலீன்றவருக்குமரனும், ஒற்றியூரதிபனெனும் பெயரினனுமான வரசன், மனுநெறிவழாது செங்கோலோச்சிவந்தனன்.

இங்ஙனம் அரசுபுரிந்து வருநாட்களிலொன்றில் ஒற்றியூரதிபர்சிவார்ச்சனை செய்தற்பொருட்டு அதிகாலையில் துயில் நீத்துவிதிப்படி நித்தியகர்மானுஷ்டானத்தை முடித்து மலர்பரிக்கும் நிமித்தம் தமது மாளிகையினடுத்துள்ள பூங்காவிற்குச்சென்றனர். அத்தருணம் பாவமே ஒருருவெடுத்துப் பூதலத்துப்போந்ததோ ? வெனும்படி கோரரூபமும் கொடியகுணமும் படைத்த "அனல" னென்னுமியற் பெயருடைய அரக்கனொருவன் இச்சைப்படி பலவிடங்களிற்றிரிந்து எதிர்ப்பட்ட நரர்களை இசைந்தபடி உணவுகொண்டு செருக்குற்ற மனத்தனாய் இம்மலர்ச்சோலையினும் பிரவேசித்தனன். பவநாச வெறுப்பும் சிவநேசவிருப்பும் குடிகொண்ட மனத்தராய்ச் சித்தத்தைச் சிவன் பாலிருத்தி அவனருட் பெறுதலே சிறந்த பேறெனக்கொண்டு சிவநாமங்களைச் சிந்திக்கும் வாயராய் ஒற்றியூரதிபர் மலர் பரித்துக்கொண்டிருந்தனர். இதனைக்கண்ட கொடியனான அனலன், இன்றைக்கு நமக்கு நல்ல ஆகாரங்கிடைத்தது என மனங்களித்துப் பின்வருஞ்செயலை யோர்ந்தறியானாகி ஊழ்வினை பிடர் பிடித்துந்த ஊங்காரங்கொட்டித் தோள் தட்டிக் கைநீட்டி அதட்டி எதிர்த்துவந்தனன். இத்தீச்செயலைக்கண்ட நஞ் செங்குந்தமரபின் கீர்த்தியை விளக்குவான் தோன்றிய ஒற்றியூரதிபர் மிகச்சினந்து, கோபக்கனல் வீறிட்டெழ உறுத்துப்பார்த்து பாவியே நீயாவன் ? பாத்திராபாத்திரமறியாது போருக்கெழுதல் துன்பத்திற்கேதுவாமென்னும் செயல் அறிந்திலைகொல் ? இங்குற்ற காரணந்தானென்னை ? விரைவில் புகல்மினென்றனர். இவ்விபரீத வார்த்தையைக்கேட்ட வரக்கன், வெகுண்டு கோபமுற நகைத்து, உலகத்துள்ள உயிர்களும் அவ்வுயிரைக்கவர்ந்து செல்லும் அந்தகனும், அச்சமுறத்தக்க அனலனென்னும் பெயருடையோன் யானலனோ ? என் வயற்றிற் பற்றியெரிகின்ற பசித்தீயைத் தணிப்பதற்காகவன்றோ இம்மலர்ச்சோலையினும் பிரவேசித்ததென்பதும் யறிந்திலையோ ? மசகம் போன்ற நீயுமெனக் கெம்மாத்திரம் என மறுமாற்றம் புகன்றனன். இதனைச் செவியேற்ற ஒற்றியூரதிபர், பிரளயகால உருத்திர சங்காரமூர்த்தியெனக் கோபித்து, நம்முன் கொஞ்சமும் அஞ்சா தெதிருரைக்குமாற்றல் உனக்குமுளதோ ? வெனச்சீறி தங்கைப்பற்றியுள்ள கூறிய வேற்படையால் அவனது நெஞ்சைப்பிளந் துயிரைக் கொள்ளைகொண்டனர்.

இவ்வரசர் இந்தகைய வல்லபமுடையாரென்பதை,

உடலமண்மேலுயிர்விண்மேலொல்லாரொடுங்கவுதிரமொடு
குடருங்கொழுவுங்கழுகோடுங்கொள்ளைகொள்ளப்பரிந்தூட்டு

மடல்வெண்டாழைமுகமலரவாரிவாரித்திரைக்கரத்தால்
கடல்வெண்டரளமேயெறியுமொற்றியூரன்கைக்குந்தமே.

எனவரும் ஈட்டியெழுபதின் திருவிருத்தத்தானு முணர்க.

## (3) புற்றிடங்கொண்டாரெனும் அரசர் சரிதம்.

நிலமகட்கழகார்தருநீணுதற்
றிலகமொப்பதுசெம்பியர்வாழ்பதி
மலர்மகட்குவண்டாமரைபோன்மலர்ந்
தலகில்சீர்த்திருவாரூர்விளங்குமால்.

என்னும் அருண்மொழித்தேவர் அமுதவாக்கானுஞ் சிறப்பிக்கப்பட்டதும், சோழற்குரிய பஞ்சசிங்காதனங்களிலொன்ருகியும், காவற்கடவுளாகிய விண்டுவினது பத்தினியும், தனச்செல்வியும் தாமரையாதனத்தியுமான லட்சுமி தேவியாரால் பூஜிக்கப்பெற்றதும், சத்தியலோகவாசியும், அன்னவூர்தியுமாகிய பிரம்மதேவரின் திருமேனியாகிய பிர்ம்மாண்டத்துக்கு மூலாதாரஸ்தலமாக விளங்குவதும், பரிதிகுலத்தோன்றலாகிய மனுநீதிகண்டசோழனரசுபுரிந்து வோர் பசுங்கன்றுக்காகத் தன் குமாரனைத் தேர்க்காலி விடரச் செய்து தன தரசியலினூற்றலை விளக்கியதும், தேவேந்திரனிடத்துத் தியாகமாகப் பெற்றுவந்த சத்தவிடங்க விமானங்களைச் செங்குந்தர்களால் பிரதிஷ்டை செய்யப்பெற்றதும், காவேரிநதிக்கு வடக்கிலுள்ளதும், சுந்தரமூர்த்திகளால் திருப்பதிகம் பெற்றதுமான திருவாரூரின்கண்ணே! சிறப்புமிக்குடைய செங்குந்தகுலத்தி லவதரித்திருந்த புற்றிடங்கொண்டாரென்னும் மன்னவர்க்குப் புத்திரராய்த்தோன்றி புற்றிடங்கொண்டாரென்னும் திருநாமம் வகித்து வேதாகம விதிவழாத முறைமையிற் திருவெண்ணீறு உருத்திராக்கமாமணி முதலிய சிவச்சின்னங்களணிந்து வீதிவிடங்கப்பெருமா னிணையடிகளில் மாருத சிந்தை வகித்து அவனருட்பெறுதலே சிறந்த பேறெனக்கருதி திருமுடிபுனைந்து செங்கோலோச்சுவாராயினர்.

இவர்,

வடமொழியைப்பாணினிக்குவகுத்தருளியதற்கிணையாத்
தொடர்புடையதென்மொழியையுலகமெலாந்தொழுதேத்துங்
குடமுனிக்குவற்புறுத்தார்கொல்லேற்றுப்பாகரெனிற்
கடல்வரைப்பினிதன்பெருமையாவரேகணித்தறிவார்.

என்னுஞ் செய்யுளை நன்கோர்ந்தறிந்தவராய், தூய்மை யமைந்து வளப்பமிக்க தமிழ்பாஷையில் விசேடித்த புலமையுடன் மேற்பட்டவராயினர். இவ்வண்

ணம் கீர்த்தியமையும்படி செங்கோல் செலுத்திப் புகழ்சிறத்திவந்தனர். இதனைக் கேள்வியுற்றுவந்த பெரும்புலவர்களானோர்க்கு அவர் மனங்களிக்கும்படி அளவற்ற பொருள்களளித்து அவர்களால் பாடல்களைப்பெற்று வாழ்ந்துவந்தனர். இங்ஙனமிருப்ப, அங்கதேசத்து அரசன் சிறப்புமிகும் புற்றிடங்கொண்டாருடைய கேண்மை பெறவேண்டுமெனக் கமலாலயம் வந்தடைந்து வேந்தனைக்கண்டு வணங்கிச் சிரத்தின்மேல் கைகூப்பிநின்று செங்குந்தமேன்னும் வேற்படையேந்திய அரசப்பிரபுடீகரே! அடுத்தவரை யாதரிக்கின்ற பெருமை மிக்க செங்குந்த சிலாக்கியமே! கலிங்கதேசத்தரசன் கொலைத்தன்மைவாய்ந்த கொடூரப்படைகளால் என்னை வருத்தி யாதோர் நிமித்தமில்லாமல் என்னுடன் போர்புரிந்து என்னுடைய கோட்டை முதலிய சகல வலிமைகளையும் அபகரித்துக்கொண்டான். ஆதலால் அவற்றை அவனிடத்தினின்றும் எனக்குச் சுவாதீனப்படுத்தவேண்டுமென்று விண்ணப்பிக்க, மதிநுகத்தாலன்பமைந்த புற்றிடங்கொண்டாரென்னுந் தோன்றல் அவ்விண்ணப்பத்திற்குச் சம்மதித்துத் தனது சைனியங்கள் போர்க்கோலங்கொண்டு வெளிப்படுவதன் முன்பாகவே தன்னை அடைக்கலம்புகுந்த அங்கதேசத்தரசனுக்குப் பின்னாக வளப்பம்பொருந்திய திருவாரூரினின்றும், பகைவனாகிய கலிங்க தேசத்தரச னூர்க்குச்சென்று, கொடிய யுத்தகளத்தில் நின்றுகொண்டு சமாதானத்திற்குத் தூதனுப்பி யவன் சம்மதியானென்பதை யுணர்ந்து, அவ்வரசனுடைய கொடிகட்டியதேர், யானை, இளமையமைந்த குதிரை, பதாதியென்னும் சதுரங்க சைனியங்களெவற்றையும், எதிர்த்தாரவாரித்தனர்.

வடவானலமும், பிரசண்டமாருதமும், கலந்ததுபோல ஒரு க்ஷணநேரத்திற்குள்ளாக, அம்புகளைப் பிரயோகித்துப் போர்புரிந்து அவ்வரசனுடைய சேனைசமுத்திரங்களெல்லாம் எதிர்த்துப் போர்புரியச் சக்தியற்றவைகளாகும்படி பிணக்காடாக வெட்டினர். அப்போது அப்பகைவனுடைய சைனியங்கள் ஓட்டெடுத்தன. அவனும் வெருக்கொண்டோடினான். தன்னையடைந்துச் சரண்புகுந்து வேண்டிய அவ்வரசனுக்கே அவனுடைய அங்கநாட்டைத் துன்பம் நீங்க அரசுபுரியும்படி கொடுத்து அழகிய திருவாரூரைச் சேர்ந்தனரென்ப.

இவ்வரசர் இத்தகைய வல்லபமுடையரென்பதை,

கற்றிடங்கொண்டவர்கவின்சொற்கொள்ளுமே
யுற்றிடங்கொண்டபேர்க்குவகைநல்குமே
வெற்றிடங்கொண்டமேவலரைவீட்டுமே
புல்றிடங்கொண்டவன்பொலிகைக்குந்தமே.

எனவரும் ஈட்டி யெழுபதின் திருவிருத்தத்தானு முணர்க.

## (4) கோளாந்தகரெனும் அரசர் சரிதம்.

மேதினிமாதராட்குத் திலதமெனவிளங்கிக் கொட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூக்கள், சினைசினையப்பூத்துத் தண்டுளித்தேனை வண்டுகட்கருத்தி, எண்டி சாமுகங்களிற்சென்றுற, மகரந்தத்தையும், மணத்தையும் வீசும்விண்டவழ்சோலைசூழ் கொடுங்குன்றம் என்னும் க்ஷேத்திரத்தின்கண்ணே! மலைகள்தோறும், திருவிளையாடல் புரிவதற்காக ஓர் குமாரனாயும், பலவிடங்களினுமிருந்து அன்பர்கள் ஆங்காங்கு நிவேதிக்கும், பல நிவேதனங்களையும் திருவமுது கொள்வதற்காக ஓர் குமாரனாயும், மேன்மைத்தன்மை யமையும்படி யீன்றருளியவருமாகிய சிவபெருமானைச் சதாசிந்திக்கின்ற ஞானவானும், நித்தியமாயுள்ள சிவமெனும் பொருள் இதுவென்றுணர்ந்த அறிவினரும், யாவரும் தேடுதற்குரிய நூல்களனைத்தும் முற்றுமுணர்ந்துள்ளவரும், உலகத்தைப் பரிபாலிப்பவரும் வில்வித்தையை, அருமையும் பெருமையுமமைந்த தனுர்வேதத்தின் முறைமைப்படி தெரிந்துள்ளவரும், பால்போலும் இனிமையமைந்த மழலைச் சொற்களையுடைய இளங்குழந்தையைப் போன்று எவர்களும் அன்புகூரத்தக்க அறிவுடையவரும், ஆகாயமுதலிய ஐம்பெரும்பூதங்களும் அவற்றில் கலந்துள்ள நாதத்துவமும் விளங்குகின்ற நிலைமையுணர்ந்து செங்குந்தமென்னும் நற்குடிப்பெயர் தரித்துள்ள மதிநாதரென்னும் வேர்ந்தர்க்குப் புத்திரராக அவதரித்து, கோளாந்தகரேன்னும் நாம் தேயம்படைத்து அரசு புரிந்து வருவாராயினர், இவ்வரசிளங் குமரருடைய புஜபல பராக்கிரமத்தைப் பார்க்கவேண்டுமென்று பகைத்து, போரில்வல்லவனாகி, மதமுள்ள யானையின் வலுவைப்படைத்து எவனையும் மல்லயுத்தத்தை அதிவிரைவிற் செய்யும்படி வலியவழைத்து அம்மல்யுத்தத்தில் தான் வெற்றியடைந்து அவற்றிற்குப்பரிசாக நூற்றொருபொன் கொடுவென்று திறைபெற்று உணங்கனென்றும் சிறப்புப்பெற்றவன் கொடுங்குன்றமடைந்து பரிசுத்தராகிய கோளாந்தகரென்னும் அம்மன்னவர் உலாவருகின்ற மேன்மையமைந்த வீதியிற் சேர்ந்து, வளப்பமிக்க கொடுங்குன்றென்னும் நகரதிபனே! சிங்காதனத்தில் வீற்றிருந்து இவ்வுலகத்தைப் பரிபாலித்தாய், எவ்விடத்தும், பகைவர்களில்லையென்று கருவித்தாய், இத்தினத்திலே என்னுடனெதிர்த்து நீ வெற்றிகொள்வாயாக எனக்கூறினன்.

அவ்வுணக்கன்கூறிய வார்த்தைகள் செவித்துளைகளில் நுளைந்தவளவில் நட்சத்திரங்களுதிரவும், கருநிறங்கொண்ட கடலின்கண்ணுள்ள வடவானலம் சிறுமையுறவும், கண்களில் நெருப்புப்பொறி பறக்கும்படி வெண்ணிறமுடைய பருத்த இடபத்தின்மீதூர்ந்து, திரிபுரங்களைத் தீயெழபுன்முறுவல் செய்தருளிய சிவபெருமானை யொக்கக்கோபித்து, அவனுடன் மற்போர்புரிந்துலகுபாய்ந்து மிகவும் ஈனனாகிய அவ்வுணங்கனைக் கரத்தாற்பிடித்துக் காற்

றைப்போலச்சுழற்றி ஆகாயத்தில் வீசியெறிந்தார். அவ்வேகத்தால் அவன் ஆகாயமார்க்கமாகவே மூன்றுயோசனை தூரம்போய்த் திடீரென்று பூமியில் விழுந்து மீண்டும் எழுந்து கோளாந்தகனை யெதிர்க்கவே அதுகண்ட அவர் வலசாரி இடசாரியாகவந்து அவ்வுணங்கனுடைய பாய்கின்ற கால்களிரண்டையும் சேர்த்து வாரிக்கூத்தாடி நெற்பயிர்களின் தாள்களைப்போல் பூமியிலடித்து வெற்றிக்கொண்டனரென்ப.

இவ்வரசர் இந்தகைய வல்லபமுடையாரென்பதை,

> மூளாவடவைச்சிகரகிரிமுடிகம்பிக்குமாறு தஞ்செங்
> தாளான்மடங்கவொருகூற்றந்தனிமும்மதில்காய்ச்சிறுமூரல்
> வேளாருயிரைப்பேர்க்கவனற்கண்ணும்விளங்குமுருத்திரனோர்
> கோளந்தகனெண்டோளாண்கைக்குந்தம்வாகைக்குந்தமே.

எனவரும் ஈட்டி யெழுபதின் திருவிருந்தந்தானு முணர்க.

## (5) புலியூர் பள்ளிகொண்டாரெனும் அரசர் சரிதம்.

பல்வளங்களும் மல்கிக்கண்டார்க்குப் பெரியதோர் இன்பம்பயக்குஞ் சிறப்பான் மிகுந்த, நினைப்போர் நெஞ்சினும் நாக்கனும் அமுதசூற்றெழும் பெற்றியதாய். "தேங்குநீர் சூழ்வயல் தில்லைக்கூத்தனைப் பாங்கிலாத்தொண்டனேன் மறந்துய்வனோ" எனும் திருப்பாசுரத்தால் புகழ்ந்துபாடியதும் தில்லைதில்லை யென்றந்பிறவி இல்லை இல்லையென்று மறைமொழியும் தொல்லைதொல்லை யென்றே கோடுவினை வல்லை வல்லை யென்றகலும் எனும் ஆப்தர் மொழிக்கிலக்காயதும், பஞ்சபூதங்களி லொன்றாகிய ஆகாசலிங்கத்திற் குறைவிடமானதும், கடவுள் உண்டு இல்லையென்னும் சங்கைக்குச் சமாதானமளிப்பதும், அரிந்தார். அனுபவிப்பதும் அரியாதார் அறிவைப் பெறுவதும்," கருதரிய சிற்சபையிலானந்த நிர்த்தமிடுகருணைகரக்கடவுளே! எனும் ஆன்றோரின் அமுதவாக்கான் சிறந்தோதப்பட்டதுமான சிதம்பரத்தின் கண்ணே! மனுநெறி வழுவாதரசியற்றும் செங்குந்தர் குலத்தவப் பயனாக வெழுந்த விடங்கனெனும் வேந்தர்க்குக் குணப்பெருங்குன்றமும். கோதிலா நெஞ்சமும் அளப்பெறுமாண்மையும் அளவிடாப்புகழும் படைத்த புலியூர்ப்பள்ளிகொண்டான் எனும் அபிதானமுடையவர் புத்திரராகத்தோன்றினர், இச்சற்குணசீலர் பொதியமலைவாழ் அகத்தியர்க்கும் பொன்னுலகாள் வேந்தர்க்கும் முறையே தமிழின் பயனையும் தனியரசையும் அருளிய அருமீன் காதலரின் அடியிணைகளில் மாறாதசிந்தை வகித்தவராய் அரசு புரிந்து வருவாராயினர்.

o

இங்ஙனமிருக்கு நாட்களில் இவ்வேந்தனின் சொப்பனத்தில் நிர்மலராகிய நடராஜமூர்த்தி தில்லை மூவாயிரவருள் ஒருவர் போன்று திருவுருக்கொண்டு தோன்றி ஓ மன்னனே ! நம்முடைய நகரத்தினெல்லையிலே ஆந்திரதேயத்தானாகிய சித்திரத்தாமன் என்பவன் பகைகொண்டு போர்க்கோலத்துடன் நகரத்தின் கோட்டை வாயிலில் அணிவகுத்துள்ளான் ஆனதால் அதிவிரைவிற்சென்று வரக்கடவாயென்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர். உடனே துயிலுணர்ந்த புலியூர்ப்பள்ளிகொண்டாரென்னும் வேந்தர் சிவபிரான் திருவருட்செயலை வியந்து நாத்தழு தழுப்படைய மனமுருகிச் சரீரம் நடுக்குற்றுக் கண்களில் சொரியும் ஆனந்த பாஷ்பங்களால் நனைந்த சரீரமுடையராய்த்தெளிவடைந்து அறிவற்ற நாயேனை ஓர் பொருளாகத்திருவுள்ளங்கொண்டு எம்பெருமானே ! தேவரீர் எழுந்தருளத்தகுமோ ? எனப் பணிந்துதித்துத் தனது சைன்யங்களைச் சன்னத்தப்படுத்திப் போர்க்கோலங்கொண்டு வேற்படை, குந்தப்படை, முதலிய வாயுதங்களைக்கைக்கொண்டு ஓர் க்ஷண நேரத்தில் ஓர் காதம் செல்லத்தக்க வேகமுடைய குதிரைகள் பூட்டிய இரதத்திலாரோகணித்துப் பகைவனாகிய ஆந்திரனுடனெதிர்த்துக் கொடுமையாகப் போர்புரிந்தனர். இவ்வத்திரங்களுக்காற்றுணாத வஞ்சகம் புரிந்த ஆந்திரன் அச்சங்கொண்டு நின்றனன். இதனை யுணர்ந்த புலியூர்ப் பள்ளிகொண்டார் பின்னும் கொடிய அம்புகளை அனந்தங் கோடிகளாக எவி அவன் சரீரத்துள்ள துவாரங்கடோறும் உதிரமென்னும் அருவியொழுகும் படியாகச்செய்வித்தனர், இதனால் ஆந்திரன் பிழைக்க வழியில்லை யெனத் தெளிந்து தனது சைன்யங்களுடன் வீரசொர்க்கம் புக்கினன். பேய்கள் கூத்தாடவும். உதிரப்பிரவாகம் ஓடவும் பெரிய போர்க்களத்தில் ஜெய சங்க மூதினரென்ப.

இம்மன்னவர் இத்தகைய வல்லபமுடையாரென்பதை,

புண்டரீகமே குவளையே தளவமே பூமாவே
பிண்டியே பெருஞ்சித்த சன்றன்குணம் பிழையாவென்
கண்டவீரகண்டன் புலியூர்த்தனிகாத்தே சீர்
கொண்டபள்ளிகொண்டான்கரதலத் திடைக்கொளுங்குந்தமே.

என வரும் ஈட்டி யெழுபதின் திருவிருத்தத்தானு முணர்க.

## (5) பிரணவரெனும் அரசர் சரிதம்.

மடந்தையர் திரள் பூமலிற்றடங்கள் தோறும்:—போதலைத்தங்கள் சாயலென்றெண்ணி மயில்கள் பின்னே தொடரவும் செவ்வரி படர்ந்த அவர்கள் கண்களைக் குளிர்ச்சியுற்ற நீலோற்பல மலரென்று கருதி வண்டுகள் பின்

செல்லவும், அவர்கள் மேனியின் சிறந்ததை மாந்தளிரென்று கிளைத்துக்குயிற் கூட்டங்கள் இனிமையான வசனங்களைச் சொல்லிக்கொண்டிருக்கவும், தாமரை மலரை யொத்த பாதங்களையுடைய அம்மகளிர்கள் நாட்டியஞ்செய்கின்ற பசிய சோலை சூழ்ந்த கடம்பூர் என்னும் நகரத்தின் கண்ணே! வீரவாகுதேவர் குலத்து வந்த தருமநெறி தவறாத கதம்பனென்னும் வேந்தர்க்குப் புத்திரராகத்தோன்றி, "பிரணவரேன்னும் பேயர்" வாய்ந்து பெருமதிசூடிய பெம்மானெம்மானிடத்து இடையறாத பேரன்புவகித்தவராய், வேதப்பொருளுணர்வும், யாகாதி கிருத்திய விருப்பும், மனத்தூய்மையும், ஐஸ்வரியமும், பராக்கிரமமுமே, தனக்குச் சிறப்புடையதெனக் கருதிச் செங்கோலோச்சிவருவாராயினர்.

இங்ஙனமிருக்கு நாட்களில் ஓர் தினம் மலர்ச்சோலைகளின் வளப்பங்களைப்பார்க்கச்சிந்தித்துத்தாவிச்செல்லும் குதிரை மீதாரூ கணித்துபோர் செய்வதற்கு வேண்டிய வில், வாள், வேல் முதலிய படைகளைத்தாங்கி அஸ்வங்களை வேகமாகத்தூண்டி அனந்தங்காத தூரத்திற்கப்புறத்துள்ள மணங்கமழும், விருட்சங்களடர்ந்த ஓர் சோலைக்குட் சென்றனர்.

அந்தருணம் தென்றலானது மெல்லெனத்தவழவும், அச்சோலையிலுள்ளமலர்கள் விகசித்துத்தேனுகிய மதுரமமைந்த நீரை அம்மலர்கள் தெளிக்கவும் மலர்களில் நிரம்பிய வண்டுகளால் மகரந்தப்பொடிகள் சிதறவும் வண்டுகள் ரீங்காரம்பாடவும் புதிதாகிய அவ்விளவேனிற் பருவத்தில் வீசிய அத்தென்றலானது மேற்பட்ட நறுமணங்கமழவும் மிக மனங்களித்துப் பிரணவ வரசர் தனியாக உலாவிக்கொண்டிருந்தனர்.

இஃதிங்ஙனமிருப்ப, அங்குள்ள மலையிலிருக்கும் வேடராஜன் தன்னுடைய சைன்யங்களுடன் பெரிய தண்டாயுதம், கதாயுதம், வாளாயுதம் முதலிய ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு ஒரு முயலைப்பிடித்துக்கொல்லும்படி ஓடிப்பின் தொடர்ந்துவர, அம்முயல் பயங்கொண்டுமேன்மை யமைந்த தயாநிதியாகிய பிரணவ வரசர் முன்பாக வந்து விழுந்தவுடனே கொலைத்தன்மை மிகும் அவ்வேடர்கள் முயலை விடும்படி பிரார்த்திக்க, அரசர் மிகக்கோபித்து எம்மிடத்து அடைக்கலமாகப்புகுந்த முயலை நாம் கொடுக்கச் சம்மதியோம். நீங்கள் செல்லக்கடவீர்கள் என்றுரைக்க அவ்வேடர்களனைவரும் அவ்வேந்தருக்கெதிரிற் கொடூர வார்த்தைகள் கூறி ஒருங்கு சேர்ந்து பார்ப்பாயாக வென்று வில்லில் குணத்தொனிகாட்டி பல அம்புகளைப்பிரயோகித்தனர், இதனைக்கண்ட பிரணவர் நகைத்து ஓர் சிங்கமானது யானைகளின் கூட்டத்திற்புகுந்து உதிரம் பிரவாகிக்கும்படி அவற்றின் மத்தகத்தைப்பிளப்பதுபோல் கையில் வேற்படை தாங்கிச் சக்கிராகாரமாகச்சுழன்று கொடூரர்களாகிய அவ்வேடர்களின் புலால் புசிக்கும் வாயினின்றும் உதிரமூற்றெழும்படி அனந்தந் தலைகளை யறுத்துத்தள்ளினர்.

இதனை யுணர்ந்த வேடர் தலைவன் ஐயோ! கெட்டேன் இனி என் புரிவேன் வேலாயுத மேந்திய சிவந்த திருக்கரத்துடனே மயில் வாகனத் திலூர்ந்தருளும் சண்முகக்கடவுளை யொத்ததலைவரே! இனி யுத்தஞ்செய்யா திருக்கவேண்டும். எனப்பிரார்த்தித்து அவ்வேந்தருடைய திருவடிகளைப் பணிந்தனன். பெருமை மிக்குடைய பிரணவ வேந்தரும் அவ்வாரேகிருபை செய்தனரென்ப.

இவ்வரசர் இத்தகைய பெருமையுடையாரென்பதை.

குணமார் தருமத்தெவ்வேந்தர் குலக்கோளரியே குலத்தருவே
தணவாவண்மைச்சகம் பேசச்சகமே தாங்கும் பூதரமே
பிணவாவென்று பகரர்வாய் பிளந்து சோரிப்பெரும் பூதக்
கணம்வாய் நிரப்புங்குந்தம் போற் காணேங்கேளோங்க ற்றோரே.

எனவரும் ஈட்டியெழுபதின் திருவிருத்தத்தானு முணர்க.

## (6) மதுகையாரெனும் அரசர் சரிதம்.

பூமன் சிரங்கண்டியந்தகன் கோவல் புரமதிகை
மாமன்பறியல் சலந்தரன் விற்குடிமாப்பழுவூர்
காமன் கொறுக்கையமன் கடவூரிந்தக்காசினியிற்
றேமன்னு கொன்றையுந் திங்களுஞ்சூடி தன் சேவகமே.

என்னும் திருவிருத்தத்தான் சிறப்பிக்கப்பட்டதும், பிரமனுடைய நடுத் தலையைக்கொய்ததும், அஷ்டவீரட்டத்தலத்து ளொன்றாகிய திருக்கண்டி யூர். இத்தலத்தே, அடியார்களின் இருவினைகளைய திருக்கோவில் கொண்ட வீரட்டே சுரரென்றந் திருநாமம் வகித்துள்ள சிவபெருமானிடத்தே நீங்காப் பத்திகொண்ட செங்குந்தர் குலத்திற்கோர் திலகமென விளங்கிய விபுலர் என்னும் வேந்தர்க்குப் புத்திரராய்த்தோன்றி திருகண்டியூரென்னுந் திரு நகரத்தைப், பொறுமை மிகப்படைத்து வெற்றி மிருந்து அஞ்ஞானத்தை வென்று மெய்ஞ்ஞானமுற்றுப் பூரணவஸ்துவைத் தெரிசித்தோரென்னும் பொருள் பயக்குங்காரணப்பெயராய் "மதுகையாரென்னுந் திருநாமம்" வழங்கச் செங்கோலச்சி வருவாராயினர்.

இங்ஙனமிருப்ப இவர் அரசுபுரிந்துவரும் நகரின் வடதிசையின் கண்ணே! நெருங்கிய விருட்சங்களடர்ந்த ஓர் சோலையில் நீண்டநாட்களாக சிவந்தவாயையுடைய பிரமராக்கதனொருவன் இரவினும் பகலினும் ஒரிடத் தில் நிலையாயிருக்கத்தெரியாதவனாய்ச் சக்கிராயுதத்தைப்போன்று சுழன்று பிரகாசமுள்ள விண் வீழ்கொள்ளியைப்போன்று கண்களைத்திறந்தும் பார்ப் பதும் பாடுவதும் ஆடுவதும் ஓடுவதும் பெரு மூச்செறிவதும் உயர்ந்த குன்று

களின் மீதேறி எதிர்ப்படுவோரை மிக எளிதாக வினைத்து அவர்களுயிர்களைக்கொன்று கொடிய துயரங்களை நாடோறும் விளைவித்துவந்தனன். இதனால் இவன் வசித்துவரும் சோலையை அவ்வூராரனைவரும் பகைவரிருக்கும் நகரமென்று வினைத்து மிளகு, கோஷ்டம், அகில், தக்கோலம், குங்கமப்பூ முதலிய மலைபடு திரவியங்களைகப்படுவதற்கின்றி மனமிக மெலிந்து அந்நகரானைவரும் ஒருங்குகூடி அவ்வேந்தருடைய சபைக்குட்சென்று தாங்கள் வந்த வரவையரசனுக்குணர்த்தினர்.

இதனையுணர்ந்த வரசர் பாய்கின்ற புலிபோல் கோபித்தெழுந்து நாம் அரசபுரியும் நாட்டிலும் இவ்விதக் கொடுமைகளிருக்கின்றனவா? நாம் சிங்காதனத்திலிருந்து செங்கோல் செலுத்தி வருவது நன்றாயிருக்கின்றதென்று செங்குந்தமென்னும் வேற்படையைக்கையிலேந்திக்கொடுமைமிக்குடைய பிர்ம்ம ராக்கதனைக் கொல்லத்தனியாக அச்சோலைக்குட்சென்றனர். அச்சோலையானது வஞ்சக ரிருதயம்போல்இருள்மூடி ஒன்றுந் தோன்றாமல் இப்பிரம்மராக்கதன் எங்குளானோ? வெனச்சிந்தித்துத் துணிவுள்ளமனமுந் தோள்களுந் துடிப்ப நின்றனர். அத்தருணத்திலே பேய் போன்று திரிகின்ற துட்டனாகிய அப்பிர்ம்மராக்கதன், தனக்கெதிர்ப்பட்டசீவராசிகள், அழிவடையவும்பெருங்கற்களெல்லாம் தன் காலிற்பட்டபோது பந்துபோல் ஆகாயத்திலோடவும் அதிவேகமாக வந்தவுடனே, தேவேந்திரன் மலையின் சிறகுகளை வெட்டியது போன்று முன்னுகைக்கைகளறும்படி சேதித்துத் தலையிலுள்ள மூளைகள் சிதறும்படி செங்குந்தமென்னும் வேற்படையைப் பிரயோகித்தனர். அஃது அவனது தலையாகிய மலையினிடத்துத் தோன்றிய உதிரமானது செங்கிறங்கொண்ட நதிப்பிரவாகமா யோடிற்று. உடனே அவன் பிராணனும் நீங்கியது, சரீரமும் பூமியில் விழுந்தது. இப்போது இந்நகரத்தார்பேறுவார்களென்னும் களிப்புமீதூரப்பெற்று, மதுகையார் என்னும் மன்னர் திருக்கண்டியூரடைந்தனரென்ப.

இவ்வரசர் இத்தகைய வல்லபமுடைய ரென்பதை.

> மிண்டிடாமன் மேவலீர் விளம்பிடாமலோருமின்
> றொண்டிடாமல் வாழ்வதெங்ஙன் சூரபன்மன் பட்டிடக்
> கண்டவீரவாகுதேவர் கால் வருங்குலத்துமன்
> வண்டுலாவு கண்டியூரன் வயிரவாகு குந்தமே.

எனவரும் ஈட்டி யெழுபதின் திருவிருத்தத்தானு முணர்க.

## (7) முதுகுன்ற மணியரெனும் அரசர் சரிதம்.

தேனுள்ள மலர்மாலையணிந்த மார்புடைய வேடர்களின் பேதைப் பருவமுற்ற செல்வபுத்திரிமரர்கள். செங்கிறம் பொருந்தியவும், பசு கிறம்

பொருந்தியவுமான மணிகளால் சிறு வீடுகட்டி அடுப்பும் அமைத்து சங்குகளாகிய பாண்டத்தில் தேனுகிய உலைநீர்விட்டு மூங்கில் விளையும் முத்தை அதில் அரிசியாயிட்டுச் சோதிவிருட்சத்தின் விறகுகளால் நெருப்பு மூட்டிச்சமைத்து ஆர வாரித்துப்பாகித்துக்கொண்டு புசித்துப், பின் விளையாடிப் பாட்டுகள்பாடிக் கூத்தாடுகின்ற சிறப்பமைந்த பழமலையின் கண்ணே! உபசுப்பிரமணியரென்னும், கவவீரர் மரபில் பாராயணரென்னும் வேந்தர் செய்த தபோபல மிகுதியால் மணியர் என்னும் அரசர் புத்திரராகத்தோன்றினர்.

இவர் கிரமப்படி பள்ளியிற்சேர்ந்து கல்வியிற்றேர்ந்து யானை யேற்றம், குதிரை யேற்றம், வில்வித்தை முதலிய தனுர் வேதங்களையும் நன்கு கற்றுணர்ந்து உலகபரிபாலனம் புரியத்தக்க, பருவம் வந்தமை யுணர்ந்த பிதா, உடனே ஏனைய அரசர்கட்கும் திருமுகம் அனுப்பி வரவழைத்து அவர்கள் முன்னிலையில் தமது புத்திரருக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தனர் அத்தருணத்தில் அருமையான சிறப்புற்ற அப்பெரிய சபையில் வந்துள்ள மன்னவர்கட்குள்ளே! மேம்பாடமைந்த, மணவூரென்னும் நகரத்திற் கதிபதியாகிய மந்தாசனென்னும் அரசன், முற்பட்டுச் சபையை விட்டெழுந்து நின்று இவ்வாறு கூறலாயினன்.

பிதாபுரியும் நல்ல தபோபலத்தால், நற்புத்திரன் இவ்வுலகத்தில் வந்து பிறப்பான் என்னும் பெரியோர் வாக்கியபடியே, உமது புத்திரன் தனது அழகுக்கேற்பப் புஜ பல பராக்கிரமும் பொருந்தினவனாய், உமக்குப் பிறந்தனன். ஆகையால் எனக்கு எக்காலத்திலும் சகிக்க வேலாத இழிவான கொடுமைகளைப் புரியும் பகைவனும், மாளவதேசத்தரசனுமான கொடியனை உமது புத்திரன் வெற்றி கொள்ளத் தடையிராதென்று கூறி நின்றனன்.

அது கேட்ட பாராயணர் இது உண்மைதானென்றுணர்ந்து, உடனே தனது கரத்திற் பிரகாசித்துக்கொண்டிருந்த செங்குந்தத்தைச் சிங்காதனத்தின் மீது வீற்றிருந்து விளங்கும் புத்திரர் மணியர் திருக்கரத்திற்றந்து வெற்றிகொண்ட புலிக்கொடி நீடுவாழ்க, நீ வெற்றியே எக்காலமும் பெறுவாயாக என்று வாழ்த்தினர்.

இங்ஙனமாகத் தந்தையரால் வாழ்த்தப் பெற்ற மணியர் மணவை வேந்தனை நோக்கி அரசே! போர்புரிய வலியற்றவர்கள் வாழுமூர் என்பது விருத்தாசலம் என்னும் பெயரானும், * சிவபெருமான் கிழம் என்பது, விருத்த

* விருத்தாசலத்தமர் சிவபெருமான் கிழமென்பதை,

இறைக்குவளையு மிளங்கிள்ளையுமழகென்பவர்சேர்
துறைக்குவளையு மெகினமும்வாவிக்குத்தூயவிதழ்
நறைக்குவளையு மழகாமுதுகிரிநாதர்க்கின்றிப்
பிறைக்குவளையு முடல்வந்தவாறென் கொல்பேசுகவே

எனவருஞ் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானுந் தெளிக.

நாதர் என்னும் திருநாமத்தானும், தேவியாரும் கிழம், என்பது விருத்தாம்பிகை என்னுந் திருநாமத்தானும் விளங்கலின் இத்தகைய நகரத்தரசருக்குக் கீழ்ப்படிந்த உம்மை எதிர்த்தால் அவசியம் வெற்றி பெறலாமெனக் கருதிப்பகைவன் துணிந்தான் போலும் என்று கூறி அம்மாளவதேசத்தரசனுடைய வல்லபங் காணுமாறு இரதகஜ துரகபதாதிகளென்னும் சதுர்வகைச் சைன்யங்களும் முற்பட்டுச் செல்லவும், வெற்றி முரசம் இடியேற்றைப் போன்று கோஷிக்கவும், படை யெடுத்து மாளவதேசத்தரசன் வசித்திருந்த நகரத்திற் சேர்ந்தனர்.

வெற்றி முரசத்தின் கோஷ்டம் கோஷிப்பதை யுணர்ந்த மாளவ தேசத்தரசன் இது யாருடைய ஜெயபேரிகை யென்று வினவலும், உடனே அவனுடைய தூதர்கள் ஓடி அவ்விடத்தில் வந்திருக்கும் சைன்யங்களைப்பார்த்துச் சென்று, கடலைப்போன்று பெருஞ் சைனியங்கள் சூழ்ந்துகொண்டது. தேவரீர் வந்து பார்க்கவேண்டுமென்றுரைக்க, உடனே தனதாயுதங்களோடும் புறப்பட்டு நம்முடைய வல்லபத்தையறியாதவனுய் நமது நகரத்திற்கு வெளியில் வந்த போர் வீரனை அழிக்கவேண்டு மென்றெண்ணிய கோபமானது தேரைச்செலுத்த மட்டுகளெழும்பிச் சிதரும்படி தனது சைன்யங்களைத் தூண்டி மணியருடைய படைகளின் மீதெதிர்த்தனன். இரு சைன்யங்களும் ஒருவருக்கொருவர் அதிகரித்துப் போர்புரிகையில், மாளவதேசத்தரசனுடைய படை வீரர்களனேகரிறந்தனர், அப்போது அவ்வரசன் தனது மனம் மிகவும் வெதும்பக் கோபித்துத் தனது வில்லில் அனந்த அம்புகளைப் பிரயோகித்து இவ்விடத்திலெதிர்த்துள்ள முதுகுன்ற மணியரின் சைன்ய வரிசைகளை சின்ன பின்னப்படும்படி கலக்க, சரபத்தை யொத்தவிளங்கும் அம்முதுகுன்றத்தலைவராகிய மணியரென்பவருஞ் மிகவுஞ் சினங்கொண்டு அவற்றினும் மேம்பட்ட அம்புகளைப் பிரயோகித்தனர், அக்கொடிய அவ்வத்திரங்களானது அட்டகாசஞ் செய்து போராடிய துட்டச்செய்கையுள்ள மாளவத்தேயத்தரசன் மிகநொந்து களைக்கும்படி துன்பப்படுத்தின, மீண்டும் அவ்வரசன் மூர்ச்சை தெளிந்து, போர்புரிய, நம், மணியர் முன்னிலு மிகச் சினந்து, கொடுமையும், கூர்மையுமுள்ள அளவற்ற அத்திரங்களைப் பிரயோகித்தனர், அவ்வத்திரங்கள் வில்லினின்றும் விடுபட்டு காலாக்கினி யொப்பச்சீறி, அவன் திரேகமாத்யந்தமும் சல்லடைக்கண்களெனத்துளைத்து அவன் கைக்கொண்ட வில், வாழ் அம்புறுத் தூணி, தேர், முதலியவைகளை நாசப்படுத்திக் கைகளையுந் துண்டித்தன. மீந்த சைன்யங்களும் இதனைக் கண்டோட்டெடுத்தன, மாளவத்தேயத்தரசன் ஒன்றுஞ்செய்யத் தோற்றுதவனுய் ஐம்பொறிகளும் கலங்கி மரண மூர்ச்சை யடைந்தனன். பகைவன் போர்க்களத்தில்சிராதரவாய்மூர்ச்சையுற்றபோது, அவனைஉபசரித்துமூர்ச்சை தெளிவித்தலே மன்னவர்களிற் சுத்தவீரரது தன்மையாகலின், சற்குணம் மிகப்படைத்த நமது மன்னவர்தேனா விட்டிரக்கி, பல உபசாரங்கள் புரிய,

உடனே மாளவதேயத்தரசன் அடைந்திருந்தமூர்ச்சை தெளியப் பெற்றவனுய் சித்திரை செய்தவனைப்போல எழுந்து நின்று, செங்குந்தர் செய்தவப்பயனுய் வெழுந்த சிறிய செல்வமே! இச்சரீரத்துள்ள எனது பிராணன் உம்மால் இப்போது வந்தபடியால் வெற்றி தேவரீருடையதே யல்லவா? ஆதலால் யுத்தத்தில் வல்லபமிழந்து தோல்வியுற்ற அடியேனை விட்டுவிடுவீராகவென்று, வேண்ட கருணைமிக்குடைய முதுகுன்ற மணியரசர் அவ்வாறே விட்டன ரென்ப.

இவ்வேந்தர் இத்தகைய பெருமையுடையா ரென்பதை.

> மூத்தமுதுகுன்றக்குரிசின் முதிருமனைவைப்பாராளன்
> பாத்தனென்னு மணியன் கைக்குந்தங்கொடுத்துப்பகரவே
> பூத்தமார்பத்தார்பறித்துப் பூழிபடவே விழ்ந்திறைஞ்சிக்
> கோத்துச்செங்கைமலர் கூப்பிக்குறுகார் சிறுகிவரக்கண்டான்.

எனவரும் ஈட்டி யெழுபதின் திருவிருத்தத்தானு முணர்க.

## (8) களத்தூர் வேந்தரெனும் அரசர் சரிதம்.

புலியடியொத்த பசுக்காய்களைப்படைத்த வாழைச்சோலைகள் மிகுந்து அவற்றில்பல பட்சிகள் இடைவிடாது வாழ்ந்திருப்பப், பசுந்தேன்களை யொழுக்கி அசைந்து கொண்டிருக்கும் மலர்களின் மீது வண்டுகள் ஒலித்துக் கொண்டிருப்பதும் வளப்பமிகுத்த நெற்கதிர்கள் சிறந்தோங்கியதுமாகிய களத்தூர் என்னும் நகரத்தின்கண்ணே! நவமணிகளிற்றோன்றிய சத்திகர் குமாரர்களாகிய நவவீரர் மரபில் வந்த மதிமானென்னும் வேந்தற்கு "கூற்றுவர்" என்னு நாமமுடைய அரசர் புத்திரராகத் தோன்றினர். இவர் கல்வி கேள்விகளில் சிறந்தவராய் மதனனும் நாணும்வடிவழகுவாய்ந்து இடையறுதசிவச் சிந்தனையின் பாற்பட்டு பகைவர்களை முதுகாட்டி ஓட்டுவிக்கும் வல்லபமிகுந் திருத்தலால் வெற்றி மாலையணிந்த அரசரெனச்சிறப்புப் பெயர் பெற்றிருந் தனர்.

இங்ஙனமிருப்ப மதிமானென்னும் வேந்தர் தமது புத்திரற்குத் திருமுடி புனைவிப்பான் பல தேயவரசர்களுக்கும் திருமுகம் விடுத்தனர் திருமுகம் பெற்ற மன்னர்கள் பலரும்களத்தூரதிபரின் பட்டாபிஷேகக் கோலத்தினைக் காணுமாறு விஜயமாயினர். காட்டூர் வேந்தனும் ஓர் குறுநிலத்தனுமான ஒருவன் செல்வ மழியுங்கால நேர்ந்தமையின் அழுக்காறென்னும் ஓர் குணம் அவனுக்கு வாய்க்கவும் இத்திருமுகத்திற் கெதிராகக் களத்தூரதிபருக்குச் சேதி விடுத்தனன் இதனையுணர்ந்த கூற்றுவவேந்தர் பச்சிலை வடிவாயிருக்கும் குந்தம் என்னும் கூரிய வேல் பிரகாசிக்கப், போர்க்கோலக்கொண்டு எதிர்த்து

காட்டூர் வேந்தனின் கொடிய மமதையடக்கி அவனது பகைவர்களைக்கவர்ந்து அவனுயிரையும் நமனுர்க்கு விருந்திடுவித்துத் தம் மரபின் புலிக்கொடியை இவ்வுலகத்தில் எக்காலத்தும் நிலை நிற்குமாறு உயர்த்தி வெற்றி கொண்டு விளக்கினர். இவ்வாரான பின்களத்தை நகரைப் பலவிதப் பந்தர்களாலலங் கரித்து வேதவேதியர்களின் வேதகோஷ்டம் முழங்க விதிப்படி திருமுடி புனைந்து சிங்காதனத் தமர்ந்தனராக.

இவ்வரசர் இந்தகைய பெருமையுடையா ரென்பதை,

> தளர்ந்தவருக்குத்திருவுருவந்தன்னை யடையார்க்கொருசிங்க
> மிளந்தையவர்க்குச்சிலைவேணல்லிசையாற் பொற்பூதரமேயாம்
> வளர்ந்தசாலிவரம் பினில்வால்வளைகண் முத்தந்தரும்வளங்கூர்
> களந்தையாதி நகரரசன்கைக்குந்தம் போற்காணுமே.

எனவரும் ஈட்டி யெழுபதின் திருவிருத்தத்தானு முணர்க.

## (9-10) வீரநாராயணரெனும் அரசர் சரிதம்.

இவ்வுலகத்துள் தமிழ் வழங்குந் தேயங்களின் சிறந்த மண்டலங்கள் மூன்றனுள் மேம்பட்டது * சோழமண்டலமும் அம்மண்டலத்துள்ள க்ஷேத் திரங்களுள் மேம்பட்டது. வீரட்ட க்ஷேத்திர மெனும் திருப்பழுவூர், இத்தலத்தில் திருக்கோவில் கொண்டெழுந்தருளிய வடமூலநாதர்க்கடிமை பூண்டு செங்கோல் செலுத்தும் அரசர்களில் செங்குந்தர் மரபினருய்ப் புகழ் பெறும் கோமதியென்னும் வேந்தர்க்குத் திவ்யதினகரோதயம் போன்ற †வீரர் நாராயணர் என்னும் இருவர் புத்திரருகத்தோன்றிப் பிரதமத்தில் பொதுவானநீதி நூல்களையும், அதன் பின் வைதிகமார்க்கங்களையும், ஞான சாஸ்திரங்களையும், அதன் பின் தங்கண் மரபினர்க்குரிய விற்போர், வாட்போர் வேற்போர், என்னும் போர்வகைகளையும், அவ்வாயுதங்களின்பரிட்சையை விரித்துக் கூற

---

சோழமண்டலம் சிறப்புள்ளதென்பதை.

> * தண்ணிருங்காவிரியே தார்வேந்தன் சோழனே
> மண்ணாவதுஞ் சோழமண்டலமே,

என வருங் கம்பர் வாக்கானுமறிக.

† இவ்வரசன் சைவசமயத்தனுயிருந்தும் நாராயணனென்னும் பெயரைத்தன் புத்திரனுக்குரித்தாக்கலாமோ? எனின் செங்குந்தமரபினனுகலின் தம்மரபினரின் சகோதரராகிய முருகக்கடவுளை மருகனாகவுடமை

கின்றதநுர் வேதத்தையும் சங்கையறக்கற்றுணர்ந்து அரசற் குரிய மநுநீதி வேதவொழுக்கங்கள், அஸ்திர சஸ்திரப் பரிட்சைகள் இரதகஜதுரகபதாதி களென்னும் சதுர் விதசைன்யங்களில் முற்பட்டதாகிய இரத பரிட்சையுடன் அதிற் பூட்டும் துரகபரிட்சையும் தனியே ஏறிச்செலுத்தத்தக்க கஜபரிட்சை களிலுந்தேர்ந்தவர்களாய் விளங்கினர்.

இவர்கள் சுத்தவீரத்தன்மையான் மிகுந்து சுப்பிரமணியக்கடவுளைச்சதா காலந்தியானிக்கும் மெய்யுணர்வுடையராய்ப் பாய்கின்ற புலிபோலும் கற்சிக்கின்ற சிம்மம்போலும் வலிமைபடைந்து இராமனையும், இலக்குமணனையும் போன்று மேன்மை மிக்கமனோதிடத்துடனே கைம்மாறின்னதென்று சொல்லுதற்கரிய வள்ளற்றன்மையடைந்துள்ளவர்கள் இவ்விருவரையும் பார்த்தவர்கள் தங்கள்தங்களுக்குள்ள மனக்கவலையைக்காணமாட்டார்கள். சத்தியவசனிகள் சரீர அபிமானமற்றவர். புதியரலர். ‡ உமது தந்தையின்நேசர்கள் என்று இவரின் சிறந்த கீர்த்தியின் மேம்பாட்டைச் சோழராசர்கட்குரிய மகுடாபிஷேகப்பஞ்சதலங்களுள்ளொன்றான தஞ்சநகரைப்பரிபாலித்துவரும் பராந்தகச்சோழன் சிறந்த சபையின் கண் மங்கலப்பாடகன் ஒருவன் அரசர் முன் மொழிந்தனன்.

சிவபெருமானைச் சிந்தித்துச்சிறந்த வரம்பெற்ற வல்லாளனென்னு மொரு பொல்லானின் துஷ்ட கிருத்தியங்களைத் தொலைப்பதற்கு வல்லமை பெற்ற சேனாதிபதிகளின்மையால் சிந்தனை மேற்கொண்டிருந்த வமயத்தில் மங்கலப்பாடகன் கூறியவார்த்தையால் மனமகிழ்ச்சியுற்றுச் சிரக்கம்பிதஞ்செய்து, தூய்மை யமைந்தவர்களும் எக்காலத்தும் சிறந்த சுற்றத்தினர்களுமாய் நடந்துவருகின்றவர்களாகிய செங்குந்தர்கள் வம்சத்தில வதரித்த, வீரரென்றும் நாராயணனென்றும் பெயர்படைத்துள்ள அவ்விருவரையும் அதிவேகமாய்ச் சென்றழைத்துவரும்படி ஒற்றருக்கறிக்கையிட்டனர் இங்ஙனம் உத்திரவிடப்

---

யானும், முருகக்கடவுளைத்துதிப்போர் திருமாலைச்சிறப்பித்துரைப்பது மரபாகலானும், கௌமாரசமயிகட்குத்திருமால் எக்காலத்தும் பேத மின்றாகலானும், செங்குந்தமரபினரும் பெரும்பாலும் கௌமாரசமயிகளே யாகலானும் இவ்வாறு நாமந்தரித்தனரென்க.

கௌமார சமயிகள் திருமாலைத்துதித்தலை அருணகிரிநாதரருளிய திருப்புகழ்தோறுங்காண்க.

---

இவர்கள் பரம்பரையாகச் சோழர்கட்குதவிபுரிவோ ரென்பதை.

‡ முகத்தின் மென்மீசை மிளிர்வோர் மறைதெரி மூதறிவோ
ரகத்திற்றயவு கொண்டார் வந்திரக்கினு மன்னமிட்டுத்
திகத்திசை தோறுந்திறை கொள்கரதலச் செம்மையினால்
செகத்தினிற் செம்பியர்க் காதாரமானவர் செங்குந்தரே.

எனவருஞ் செங்குந்தர் மாலைத்திருவிருத்தத்தானுந் தெளிக.

பட்ட ஒற்றர் திருப்பழூரடைந்து வீரமிக்குடைய வீரர்களிருவரிடம் செய்தியுணர்த்தி வணங்கினர் அரசனின் கருத்திற் கிசைந்த வீரரிருவர்களும் தாவிச்செல்லும் குதிரை மீதாரோகணித்துத் தஞ்சை நகரடைந்து அரசன் சமுகம் சென்றனர், இவ்விருவரின் வரவினையுணர்ந்த பராந்தகச்சோழன் எதிர்கொண்டழைத்து உபசரித்து வீரமணிகளே ! நம்மிடத்திலமர்ந்திருக்கும் தஞ்சை வேம்பரென்னும் நும்மினத்தாருடனே, யான் இவ்வுலகத்தையரசுபுரிவதற்காக எனக்குப்பகைவராயுள்ளவர்களை யழிக்கும் பொருட்டு நமது சேனாதிபதிகளாதற்கிசைவீரென்று பிரார்த்திக்க, நீர் விரும்பும்போது அவ்வாறே யிசைவதுண்மை யென்றுரைத்து யுத்தம் நேர்ந்தால் வருகின்றோம் என்றும் அருள்புரிந்தனரென்ப. எஞ்சிய இன்னவர் வீரச்செயல்களை வல்லானைவென்ற வரலாரென்னும் மகுடவாயில் கண்டு தெளிக.

இவ்வீரநாராயணர் இத்தைகையா ரேன்பதை.

ஈட்டியெழுபது (46) கவி.

சூட்டும் வீரவாகுவெனச் சொல்லும் பழூவூர் வீரனமர்
மூட்டுங்கால மூழிவெள்ள மூடுங்காலமாகாதோ
ழ்வட்டங்காலில் வீழாதார் மேலுமுளரோ விதியுலா
யீட்டுங்காலங்குந்தங் கண்டெழுமே கழுகு பருந்துகளும்.

ஷை (47) கவி.

காரா முருவமொழிந்துபொன்னின்கவினுர் பழுவைவளம்பதியில்
நாராயணனே விக்கிரம நாராயணனு மென்னுதார்
வாராவழிவந்தோமென்றே வாயிற் புல்லைக்கவ்வி வந்தச்
சேரார் சோரா நின்று தொழச்செய்யு மன்னுன் செங்குந்தம்.

எனவும் வருவனவற்றனுந் தெளிக.

இதுகாறுஞ் செங்குந்த மன்னர் செங்கோலேந்தி உலகினைப் பரிபாவித்த திறமையினைக் கூறினோம். இனி இன்னோர்க்கு என்றும் வெற்றி பெறுவதற்குக் காரணமாக விளங்கும் பொருட்டு ஸ்ரீ உமாதேவியார் தந்தருளிய ஈட்டியாயுதத்தின் சிறப்பை விளக்கிப் பின் மனனவராவர்க்கு இனறிமையாச் சின்னங்களாயுள்தி தசாங்கச் செயலுணர்த்தி வல்லானின் வரலாற்றையும் கூறத் தொடங்குவாம்.

## செங்குந்தமன்னர் தசாங்கமான.

வெண்பா.

மலை.

பொன்னவிரும்பைங்கூரற் பூவையே செங்குந்த
மன்னருறையுமலைபகரா—யின்னலற
வந்தவரை யாதரித்தும் வாழ்வித்து மோங்கிவளர்
கந்தவரை நேரிவரை காண்.

## ஆறு.

செம்பொற் சிறையனமே செல்வச் செங்குந்தமன்ன
ரம்பொன் கொழித்திடு நல்லாறியம்பா—யெம்பரையைத்
தங்கையெனக்கொண்டு வீணைத்தாங்கி மணப்போற்று சிவ
கங்கையுமொன் காவிரியுங்காண்.

## நாடு.

கீதமிசைக்குங்குயிலே கேடில் செங்குந்தமன்னர்
நாதமொடு வாழ்தரு நன்னாடுரையாய்—நீதமெனும்
பூணாரும் பல்கலைதேர் புண்ணியருங்கொண்டாடு
சேனாடுஞ் சோணாடுந்தேர்.

## நகர்.

ஆடுந்தொழின் மயிலே யங்கையிற் செங்குந்தமன்னர்
நாடும் புனிதநகர் கூறாய்—பாடுபுரி
மந்தன் செருக்ககற்றி மாட்சியொடு காட்சிதருங்
கந்தன பயன் பதிகள் காண்.

## மாலை.

போதேறித்தேனு கரும்புள்ளே செங்குந்தமன்னர்
தாதேறித்தேன் பிலிற்றுந்தார் மிழற்று—யேது
மிரத்தல் செயாதியர்க்கு மிருமை நலநல்கு
மரத்தமு நல்லாத்தியுமேயாம்.

## அசுவம்.

தாலங்கிழற்றழை வாய்க்குருகே செங்
கோலக்கை வேலரூர் கொக்கிசையாய்—ஞாலமிசை
மைச்சிரவர்க்கெட்டாத வானவர் கோனூர் தருமுச்
சைச்சிரவங்கோரமெனச்சாற்று.

## கரி.

அன்பிற் பிரிவரிய வன்றிலே செங்குந்த
ரின்புற்றி வருமிபமோதாய்—வன்புற்றெண்
காவதப் போரேனுங் கடிப்பொழுதிற்றேய்க்குறுமை
ராவதமாரூர் சரமுமாம்.

முரசு.

கேதஞ் சிறிதுமிலாக்கேகயமே செங்குந்த
நாதர் முரசு நனி விளம்பா—யோதமெலாஞ்
சீதமொடு கூடித்திகழுங் காலோங்கொலி கொள்
வேதமொடு வென்றியுமாம் விள்.

கோடி.

நங்கையர் வேய்த்தோள் பழகு நாகணவ பேப குந்த
வங்கையர் தங்கே தன நீயாய்ந்தறையாய்—துங்கமிகு
காவலொடுவை கித்தங்காவலர் மெய்காக்குமெழிற்
சேவலொடு வேங்கையு மாந்தேர்.

சேங்கோல்.

தீதிலருங்கற் பிற்றிகழ்புறவே செங்குந்தர்
நீதி தருசெங்கோனிலே புகலாய்—கோதில் பல
வானவரை மானவரை வாழ்விப்பா னெங்குமொன்றே
யானதனிச் செங்கோலறி.

## * செங்குந்த வேற்படையின் சிறப்பு.

தாருகன் முதலிய கொடியவரக்கர்களைத் தொலைத்துவான வர்க்கு தேவலோகமருளும் பொருட்டு ஸ்ரீ சுப்பிர மணிய மூர்த்திக்கு ஸ்ரீபரமேசுரர் வேலாயுதங் கொடுத்தருளிய சமயத்திற் " நவவீரர்க்குச் செங்குந்தாயுதங்" கொடுத்தவரருளிச் செய்தவண்ணம், ஸ்ரீசுப்பிரமணியக்கடவுளுக்கு நீங்காப் படைத்துணைவர்களாயிருந்து அவுணரின் கொடுமைகளைந்துதேவர்களுக்கனுக்கிரகித்தருளிய வேலாயுதத்தைக்கைக்கொண்டிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுகளுக்கு வேலாயுதர், வேலன் என்று ஸ்தோத்தரித்தபடி அவ்வேலாயுதத்திற்குள்ள மாட்சிமைகளைப்பெற்றிருக்கும் செங்குந்தாயுதத்தைக் கைக்கொண்டிருக்கும் காரணத்தால் செங்குந்தாயுதர் செங்குந்தர் என்று ஸ்தோத்தரிக்கப்படுவது மர பென்க.

வேலுக்கும் குந்தத்திற்கும் வேற்றுமையின்மை யேன்பதை.

சேல்வேறு புலிவேறுகுஞ் சேதுவினளவாய்ச்சென்னி
கோல் வேறில்லாமலோச்சிக் கன்னியே கொள்வனென்றே

* செங்குந்தம், சிவந்த குந்தம். பகைவர்களின் இரதத்ந் தோய்தலாலுண்டாகிய பசியகரையுடைத்தென்ப.

மால்வேறு சிவன் வேறென்ன வழுத்திடா வண்மை போல
வேல்வேறு குந்தம் வேறென்றிருபொருள் விளம்பார் மேலோர்.

எனவரும் ஈட்டியெழுபதின் திருவிருத்தத்தானு மறிக.

அன்றியு மிக்குந்தத்தைப்பற்றி ஷ பிரபந்தத்தில் 43 44 45–வது கவிகளில் சிறந்த சிறப்புகள் கூறப்படுகிறது அவற்றைக் கீழ் வருவனவற்றிற் காண்க.

பூமாலை கடப்பந்தாமம் பூண் மணித்தெரியல் செய்ய
பாமாலை தன்னைக் கைக்கொள் முதலியர் பங்கதாக்கி
மாமாலை யொல்லார் காலில் வழிதுழிக்குடரின் மாலை
தேமாலையாகச் சூடுஞ் செங்குந்தம்போலு முண்டோ.

பற்றினும் பற்றுஞ்சென்னி பறிக்கினும் பறிக்கும் பாச
மெற்றினுமெற்றுங்கூற்றை யீரினுமீரும் வாரிச்
சுற்றினுஞ்சுற்று மண்டந்துகளெழச் செயினுஞ் செய்யும்
மற்றினுங்குந்தம் போற்று திருப்பவருளரோமண்மேல்.

போற்றியோ போற்றி யென்று புதுமலர் தூவிச்சிற்ற
மாற்றியே வந்தியாமலடையலர் வாழ்ந்திருந்தால்
காற்றென வூழித்தீயிற் கடலெனக்கொடிய கோபக்
கூற்றெனத்திரிந்து சோரிக்குளித்துடன் களிக்குங்குந்தம்.

எனவும்.

தேடுவார் வலமாய்வந்து தெரிசிப்பார் சென்னிமீது
சூடுவார் மலரேதூவித் தொழுதகை கூப்பிநிற்பார்
பாடுவார் காவென்றெம்மைப் பரிவினனந்தமாக
வாடுவார்கு கன்கைச்சேவ்வேற் கருந்துணைக்குந்தமென்றே.

எனவும்.

ஆலமார் மிடற்றுராடுமாடலே யாடலம்மை
யேலவார் குழலாளங்கைத்தாளமே தாளமேந்துஞ்
சூலமாகுவதன்னன் கைச்சூலமே சூலமற்றிக்
கோலம் வாழ்வீரர் கையிற் குந்தமே குந்தமாகும்.

எனவருஞ் செய்யுட்களால் குந்தாயுதத்தின் பெருமை கண்டு தெளிக.

## வல்லானை வென்றன ரென்பது

பராந்தகச் சோழச் சக்கரவர்த்தியின் பெயர் கல்வெட்டுகளிற் பெரும்பாலும், 'மதிரைகொண்ட கோப்பர கேசரிபன்மர்' அல்லது 'மதிரையும் ஈழமுங்கொண்ட கோப்பர கேசரிபன்மர் என வழங்கும். இவர் விஜயாலயன் மகனான ஆதித்த சோழனது குமாரர் *பராந்தகன், வீரநாராயணன் என்பன இவர் மறு நாமங்கள் †இவர் கி. பி. 805-ம் ‡வருடம் தொடங்கிச் சோழ சிம்மாசனமேறி அரசு செலுத்தலாயினார். இவரது இராச்சியபாரம் சற்றேறக் குறைய நாற்பது வருடங்களென ஊகிக்கப்படுகின்றது. கோக்கிழானடிகளெனும் பட்டப் பெயர் பூண்ட இவரது மனைவியார் கேரளதேசத்தரசன் புதல்வி § இவருக்கு, இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்ஜயன் என மூவர் மக்களிருந்தனராகத் தெரிய வருகிறது. அவர்களில் இராஜாதித்தன் சிவபக்தியிற்சிறந்து விளங்கினனாய்த் திருநாம நல்லூரில் ஓர் சிவாலயஞ் சமைத்தான். திருநாமநல்லூரும் அவன் பெயரானே இராஜாதித்த புரமென வழங்கிற்று. இக்கோயிலுக்கு அவனும் அவனைச்சார்ந்தாரும் பலபரிசளித்தும் பரிபாலித்தார்களென்பது அவ்விடத்துள்ள கல் வெட்டுகளாற் போதருவது. அவர் மனைவியார் மிலாட்டனாயர் (மலைநாட்டனாயர்) புத்திரியாகிய மஹாதேவடிகள். போர்க்கோலங்கொண்டு இராஷ்டிர கூடத்தரசனான மூன்றாவது கிருஷ்ணனோடு தக்கோலம் என்னும் இடத்துப் போர்புரியும் பொழுது, அன்னானுடைய சிற்றரசனும், அவன் உடன்பிறந்தாளை மணந்தானுமாகிய பூதுகன் என்பவனால் கொல்லப்பட்டான். இது நிகழ்ந்தது கி. பி. 949-இல் ¶. 5.

பராந்தகனது இரண்டாங்குமாரன் கண்டராதித்தர் என்பார் காவிரியின் வடகரையிற் றன்பேரால் ஒரூர் அமைத்தார். இவர் மனைவி உடைய பிராட்டியார் செம்பியன் மாதேவியார். கண்டராதித்தர் என்னும் பெயர் இவரொருவர்க்கன்றி வேறியார்க்கும் இருந்ததாகக் காணப்படாமையின், நம்பியாண்டார்நம்பி தொகுத்த ஒன்பதாந்திருமுறைக்கண். 'மின்னாருருவமேல்' என்றற்றொடக்கத்துப் பதிகம் இவராலியற்றப்பட்டிருக்கலாமென்பது அப்பதிகத்தின் ஈற்றுச்செய்யுளாகிய.

சீரான்மல்குதில்லைச் செம்பொனம்பலத்தாடி தன்னைக்
காரார் சோலைக்கோழிவேந்தன் றஞ்சையர்கோன்கலந்த

---

* South Indian Inscriptions, Vol. I., p. 112.
† Do Vol. II., No. 76.
‡ Epigraphica, Vol. VII. Dates of Chola Kings.
§ No. 335 of Government Epigraphia list for 1902.
¶ Epigraphia Indica, Vol. V., p. 167.
இஃது செந்தமிழ் தொகுதி 3 பகுதி 8

வாராவின்சொற்கண்ட ராதித்த ருந்தமிழ் மாலைவல்லார்
பேராவுலகிற் பெருமையோடும் பேரின்ப மெய்துவரே.

என்ற பாவினல் விளக்குதலோடு, எட்டாஞ்செய்யுளில் 'வெங்கோல் வேந்தன் றென்னனுடு மீழமுங்கொண்டதிறற், செங்கோற் சோழன் கோழி வேந்தன் செம்பியன்' என்ற இவ்விரண்டடிகளாற் பெறப்படுவோன் இவர் தந்தையே யாவனென்பதும் ஈண்டைக்கு நோக்கிக் கொள்க.

இக்காரணங்களால், பராந்தகச்சோழனென்பார், கி. பி. 905 வருஷம் தொடங்கி கி. பி. 1035 வருஷங்கள் வரையில் தஞ்சை நகரைப் பரிபாலித்தாரென்பது விளக்கமாம்- இவ்வரசனிடத்தேதான் "தஞ்சைவேம்பனென்னுமோர் செங்குந்தர்" மந்திரியாக வமைந்திருந்தனரென வீரநாராயணர்விஜயத்தாலுணரப்படுகிறது. இவ்வேந்தனுட்சியிலேதான் சிவனிடத்துத்தவங்கிடந்து அரிய வரம்பெற்ற இரட்டர் குலத்தினனான விக்கலனென மறுநாமம் புனைந்த 'வல்லாளவனென்பவன்' தஞ்சை நகரத்துக் குடிகளையும், மற்றும் வந்தகனையடுத்த பலபதிவாசிகளையும், கொடுந் துன்பப்படுத்தி நின்றது. இக்கொடியனின் துன்பம் தவிர்க்கவே தஞ்சை வேம்பனென்பாரின் சூழ்ச்சியால், 'ஒற்றியூரார் தொடங்கி, வீரநாராயணரிறுதியாகக். கூறும், செங்குந்த வரசர்கள் பன்னிருவர்களைக்கொண்டு அவ்வல்லானை வெற்றிகொண்டதாக செய்கைப்பிரபந்தமாகிய ஈட்டியெழுபதானும், "வீரநாராயணர் விஜயத்தானும்,' உலா, மாலை, பிள்ளைத்தமிழ் முதலிய வற்றானும் அறியக்கிடக்கின்றன.

இச்சிற்றாராய்ச்சிக்கொண்டே இச் செங்குந்தர் குலப்பிரகாசிகையின் ஐந்தாம அத்தியாயக்கடையில், வல்லானை வென்ற வரலாறென மகுடம் புனைவித்தது. ஆகவே அவ்வல்லானின் வரலாற்றையும் அவனை ஜெயங்கொண்ட செங்குந்த வீரரின் வென்றிச் சரிதத்தினையும் முறைப்படி கூறி இவ்வத்தியாயத்தை முடிவு செய்வாம்.

பூமிதேவிக்குத் திருமுகம்போன்ற தமிழ் வளநாட்டிலே பூர்வம்மிக்க கல்வியும், தக்க செல்வமும், ஜீவ காருண்யமும், அழகும், ஆண்மையும் சற்ஜனசகவாசமும், நீதி கோடாமையும் பொறுமையுமுடையவனும், நீதிநெறிச் சோழன் அரசாண்டிருந்த காலத்தில், தன்னரசின் கீழடங்கிய தெலுங்கு நாட்டிலே நெல்லூரென்னும் நகரத்திலுள்ள சாலவமென்று மோரூரில் போகலரெட்டியென்பவனுக்கு 'விக்கல ரெட்டி' யென ஒரு புதல்வனிருந்தான். அவன் அவ்வூரிற்றிருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் சோமநாதரென்னும் திருநாமம் வகித்த சிவபிரானைக் கருதித்தவஞ்செய்து அவரது திருவருளால் ஐம்பத்தாறு தேசத்தரசரையும் வெல்லத்தக்க ஆற்றலும், வமாயைகள் வல்ல புட்பகத்தேரும், வாயுவேகி, மனோவேகி பூகாமி, ஆகாயகாமி என்கிற அஸ்வங்கள் நான்கும். வச்சிரவாள், வச்சிரதண்டம் வச்சிரகவசமாகிய-இவைகளும் பெற்றுக், சாவலரெல்லோரும் தனக்கரசிறை

செலுத்தும்படி வெற்றிப்புகழை யடைந்து, கற்பிலருந்துதி யொத்த அனங்க
வல்லி யென்னும் மனைவியுடன் வாழ்ந்திருந்தான். இவன் நாடோறும்,
இராக்காலத்திலேயே நல்ல நடுநிசியில் வச்சிர கவசத்தையுடலிற் றரித்து
வச்சிரவாளையும், வச்சிர கதையையும் கையிலேந்திப், புஷ்பகத்தேரிலாவது
வாயுவேகி முதலிய குதிரைகளிலொன்றிலாவது, ஆரோகணித்து, அதிவேக
மாகஆகாய மார்க்கமாய் நடத்திச்சென்று அரசர்களுடைய கோட்டை கொத்
தளங்களை யெல்லாம் அனுயசயாகத் தாண்டி, அவ்வவ்வாசல்களிலிட்டிருக்
கும், கற்கதவு, இருப்புக்கதவுகளைத்தன்வச்சிர கதையினலடித்துடைத்து வீற்
தூளாக்கி, எதிர்த்தவர்களை வச்சிர வாளுக்கிறைகொடுத்து அவர்கள் பொருள்
களை யெல்லாங்கொள்ளையிட்டுச் சூறையாடிப் பல ஆடவரையும் ஸ்திரீகளை
யுஞ் சிறைபிடித்துக்கொண்டு போவான் அவனுடைய உபத்திரவம் எப்படிப்
பட்டவர்களுக்கும் எங்குந்தலைவைத்துப் படுக்கக்கூடாது. இவ்விதத்தில்
அவனை வெல்லத்தக்கவர்கள் யாருமில்லை என்னுங் காரணத்தால் அது முதல்
அவனுக்கு "வல்லானென்னும்" ஓர் காரணப் பெயரும் உலகெங்கும் வழங்
கியது. இவ்வாறு வெகுநாளாய் நடத்திவருவானுயினும் இவனது அக்கிர
மச் செய்கைகளனைத்தும் மற்றெந்நாட்டினுஞ் செல்வது போல நீதி நெறிச்
சோழன் அரசாண்டிருந்த சோழநாட்டின் கண் மாத்திரம் அச்சோழனது
தருமகுண விசேடத்தாற் செல்லாதிருந்தன. அவன் காலமாய் விட்டவுடனே
அவனது புத்திரனுன பராந்தகச் சோழனுக்குப் பட்டாபிஷேகமாய் அர
சாட்சி செய்வதையுணர்ந்த அவன் மற்றயரசர்களிடத்தெல்லாம் திறைவாங்கு
வது போலவே. அப்பராந்தகச் சோழனிடத்தும் திறைவாங்கும்படி தன
தமைச்சரை யனுப்பினன் அவர்கள் வரவினைக் கேள்வியுற்ற சோழன் அவ
னது ஆற்றல்களனைத்தையும் அமைச்சரார் கேள்வியுற்று சாதாரணமாக
நமது அரசாட்சியிலுள்ள அளவிறந்த நகரங்களிலே ஓர் நகரத்தள் அநேகங்
கிராமங்களில் ஓர் கிராமத்திலுள்ள குடிகளிலொருவனுகிய இவனுக்கு இவ்வ
ளவு ஆண்மையிருப்பதும் அவ்வாண்மைக்கஞ்சி சக்ரேஸ்வரராகிய நம்
போன்றவர்களும் அவனுக்கு அரசிறை செலுத்துவதும் மிக விந்தையாயிருக்
கின்றதென்று நகைத்து உடனே தனது மந்திரித்தலைவர்களை யழைத்து
வல்லானிருக்கு மிடைத்தை யடைந்து அவனேடெதிர்த்து யுத்தஞ் செய்து
அவனைக்கொன்று விட்டு வரும்படி கட்டளையிட்டான். அவ்வாறே யத்தலை
வர்கள் சைன்யங்களுடன் அவனிருக்குந் தேசத்தையடைந்து அவனே
டெதிர்த்துத் தங்கள் தங்கள் ஆற்றலுத்தக்க முழுவல்லபத்துடனும் தாங்
தாங் கற்றிருந்த அஸ்திர சஸ்திர வித்தைகளனைத்தையுங் காட்டிப் போர்
புரிந்தார்கள். அவ்வாறு போர் புரிந்தும் அவனது மாயா வல்லபத்தை
வெல்லமுடியாமல் அனேகர் அவனுல் உயிர் துறந்தார்கள். அஃதறிந்து
புறங்காட்டி யோடிவந்தவர்களில் சிலர் சோழ ராஜனைக்கண்டு வேந்தர்
வேந்தனே! அவ்வல்லானை வெல்ல யாவரால் முடியும்? அவனது தேகத்தி

லணிந்திருக்கும் வச்சிர கவசத்தினாலே நமது வில், அம்பு, முதலியவனைத்தும் பயனற்றதாய் விடுகின்றன. நமது சேனைகளில் அனேகம் அவனால் உயிர் துறந்தன. நாங்கள் பயந்து புறங்காட்டி உயிர் தப்பிப்பிழைத்தோம் என்றார்கள். இது கேட்ட பராந்தகச் சோழன் அப்படியா! நல்லது இன்னும் அவனால் என்னென்ன விளையுமோ? பார்ப்போமென்று அவனை வெல்லத்தக்க சமயம் பார்த்திருந்தான்.

சோழராஜனிவ்வா றெண்ணியிருக்கையில் வல்லாளனவன் எண்ணுகின்றான் இச்சோழன் மனுகுலச்சக்கரவர்த்தி வம்சத்தினனாதலால் மற்றயரசர்களைப்போன்று நமக்குக் கீழ்ப்படிந்து அரசிறை செலுத்தாமல் நம்மை வெல்லத்தக்க சைன்யங்களை யனுப்பியெதிர்க்கத்தக்க அவ்வளவு ஆண்மை உண்டாயது. ஆயினும் இவனை எவ்விதத்திலாவது அவன் நாட்டிலேயே பாசறை கட்டி கொண்டிருந்து வென்று மற்றை யரசர்களைப் போன்று கப்பணஞ் செலுத்தச்செய்து கொள்ளவேண்டு மென பிரதிக்னை பண்ணிக்கொண்டு அச்சோழநாட்டிலுள்ள † திருக்கடம்பூரிலே, கம்பமென்னும் கிராமத்தின் ஏரியைப்பார்க்கிலும் மிகவும் பெரியதாய், எக்காலத்திலும் வற்றாத சமுத்திரம்போலும் அதிக ஆழமாகிய ஒரேரிநடுவில் அடி முதல் நுனிவரையில் ஒரே அளவாகத்திரண்டு ஜலத்துக்குமேல் நூறடிவுயரமட்டும் நீண்டு ஆளேறக்கூடாமல் வழுவழுப்பாயிருக்கின்ற பிர்ம்மாண்டமான இருப்புஸ்தம்பங்களை நாட்டி அந்தஸ்தம்பங்களின் மேல் இருப்புத்துலாம் கிடத்தி அதன் மேல் இருப்புக்கைகள் சிறைத்து. அவைகளின்மேல் இருப்புத்தகடுகள் பரப்பி அத்தகடுகளை இருப்பாணிகளால் தைத்து அவ்விடத்தில் மகாமேருவும் இணையல்லவென்னும்படி கற்பாந்தகாலம் அழியாத அதியுன்னதமாகிய மூன்றடுக்கு உப்பரிகை சமைத்து, உப்பரிகையைச்சுற்றி நீரகழியும், நெருப்பகழியுந் தோண்டி அவைகளைச்சுற்றி நாற்புரத்தும் வாயில்களுள்ள ஏழு மதில்களை யெழுப்பி அவற்றினிடையில் பலவகையான காய்கனிகள் தேமலர்களைத் தருகின்ற செடி கொடி மரங்கள் நெருங்கியதாய் மயில்கள், குயில்கள், கிளிகள், பூவைகள் முதலிய பலவகைப்பறவைகளும் ஆடிப்பாடிக் கூவிக் கொஞ்சி விளையாடுவதாய், கோடை காலத்திலும் தண்ணென்று நிழலார்ந்த ஒரு இளஞ் சோலையை உண்டாக்கி அச்சோலைக்குச் சூத்திரத்தின் வழியாக அவ்வேரி நீர்ப்பாய்ச்சி அதை யபிவிர்த்தியாகும்படி செய்து தேவர்களுடைய சுவர்க்கம்போல விளங்குகின்ற உசிதமான அந்த ஸ்தானத்தில் அவன் தனக்குவேண்டிய ஆடுகளும், பசுக்களும், கன்றுகளும், வஸ்திராபரணங்களும், வீட்டுத் தட்டுமுட்டுகளும், சகலவித தான்யாதிகளும் மற்றும் அளவிறந்த திரவ்யங்களும் குபேரனைப்போலக் குறைவில்லாமல் சேகரித்து

---

† இது மஞ்சகுப்பம் ஜில்லா சிதம்பரம் தாலூகா, மன்னார்குடியைச் சேர்ந்தது. சிதம்பரத்திலிருந்து நேர்மேற்கு. 21-மைலிலுள்ளது.

வைத்துக்கொண்டு எவ்வளவும் சத்துருபயமின்றி ஒருவரும் தனக்குச் சமானு திக்கமில்லையென்னும்படி சூகரக்கொடித்தம்பம் நாட்டிவாழ்ந்திருந்தான்.

இவ்வாரவனிருப்பதையுணர்ந்த பராந்தகச் சோழன் இவன் ஏது நமது நாட்டிலேயேவந்து ஷிர்ப்பயமாய்த் தனதிஷ்டப்படி யாவரும் நெருங்கக் கூடாத வண்ணம். ஓர் கட்டடங் கட்டிக்கொண்டிருக்கின்றானே இவனது தேகத்தில் வச்சிர கவசமணிந்து கொண்டிருப்பதனாலேயே பகைவர்கள் விடும் அம்பு, குண்டு முதலிய வற்றையும் அலட்சியஞ் செய்கின்றானே, இவனை நாம் எவ்வாறு வெல்வது ? எனத் தனக்குள்ளே யோசித்துக் கொலுச் சபைக்கண் வந்து அங்குள்ளாரை நோக்கி ! அந்த வல்லானை வெல்லத்தக்கவர்களிருந்தாற் புறப்படுக்களென்று கூறினன்.

அப்பொழுது அங்கிருந்த அதிரதர் முதலாகியதேர் வீரர், யானை வீரர் குதிரை வீரர், வில்வீரர், வாள் வீரர், வேல் வீரர்களெல்லாம் குடர் குழம்பிச் சிங்கசொப்பனங்கொண்ட யானையைப்போலக் கைகால் விதிர்விதிர்க்க அடா! அப்பா ! வல்லானை வெல்லவல்லவர்களும் உண்டா? கடல் முழுதுங்கவிழ்ந்து குடிக்கலாமா? வடவாக்கினியை வாய் நீரால் அவிக்கலாமா ? மலையை மயிர் முனையால் துளைக்கலாமா ? அவன் பெயரைச்சொன்னால் அழுத பிள்ளையும் வாய்மூடுமே. அவன் வானத்தையும் வில்லாக வளைப்பான், மணலையும் கயிராகத்திரிப்பான், ஆதலால் அவனை வெல்வது அசாத்தியம் ! அசாத்தியம்.!! எங்களாலே முடியாது என்று சொல்லி ஆற்காட்டிலே சண்டையானால் சந்தமாமா அடுப்பங்கரையில் ஒளித்திருப்போம் சந்தமாமா, வேலூரிலே சண்டையானாற் சந்தமாமா வேலிப்புறத்தில் ஒளிந்திருப்போம் சந்தமாமா, என்று அஞ்சி ஓடுகின்ற நபுஞ்சகரைப்போலப் பின்னிட்டார்கள்.

அது கண்ட பராந்தகச்சோழன் தானே சென்று அவனை வென்று வருவதாக யோசித்துத்தன் சேனைகளை அணிவகுக்குப்படி அவற்றின் தலைவர்கட் காக்யாபித்தான் அத்தருணத்தில் திருக்கைலாய பரம்பரைச் செங்குந்த மரபில் வந்த தஞ்சை வேம்பன் எனும் மந்திரியார் ஒவேந்தே ! ஓர் காரணமில்லாமல் ஓர் காரியம் விளங்க உலகத்தில் பார்த்தவர்களு முண்டோ ! அதலால் வல்லானென்னும் பட்டப்பெயருள்ள விக்கலன் தெளியும்படியாக நம்மிடத்தும் பகுதிப்பணம் கேட்பானாகில் தினையளவும் தரோமென்று சொன்னால் உடனே கோபித்துப் போற்களத்திற்கு வருவான் அப்போது நம்முடைய பகையைக் கீர்த்தியமையும்படி முடிப்போமென்று கூற அதுகேட்ட பராந்தகச்சோழன் இது சிறப்புத்தானென்று சம்மதித்தான். இப்படியிருக்கச் சில தினங்களில் வல்லான் பகுதிப்பணத்தைப்பெற்று வரும்படி தூதரையேவினான் விக்கலனேவ வந்த தூதர்கள் நீர் உமது தந்தையிடத்திலே அப்போதே மந்திரிமார்களுடனே இளவரசு பட்டங்கட்டிக்கொண்டீர் ஆதலால் உமது பிதாக்கால முதல் சேரவேண்டிய பகுதிப்பணத்தைக் கொடுப்பீராக

வென்று கூற அது கேட்டப்பராந்தகச் சோழன் ஆண் சிங்கத்தைப்போல கர்ச்சித்து மனக்கொதிப்புற்று இரண்டு புருவங்களும்நெற்றியிலேர இரண்டு கண்களும் செந்நிறங்கொண்டு பகுதிப்பணம் கொடுப்பதில்லை உங்களையனுப் பினவனிடத்திற் போய்ச் சொல்லுங்களென்று கூறினன். கொல்லனுலையிற் காய்ந்த இலை வடிவமைந்த வேலாயுதம் காதிற் சொருகியது போன்று இவ் வார்த்தையைக்கேட்ட வளவிற் கோபித்து உலகத்துள்ள அரசர்கட்குள்ளே புலிக்கொடியுடைய இச்சோழனொருவன் மாத்திரமோ? நம்முடைய பகுதிப் பணத்தைத்தடுக்கத்தக்கவன் அவனது வல்லபத்தைக் காண்பதற்கு நாளைக் குப்போவோமென்று குதிரையின் மீதேறிக்கொண்டு கோபமுற்றிருந்த விக் கலன் அன்றிரவு நடுச்சாமத்திலே வெளிக்கொண்டு தஞ்சமாநகரத்தைச் சேர்ந்து பிரகாசமும் அழகுமமைந்த மாடங்களையுடைய நீண்ட வீதிக்குட் சென்று அம்மாடங்களின் கதவுகளையும், சித்திர கூடங்களையும், பரமாணுப் போன்ற பொடியாகச்செய்து அவ்வீடுகளிலுள்ளவர்கள் தலையை வெட்டி அவர்களுடைய திரவியங்கள், மாதர்கள், ஆபரணங்கள், என்னும் இவைகளை யபகரித்து ஓர் நொடிப்போதில் ஓடிப்போக. இதனால் அவ்வூரிற்றோன்றிய கோஷ்டம் கடல் முழக்கமோ இடியேற்றின் ஓசையோ ? என்று சொல்லும் படியாயிருந்தன இங்ஙனமாக வெழுந்த இவ்வாரவாரத்தைக்கேட்டு ஆத்திமல ராலாகிய மாலையணிந்துள்ள பராந்தகச் சோழன் கண் விழித்து சயனத்தி னின்றும் எழுந்து உள்ளன்பின் மேம்பட்டவர்களாகிய ஆதுவர்களால் மந் திரியையும் தனது சேனைத் தலைவனையும் வரவழைத்து இந்த நடுராத்திரியில் விக்கலன் வந்து செய்த கலகங்களெல்லாம் சொல்லி முடியுமோ? வென்று கூறுவதைக்கேட்ட தஞ்சை வேம்பர் பராந்தகவரசனை நோக்கி மன்னர் பெரு மா! வல்லபம் பெற்றுள்ள திருப்பழூர் வீரர், நாராயணர் என்போருக்கு ஓர் திருமுகத்தை இந்த க்ஷணமே வினயத்துடன் விட்டால் அவ்வீரர்கள் வந்து அத்துஷ்டனுடைய செய்கைகள் யாவும் கானலின் நிழல் எதுவாய்த் தோன்றும் சலத்தைப்போல் இல்லாவகை செய்து மற்றுள்ள எல்லாமன்ன வர்க்கும் உம்மால் ஜெயம் பொருந்தும்படி செய்துவைப்பார்கள் என்று கூற அரசனவ்வாறே திருமுகம் விடுத்து அவர்களை வரவழைத்து அவர்களுடன் அவன் செயல்களனைத்தையும் கூறினன். இதனைச்செவிகேட்ட வீரப்பமுதலி யார், நாராயண முதலியார் என்னுமிருவரும் எழுந்து அரசனை நோக்கி ஓ ராஜகண்டீரவா! அற்பப்புல்லியனாகிய வல்லாளனென்பவனை வெல்வது ஒரு பொருட்டா யோசிக்கவேண்டாம் அவன் வச்சிரகவச முதலியனவும் மாயா வல்லபமும் எங்கள் முன்யாதாய் முடியும் ஆனால் நெடுங்காலமாய் அவன் கொடுமைகள் செய்து வந்தானாயினும் நமது சோழநாட்டின்கண் தலைகாட் டாமையால் ஒழிந்துபோறான். அஞ்சினவனை யலையக்காண்பது அழகல்ல, வென்றே அவன் விஷயத்திற் கவனஞ் செய்யாதிருந்தோம். இப்போது நமது நாட்டிலேயே வந்து நிர்ப்பயமாய் கட்டடங்கட்டிக் கொண்டிருக்

இன்றுணுகையால் இனிச் சும்மா விடுக்க எங்கட்கு மனமில்லை இப்போ
தே எங்கட்கு உத்திரவு கொடுத்து எங்களைப்போன்ற சுத்த வீரரும்
மானிலங்காக்கும் மன்னருமான **திருக்கச்சி ஆனையா முதலியார், திருவொற்
றியூர் ஒற்றியப்ப முதலியார்,** திருகளத்தூர் **கூற்றுவமுதலியார், திருவாரூர்ப்
புற்றிடங்கொண்டான் முதலியார், திருத்தழிச்சேரி கோளாந்தக முதலியார்,
திருத்தில்லைப் பள்ளிகொண்டான் முதலியார், திருக்கடம்பூர் பிராணவமுதலி
யார், திருக்கண்டியூர் மதுகை முதலியார், திருமுதுகுன்றம் மணிய முதலி
யார்** என்னும் பதின்மரையுந் தாங்கள் திருமுகமனுப்பி வரவழைக்கின்,
உடனே யாங்கள் பன்னிருவருஞ் சென்று அவ்வல்லான்றலையை எவ்விதத்
தேனுங்கொண்டு வருவோமெனக்கூறினர். அதுகேட்ட அரசன் அவ்வாறே
அவ்வவ்வூருக்குந்திருமுக மெழுதி யனுப்பி அவர்களை வரவழைத்தான். அவர்
கள் பதின்மரும் வந்தவுடனே அரசனை வணங்கி எங்களை வரவழைத்த கார
ணமென்னென்று வினவ ? சோழன் தனது கருத்தையவர்கட் கறிவித்தான்
அஃதுணர்ந்த அப்பதின்மரும் இது எங்கட்கு ஒரு பெருந்த காரியமாகத்
தாங்கள் நினைக்கவேண்டாம் தங்கள் உத்திரவுக்கு மாத்திரம் எதிர்ப்பார்க்
கிறோமென்றார்கள். அது கேட்ட அரசன் அவ்வல்லான்றன்றலையை எத்
தினை தினத்திற் கொண்டு வருவீர்களெனக் கேட்க அப்பன்னிருவரு
மொருங்கு கூடி பராந்தகச் சோழனுக்கு ஐந்து தினத்தில் கொண்டு வருவ
தாக வாக்களித்தனர். அப்பொழுது சோழன் மிக வியந்து அப்படியே போய்
வென்று வாருங்களென்று தம்மரபினர்க்கும் நம்மரபினர்க்கும் உரித்தாயிருக்
கும் *புலிக்கொடியை அவர்களுக்குக் கொடுத்து விடையளித்து திருவாரூரில்
நமது மரபின் பூர் வோத்தர முணர்ந்தவனும், தேவேந்திரன் வம்சத்தனு
யுமிருக்கின்ற யானையேறும் பெருப்பறையனை வரவழைத்து இவ்வாரிப் பன்
னிருவரும் வல்லானை வெல்லப் புறப்படுவதைக் குறித்துத் தஞ்சைமா நகரத்
துள்ள நான்கு மாட வீதிகளிலும் பறையறையும்படி கட்டளையிட்டான்.
அவனும் மறு நாட்காலையில் தனக்குரிய நித்திய நியமங்களை முடித்துச் சகல
விருதுகளுடன் யானை மீதேறிகொண்டு ஸ்ரீகைலாயபரம்பரை யாரும் ஸ்ரீநந்
திதேவர் அம்சையினரும், ஸ்ரீசிவபிரான் குமாரர்களும் ஸ்ரீ உபசுப்ரமண்
யமரபினருமாய் தேவ கண்டகனுகிய சூரபத்மனுதியவுணர்களை ஸ்ரீசண்

---

செங்குந்தர் மரபுக்கும், சோழன் மரபுக்கும் புலிக்கோடி யுண்டென்பதை,

* கலிக்குறும்படுவளவனுக்குங்காதுசூர்
வலிக்குறும்படுதனிவாகைக்குந்தர்க்கும்
பலிக்குநற்புகழெலாம்பாதியாதலாற்
புலிக்கொடிமரபிரண்டினுக்கும்போந்ததால்.

**எனவரும் ஈட்டி யெழுபதின் திருவிருத்தத்தானு மறிக.**

முக தேவரோடுஞ் சென்று அதஞ் செய்து தேவர்களுக்கு † சொர்க்காதிபத் யந்தந்தும் பின்பு மனுக்குலத்தவதரித்து சோழராஜ வம்சத்தினர்க் கெல்லாம் சுற்றத்தினராயும், சேனைத்தலைவர்களுமாயிருந்து அவர்களோடுஞ் சென்று திக்கு விஜயஞ்செய்து சகலவெற்றிகளையும் விளைவித்தும், செந்தமிழ் நாட்டிற்கோர் செழுமணித்தீபம் போன்று விளங்கிய ஜெயவீர செங்குந்த சிகாமணியர்களிற் பன்னிருவர் சூகரக்கொடியுடைய துஷ்டனாகிய வல்லானை ஐந்து நாளையில் வென்று அவன் தலையைக்கொண்டு வருமாறு ராஜாதிராஜனாகிய நமது பராந்தகச் சோழமகாராஜனிடத்தில் தாம்பூலம் வாங்கிப் புறப்பட்ட விதத்தை இந்நகரத்தினர் யாவரும் அறியக் கடவீர்களாக இவ்வீதியில் வசிக்கின்ற அந்தணர் முதலிய எல்லா வருணத்தினரும் அவ்வவர்கள் வீடுகளையும் தெருக்களையும் அலங்கரித்து வைப்பீர்களாக. அவ்வீராதிவீரர்களாகிய பன்னிருவரும், அவ்வல்லானென்னும் பொல்லானை வென்று வருமாறு அவ்வவர்கள் இஷ்டதேவதைகளைப் பிரார்த்திப்பீர்களாக. இராஜமார்த்தண்டனாகிய நமதுசோழமகாராஜனுக்கும் அவர்களுக்கும்க்ஷேமம் உண்டாகும்படி இன்று முதல் ஐந்து நாள்காறும் விரதங்காத்து அவரவர்கள் சக்திக்கேற்ற தான தருமங்களை வழங்கக்கடவீர்களாக. என்றிவ்வாறு அத்தஞ் சைமாநகரிலுள்ள நான்குவீதிகளிலும் முறசறைந்தான். அம்முற சோசையைக்கேட்ட ஜனங்கள் யாரும் இனி பலநாட் சனி ஒரு நாளிலொழிய விருக்கின்ற தென்னுங்களிப்பினால் தத்தம் வீடுகளையுந்தெருக்களையுஞ் சுத்திசெய்து தலைவாயில் கடோறும் பச்சோலைகளாற் பந்தரிட்டுத் தம்பங்கட்கெல்லாம் வாழை கமுகுகள் நாட்டி அவற்றின் நடுவே முத்து மாலை புட்பமாலைகளைத் தூக்கி அவ்வப்பக்கங்களில்படங்கள்கண்ணாடிகள் நிறைத்து சுவர்களிற்சித்திரங்களெழுதித் திண்ணைகளெங்கும் பதுமைகளமைத்துக் குளிர நீர்தெளித்து நனைந்திருக்கிற தெரு முதலிய விடங்களில் விசித்திரமாகிய கோலங்களிட்டு ஒவ்வொரு வீட்டிலுமுள்ள ஆடவரும் பெண்டிரும் சுத்த கங்கையிலாடி விரதசீலராய் இஷ்டதேவதையை ஆராதித்து ஆதுலர்க்கெல்லாம் அகமகிழ்வோடு தானமீந்துப் பன்னிரப் பொன்னுடைகளையும் நவரத்தினாபரணங்களையுமணிந்து கொண்டவர்களாய்ச் செங்குந்த வீரசிகாமணிகளுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

---

† செங்குந்தர் தேவேந்திரனுக்குப் பொன்னுலகச் சீர் நிலைபெறச் செய்தாரென்பதை,

> தாருவுஞ் சுரபியுந் தவளவேழ முந்
> தாருடைப் புரவியுஞ் சசியுங்கைம் மிசைப்
> போருடை வச்சிர வாளும் பொன்னகர்ச்
> சீருறும்படிய வுன் செறிசெங் குந்தமே.

எனவரும் ஈட்டி யெழுபதின் திருவிருத்தத்தானு முணர்க.

அங்கே பராந்தகச் சோழனிடத்தினின்றும் விடைபெற்ற அச்செங்குந்தத்தலைவர் பன்னிருவரும் நித்திய நியமானுஷ்டானங்களை முடித்து உபாசனா மூர்த்தியைப் பூசித்துப் போர்க்கோலத்தோடும் அலங்கரித்துள்ள பஞ்சகல்யாணிப் புரவிகளின்மேல் ஆரோகணித்துப் பல சின்னங்களும் விருதுகளும் புடைசூழ்ந்துவர கோழிக்கொடியும், புலிக்கொடியும் இருபுறத்தும் படபடென்றொலித்தோங்க ஆகுளிபேரிகை சின்னம் வலம்புரி முதலிய பறைகளும் வாச்சியங்களும் அண்ட மதிரமுழக்க கட்டியக்காரர்கள் பலவிருதுகள் கூறிப்பராக்குச் சொல்லிவர இத்தகைய பல வாடம்பரங்களோடும் அரண்மனைகளினின்றும் வெளிக்கொண்டு வீதிகளில் வையாளி வருவதானார்கள்.

இவ்வாறவர்கள் வையாளி வரும் விநோதத்தை அவ்வவ்வீடுகளின் மேனிலைகளினும், கீழ் நிலைகளினுமிருந்து கண்ட ஆடவரும் பெண்டிரும் ஆனந்தக்களிப்பின் மூழ்கினவர்களாகி, அவர்களது மயிற்கோலம் வீரப்பட்டமுடைய வண்டிற் பாகையணிந்துள்ள திருமுடியினழகையும், திரிபுரண்டரமணிந்த நெற்றியின் பொலிவையும், முறுக்கு மீசையின் வீரத்தையும், வண்டிற் கடுக்கன் மகரகுண்டலமணிந்த செவிகளின் சீரையும், கேயூரமணிந்த புஜங்களின் திண்மையையும், ஈட்டிஏந்திய இடக்கையின் தாஷ்டீகத்தையும், கடிவாளத்தைப்பிடித்துள்ள வலக்கையின் செம்மையையும், அக்கமாலிகை, வீரகண்டிகை, வஞ்சிமாலை, முதலியவைகள் மேலே விளங்கக் கஞ்சுகமணிந்துள்ள மார்பின் விசாலத்தையும், ஜல்லடமும், பட்டுடையுமணிந்து, அதன் மேல் உதரபந்தனந்தங்கிய இடையின் எழிலையும், அதன் கீழ் இரத்தினமயமாகிய கடி சூத்திரச் சிறப்பையும், வீரக்கழல் புனைந்துள்ள பாதசரோருகங்களையும், அப்பாதத்தில் தரித்துள்ள மணிப்பாதுகைகளின் பிரகாசத்தையும் கண்டு, தங்கள் கண்ணையுங் கருத்தையும் அவர்கள்மீது செலுத்தி இப்போது இவ்வீதியின் கண் நமக்குண்டாகிய தோற்றம் பன்னிரு சூரியர்களும், பன்னிருவீரர்களாய் வந்துலவுந் தோற்றமோ? அல்லது முன்னர் சிவபிரானாலெரிந்து சாம்பராய ஒரு மன்மதன் பன்னிருவராயுருக் கொண்டுலாவும் பான்மையோ? என்றையங்கொண்டவர்களாய், இவர் கண் மேனியின் கண் உண்டாயதெளிவையும், அழகையும் நோக்க, ஒன்றுந் தோன்றவில்லையேயென்று திகைத்து நின்றார்கள். அவருட் சிலர் அத்திகைப் பொழிந்தவர்களாய்த் தெளிந்து இதுகாறும் எத்தகையராலும் வெல்லக்கூடாத வல்லபம் பெற்றுள்ளவனாதலால், "வல்லாளனென்னும்" பெயர் வாய்ந்த ஒருவனை இவர்கள் வெல்லவல்லவர்களோ? அவன் கட்டியுள்ள கோட்டைக்கு நாற்புறத்தும், அளவற்றப் பூசப்படைகளையுடைய துர்க்கா தேவியையும், வீரமாகாளியையுங் காவல் வைத்திருக்கின்றானே, அவர்களை வென்றபினல்லவோ உள்ளே நுழைந்து ஆங்காங்கமைத்துள்ள பலகாவல்களையுங் கடக்கவேண்டும், இவைகளையெல்லாம் ஒருவாறுகடந்து உள்ளே நுழையினும்

அவன் வரப்பிரசாதத்தாற் பெற்றிருக்கின்ற மாயா ரூபமாகிய வச்சிரதண்டம்
முதலியவைகட்கு எவ்வாறுயிர் தப்பிப்பிழைத்து வரக்கூடும்? எங்கட் கொன்
றுந் தோன்றவில்லையே என்றார்கள். அடுத்துள்ள சிலர் அவர்களைத்தடுத்து
இவர்கள் பூர்வம் தேவ க்ஷத்திரியர்களாகச் சண்முக தேவருக்குச் சகோதா
ராய வதரித்திருந்தகாலத்தில், ஆயிரத்தெட்டண்டங்களையும், ஏக சக்கராதி
பத்தியங்கொண்டாண்ட சூரபன்முதிய அவுணராசர்களையும், அவர்கள்
செய்த அளவற்ற மாயைகளையும் வென்று, அவர்கட்குப் படைத்துணையாக
வந்த எத்தனையோ பூதங்களையும், வேதாளங்களையும், இவைகட்குத் தலைவிக
ளாகிய வீரமாகாளிகளையும், அதஞ்செய்து தேவர்களைப்பாதுகாத்திருக்கின்
றார்களே இவர் கட்கிவனெம்மாத்திரமென்றார்கள். அதைக்கேட்ட சிலர் அவர்
களை நோக்கி பூர்வமிவர்கள் தேவாமிசத்தினராயிருந்தபடியினாலே அத்தகைய
காரியங்களை யெல்லாம் அனாயசமாகச் செய்து முடித்தனரென்பது நிச்சயமே
இக்கால் அத்தகையவல்லபம் இவர்களுக்குண்டாயிருக்குமென்பதெப்படியென்
றார்கள் இவ்வாறு சொன்னவர்களை வேறோர் சிலர் வெகுண்டு நின்று இம்மரபி
னர்க்கின்றுமுள்ள பராக்கிரமத்தைச்சற்று முணர்ந்திலீர் பொலும் இவர்களிப்
பூமியின் கண்ணும் மானவ க்ஷத்திரியர்களாய் மனுகுலத்தவதரித்துத்; தங்கள்
குலக்கோதை வளர்த்தகிள்ளையைக்காலன் பத்தினியிச்சித்துக் கவர்ந்துபோக
அவனை அரை நொடிப்போதில் வென்று அக்கிள்ளையை மீட்டதல்லாமல்
தங்கள் பெண்ணும் முசுகுந்தச் சக்கரவர்த்தியின் பத்தினியுமாகிய சித்திர
வல்லிக்குப் புத்திர சந்தான முண்டாகுமாறு கேரளத்தேசத்தரசன் யாக
முன்னிலையிற் பெற்றிருந்த சந்தான மாமரத்தை அடியோடு அவனைவென்று
வேரோடுங்கெல்லிக்கொண்டுவந்த வீரசிகாமணிகளென்பதை யறியீரோ?
மேலும் அவள் பொருட்டுத்தாங்கள் கொண்டுவரச்சென்ற காய்கனிகளைக்
கொடா தெதிர்த்த பதினெண் மலையாளங்களையும் பதினெண் கடிகையில்
வென்று அத்தேய வரசர்களே அவைகளை மூட்டைகளிலிட்டு முடியிற் சும
ந்துவரச் செய்து பெற்றுக்கொண்ட காதையினை நீங்கள் கேட்டதில்லையோ?
இன்னும் அங்கம் வங்கம் கலிங்கம் ஈழம் சீனம் முதலாகிய பலதேயவரசர்கள்
செங்குந்த வீரரேன்றால் திடுக்கென்றலறுவார்களே! அன்றியும் இப்பூவுல
கில் இவ்வம்சத்தினர் புண்ணிய ரூபிகளாய் வந்து அளவற்ற சிவ தருமங்களை
நடத்தி மேலான கீர்த்தியடைந்துள்ளோராதலால் அத்தருமங்களே யிவர்
களைத் தலைகாத்துச்சென்று தற்காத்தருளுமென்பதற்குத்தடை யென்னை
யென்றார்கள். இவ்வாற அத்தஞ்சை நகரினது நான்கு மாடவீதிகளினு
முள்ள ஆடவர் பெண்டீர் அனைவரும் அற்புத சித்தராய் அனுவாதஞ்செய்து
பேசச் செங்குந்தவீரர் பன்னிருவரும் பையப் பையப் பரியை விடுத்து
அவ்வீதி யனைத்துங்கடந்து தஞ்சைமாநகரின் எல்லையைத்தாண்டி அடுத்
துள்ள ஆலந்துறை யென்னும் சிவத்தலத்தை யடைந்து அங்குதங்கள் பரி
சன பரிவாரங்களோடுந் தங்கினர்,

இவர்கள் செய்தி இங்ஙனமாகத் திருக்கடம்பூரிலுள்ள எரி நடுவே பாடி வீடு சமைத்து வாழந்து கொண்டிருந்தவல்லாளுனவன் அன்றிரவில் தற்சொற்பனங் கண்டெழுந்து மறுநாட்காலையில் தன் மனையாளாகிய அனங்கவல்லியையும் மந்திரி முதலானவர்களையும் வைத்துக்கொண்டு ஓர் காட்டில் ஆண்யானையும், பெண்யானையுங் கட்டியிருக்கையில் ஆண்யானை நித்திரை செய்யப் பெண்யானை விழித்திருக்க. இரண்டு சிங்கங்கள் வந்து ஆண்யானையின் மேற் பாயவும் அதுகண்ட பெண்யானை அவற்றின் காலில் விழுந்து என் புருடனைக் கொல்லாமல் உயிர்ப்பிச்சை கொடுத்தருள வேண்டுமென்றிரக்க அப்படியே கொடுத்துப்போனதாகக் கனவுகண்டேன் இதென்ன உற்பாதத்தைக் காட்டுங்குறியோ அறிகிலேனென்றனன். அதுகேட்ட அவன் மனையாளாகிய அனங்கவல்லியும் என் மங்கிலியம் தற்செயலாய் அறுந்து கீழே விழக்கண்ட இருவர் அதை யெடுத்துக்கொடுத்ததாக நானுங்கனுக் கண்டேனென்று கூறி இவர் முன்னே வடதேயம் விட்டுத்தென்றேயம் வரப் புரப்படும்போதே நம்முடைய சுதேயத்தை விட்டு அன்னிய தேயம்போய் வாழ்தல் கூடாதென்று தடுத்தேன், அது கேளாது வந்தனர். இத்தென்றேயத்தை யாளப்பட்டவனே ! முன்னே நம்மைப் பகைத்திருக்குஞ் சோழன் அப்பகைக் கொத்தபடி நாங்கள் இருவரும் தற்கனுக் கண்டோம் இவ்விரண்டையும் யோசித்துப் பாருங்களென்றுள் இவைகளைக்கேட்டவமைச்சரும் பெரியோரும் ஏதோ சோழ ராஜனால் நமக்கு ஆபத்துவர நேரும்போலுமென்றார்கள் அது கேட்டவல்லான் நகைத்து இப்புவியில் நம்மை வெல்ல வல்லவருமுண்டோ ? இங்கிமிடம் அச்சோழராஜனை நேரில் நான் சென்று வென்று திறை வாங்கிவருகிறேனென்றெழுந்தான். அப்போது அவர்கள் அவனைத்தடுத்து நாம் சில ஒற்றரை யனுப்பித் தஞ்சையில் நடக்கும் செய்தியையும் அஃதிக்காலிருக்கும் இருப்பையு மறிந்துகொண்டு செல்வோமென்று கூறி ஏவினர்கள் அவர்கள் போய் ஓர் நொடிப்போதில் எல்லா மரிந்துவந்து வல்லானைப்பணிந்தெழுந்து ஓ எமதாண்டகையே! சோழனுக்குச்சொந்தைப் பிள்ளைகள் போலக் காரியம்பார்ப்போரும், அவனுடைய ராஜகாரியத்தைச் செய்து முடிப்போரும், அவனுக்கமைச்சரை யொத்துப் புத்தி சொல்பவர்களும், அவனுக்குப்பலவகை வித்தைகளைக்கற்பிக்கின்ற பேர்களும், அவன் பக்கவில் மந்திரவாள் கொண்டு அவனுக்கு விக்கினம் வாராமற் காக்கின்றவர்களும், அவனுடைய கோட்டை கொத்தளங்களின் உட்புறந்தும், வெளிப்புறத்துங் காவல்கொண்டிருக்கிறவர்களும், அவனுடைய நால்வகைச்சேனைகட்கும் நாயகராக விருக்கின்ற பேர்களும் அவன் பகைவர்களைத் தாக்கசென்று வென்று அவனுக்கு வெற்றிதரப்பட்டவர்களும் கைக்கோளரேன்னும் செங்குந்தரே யாவர் இக்கைகோளர் செய்யும்வினையை யொருவராலும் ஜயிக்கப்படாது அவர்களுடைய சேவகத்தை எவர்களாலும் நிதானிக்கக் கூடாது. அவர்களுடைய யோசனையையும், புத்தியையும், பெருமைகளையும்,

பிரதாபங்களையும், ஒருவராற் சொல்லுந்தரமன்று, இவையனைத்தும் நாங்களாகச் சொல்லும் கட்டுவார்த்தைகளுமல்ல. இப்போது பன்னிரண்டு செங்குந்தவீரர்கள் ஐந்துநாளையில் தேவரீருடைய திருமுடியை யறுத்துச் சோழராசன் திருவடிக்கீழ் வைப்பதாக ஊரெங்கும் பறைசாற்றிப்புறப்பட்டார்களெனக்கூறி முடித்தார்கள்.

இவை யனைத்தையுங்கேட்டவல்லான் பயந்து அலைகின்ற நீரில் அம்புலித்தோற்றம்போல நடுங்கி மந்திரிகளை நோக்கி முன்னர் யான் தெலுங்குதேயத்தினின்றுந் தமிழ் தேய நோக்கிவரும்போது தொண்டை நாடடைந்து அங்குள்ள திருவேகம்பமுதலிய சிவ தலங்களைத் தரிசிக்கும்படி சில நாளங்கிருந்த காலத்தில் அந்நாடெங்கும் "செங்குந்தவீரர்" நடத்திவரும்பராக்கிரமங்களையும், அம்மரபினரால்செய்யப்படும்பலசிவபுண்ணியங்களையும், நேரிற் கண்டிருக்கின்றேன். அவர்களோமிகப்பலாவஷ்டிகரும் பக்திமான்களுமாயிருக்கின்றார்கள். அவர்களே என்னை வெல்லச் சபதங்கொண்டுவருவராயின். இனி இதற்கென் செய்வதென்று அவர்களோடும் ஆலோசித்தான். அவர்கள் அவனைப்பார்த்து ஓ சுத்தவீரசிகாமணியே! நீர் பெற்றிருக்கும் வரப்பிரசாதத்தை நினையாமல் பயப்படலாமா? அரி பிரமாதிதேவர்களே மானிடவுருக்கொண்டு வந்தெதிர்த்தாலும், உம்மைவெல்லக் கூடாது. இப்போதிரண்டு நாளாய் விட்டது யினியிருக்கும் மூன்று நாளும் நாங்கள் இரவும் பகலும் நித்திரைவிட்டு உம்மைக் காக்கின்றோம். மேலும் இப்போது அமரபட்சமானபடியினால் பகற்காலத்தில் வந்தாற் பயமில்லை. ஒரு வேளை அர்த்த ராத்திரியிற் கபடமாக வருபவர்க்குக் கனசந்தோடம். நமது கோட்டையின் ஏழு மதில் கட்கும், இருபத்தெட்டு வாயில்கள் இவற்றுள், மூன்று திக்கு வாயில்களை மூடி ஒரு திக்கிலுள்ள ஏழுவாயில்கட்கும், நம்முடைய சேனைகளை வகுத்து அச்சேனைகளின் தலைவர்களை நித்திரை செய்யாது காக்கும்படி திட்டம்பண்ண வேண்டுமென்றார்கள். உடனே வல்லான் மூன்று திக்கு வாயில்களையு மடைப்பித்து ஒரே திக்கு வாயில்களை மாத்திரம் விட்டு அதில் முதல் வாயிலிலும் இரண்டாம் வாயலிலும் காலனையும் வெல்லத்தக்க காவலர்களை ஆயுதபாணியராயமைத்து, மூன்றாம் வாயலில் மதயானைகளையும், நான்காம் வாயலில் குதிரைப்பந்திகளையும், ஐந்தாம் வாயலில் வேட்டை நாய்களையும், ஆறாம் வாயலில் புலிகளையும், ஏழாம் வாயலில் சிங்கக்கூட்டங்களையும் சங்கிலி கயறு முதலானவைகளைக்கொண்டு கட்டிக் காவல்வைத்து, அதற்கருகேயுள்ள நெருப்பகழியை மூட்டி இடைவிடாதெரிந்து கொண்டிருக்கும்படி கட்டளையிட்டு அதன் பக்கலிலுள்ள நீரகழியை, எரி சலத்தைக்கொண்டு நிரப்பி அதிற் பல முதலைகளை விடுத்து ஒற்றர்களைக்கொண்டு சில சிற்பிகளையழைப்பித்து, அக்கோட்டையின் மூன்றடுக்கு உப்பரிகையின்மேல் நூறடியிற் கற்றூணொன்று நாட்டுவித்து, அக்கற்றூணில் யாவருந் தொத்தி யேறாதபடி வழுவழுப்புண்டாக்குவித்து அதின்மேல் இரும்பினாலே போதிகையும்

அப்போதிகையின் மேல் பல வயிரமான மரங்களினாலே உத்திரங்களையு மமைப்பித்து, அவ்வுத்திரங்களின்மேல் சட்டங்கள் தைப்பித்து ஓர் கூடாரங் கட்டி அதனுள் தனக்கு மூன்று நாளைக்கும் போஜனம் முதலிய காரியங் கட்கு வேண்டியவனைத்தையும், அங்ஙன மமைப்பித்து அச்சிற்பிகளுக்கு வேண்டுமான வெகுமதிகளைச் செய்தனுப்பிப் பின்னர் தனதமைச்சர், சேனைத்தலைவர்கள், முதலானவர்களைப்பார்த்து இவ்விரவும் நாளைப்பகலும் மிரவுமோநாம் வெகு ஜாக்கிரதையோடுங் காக்கவேண்டும். ஆனபடியால், நீங்கள் அனைவரும் எழுவாயல்களினு மமைத்துள்ள கட்டுக்காவல்களை அதி ஜாக்கிரதையாய் இரவும் பகலும் காத்துவரக் கடவீர்களென்று கட்டளையிட்டுத் தான் தன் மனைவியாகிய அனங்கவல்லியோடும் நூலேணிமீதேறி அக்கூடாரத்தில் வசித்திருந்தான்.

இவன் செயலிவ்வாறாக. அங்கே ஆலந்துறையிற் பதிசனங்களோடுஞ் சென்று தங்கிய பன்னிரு செங்குந்தவீரரும், மறு நாட் காலையிலெழுந்து நித்திய நியமங்களைமுடித்து வல்லான் தற்காலத்தில் என்ன ஏற்பாடுட்டுடனிருக்கின்றானென்பதையுணர்ந்து வருமாறு சில வேவுகாரரையனுப்பி வேறே சில வேவுகாரரைத் திருமஞ்சன திரவியமும், தூபதீப நைவேத்திய முதலியவைகட்குரிய பொருள்களையும், சேகரித்து வருமாறனுப்பித் தங்களோடும் வந்து பிரிவாற்றாராய் வருந்தியிருக்கின்ற பந்துக்கள் முதலிய பரிசனங்கட்குத் தக்க தேறுதல் சொல்லிக்கொண்டுபசரித்து மூன்றாநாட் காலையிற் வல்லானிருப்பையறியச் சென்ற வேவுகாரரால், அவன் செய்திருக்கும் முயற்சிகளனைத்தையுந் தெரிந்துகொண்டு, அவர்களுக்கும் திருமஞ்சன திரவிய முதலியவைகளைக்கொணர்ந்த வேவுகாரருக்கும் வேண்டுமான வெகுமதியளித்து, அன்றிரவும் நான்காநாட் பகலு மிரவுமாகிய மூன்று காலத்தும், திருவாலந்துறைக்க ணெழுந்தருளிய சத்திய வாகேச்சுரருக்கும், சவுந்திர நாயகியம்மைக்கும், இவர்களின் மூத்தபிள்ளையார் இளைய பிள்ளையாராகிய விநாயக மூர்த்திக்கும், சுப்பிரமணியக்கடவுளுக்கும், அபிஷேகாதியாராதனைகளைச்செய்து தாங்கள் உத்தேசித்துவந்த காரியத்தை விண்ணப்பித்து நல்விடை தரப்பெற்றுக் களித்துப் பொல்லானாகிய வல்லானை ஐந்து தினத்தில் வென்று அவன் சிரத்தைக்கொய்து வந்து சோழராஜன் திருவடியில் வைப்பதாகச் சபதங்கூறிவந்த நம் பன்னிருவரில் யாரேனுமொருவரிறக்கின் ஏனையோரு முயிர் நீப்பதேயன்றி அவ்வுயிர் மேல் ஆசைவைத்து ஊரை நோக்கித் திரும்பி நமது மரபின் கீர்த்தியையழிக்கலாகாது. ஆனதினால், நாம் அனைவரும் இச்சிவ சந்நிதானத்தில் சத்தியஞ் செய்துகொண்டு புறப்படுவதே சரியென்று அவ்வவர்கள் படைகளைக் கீழேவைத்து, ஒவ்வொருவரும் சிவபிரானைத்தொழுது நின்று அடியேங்கள் பன்னிருவரும் வந்த காரியம் முடியும்முன் உயிருக்கிச்சைவைத்து ஊருக்குத் திரும்பின், செய் நன்றி மறிந்தவனும், சிவத்துரோகம் பண்ணினவனும், கற்புடைமங்கையைக் கருதினவனும்,

மாதாபிதாக்களை வதைத்தவனும், குரு நிந்தை பண்ணினவனும், வித்வான்களுக்குப் பரிசு கொடாதவனும், அடைக்கலப்பொருளை யபகரித்தவனும், ஆபத்தென்றடைந்தோனை யாதரியாதவனும், தன்னரசனைப் பகைவரிடங்காட்டிக்கொடுத்தவனும், ஒருவன் வாழும் மனையிற்றீயிட்டவனும், விருந்திடுதலில் விடஞ் சேர்த்தவனும், வழக்கிலோரஞ் சொன்னவனுஞ், சேருங்கதியிற் சேருவோமென்று, தனித்தனி சத்தியங் கூறித்தத்தம் படைகளைத் தாண்டி, தம்மோடு வந்த சுற்றத்தினர் முதலிய பரிசனங்களைத்தங்கள் விருது சின்னங்கள் முதலானவைகளுடன் தாங்கள் வருமளவும் அங்ஙனேயிருக்கும்படி கட்டளையிட்டு, ஐந்தாநாட் காலையிலெழுந்து நித்திய நியமங்களை முடித்துக்கொண்டு ஆலந்துறையிலெழுந்தருளியுள்ள விநாயக மூர்த்தியையும் சண்முகக்கடவுளையும் வணங்கி, ஏனைய பரிவார தேவதைகளையும் வழிப்பட்டு, நீங்களனைவரும் எங்கட்குத் துணையாக வந்து காத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்துப்பின்னர் அப்பனிருவரும் நற்சகுனங்கண்டு திருக்கடம்பூரை நோக்கி அத்தலத்தின் கணெழுந்தருளியுள்ள அமிர்தகடேசரைத்தரிசித்து விடைபெற்றுக்கொண்டுபோய் வல்லானுடைய கோட்டையைக்கண்டு அக்கோட்டை கட்டியுள்ள ஏரிக்குச் சமீபத்திற் சென்றார்கள்.

இவர்கள் வருகையை அவ்வேரிக்கரைமீது காவல் கொண்டுள்ள துர்க்காதேவியின் படைகளாகிய பூதகணங்களில் ஓர் பூதங்கண்டு அவர்களுக்கெதிரே வந்து தடைசெய்தது அதைக்கண்ட வீரர்கள் அதன் கரங்களைத் தமது வீரவாள் கொண்டு துணித்தனர். அப்பூதம் அறுந்தகரங்களோடும் துர்க்காதேவிபாற்சென்று முறையிட அப்பகவதிச்சாலச்சினமூண்டெதிர்ந்துவர, அதுகண்ட வீரநாராயண முதலியார்களிருவரும் சற்று யோசித்தவர்களாய் இந்தச்சூலிக்கு நாம் ஓர் நரபலிகொடுப்பின் கோபந்தணிவளென்றுரைத்தனர். உடனே திருக்கச்சி தனியப்ப முதலியரென்பவர் தனது வலதுகரத்தால் தன் சிரத்தினை யறுத்துக்கொண்டு அவளடிகள் மீது வீழ்ந்தார். அதற்குத்துற்கையுவந்து விரும்பிய வரங்களீந்து தானுமவர்களுக்குத்துணையாகச் சென்று அவ்வான் கோட்டைக்கருகே கொண்டுவந்து விடுத்து விடைபெற்றுப்போயினள் அக்கோட்டை யருகிற் காவல் பூண்டுள்ள வீரமாகாளி அவர்களை எதிர்த்துச்சினந்துவர, அவளடிகளிலும் முன்போலவே திருவொற்றியூர் ஒற்றியப்ப முதலியரென்பவர் தன்றலையை யறுத்துக்கொண்டு விழ அம்மாகாளிகளித்து அக்கோட்டைவாயிற் கதவுகள் தற்செயலாய்த் திறக்கும்படியான மந்திரத்தை யுபதேசித்துத்தானும் சில தூரங்கூடவே சென்று திரும்பினள். அத்தசவீரர்களும் அக்காளியின் விடைபெற்றுக்கொண்டு செல்ல அப்போது யானைமுகமுள்ள மூத்தபிள்ளையாரும், புன்னகையுட்னே விரைந்தெழுந்தருளினர். சிறப்புற்ற பூதேவியின் ஆடையாகிய கடலைப்போன்று பரந்தகன்று பார்ப்போர் மனத்தைத் திடுக்கிடச்செய்யும் அகழியைக்கண்டு பகைவர்களை வெற்றிகொள்ளும் பராக்கிரமமுடைய அத்தசவீரர்களும்; இனி

நாம் என் செய்வோ மென்றெண்ணித் தவஞ்செய்வதைப்போன்று யோசித்துக்கொண்டிருக்க, மனத்துயரடைந்த கோளாந்தகரென்பவர் இத்தேகம் எவ்விதத்தினும் அழியுமென்பதை யறிந்துள்ளோம் ஆராயத்தொடங்கினால் எக்காலத்தினும் அழிவற்ற கீர்த்தியுடனே பொறுந்தும்படி யிருத்தலே சுத்த வீரத்தன்மையாகும். அத்தன்மையுடையோரிற் சேர்தலே மேம்பாடாகும் ஆதலால், என்னுடனே மற்றொருவர் தன் பிராணனை விட்டால் வரிசையுடனே இவ்விரண்டு சரீரங்களையும் ஒன்றாகச் சேர்த்துக் குற்றமற்ற அஷ்டவீரர்களும், அத்தெப்பத்தைக்கொண்டு இவ்வகழியைத்தாண்டுவதற்கு எதுவாகுமென்னும் வார்த்தையானது மணியரென்னும் வீரருடைய காதில் விழுந்த வளவில் அத்தக்ஷணமே, மணிய முதலியார் தமது கழுத்தை வெட்டிக்கொள்ளக் கோளாந்தக முதலியாரும் உயிர் நீங்கிச்சரீரத்தை விழ்த்த உடனே மற்றுள்ள எண்மரும் உயர் விடுத்த இருவருடைய கரங்களை வெட்டிக்குடலையுங் கிழித்தெடுத்து அவ்விரண்டு சரீரங்களையும் ஒன்றாகச்சேர்த்து அக்குடர்களாற் கட்டி ஓர் தெப்பமாகப்பிரகாசிக்கும்படி செய்தார்கள். திரிநேத்திரதாரியாகிய சிவபிரான் குமாரர்களான அவ்வீரர்களுக்கு இத்தகைய காரியம் முடிப்ப தருமையோ?

இவ்வாரியற்றிய யாக்கைப்புணையின்மீது அஷ்டவீரர்களும் ஆரோகணித்து அவ்வகழியைக்கடந்து தூய்மையினரான பாண்டவர்களைப்போன்று கீர்த்தி என்னும் மாதைச்சேர்ந்து கரையிலடைந்து மேலே உத்திரங்கள் பொருந்த நிற்கின்ற எட்டுத் தம்பங்களையு மெதிரே பார்த்தார்கள் தேவர்களாலும் நெருங்குவதற் கருமையாக அஷ்டதிசைகளிலுமிருக்கும் எட்டுத்தம்பங்களுள் இந்திரத்திசையிலுள்ள ஒரு தூணே சித்திரங்களமைந்த அக்கோட்டைக்குட் போகும் மார்க்கத்திற் கொண்டுபோய்விடுமென்பதை யாராய்ந்துணர்ந்து மித்திரர்களாயிருக்கும் அவ்வஷ்டவீரர்களுள் தலைவராகிய வீரரென்பவர் மற்றைச் சத்த வீரர்களையும் அழைத்து ஓர் யுத்தியைக் கூறுவதாயினர்.

இவ்வெலிகுத்தம்பமோ பெரிதாயிருக்கின்றது. தொத்தியேறுதற்கு மேலாது தேவதச்சரும் அச்சங்கொண்டு வருந்துவார்கள். ஆதலால் நாம் சிவபெருமான் திருவடிகளைப் பூசித்துக்கொண்டு இரண்டிரண்டு பேர்களாகத் தவளையைப்போன்று ஒருவர் முதுகிலொருவர் மாறி மாறி வலியோடு பாய்வோமாயின், இதன்மீதுள்ள கோட்டை அதி சுலபத்திற் கிட்டுமென்று கூறினர். அவ்வாறுரைத்ததை யறிந்த வீரர்கள் இரண்டிரண்டு பேர்களாகத் தவளை பிடிக்கும் பான்மையைப்போன்று பிடித்துக்கொண்டு ஒருவர் முதுகின்மே லொருவர் பாய்ந்து அவ்வண்ணமே மாறி ஒருவருக்கொருவர் களிப்பின் மேம்பட்டவர்களாய் அத்தூண் அசிநிவரையிலேறி அதனுடைய உச்சிக்குச் சிகரமானார்கள். இவ்வண்ணமாக ஒருவர்மே லொருவராகவேறி அழகிய அத்தம்பத்துச்சியிலுள்ள தட்டியில் வந்துசேர்ந்து மூன்றுபுரங்களும்

ஒரே யுருவமாயமைந்த அந்தரக்கோயிலிது தானோ? துட்டனாகிய விக்கலன்
இதன்மீது யாவரும் ஏறவொட்டாமற் செய்திருக்கும் தந்திரமிதுவோ?
என்று பரிதவித்தார்கள். இவ்விடத்திற் கைகளாற் பற்றவோ ஓர் பற்று
மில்லை பறப்பதற்கோ சிறகுகளில்லை. இத்தினங் கழிந்தாலோ வெற்றிப்
பாடில்லை. நம்மவரில் நால்வர் உயிரிழந்தார்கள் இனிச் செய்யத்தக்கது
யாதென்று ஆலோசித்துத் தெளிந்தவர்களாய், முதலில் தங்களுக்குத்
துணையாய் வந்த யானைமுகக்கடவுளின் திருவடிகளைத் தியானித்துத்தங்களி
ரண்டு கரங்களையும் ஆகாயத்திலெழும்பும்படி தூக்கிக்கனைப்புக்காட்டி ஊங்
கார வோசையால் மேலே கிளம்பியாளியைப்போற்பாய தினையளவு நேரத்
திற்குள்ளாக அவ்வஷ்டவீரர்களும்; அத்தம்பத்தின் மீது விளங்கிய கோட்
டையின் முதல் வாயிற் பெருமிதத்தோடு மிருக்கப்பார்த்து தேவர்களும்
கை கொட்டியார வாரித்தார்கள். இவ்வாறிவர்கள் சென்றது விநாயகர்தமது
துதிக்கையாற்றூக்கியதாலென்க. முற்பக்கத்துள்ள இரண்டு வாயல்களிலும்
காவலுள்ள போர் வீரர் முதலியவர்கட்கும் பிற்பக்கத்துள்ள இரண்டு வாயல்
களிலும் காவலுள்ள யானைகள் குதிரைகள் இன்னும் இவைகட்கும் நிலைபே
றாக முற்பட்ட நால்கு தினங்களும் மறந்தும் நித்திரைகொள்ளாதிருந்த கார
ணத்தால். சரீரம் அயர்ந்து கண்கள் மூடித்தலைகள் சாய்ந்தன. இவைகள்
இவ்வாறுறக்கங்கொண்டது யானைமுகக்கடவுளின் திருவருள் வல்லபமோ?
இதற்கு முன்னிறந்த ஒப்பற்ற நான்கு வீரர்கள் தெய்வீகமாய்ப்புரிகின்ற
மயக்கமோ? உலகத்தையாளும் அரசர்கள் செய்த புண்ணியமோ? விக்கல
னாற் சிறைசெய்யப்பட்டு மனம் நொந்துகொண்டிருக்கும் அரசர்களும் அரி
வையர்களும் இனிமையுடனே செய்துவருகின்ற தவத்தின் பயனோ? சொல்
லிய முந்திய நான்கு நாட்களின் நித்திரை பங்கமோ? நாமறியோம் முன்
வாயிற்படியிலடைந்த முதலியர்களெண்மரும் நிலைபெறுயுள்ளவாளாயுதத்
துடனே அன்னோன் குவாயிலையுந்தாண்டி, ஐந்தாவது வாயிலில் புகுந்து
போங்கால் அங்கு கட்டியிருந்த செந்நாய்கள் குரைக்க அவைகட்கிரையாகத்
திருவாரூர்ப் புற்றிடங்கொண்ட முதலியென்பவர் தனது சிரத்தை யறுத்துக்
கொண்டு அவைகளுக்கு நேரே விழ அது கண்ட வந்நாய்கள் சூழ்ந்துகொ
ண்டு குரையாது நின்றன. பின்னரவ்வாயிலினின்றும் நீங்கி ஆறுவது வாயி
லின் வழியே செல்லும்போது, அங்குள்ள புலிகள் உறும, அவைகட்கா
காரமாகத் திருத்தெளிச்சேரி கோளாந்தக முதலியரென்பவர் அறுப்புண்ட
தலையினராயவற்றினெதிரே விழ அவற்றையப்புலிகள் தின்னுஞ் சமயத்தில்
ஏழாவது வாயிலின் நெறியே மற்றையறுவர் புகுந்தார்கள். அப்போது
அவ்வாயிலுள்ள கொடிய கோபத்தையுடைய சிங்கங்கள் கர்ச்சிக்க அவைகட்
குணவாகச் சிதம்பரம் பள்ளிகொண்டான் முதலியரென்பவர் தமது சிரத்தை
யறுத்துக்கொண் டுயிர்துறந்தனர். சீறி எதிர்த்தனவாகிய சிங்கங்களின் சிவ
ந்த வாய்களிலே புலியூர்ப் பள்ளிகொண்டாரது சரீரத்தைத்துணித்து பாகித்

துக்கொடுக்க அவைகட்கு விசேடித்திருந்த பசித்தீயானது தணியும்படி கொல்லுதற் கெண்ணிய எண்ணமொழிந்து அவைகள் அத்தனைகளையுண்டு கொண்டிருக்கையில் மற்றுள்ள வீரர்களனைவரும் குதிர்த்தவ் வாயில்களைக் கடக்க அப்போது ககனத்தினின்று மிழிந்து ஆகாயவாணி பிரசன்னமாகி,

ஐயோ ! ஈதென்னை நூல்களை யராய்ந்துள்ள சித்தமுடைய
வீரர்களே ! இன்றிரவிற் குரிய சாமங்கள் நான்கினுள்
மூன்று சாமங்கள் கழிந்து மிகுதி ஒரு சாமந்தானிருக்கிறது
இவ்வொரு சாமத்திற்குள் அக்கினியோடை நீரோடை
என்னும் இரண்டோடைகளையுந்தாண்டி அவற்றுள்ளி
ருக்கும் கோட்டைக்குள்வந்து அங்குள்ள எல்லைத்தம்
பம் ஒன்றை வல்லபத்தாற் கடந்து சந்தோடம் பொருந்
தும்படி வெற்றியடையவேண்டும் ஆதலாற் அக்கா
ரியம் உங்கட்குத்தடையன்றியாகுக என்று கூறியது.

இவ்வாறு ஆகாயவாணியினிடத்தும் வரம்பெற்ற வீரர்கள் அங்கு நின்றும் நீங்கிவல்லாளனமைத்திருக்கும் கொடிய நெருப்பகழியை அடைந்தார்கள் கொழுந்துவிட்டெரிகின்ற வத்தீயில் திருக்கடம்பூர் பிரணவமுதலியரென்பவர் படுப்ப அவர் மீது மற்றயர் ஏறிச்சென்று அவ்வகழியைத்தாண்டி அதன் பாங்கருள்ள நீரகழியைக்கண்டு திகைத்தவராய் இதனைக்கடந்து எவ்வாறு சொல்வோமென்றேங்குந்தருணம், கண்டியூர் மணியமுதலியரென்பவரிவ்வாறு கூறுகின்றார் ஓ வீரரே ! வல்லாளனென்னும் இவன் கொடூரம் மிக்க வல்லபமுடையன உலகத்துள்ளாரனைவரிலும் துட்டன் அன்றியும் பூமியிலே யிராமலும் இவ்விடத்திலே வீடு முதலியனவ கட்டிக்கொள்ளாமலும் அலைகள் வீசும் நீர் நிறைந்துள்ள இவ்வேரிக்குள்ளே வார்த்தையாடவும் மல்யுத்தம் புரியவும் விற்போரியற்றவும் ஏலாத ஓர் இருப்புத்தம்பத்திலே எவரையும் வெற்றிகொள்ளாலும் வெற்றிகொள்ளுவார் முன்னே நில்லாமலும் இங்கிருக்கின்றனே இப்படியிருந்தாலும் இந்தத்துட்டன் அழிந்துபோதல் நிச்சயமாதலால் இந்த ஏரிக்குள்ளே வீர சொர்க்கமடைகின்ற எனது மாமிசத்தை இதிலுள்ள முதலைகட்குப் பாகிர்ந்திறைத்து எனது தோலை பொன்மயமாக விளங்குந்துருத்தியாகச்செய்து அதில் சவம் நிரப்பி அதை யுருட்டிக்கொண்டே நீந்திச்சென்று அத்தம்பத்தின் மீதேறிப்போகுதல் அழகாகுமென்று தமது விளக்கமுற்ற தலைகீழே விழும்படிக் கழுத்தைவெட்டிக்கொண்டு கீர்த்தி புனைந்தார். அவ்வாறு கண்டியூரர் கூறியிறந்ததைப்பார்த்த வெற்றியுள்ள எனைய மூன்று வீரர்களும் அப்படியே செய்து அவ்வேரியை நீந்திச்சென்று உன்னதமுடையதாய் பலவுறுப்புக்களமைந்து வானமட்டு மோங்கிய மதிலின் மேலேறிப்பகைவனுகிய வல்லாளனுடைய கோட்டையை

எதிரிலேபார்த்து அக்கோட்டையின் எழடுக்குகளையும் யாதோரிடையூறுமில்லாமல் அதி சுலபத்திற் கிட்டி பிரமனுடைய உலகமாகிய சத்தியலோகம் வரையிலோங்கியுள்ள ஓர் எகுத்தம்பத்தின் மீதமைந்த மாடத்தைப் பார்த்தனர். ஒருவராலும் ஏறமுடியாதபடி ஓர் தூணில் வஸ்திரத்தினாலான கூடாரமும அமைந்திருக்கின்றதே! இத்தூணமும் படாம் வீடும், முற்காலத்திலே திருமால் கரத்துள்ள விரலொன்றி விளங்கிய கோவர்த்தனகிரியோ? மணம் வீசும் கூந்தலுடைய பார்வதியார்தவ முன்னிலையில் ஒரூசிமுனையில் நின்ற அழகேதானோ? ஆகாயமளாவியிருந்து ஒப்பற்ற விந்தவரையானது பாதாளத்தழுந்தும்படியாக அகஸ்திய முனிவர் நீட்டி வளைத்த அவரது திருக்கரமோ? என்றிவ்வாறு ஆச்சரியப்பட்டவர்களுக்குள்ளே அழகுள்ள தஞ்சைமாநகரத்தரசரின் அமைச்சராகிய வேம்பரென்பவர் இஃதோர் பெரிய காரியமோ? முற்காலத்திலே ஆகாயத்தி லூடுருவிச்செல்லும் சூரபன்மாவினுடைய மேலைக்கோபுரத்தில் அவனுடைய குமாரனான வச்சிரவாகுவினது முதுகென்பை ஏற்றி அவ்வெலும்பின் மீதிற் சூரியனைப்போலேறி நின்று இனிமையுடன் கூத்தாடுவோர்களின் புராதனமான குலத்தில் நிலைத்துள்ள நமக்கும் இஃதருமையோவென்று கூறிப்பின்னும் இவ்வுலகில் பிறக்கும்போதே இறப்பதற்கென்றே நியமித்திருக்கும் இச்சரீரத்தால் இனியாகவேண்டியது வெற்றியொன்றேயாகலால் இத்தூணிலே உகிரத்தோடு மணலையுஞ்சேர்த்து மேன்மைபெற்ற யானைமுகக்கடவுளைத் தியானித்துப் பூசி ஏறில் ஜயமாம். இனியிறக்கத்தகுவது நாமே யாகுமென்றெண்ணித் தமதுடைவாளை யுருவி வீசிக்கொண்டு உயிர்துறந்தனர். அப்போது மிகுதியாய் நின்ற வீரர்களிருவரும் அவருதிரத்தில் மணல் கலந்து அத்தூணின் மீதுந்தங்கள் மீதும் பூசிக்கொண்டு தங்களுக்குத்துணைவராக வந்து வழிவிட்ட ஐங்கரன், அறுமுகவன், துர்க்கை, வீரமாகாளி இவர்களைத் தியானித்து அத்தூணிற்றொத்தியேறி வல்லானும் அவன் மனையாளும் வசித்திருக்கும் கூடாரவாயில்கடந்து உள்ளே சென்றார்கள்.

அப்போது வல்லான் வலியமைந்த வச்சிரகவசத்தைச் சரீரத்தில் தரித்து இரண்டு கரங்களும் வச்சிரத்தண்டும் வச்சிரவாளும் தாங்கிக்கொண்டிருக்க, அன்னத்தூவியும் மல்லிகை மலரும் பரப்பிய சிறந்த மெத்தையில் நித்திரை புரியவும் அவன் பத்தினி அனங்கவல்லியோ சென்ற நான்கு தினங்களினும் சிந்திக்கின்ற சித்தமுடையவளாய் வருந்தி ஐயோ! நாம் கண்ட சொப்பனத்தை நினைக்கும் போதெல்லாம் மனம் கபீலெனக்கலங்குகின்றது சோழனோ விசேடித்த கடுங்கோபனாய் விட்டான். அவன் அறைவித்த பறையினால் மேல் விளையப்போகின்றது இதுவென்று அறிந்திருக்கின்றோம். சிறந்த தேவர்கள் பகை நேரிடினும் செங்குந்தர்களுடைய கொல்லத்தக்க பகை அணுவளவும் கூடாதே கழிந்த நான்கு தினங்களும் நான்கு யுகங்களாகக் கடந்தன. இன்னுமிருக்கின்றது ஒரே நாளாகும் இன்றிரவுங்கழிந்தால்

அதன்மேற்றுன்பமில்லை. என்றெண்ணி சூரியன் கீழ்த்திசையில் உதயமாகாததிற்கு முந்தித்தான் சுகமடையும் பொருட்டுக் காலையிற் செய்யவேண்டிய நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு, தனது கணவனைத்துயிலெழுப்பும் வழக்கப்படி செய்வதற் கெண்ணியிருந்தனள். அங்குசென்ற வீரர்களிருவரும் இவையனைத்தையும் சாளரவழியாய்ப்பார்த்து அம்மா ! தருமத்தைக் கெடுக்கும் கொடியவனாகிய இந்தப்பாவிக்கு வாய்த்திருக்கும் ஐஸ்வர்யமே ஐஸ்வர்யம். அவரவர்கள் செய்கின்ற தவத்தினளவுக்கு இம்மியளவுங்குறையாதபடி வரந்தருதலே கடமையாக்கொண்ட நம்மை யடிமையாக வுடைய சிவபிரான் இவனுக்குப்பாலித்தவரமானது. பின்னர் யிடையிற் கெடுமென்று கூறியதினாலோ ? வெற்றி மிக்க நம்முடைய இனத்தவர்கள் பதின்மரும் சூழ்ந்துகொண்டிருப்பதாலோ? இக்கொடியவன் இன்னும் விழிக்கவில்லை. இப்போது இவன் விழித்திருப்பானாகில் எங்கள் சபதப்படி முடிப்போம். நினைத்து இவன் நித்திரை விடுதலைக்காணுவோமென்று சிந்தித்து அக்கூடார வாயிற் படிக்கெதிரே வந்தார்கள். குற்றமற்ற அனங்கவல்லியும் வல்வானுறங்கும் கட்டிலைக்கிட்டி அவன் முகத்திற் கெதிராக விருந்து தனது கணவனாகிய அவன் கால்களைத்தடவுகின்றாள் அனங்கவல்லி வந்ததை யறிந்தபகைவனாகிய வல்லான் நித்திரைதெளிந்து கண்களைப் பிசைந்துகொண்டு சில கூறுகின்றான். அப்போது அவ்வீரர்களிருவரும் நான்கு தினங்களாக நித்திரை விட்டிருந்த அனங்கவல்லியையும், தீமை விசேடித்த கடூர சித்தமுடைய விக்கலனையும் ; அவனிருக்கு மண்டபத்தின் அழகையும், அங்கு வீசுகின்ற புஷ்பவாசனையின் சுகத்தையும் நோக்கி மனம் வேகும்படி கோபித்து மேகவாகனனான இந்திரனைப்போன்றும், விளக்கமுற்ற குபேரனைப் போன்றும் யாதோர் வருத்தமும் இல்லாதவனைப்போன்றும் நித்திரை செய்தனையே, உனக்குக்கூட இவ்வளவு போகம் வேண்டுமோ ? கொடுமையே புரிகின்ற கீழ் மகனே ! என்று சிந்தித்து தேவலோகமும் அதிசயிக்கும்படி ஆர்ப்பரித்து அவ்விக்கலனுடைய மார்பிலே பாய்ந்தார்கள். அப்போதே வல்லா னதட்டிக்கொண்டு சமீபத்திருந்தவாளையும் தண்டையும் எடுத்து முக்கிக்கொண்டெழுந்திருப்பதற்காகப் பிரயத்தினஞ் செய்ய வெண்ணி தலையைத்தூக்கினான்: அதுகண்ட நாராயணரென்பவர் சிரித்து முன்னாகப்பாய்ந்து ஒளி வீசுகின்ற தண்டு வாள் தாங்கியிருந்த கைகளையும், அவனுடைய குடுமியையும் சேர்த்துப்பிடித்துக்கொண்டு அசையவோட்டாதபடி அழுத்தி நின்றனர் அக்கால் வீரரென்பவர் திடீரென்று அவன் கழுத்தைப் பிடித்துக்கொண்டு தமது கையிலிருக்கும் விளக்கமுற்ற வீரவாட் படையால் வெட்டுதற்காகக்கையை பேனீட்டி நின்றார். அப்போது நாராயணரென்பவர் அவன் கட்டியிருந்த *கழலையும் வாளையும் கவசத்தையும், கதையையும், தமது

---

* கழலென்பது ஆடவர் கொடையாலும், வீரத்தாலுமணியும் பூண்.

கரத்தாற் பற்றி யெடுத்தனர் வல்லான் துணிவுடனெழுந்திருப்பதற்கேலாதவனாய் வருந்தினான். அப்போது கற்புடைய அனங்கவல்லியானவள் என்னைத்திருமணம் முடித்த மணவாளர் என்னும் யானையானது கண்ட சிங்க சொப்பனத்தின் பலன் சரியாய்ப் பலித்ததேயென்று சரீரம்துவளும்படி வீரநாராயணாதிகளிருவர்களின் விளக்கமுற்ற திருவடிகளிற் பணிந்து, இந்நிலவுலகம் வெகு காலம் புரிந்துவந்த பெருந்தவத்திற்றோன்றிய தரும தேவதையின் உருவங்களே ! இளைத்தவறியவர்களைப் பாதுகாக்கும் கற்பகத்தருவைபோன்றவர்களே ! யாங்களீடேறும்பொருட்டு வேண்டிய வரங்களைப் பாலிக்கும்படி எழுந்தருளிய ஒப்பற்ற பரம்பொருட் சொரூபங்களே ! இடமகன்ற உலகமெங்கும் துதிக்கின்ற முருகக்கடவுளைப்போன்று வந்த தமையன்மார்களே ! அடியேங்கள் ஏழைகள் நாங்களிருவரும் வரிசைப்படி உங்கட் கடைக்கலமானோம் என்னுடைய கணவனைக் கொலைபுரியவேண்டாம் நான் உங்களுடைய பெண்களுக்குள்ளே ஓர் பெண்ணாயெண்ணிக் காருண்யத்தினால் மாங்கல்யப் பிச்சை கொடுக்கவேண்டும் என்று தாமரை மலர்போலும் கண்களில் மிகவும் துக்க நீர் சொரியும்படி பிரார்த்திப்பதைத் தம்மையடைந்தோரைப்பாதுகாக்கும் காருண்யமுடைய உத்தமோத்தமராகிய வீரர் இரக்கங்கொண்டு முன் தூக்கிய கைமேலே நிற்கும்படி நிறுத்தி மற்றோர் கையை நீட்டி மாங்கல்யப் பிச்சை கொடுத்தோம் பெண்ணே ! நீ மனம் வருந்தாதே எனக்கூறி இவனை வெட்டுவதற்கும் ஓர் தடை வந்து சம்பவித்தது ஆதலால் இவ்விக்கலனைப்பிடித்துக்கட்டக்கடவாய் அதன்பின் வளமைமிக்க தஞ்சைமாநகரத்திற் கிறைவனாகிய பராந்தகச் சோழனுடைய சமுகத்திற் கொண்டுபோய் இவன் றலையைப் பார்ப்பீராகவென்று அவ்விடத்திலே முன்பு கூறிவந்த சபதத்தை முடிப்போமென வீரர் கூறுதலும் இளையவராகிய நாராயணரு மதற்கிசைந்து, விக்கலனுடைய மார்பின் மீது வீரரென்பவருட்கார்ந்திருப்ப, நாராயண முதலியார் அவ்விக்கலனுடைய கைகளிரண்டையும் தனித்தனி சேர்த்து இழுத்து வலிமை யமையும்படி பூதவிலங்குமாட்டினார். அப்போது வலிமைமிகுந்த வல்லான் வீரநாராயணரை நோக்கி ஒப்பற்ற வல்லமையுடைய ஜெயவீர சிம்மங்களே ! எனது வணக்கமுள்ள விண்ணப்பத்திற்கு மட்டும் சிறிது செவி சாய்த்தருள் மின்கள் நான் மனைவியாகக் கொண்ட சிறப்புற்ற அனங்கவல்லியால் என் பிராணனைப் பாலித்தீர்கள். எத்தகையோர்க்கும் வல்லமையுடையோன் யானே ! எனக்கொரு பகைவன் இந்நிலவுலகத்தில் இல்லை யென்று களித்துக்கருவித்துப் பாதாளபரியந்த மாழ்ந்த கடல் நடுவில் திருலோக பயங்கரனாகிய இராவணாசுரன் ஆச் சந்திரகாலம் அழிவில்லாத கோட்டை கட்டிக்கொண்டு நிர்ப்பயமாக வாழ்ந்தது போல இவ்வகாதமான ஏரி நடுவில் அபேத்யமான வீடு கட்டிக்கொண்டு சத்துருக்களாற் பிராண பயமில்லாதிருந்த நம்மிடத்தில் வருவதற்குக் கொஞ்சமாவது அச்சமில்லாமல் ஓர் அடியெடுத்து வைக்கத்தான்

ஆராலே கூடும் ? இவ்வளவு தைரியத்துடனே எல்லாத்தடைகளையும் பேதித்துக்கொண்டு வந்த படியினாலே, நீங்கள் அசகாய சூரராயிருத்தல் வேண்டுமென்பதற் கையமுமுண்டோ ? ஆதலால் இனிநாம் நமதூரின்மேல் ஆசை வைக்க வேண்டியதேயில்லை ஜெயகாலமிருந்ததினால் வெகுகாலம் அபாயமின்றி வாழ்ந்தோம். அதுவோ இன்றோடு தொலைந்து போய்விட்டது. ஓடுகிற ஆறு எப்பொழுதும் ஓடிக்கொண்டேயிருக்குமா ? இராதன்றோ ? ஆதலால் இப்போது உங்கள் வெற்றியால் தோல்வியுற்றேன். எனக்கூறி அவ்விருவர்களையும் தனதறியணை மீதெழுந்தருளுவித்துத் தனக்கு விருதாகவிருக்கும் பொற்றலைப்பையும் செங்கோலையும், தனது மாயையில் வல்ல நான்கு குதிரைகளையும், புட்பகத்தேரையும், வச்சிர கவசம், வச்சிரவாள், வச்சிரதண்டம், என்னு மிவைகளையும், அவர்களிடத்திற்கொடுத்து இச்சொத்துக்கள் யாவும் இனி உங்களுடையவைகளே. சந்தோடமாகக் கைப்பற்றிக்கொண்மின்கள் ! இனி நான் இந்தத்தீவில் நில்லாமலும் வேறொரு கபடம் எண்ணாமலும் ஒருவர்க்குந் தீங்கு செய்யாமலும் கிழக்குதித்துள்ள சூரியன் மேற்குறுமுன்னமே கண்காணாத தேயத்திற்போய் உங்கள் பெயரைச் சொல்லிப் பிழைத்துப் போகின்றேன் என்று பிரமாணிக்கஞ் செய்து உடம்படிக்கை பண்ணினான். இதனைச் செவியேற்ற வீரநாராயண முதலியர்களிருவரும் மனதிரங்கி இவனைக்கொல்லாது விடுவதனால் நம்புகழ் நெடுநாள் இவ்வுலகின் கண் நிலை பெற்று விளங்குமல்லவா ? என்றெண்ணி ஓ அதிசூரனே ! அஞ்சற்க எனக்கூறி அபயாஸ்தந் தந்தனர் பின்னர் அவனாற்றரப்பெற்ற பொருள்களை யெல்லாம் தங்கள் வசம் பண்ணிக்கொண்டு, அவனுக்கிட்டிருந்த பூதவிலங்கைத் தரித்து அவன் மனைவியையும், அவனையும் தங்களோடழைத்து நூலேணியின் வழியாய்க் கீழேயிரங்கி, மூன்றடுக்குப்பரியோடுங் கூடிய கோட்டைக்குள் நுழைந்து அங்கோர்பால் அவனாற் சிறைப்பட்டுள்ள ஆடவர் பெண்டீர்களை யெல்லாம் சிறை நீக்கி அவரவர்களுடைய சுதேசம் போய்ச் சேர உத்திரவும் வழிச்செலவுங் கொடுத்தனுப்பி விட்டு, நாம் வந்த விடத்திற் பிரதானமாக்குறித்த காரியத்தைத் தெய்வ கடாக்ஷத்தால் முடித்துக் கொண்டோம். இனி இங்குவரவேண்டிய ஆவசியகம் நமக்கொன்றுமில்லையாதலால் இக்குள்ள அற்புதங்களை யெல்லாம எந்தக்காலத்தில் வந்து பார்க்கிறது ? எப்படியும் ஒரு முறை வந்த நாம் முழுவதும் செவ்வையாய்ச் சுற்றிப் பார்த்து விட்டுப் போகலாமே யென்று தமக்குள் நிச்சயித்து அவ்வல்லானைக் கொண்டே அக்கோட்டையின் மூன்றடுக்குகளிலும் ஏறிப்பார்த்துப் பின்னர் அவற்றின் பக்கங்களிலிருக்கின்ற குதிரை லாயம், மாட்டுத் தொழம், மடைப்பள்ளி முதலானவைகளும் புகுந்து நோக்கிப் பின்பு மெத்தையைச்சுற்றியிருக்கின்ற சோலைக்குள் பிரவேசித்து வல்லான் உலாவுகிறதற்கு ஒழுங்காகவும் விசாலமாகவும் சமைக்கப்பட்ட சாலைகளையும், அச்சாலையின் இருபக்கங்களிலும் வரிசை வரிசையாய் நாட்டியிருக்கின்ற தெங்கு கமுகு வாழைகளையும்

பல சாதிப் பூஞ்செடிகளையும் அவைகளைச் சுற்றிப் பொன் வெள்ளி ரத்னங்களாற் கட்டப்பட்ட சிறு பாத்திகளையும் அப்பாத்திகளுக்கு நீலரத்தினக்கால் வாய்களின் வழியே வந்து பெருகும்படி எரி நீர் பாய்ச்சும் சூத்திரத்தையும் அங்கங்கே வட்டமாகவும் சதுரமாகவும் சமைக்கப்பட்டிருக்கின்ற சொர்னமேடைகளையும் தெய்வரம்பைக்குச் சமானமாகிய ஸ்திரீகளுடனே வல்லான் ஜலக்கிரீடை செய்வதற்கு அதிக விசாலமாக அடியிற் பளிங்குக்கற் படுத்து சுற்றிலும் மரகதக் கணை யோட்டி வஜ்ரப்படிகட்டி முத்துப்போலத் தெளிவும் பால்போல மதுரமுமாகிய குளிர்ந்த நீர் நிறைந்திருக்கின்ற தாமரைப் பொய்கையையும், அச்சோலையின் கிழ்ப்புறத்தில் தங்கச்சுவரெழுப்பி வெள்ளித்தூண் நிறுத்தி நீலப்பாவுக்கல் எற்றிப் பவளக்கொடுங்கை அமைத்துச் சுவரின் ஒரு பக்கத்தில் பாரதயுத்தமும், மற்றொரு பக்கத்தில் ராமராவண யுத்தமும், பின்னொருபக்கத்தில் சிவனது அறுபத்துநாலு திருவிளையாடலும் வேறொருபக்கத்தில் கிருஷ்ணலீலையும் சிறப்பாகத் தீட்டி யிருக்கின்ற அற்புதமான மண்டபத்தையும், அதன் மத்தியில் வல்லான் விநோதமாய் வீற்றிருக்கும்படி நவரத்னமயமாக உண்டாக்கப்பட்ட சிங்காதனத்தையும், அதனருகில் இருக்கும் பத்மராக பீடத்தையும் தந்த நாற்காலிகளையும் மற்றுமுள்ள பற்பல அதிசயங்களையும் தனித்தனி நோக்கினவர்களாய், மேற்புறத்தில் சயனக்கிரகம் ஒன்று சமைத்து அதில் கிளை விளக்கு தோர் விளக்கு முதலிய பல விளக்குகளையும் வரிசை வரிசையாகச் சுவர்முழுதும் நிறைத்திருக்கின்ற நிலைக்கண்ணாடிகளையும் விதவிதமான சித்திரப்படங்களையும் வீணை தம்புரு மிருதங்கம் முதலாகிய பற்பல வாத்தியக்கருவிகளையும் இந்திரவிமானம் போல நவரத்தன மயமாய் இலங்குகின்ற உன்னதமாகிய சப்பிரகோளமஞ்சத்தையும் அதன் மேற் பக்கத்தில் விசாலமா யிருக்கின்ற அழகான சரிகைவிதானத்தையும் அதைச்சுற்றிக்கட்டிய பலவர்ண ஜாலர்களையும முத்துக்குச்சுகளையும் நாற்புறத்திலும் அடிவரையில் தொங்கவிடப்பட்டு உட்புரத்திலுள்ள விசித்திரங்களையெல்லாம் விசிதமாகத்தெளிந்த கண்ணாடி போலக்காட்டுகின்ற மெல்விதானரவை சல்லாத்திரையையும் கட்டிலின்மேல் மயிர் அன்னத்தூவி பஞ்சுமுதலியவற்றால் தைத்து இருக்கும் ஐந்தடுக்குமெத்தைகளையும் அவைகளின்மேல் அகல விரித்திருக்கும் சலவைத்துப்பட்டியும் அதன்மேற் போட்டிருக்கும் விலையுயர்ந்த முகமல் திண்டுதலையணைகளையும் கட்டிலைச்சுற்றி அணியணியாக நிறுத்தியிருக்கும் நாநாவித சூத்திரபிரதிமைகளையும் அவைகளிற் சில சாய்மரைபோடுவதையும் சில ஆலவட்டம் அசைப்பதையும் சிலமணி அடிப்பதையும் சிலஎக்காளமூதுவதையும், சிலபேரிகைமுழக்குவதையும் சிலபடைவீரர் போல நிரைநிரையாக வருவதையும், சில அவைகளுக்கெல்லாம் முன்னே தளகர்த்தர் போலக்குதிரையேறி வருவதையும், சில துப்பாக்கிமுதலிய ஆயுதங்களைக்கொண்டு யுத்தபாவனை காண்பிப்பதையும், சில மத்தளங்கொட்டுவதையும் சில தாளம்போடுவதையும் சில வீணை வாசிப்பதை

யும் சில நடனஞ்செய்வதையும், அருகில் தங்கத்தாம்பாளங்களில் அடுக்கடுக்காய்வைத்திருக்கும் போளி, சுகி, லட்டு முதலாகிய பலகாரங்களையும், பொற்செம்புகளில் பசுவின் பாலைக்கறந்து கற்கண்டு போட்டுக் காய்ச்சி நிரப்பி வைத்திருப்பதையும், மரகதத் தட்டுகளில் சிவிய வாசனைப்பாக்குடனே விதம் விதமாக மடித்துவைத்த வெற்றிலைச் சுருள்களையும் பவள வள்ளத்தில் வைத்திருக்கும் கர்ப்பூரம், ஜாதிக்காய், ஏலங் கிராம்புகளையும், வஜ்ர கரண்டகங்களில் நிறையத் துணித்து வைத்திருக்கும் முத்துச்சுண்ணம்பையும், மாணிக்கக்கிண்ணத்தில் அத்தர், புனுகு, ஜவ்வாது கலந்து குழைந்து வார்த்திருக்கும் கலவைச் சந்தனக் குழம்பையும், நவரத்ன மயமாகிய கழுத்து நீண்ட செம்பில் நிரப்பியிருக்கும் விலையுயர்ந்த பனி நீரையும், வாயகன்ற தங்கத் தட்டுகளில் சித்திர விசித்திரமாகத் தொடுத்துவைத்திருக்கும் பரிமளப் பூச்செண்டுகளையும், தலைமாட்டுப் பக்கத்தில் அந்தக் கட்டிலின் கிட்ட வைத்திருக்கும் கோமேதகத் தம்பலப்படிக்கத்தையும், இன்னும் மற்றுமுள்ள விசித்திரங்களையெல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டவர்களாய் வல்லான்மீது முன்னிலும் அதிக இரக்கங்கொண்டு அவனைப் பார்த்து ஓ சத்தவீரனே! நீ வெகுகாலமாய் நல்ல செல்வத்தை யனுபவித்தவனாதலால் இன்னமும் அவ்வாறே யிருக்குமாறு உனக்கிங்கிருக்கும் பொருள்களில் வேண்டுமான வரையும் யெடுத்துக் கொள்க வென்றனர். அவன் அவ்வாறே வேண்டுவனவற்றை யெடுத்துக் கொண்டு வந்தவுடன் அவனிடத்தினின்றும் தாங்கள் கைப்பற்றிய புஷ்பகத் தேரில் அப்பொருள்களோடவனையும் அவன் மனைவியையும் ஏறச்செய்து வஜ்ரதண்டம் முதலியவைகளை அதிலோர் புறத்தில் வைத்து அவன் தந்த பொய்த் தலையையும் அதிலிருத்தி வாயுவேகி முதலிய நான்கு புரவிகளையும் அதிற் பூட்டித் தாங்களும் ஏறிக் கொடியவன் வசித்திருந்த கோட்டையும் வீடும் கொடியனவே என்று நூல்கள் கூறுகின்ற முறைமையினால் அவற்றை நெருப்புக்கிரையாக்குதலே நன்மையென்றெண்ணி அப்படிப்பட்ட நகரத்தை தீக்கிரையாக்குவித்து மாயயாகிய குதிரைகளை யந்திரத்தினாற்றூண்டி ஆகாய மார்க்கமாய் நடத்தி எறிக்கப்பாலிறங்கி அவர்களைக் கீழே விடுத்து அவர்கள் பொருட்களையும் எடுத்துக் கொடுத்து இதுவே பிரயாணமாய் வேறொரு திசையும் நோக்காமல் வடதிசையே நோக்கிச்சென்று உங்களூரிலே போய்ச் சுகமாய் வாழ்ந்திருமின்களென்று அனுப்பிவிட்டு அருணன் அஸ்தகிரியில் விழுந்தருணம் வீரர்களிருவரும் திருவாலந்துறையென்னும் க்ஷேத்திரமடைந்து சில ஒற்றரைக் கூவித் தங்கள் வெற்றி வரவைப் பராந்தகச் சோழனுக் கறிவிக்கும்படி விடுத்து, அங்குள்ள மற்ற பரிசனர்கள் வசம் புஷ்பகத் தேர் முதலியவைகளை யொப்புவித்து ஒருவரிடத்தும் வார்த்தையாடாமல் அன்றிரவெல்லாம் தாங்களிருவரும் தனியே ஆலந்துறையார் சன்னதிக்கண் சென்று அவரது திருவடியைத் தியானித்துக்கொண்டிருந்தனர். இவர்கள்

சுற்றத்தினர் முதலிய பரிசனர்கள் இங்கிருந்து சென்ற பன்னிருவரில் பதின்மர் மாத்திரம் வந்து சேராத விதத்தை யறிவதற்கில்லையே யென்னுங் கவலைக்குள்ள மியந்தவராய் கண்டுயிலாதிருந்தனர்.

வீரமிகுந்த வீரநாராயண முதலியர்களிருவரும் வெற்றியோடும் விஜயமாயிருக்கின்றாகளெனத் தூதுவரால் கேள்வியுற்ற பராந்தகச்சோழன் பரமானந்த பரிதனுய் அருணேதயமாக வைந்து நாழிகைக்கு முன்னமே வெழுந்து நித்திய நியமங்களை முடித்து, வீதிவிடங்கப் பெருமானை விதிப்படி தொழுது ஆண் சிங்கத்தை யொத்தவனுய்ச் சர்வாபரண பூஷிதனுய் மதம்பொழிகின்ற பட்டத்து யானையின்மீதாரோகணித்து, அமைச்சர் முதலிய பரிசனர்களோடும் நால்வகைச் சேனைகளும் புடைசூழ்ந்துவர சூரியோதயமாகத் திருவாலந்துறைவந்து சேர்ந்தனர். இவர் வரவை யுணர்ந்த வீரநாராயணரிருவர்களும் தாங்கள் வல்லானிடத்திலிருந்து கொண்டுவந்த புட்பகத்தேரினிடத்தே பரத நாடகமாடுகின்ற நான்கு குதிரைகளைப்பூட்டி அவற்றிலாரோகணித்து அரசனெதிரிற் சென்றனர். முன்னமே இவர்களைக் குறித்திருக்கின்ற நல்ல எண்ணத்தினுல் இவர்களே வீரநாராயணர்களென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்தனன். அப்போது அவ்வீரர்கள் முகத்தில் வீரலட்சுமி குடிகொண்டு கொலுவிருக்கவும் ஒளிர்கின்ற தன்மை யமைந்த வாட்படையானது திருக்கரத்தில் விளங்கிக்கொண்டிருக்கவும் வியாக்கிர துவசம் ஓங்கவும் வெற்றிமாலையணிந்த மார்பினராய் இரண்டு மன்மதர்களென்று சொல்லும்படி விளங்கினர். அநேக அரசர்களுடைய விலையில்லாதனவாகிய இரத்தின கிரீடங்கள் பல விளங்கவும் மாறுபாடில்லாத சிறந்த இரத்தினவகைகள் பல பிரகாசிக்கவும் எள்ளினும் முதன்மையுடையது எதுவென்று சொல்லத்தக்க திரவியக் குவியல்களிருந்த தேர்த்தட்டின் நிலையிலிருக்கின்றவைகள் யாவராலும் சொல்லுதற் களவுபடாதனவா யிருந்தன. வெற்றியமைந்த அவ்வீரர்கட்கு மத்தியில் ஒரு சிரமானது குடுமிவிளக்கவும் நெற்றியில் திருவெண்ணீறு ஒளிரவும், புருவங்கள் நெறிப்பேறவும் கூட்டமாயிருக்கும் மீசைகள் துடிக்கவும் கண்கள் சுழலவும் வாயிற் பொருந்திய பற்களெல்லாம் நெறநெறவென்றொலித்துக் கோபக்குறிப்பைக் கூறிக்கொண்டிருக்கவும், வெட்டுண்ட கழுத்தினின்றும் உதிரமானது ஒழுகிக்கொண்டிருக்கவும் வீரபட்டம் மிக்க பிரகாசம் வீசவும் இது முதலாகிய மேற்கூறிய இலக்கணங்கள் நிறைந்துள்ள சிரசைப்பார்த்து பராந்தகச்சோழன் அங்குள்ள மற்றயவற்றையெல்லாம் பாராமல் விட்டுவிட்டு இச்சிரம் விக்கலனுடையதேயென்று நினைத்து நீதி முதலிய குணங்கள் நிறைந்த வீரமென்னும் பெருஞ் செல்வமுடையவர்களே! கடல்போலும் அகழியின் கண்ணுள்ள அதியுன்னதமான கோட்டைக்குள்ளிருந்துகொண்டு அரசர்கள் ஏவுகின்ற கொடிய ஆயுதவகைகளுக்கு மச்சமடையாத வல்லபமுள்ள மேன்மைவாய்ந்த நமது பகைவனுகிய

வல்லானை நீங்களெவ்வாறு வெட்டினீர்களென்று வினவினன். அப்போது அவ்வீரர்களிருவரும் கடப்பமலர்மாலையை ஆபரணமாக வணிந்து விளக்கும் குமாரக் கடவுளைத் தங்களிதயத்திலிருத்தி அவ்வேந்தனுக்கு மெய்த்தலை கொடுக்க வெண்ணங் கொண்டவர்களாய், ஓ சிறந்த பராந்தகனே! நாங்கள் வெட்டின விதத்தை யறிவாயாகவென்று கோபம் மேம்பட்ட சிங்கங்களைப் போலக் குதித் தார்ப்பரித்து தங்கள் பொன் போலும் அழகிய தலையறுத்து அவனெதிரே வைத்தார்கள்.

இவ்வாறு வீரநாராயணர்களுடைய தலைகள் மீமே பொருந்திய வளவில் ஆச்சரியப்பட்டுப் பூமிதேவியானவள் மனங்கசிந்து இப்பழி நம்மைச் சாராதொழிகவெனப் பாதாலத்திற் கோடினள். அதுகண்ட பராந்தகச் சோழன் சுவரிற் றீட்டிய சித்திரமென்ன அசைவுற்றிருந்தனன். நீரூம்றென அவன் கண்களினின்றும் துக்க நீர்த்துளிகள் முத்துப்போன்றும் தாரை தாரையாய்ப் பெருகி வழிந்தோடிற்று. சகலகலைநலுமறிந்தோர்களாகிய பெரியோர் தங்கள் சரீரத்தை மறந்தனர். அவ்வீரர்களோடு முன்னர்வந்துள்ள சுற்றத்தார்சினேசர் முதலிய யாவரும் வருந்திய சிந்தையுடையவரானார்கள். தெய்வீகமுள்ள குதிரைகட்கு கண்களில் நீரொழுகியது. மாதராயினோர்கள் தங்கள் வயிற்றைத்தடவிக் கரங்களைப்பிசைந்தனர். சைன்யங்கள் சித்தந்தளர்ந்தன. வெற்றிமிகுந்த இவ்வீரர்கள் தலைகளறுபட்டதற்காக யார்தான் வருந்தாதொழிவர். சோருதலுற்ற மனத்தனாகி பூமியில் வீழ்ந்திருந்தெழுந்த பராந்தகச்சோழன் வெயர்வையூற்றெழும் சரீரத்தினனாய் துக்கநீர் ததும்பும் கண்களுடன் மிகு தீவிரமாய் விளைந்த இப்பெரிய பழியின் சம்பவம். என்னை விட்டுப் போவதற்காக இன்றுயான் செய்பத்தக்கதென்னையோ? வென்றேங்கி வல்லான்றலையை வெட்டியதெவ்வாறென்று வினவிய க்ஷணமே இவ்வீரர்கள் தங்கள் தலையை யறுத்துக்கொண்டபழி என்னைச் சேர்ந்தது. ஆதலால் தென்றிசைக்கணுள்ள யமலோகத்திற்கும், நரகம் என்னை என்வரவில்லையென்று கேட்கும். அந்நரகப் பிராப்தி எனக்கொழிவதற்காக இந்த க்ஷணமே என் தலையைத்தருகின்றேனென்று உடைவாளையுருவி கரத்திற்றாங்கினான்.

நீர்க்குமிழி கானற்சலம் ஆகாயத்தாமரை என்னும் இவைகளைப்போன்று அழிவுற்றதாகிய இச்சரீரத்தைக் கொடுத்தால் நாம் பெற்றுள்ள பழி நிவாரணமாகுமென்று அவ்வுடைவாளினால் வெட்டிக்கொள்ளும்படி தனது கையைத் தூக்கினான் அத்தருணத்திலே ஓர் பெருஞ்சோதி தோன்றி அச்சோதியிலே பரிசுத்தமான மயில் வாகனத்திலாரோகணித்துச் செந்நிறமமைந்த சேவற்றுவசம் விளங்கும்படி வேற்படையேந்திய முருகக்கடவுள் பிரசன்னமாகிப் பெரிய இந்நிலவுலகத்திற் றெழுந்தருளிப் பராந்தகச் சோழனுடைய திருக்கரத்தைப் பிடித்தருளினர். அப்போது ஆகாயத்திலே தேவதுந்துபிகள் கோஷித்தன தேவர்கள் மலர்களை யுதிர்க்கின்ற சிறந்த வருஷமானது உல.

கொண்டெழுந்தன. முருகக்கடவுளினது தரிசனத்தை முற்பட்டு நின்ற பெருந்தவசிகளெல்லாம் பணிந்தார்கள் அம்முருகக் கடவுளுடைய திருவுளப் பாங்கின்றன்மையை கூறுதலெளிதோ?

ஓ தஞ்சைமாநகரத்தை அரசாண்டு வாழ்கின்ற மன்னவனே உன்னுற் சரீரம் நீங்கியுயிர்விட்டவர்கள் பிழைப்பார்கள் நீ அச்சமுறாதே யென்று நங்குமாரக்கடவுள் திருவாய் மலர்ந்தனர். முருகக்கடவுளின் துவாதச நோக்கப் பார்வையின் விசேடத்தால் உடனே மேம்பாடான மெய்த்தலை கொடுத்த வீரர்களிருவரும் அதற்கு முன்னிறந்த வீரர்கள் பதின்மரும் உயிர்பெற்றலகத்திற்றோன்றி நின்றனர். இதனைக்கண்ட பராந்தகச்சோழன் பேரானந்தப் பெருக்கில் மூழ்கிப் பரவசமடைந்து கர்த்தாதனின் பேரருட்டிறத்தினை வியந்து வியந்து கொண்டாடித் துதித்தனர். இவ்வுலகத்தில் ஞானமுடையவர்களடைந்துள்ள திருவருட்டன்மையை தெளியவல்லவர்களுமுண்டோ? பின்னர் பராக்கிரம மிகுந்த வீரநாராயணனியரை நோக்கி அரசன் சாவதனமாய் நீங்களிங்கிருந்துபோனது முதல் நடந்த காரியங்களனைத்தையும் விபரமாகச் சொன்மின்களெனக் கேட்டான் அதற்கவர்களனைத்தையுங் கூற அது கேட்ட அரசன் மிக வியந்தவனாய் பின்னர் அப்பன்னிருவர் வேண்டுகோளால் ஆலந்துறையார்க்கும் அவரது பரிவாரதேவதைகட்கும் அபிடேகமாதிய வாராதனைகளைச்செய்து முடித்து அப்பன்னிருவர் முதலிய பரிசனர்களோடு போஜனாதி காரியங்களை நிறைவேற்றி மத்தியானவேளையில் யாவரும் தஞ்சைக்குப்பிரயாணமாகுமாறு கட்டளையிட்டான் அக்கட்டளையைக்கேட்ட கருமாதிகாரர் நால்வகைச்சேனைகளையு மணிவகுத்து முன்னும் பின்னுமாக சிறந்தி வல்லானுடைய நால்வகைப் புறவிகள்பூட்டி அவன் செங்கோல், கவசம், வாள், தண்டம், பொற்றலை என்னு மிவைகளை வைத்துள்ள புட்பகத்தேரை நடுவில் வைத்து மற்றக்காரியங்களையுங் கிரமப்படி நடத்தினர்.

உடனே பன்னிரு செங்குதவீரரும் பஞ்சகல்யாணிக் குதிரைமீதேறி அப்புட்பகத்தேரைப்புடை சூழ்ந்தனர். கொடிகுடை முதலிய சின்னங்களும் விருதுகளும் ஆங்காங்கு நெருங்கின. இத்தகைய வாடம்பரத்துடன் பராந்தகச் சோழனென்பவன் ஆதோரணரால் அலங்கரித்து வந்த தனது பட்டத்து யானைமீதேறி முன்னணியிற் கூடி, தோற்கருவி துளைக்கருவி முதலிய பஞ்சவாத்தியங்களும் கோஷிக்கச்சென்று தனதிராஜ தானியாகிய தஞ்சைமாநகரையடுத்து அதன்நாற்பாங்கிலுள்ள வீதிகளிலும் முன்னரங்குள்ளோரான ஆடவர் பெண்டிரனைவரும் செங்குந்தவீரர் வல்லானைவெல்ல வஞ்சிமாலை சூடி உலாவந்தகாட்சியைக் கண்டகண்ணால் இப்போதவனை வென்று வாகைமாலை சூடி அரசனுக்கு வெற்றிதந்து அவனோடுவரும் உலாவையுங் கண்டுகளிக்க மெல்லமெல்லச் செல்கின்றான். அப்போதவ்வீதிகளில் வசிக்கும் ஆடவர் பெண்டிராதிய சனங்கள் யாரும் வெளிவந்து முன் கண்டுள்ள வேடிக்கை

களிலும் விசேஷமான வேடிக்கைகளோடு அரசனும் யானை சேனை முதலிய பரிவாரங்கள் சூழ வருவதையும். நடுவே நான்கு குதிரைகள் பூட்டிய தேரொன்று தாங்கள் முன்பு கண்டு வியந்துள்ள பன்னிருகாவலர் சூழ வருவதையும் அத்தேரிலோர் உயர்ந்த வாதனத்தின்மேல் கண்கள் சுழல புருவ நெரிய மீசை துடிக்க உதடு பதைக்க விழிநீர் சிந்த முடிந்த சிகையானது இரு செவிப்புறத்திலு மிருக்கின்ற அழகான காகபட்சத்துடனே அவிழ்ந்து குலைந்தலைய நெற்றியில் திருநீறும். திலகமும் வீரபட்டமும் பிரகாசிக்கக் கழுத்தில் சர சர வென்று பச்சிரத்தமொழுக ஓர் தலையும் அதனைச்சூழ்வர சில வாயுதமுதலியன வமைத்திருத்தலையுங்கண்டு இத்தலையானது அதனைச் சூழ்ந்துவரும் செங்குந்த வீரரால் வெட்டிக்கொணர்ந்தவல்லான்றலைபோலிருக்கின்றது அதனைச்சூழ வைத்திருப்பன எத்தகையவரசர்களையும் அவர்களையும் அவர்கள் விடு மெத்தகையவாயுதங்களையுங் கண்டித்தெறியும் அவன் வச்சிரவாள் போலவும், இரும்பு கருங்கல் முதலியவைகளாற் சமைத்துள்ள கோட்டை கொத்தளங்கள் முதலியவைகளை ஒரே யறையிலுடைத்தெறிய வல்ல அவன் வச்சிரதண்டம் போலவும், அம்புகுண்டு முதலியவைகள் படவொட்டாது சரீரத்தைக்காத்துக் கொண்டிருக்கும் அவன் வச்சிரகவசம் போலவும், திரைதந்தபேரைக்காத்துத்திரைதராத அரசர்முதலியோரையதஞ் செய்யுங்குறியாக அவன் கையிலேந்தும் செங்கோல் போலவுமிருக்கின்றன அத்தேரோ எல்லாமாயையிலும் வல்லதாய் அவ்வல்லான் பெற்றிருக்கின்ற புட்பகத்தேரென்பதற்குச் சந்தேகமில்லை அதிற் பூட்டியுள்ள குதிரைகள் நான்கும் வாயுவேகமாய் நடப்பதும் மனோ வேகமாய்ச் செல்வதும் ஆகாயத்திற் பறப்பதும் அவனியிற் சுழன்றோடுவதுமான அவன் குதிரைகளே. இனியெக்காலமும் இவ்வுலகின் கண்ணுள்ள அரசர்கள் யாவரும் சுகமாக இரவிற்றூங்குவார்கள். மற்றையரெல்லாம் அவ்வவர்க்குள்ள செல்வத்தைப் பெண்டுபிள்ளைகளோடு ஆபத்தின்றி அனுபவிப்பார்கள் இது காறும் யாவர்க்கும் இரவும் பகலும் அப்பாதகனாலுண்டாயிருந்த பயமும் பீதியுமொழிந்து போயின என்று கூறிக்களித்தார்கள். அவருட்சிலர் சிரக்கம்பிதங் கரக்கம்பிதஞ்செய்து நீங்கள் கூறியவனைத்தும் உண்மையே! அப்புட்பத்தேரிலிருக்கின்ற தலை மாத்திரம் வல்லானுடைய தலையன்று அவன்றனக்கு விருதாகச் செய்து வைத்திருக்கின்ற பொற்றலையே யாகும். ஆயினு மவனுடைய அதிக்கிரமங்களுக்காதரவாயிருந்த வச்சிரதண்ட முதலியவைகள் இவர்கள் கைவசப்பட்டபோதே அவனவ்விடத்தைவிட்டு மறைந்து ஓடிப்போயிருக்க வேண்டும். அல்லதவனுங்கை வசப்பட்டடங்கி அடைக்கலம்புக இச்செங்குந்த வீரர் தமது தந்தையாகிய சிவபிரானைப்போல மிக விரக்கமுடைய மரபினராதலாலும், அவனு மச்சிவபிரானைக்கருதித்தவஞ்செய்து சகல வலியும் பெற்றுளோனாதலாலும், அவனையித்தீவிற்றலை காட்டா தோடிப்போய்ப் பிழைக்கும்படி விடுத்திருக்கவேண்டுமென்றார்கள். அது கேட்ட சிலர் அவர்களை யா

விக்கனஞ்செய்து "ஒருத்தார்க்கொரு நாளையின்பம் பொறுத்தார்க்குப்பொன்றுந்துணையும் புகழ்" என்பது பொய்யாமொழியன்றோ? மேலும் அப்பாதகனுடைய மனையாளோ மகாப்பதிவிரதை யெனக்கேள்வி ஓர் காலவன் இவர்களைப்பணிந்து மாங்கிலியப்பிட்சை கேட்டிருக்கவேண்டும் அதற்கிவர்களிரங்கி அவ்வாறே தந்து காத்திருக்கலாம் இதற்கையமில்லை எனக்கூறினார்கள். இப்படிப்பலரும் பலவாறு பேசிப்புகழ்ந்து தீபாலாத்தி கர்ப்பூராலாத்தி முதலிய பல ஆலாத்திகள் சுழற்றி முப்பழம் கற்கண்டு முதலியன வழங்கி வரப் பராந்தகச் சோழனவன் தஞ்சைமாநகரத்து நான்கு மாடவீதிகளிலும் உலாக்கொண்டு கொலுமண்டப மடைந்து சிங்காதனத்திருந்து வீரநாராயண முதலிய ரிருவரொழிய னையமுதலியர் பதின்மர்க்கும் இராஜ்யமுதலிய பலவெகுமதிகளைச் செய்தனுப்பி, அவ்விருவர்களைத் தனதருகிலழைத்து வைத்து நீங்கள் செய்தபேருதவி எனக்கேயன்று. என்னைப்போன்றுள்ள பல வரசர்கட்குமாதலால் இவ்வுதவிக்குத்தக்க கைம்மாறு என்ன செய்யப் போகின்றேன்? எனக்கொன்றுந் தோன்றவில்லை. ஆதலால் உங்கட்கென்னலாக வேண்டுவதும் ஆகக்கூடுமானதுமான காரியத்தைகேட்கின் தடையின்றியளிப்பேனென்று கூறினன். அதுகேட்ட வீரநாராயண முதலியர் களிருவரும் அரசனைப்பார்த்து ஓ இராஜாதி இராஜனே! இதுகாறும் உம்மாலும் உமக்கு முன்னுமது பிதாவாலும் சகல போகபாக்கியங்களைப் பெற்றுளோம் இன்னும் இவைபோன்ற நாடுகளும் நலங்களும் யெங்களுக்குதவ நீருந்தடையடீர் இனி எங்கட்குண்டாயுள்ள வழித்தோன்றல்கட்கும், எங்கட்குச் செய்யக்கருதுஞ் சிறப்பனைத்துஞ்செய்து காப்பதோடு இப்பிரபஞ்சவாழ்க்கையில் விரக்தியுண்டா யுள்ளவெம்மை யாதொன்றினும்பற்றுக்கொள்ளாதபடிவிடுக்கின் இப்போதே பொன்னம்பலவாணரையடுத்து அவரருளான் மறுமையின்பத்திற்குரியசாதனங்களிற் பழகி வீட்டை கூடிப்புனிதர்களாவேம் என்று கூறி அரசன் பால் அரிதில் விடைபெற்றுச்சிதம்பரத்தை யடைந்து சீவன் முத்தநிலையைப்பெற்று எங்குஞ் சிவசொரூபமாகவே பார்த்து திருவருணிலைமையில் நின்று காலக்கிரமப்படி தூல சரீரம் நீங்கிப்போகச் சீவன் முத்தர்கள் என்னும்பெயருமறையும்படி சத்துசித்தானந்த சொரூபமானது இருந்தவாறே பொன்போல் விளங்கி தென்னாட்டினும் எனையபலநாடுகளினும் உள்ளாரனைவரும் சுகமடையும்படி அவதரித்தவர்களாகிய திருப்பழுவூர் என்னும் நகரத்தை அரசாண்டிருந்த தீரவீரர்கள் கலியுகமொன்றில் சிகழும் வருஷமறுபதில் நடைபெறும் ஆண்டோன்றில் வரும் தைமாதம் சுவாதி நக்ஷத்திரத்தில் பூரணமடைந்தனர். அவ்வீரர்களின் சரீரத்தினுடைய நிழலுக்கொப்பாகிய பராந்தகச்சோழன் அந்தப்பரிசுத்தமான சரீரங்களொடுங்கிய விடங்களில் நாளைக்கும் விளங்கும்படி வீரநாராயணர் கோவிலென்னு மோர் ஆலயங்கட்டி அத்தலத்திற்கு வீரநாராயணர் புரமெனவுங் கூறியாவராலும் வழங்குவித்தனன் என்பதே! செங்குந்தவீரர்கள் வல்லானை வெல்லதூர்க்காதே வியின்

உதவியைக்கொண்டு தாண்டிய திருக்கடம்பூர் எரியானது நாளது காறும் * வீரநாராயணரேரி என்னும் பெயரால் வழக்குகின்றது.

"இவற்றிற்கு பிரமாணம்"

ஈட்டியெழுபது (58) வது கவி.

வல்லான்றன் றிருத்தேவி மங்கிலியம் பிழையாமன் மடிதாமேனற்றிங்
கெல்லொருமங்கிலியப் பிட்சையிடுமெனத்தாள் வீழ்ந்திரப்பவேண்டிக்
கொல்லாமல்விடுதல் புகழெனக்கருதியோகற் பின்கொண்டவாய்மை
நல்லார்களிருந்தவையின் புகழ்கைக்கோ காத்ததுகொணஞ் செங்குந்தம்.

இதுவுமது.

எல்லாக்காலத்தினுமொன்றேற பவருக்கில்லையெனுஞ்
சொல்லானதுகற்றுஞ் சொல்லறியாரேந்துகுந்தம்
வல்லானைக்கொல்லாமன் மனைவிக்கு மாங்கிலிய
முல்லாசத்துடனளிக்கு முதவியதொன்றறிந்தேமால்.

வல்லான்காவியம் மா. யி. சருக்கம் (17)வது கவி.

கண்ணகன்ஞால மேத்துங்கந்தவே ளென்னவந்த
வண்ணன்மீரபயமென்ற னன்பனைகொலற்கயானோர்
பெண்ணெனவளியாலீக மங்கலப்பிச்சையென்றாள்
பண்ணமர் மொழியாள் சாலப்பங்கய விழி நீர் சோர.

இதுவுமது.

மார்பகத்திருப்ப வீரனாரணன் வலித்துக்கைகா
லேர்பெறவிட்டான் பூதவிலங்கினை யிணங்கிப் போற்றிப்
பேர்பெறும் வல்லான் சொல்வான் பிராணனைத்தந்திர்கொண்ட
சீர்பெறும் பெண்ணுலென்றூற் செப்பிடு மாற்றங்கேண்மோ.

செங்குந்தர் மாலை 18-வது கவி.

பாவிக்குறும் பறுக்கும் பழுவூரன் முன் பன்னிருவர்
மேவிக்குளத்துற்ற கம்பத்திலேறியூன் வீசிக்கொண்டே
யாவிக்குறுதி செய்யாமல் வல்லானை யடக்கியபின்
றேவிக்கு மாங்கலியப் பிச்சையிட்டவர் செங்குந்தரே.

---

* இதனை காவிரியாறுகரை புரண்டோடினலும் வீராணத்தேரியின் விதை முதலுக்குமாகேதே என வழக்கும் பழமொழியானு மறிக.

### இதுவுமது 47-வது கவி.

சல்லாப சற்குண சங்கீத லோலர் தமிழின் மிக
வல்லாரை வாதினில் வெல்ல வல்லோர் மதி மந்திரப்போர்
கல்லாது கற்றவர் பல்கலை தேர்ந்தவர் காசினியிற்
செல்லாவழிச்சென்று வல்லானைவென்ற விச்செங்குந்தரே.

### இதுவுமது 51-வது கவி.

தக்கன் மகத்தைத் தகர் வீரபத்திரன்றுனெனவே
கொக்கரித்தார்த்து வல்லான்றனை வெல்லக்கொதித்தெழு நாள்
விக்கினந் தீர்த்திட வேண்டுமென்றே யவன் வீட்டிற் சென்று
சிக்கெனக் காளியைக் கைப்பிடித்தோர்களிச் செங்குந்தரே.

### சேங்குந்தமரபு விளக்கம் 2-வது கவி.

தாரணி மூன்று நடுங்குமோர் வீரனைத்தாம் வெலற்குப்
பேரணை யேறிய வீரந்தெரித்த பெருமையினால்
வீரணத்தேரி யெனப்பெறிற் செங்குந்தர் வீரங்களில்
ஓரணுவேனுமுரை வன்மைத்தோவிவ்வுலகமுமே.

### இதுவுமது 3-வது கவி.

நீரோட்டுங் கோட்டையில் வல்லானை வென்ற நெறியுரைப்பக்
கூரோட்டும் வாள் கொண்டளவில் சென்னி கொடுத்தருளிப்
பேரோட்டக் கூத்தன நீட்டியெழுபது பெற்றிருக்குஞ்
சீரோட்டுஞ் செங்குந்தர் மாட்சியை யாவர் சிதைக்குநரே.

### இதுவுமது (10) கவி.

தெவ்வாறிருகே சரிவச்சிரம்போய்ச் சிரங்கொணர
வெவ்வாறு வெட்டினையென்ன விறைவற்கிறைபயவா
திவ்வாறு வெட்டினனென்னத்தன் சென்னியையீர்த்துணர்த்துஞ்
செவ்வாரெருமுகு நஞ்செங்குந்தராண்டகைச் சிங்கங்களே.

### செங்குந்தர் திருக்கைவழக்கம்.

—யெங்குமிக
ரில்லாவுரங்கொண்டிறு மாந்தடல்கொளுமோர்
வல்லானைவென்றில் பால்வைத்தருள்கை.

சேனைத்தலைவர் மரபுவிளக்கச் சூராவளி.

—மாமேரு
வல்லானை யொத்ததிறல் வல்லானை வென்றுயர்ந்தார்
கல்லானைத் தின்னக்கரும்பளித்தே.

## செங்குந்தர் பிள்ளைத்தமிழ்

சப்பாணிப்பருவம் (10) வது கவி.

செந்திருமடந்தையுறை மார்பர்சோழேந்திரன்
சீர்கொண்ட சமுகமதனிற்
சென்றுவிடை கொண்டுகண்டோர்கள் கொண்டாடவே
தீரவீரியமதாக
வந்துமகமாயிதிரி சூலிமாகாளிமுன்
வலியவரமது வினவியே
வாங்கிக்கொண்டப்போது வீரதத்துவமுடன்
வலியதூண் மிசையேறியே
தந்திரவல்லானுடைய புரிசையுட்சென்றவன்
றலையறுக்கும் பொழுதினிற்
றையலவன்மனைவி மங்கிலியமுதவென்னவே
தந்துபொற்றலை கொணர்ந்தோர்
கொந்தலர்கடம்பணிபு யாசலர்மகிபாலர்
கொட்டியருள் சப்பாணியே
கோதற்றசெங்குந்தர் வீரநாராயணர்கள்
கொட்டியருள் சப்பாணியே.

---

## செங்குந்தர் சின்னக்கட்டியம்.

வஞ்சகமதாக வீரூணமெனுமேரியிடை
வகைபெற்ற தூண்கணிறுவி
மண்டபங்கட்டிமற்றதி விருந்தெண்டிக்கின்
மன்னவரை வதைத்தவல்லான்
செஞ்சிலைத்திறமும்வாள் திமையுங்கண்டமால்
தீவினைகள் வந்தவென்னவே

சிந்தைகொடவன்றனைச் சிதைசெய்வகையாய்ந்தினித்
 தினையளவு போதுமுவனை
விஞ்சவிடலாகாதெனச் செவ்வேடுணைவர்தம்
 விழுக்குலத்தவர்களல்லால்
வேறொருவராலணுவு மாகாதெனத்தேறி
 விண்ணவர் வியப்பவிலகும்
பஞ்சவனமேய விருதுக்கொடிமுனைஞ்சேர்
 படைத்த செங்குந்தர்கடமிற்
பன்னிருவர்கையிலே வெற்றிலைபாக்கினைப்
 பரிவாகவேயளிக்க
கொஞ்சிகை கொட்டிக்குதித்தோடி வழியினோர்
 குமரியீருவர்க்கிருவருங்
கூவுபரியாப்பினுக் கொருவருமுயிர்தந்து.
 குரைசெய் நாய்புலிகரடிகண்
மிஞ்சிடாவண்ண நால்வர்க டுணிந்தழன்மீது
 மீறியொருவன் படுக்க
மேலேறியகழ்முதலைவாய்க் கொருவருமவயிர
 மேயகாற் கொருவனுமுயி
ரஞ்சாமறந்து பின்வல்லானிடத்திருவ
 ரணுகிபொற்றலை யானைகோ
லணிமாயவிரத நால்வகை சாலபரிசேனை
 யாதியை யவன்றரக்கொண்
டெஞ்ஞாதவன்மனைவி வேண்டமீண்ட பயற்கு
 மெழிறில்லை யரனடிக்கு
மிணையில் தஞ்சிரமளித்துலகர் தொழப்பதின்மரொடு
 மீறில்பதமடை சிலரே.

---

செங்குந்தர் அம்பா.

வல்லானை வென்றவர்கள்
 வலிமையில் மிகுத்தவர்கள்
சல்லாப மங்கிலியந்தான் பிச்சை கொடுத்தவர்கள்
 கொல்லா விரதியர்கள்

குறைவிலாக்கச்சி நகர்
உல்லாச செங்குந்தரை
ஓதுவோம் அம்பாவாய்.

* வல்லான் விருத்தம்.

மிக்க நித்திரை செய்யும் வல்லான் மகாதேவி
மின் கொடி அனங்கவல்லி
விரிட்டெழுந்து நாராயணன் விரனை மிகத்துதித்
தேத்தி வாழ்த்தி
தக்க மங்கிலியப்பிச்சை யேந்திமெ வேண்டவும்
தயை புரிந்த வள்க்குதவிடும்
தரையற்ற வல்லான் பெருந்தெரும் வாட்டியில்
சரவண ந்தீற்றவனுமே.
சொற்கமாபுவியெலாம் ஆள் விரர் ரூபமாய்ப்
பொற்றலையின் றனன்றன்
சோராமலே ஜெய விருது பாவாடையும்
துலங்கருகு தீவட்டியும்.
சொல் வாக்குத் தப்பாமல் செங்கோல் செலுத்திடும்
திறமுள்ள ஜெயவிரராம்
திங்களணி சங்கரிதன் பங்கினருளுங் குமரர்
செங்குந்த ஜெயவீரரே.

எனவருங் கவிகளானு முணர்க.

நாம்மேற் கூறிவந்த பிரமாண முகத்தான். செங்குந்தக் கைக்கொண்ட வீரசிகாமணிகள். உலகத்தை வருத்திவந்த கொடிய வல்லானை வென்ற பராக்கிரமத்தை விளக்கினேம் இனிச் சிவத்தொண்டின் மேம்பட்ட செங்குந்த சிவானுபூதி மகான்களின் சிறப்பினைக் கூறுவோமாக.

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

---

* இஃது வட்டுப்பிரதியிலுள்ளபடி.

## ஆறும் அத்தியாயம்.

# செங்குந்தச் சிவானுபூதி மகான்கள்.

ஸ்ரீ சிவபெருமான் திருவருள்பெற்ற பக்தர்களாகிய, திருத்தொண்டத் தனியாடியார் அறுபத்து மூவர், எவ்வரசர்காலத்துச் சிறப்புறவாழ்ந்து தெய்வீகம்விளைத்துக் கீர்த்தி நிறுவிச் சிவபதமடைந்தனர்களென்பதுவும், அவ்வடியார்கள் இன்ன காலத்தவர்களென்பதுவும், அவர்களின் உண்மைச் சரிதங்கள் எந்த நிலைமையிலிருந்தன வென்பதுவும், பின்னர் அதன்நிலைமை காலாந்திரத்தில் எவ்வாறு பிறழ்வு பட்டிருக்கின்றன வென்பதுவுமுதலாய விஷயங்களை ஈண்டாராய்ந்து அறிவது அத்யாவசியமும் இந்நூலுக் கோராரவுமாக வேற்படுவதால் அவற்றை இங்கு விஸ்தரிக்க முற்படுவோமாக.

திருத்தொண்டர் வரலாற்றுக் குறிப்பாகும் பெரியபுராணச் சரிதத்தை ஆதரவாகக்கொண்டு ஆராய்ச்சியரியின், "பேரம்பலம் பொன்வேய்ந்தவன்" என்னும், சூரியவம்சத்திற்சேர்ந்தவன் என்பதுந் தோன்ற "துன்னு செங்கதிரோன் வழித்தோன்றல்" எனவும் புகழப்பட்டவனும், "கங்கைதுல்திலகர்" "தளவமாலைபயன்" "நரேந்திரபக" "அபயன்" அநபாயன்" எனப்பல பெயராற் சிறப்பிக்கப்பட்டவனுமான முதலாங் குலோத்துங்கச் சோழச் சக்கரவர்த்தியின் அரசாட்சிகாலத்திற்குச் சில நூற்றுண்டுகட்கு இத்திருத்தொண்டர் முற்பட்டவர்களென்பது. ஒருவாறு யூகித்தற் கிடமிருக்கிறது. இவ்வரசன். கி. பி. 1070. முதல் 1117 வரையிலும் அரசாண்டன னென்பதற்குத் திருப்பராயத்துறையிலுள்ள ஒருசாசகஸமும், திருமாணிக்குழியிலுள்ள இரண்டு சாஸநங்களும் சான்று கூறுகின்றன. இவ்வரசன்காலத்தேதான் பெரியபராணச் சரிதத்தை ஒழுங்குபெறத்திரட்டிக்கோர்வையாக்கிய குன்றையூர் "சேக்கிழார்" வாழ்ந்திருந்தன ரென்பதும் தெரியவருகின்றது. இவற்றால் மேற்கண்டுள்ள தனியடியார் இச்சேக்கிழார் புலமை நிரம்பிப் புகழ்பெற்றுள்ள. கி. பி. 11-வது நூற்றுண்டுகட்குச் சில நூற்றுண்டுகள் முற்பட்டவர்களென்பது ஒருவாறு துணியத்தக்கது. இக்காரணங்களால் இத்திருத்தொண்டர் இன்னகாலத்தவர்களென்பதை வறையறுத்து நிர்ணயப்படுத்துதல் சாத்தியப்படாமைகாண்க. ஈண்டுநாம் விசாரிக்கப்படுவன வெல்லாம், இதில்கண்டுள்ள திருத்தொண்டர் இன்னமரபினரென்பதை நிரூபகப்படுத்த முயன்றதே காரணமானதால், அவற்றை விளக்க முயலுவோமாக.

பெரிய புராணத்தில் முப்பானிரண்டு பேர்களுக்குச் சேக்கிழார்மரபு குறித்தனர். பெரியபுராணத்திற்கு முதநூலாகிய நம்பியாண்டார் நம்பிகளந்தாதியில், ஒரு தொண்டர்க்கேனும் குலத்தைப்பற்றிக் காண்கிலம். அதற்குமுதநூலாகிய திருத்தொண்டத்தொகையினும் அவ்வாறேயாம். இங்ஙன

மாகச் சேக்கிழார் சுவாமிகள், அவ்வவ்வடியார்களுடைய ஆசாரம் தொழின் முறை முதலியவைகளை நோக்கி மரபுகற்பித்தாராயினும், அவர் மரபு குறித்துள்ள அம்முப்பானிரண்டு தொண்டருள், பெரும்பாலார்க்குத் தொழின் முறைகள் யாவும் வேறுபட்டுள. அன்றியும் சேக்கிழார் சுவாமிகள் தாமியற்றிய திருத்தொண்டர் புராணச்சிறப்புப் பாயிரத்துள்.

அந்தமெய்ப்பதிகத்தடியார்களை
நந்தநாதனு நம்பியாண்டர்நம்பி
புந்தியாரப்புகன்றவகையினால்
வந்தவாறுவழாமலியம்புவாம்.

என்றபடிதாம் ஒருவர்க்கேனும் மரபு குறித்திலரென்பது திண்ணம். அவர் குறித்துள முப்பானிரண்டு தொண்டருள் அந்தணர், அரசர், வைசியர் மூவரொழிய ஏனையதொண்டர்க்குக் குறித்துளயாவும், அப்புராணத்தை அச்சுயந்திர சாலையில் பதிப்பிக்கத்தொடங்கியோர் நடத்தியுள கற்பிதம்போலும்.

இதுபற்றிப் புராதனத்தில் வரைந்துள்ள சில ஏட்டுப்பிரதிகளை ஆய்ந்து நோக்குமிடத்து மரபு குறித்துள செய்யுள்கள்யாவும் வேறுபட்டுள,

சாதி குலம் பிறப்பென்னும் தடஞ்சுழியிற்றடுமாறு துளத்தினரும், சிவானுபூதி மகான்களுமாகிய திருத்தொண்டர்க்குச் சாதிகுலம் பிறப்பினைக்குறிப்பித்தல் மரபன்றெனக்கருதியன்றோ? நம்பியாரூராரும், நாரையூர் நம்பிகளும் வறிதேவிடுத்தனர். இங்ஙனமாக இவ்விருவரையும் தமக்கு அருளிறையாக மதித்துள குன்றைமுனிவர். அவர்கள் சென்றவழி சொல்லாதவேறுவழியிற் புகுவரோ? புகாரென்பது திண்ணம்.

வித்வசிரோன்மணியாகிய புகழேந்திப்புலவர் வேளாண்மரபினராயிருந்தும், செங்குந்தர் மரபினரைப் பற்றிச் செய்துளாதிருக்கை வழக்கத்தில் பதின்மரைக் குறித்துளார். இதுபோலவே மஹாகவியாகிய கம்பர் வேளாண் மரபினரைச் சன்மானித்துப்பாடிய திருக்கைவழக்கத்தில் எண்மரைக்குறித்துளார், இவ்விருவரும் கூறிய பிரபந்தத்தில், குற்றங் கற்பிப்பதற்கு எத்தகையராலு முடியா.

இவர்களுக்குப் பிற்காலத்தவர், இவர்கள் கூறியதை வாயிலாகக் கொண்டு தங்கட்காவசியமாயுள்ள முப்பானிரண்டடியார்க்கே மரபுகற்பித்து மற்றயரை மரபறியாரென விடுத்தனர்போலும். அருண்மொழித்தேவராகிய சேக்கிழார் இவ்வாறுகவே கூறிமுடித்துளராயின். ஏனைய தொண்டர்களுக்கும் மரபு குறித்திருத்தல்வேண்டும். இவர் அம்பலவாணரருட்டிறத்தால் எடுத்துக்கொண்டு முடித்த ஓர் பெருநூலின் அறியாமை யாங்ஙனமுறிக்கும். அன்றியும் பிற்காலத்தவர் தாங்கள் கற்பித்துள்ள கற்பிதத்திற் கிணங்கவடமொழியில் வல்லானொருவனால், பக்தவிலாசமென ஓர் நூல் வரைந்து அதனை

ஆளுடைய நம்பிகள் காலத்திற்கு முன்னிருந்த உபமன்யு முனிவரை ஆக்கியோராக்கி விடுத்திருக்கின்றனர். இம்மாறுபாடுகளை யெல்லாம் யூகித்து நோக்குமிடத்து இவ்வினைத்தும், சில கவிப்புரட்டர்களா லேற்பட்ட கால விபரீதம்போலும். இத்தகைய கவிப்புரட்டர்களைக் கடவுள் செய்வகை யறியேம். நிற்க.

ஒவ்வோரடியவர்களின் சரிதங்களையும் உள்ளபடியே வசனரூபமாக எழுதவேண்டுமானால் இச்சிறு கிரந்தம் இடம் பெறாததோடு, இத்தொண்டர் வரலாறுகள் ஆங்காங்கு அகப்படுவது அருமையல்லா திருப்பதாலும், அவற்றை ஈண்டுவிளக்காது இத்தொண்டர் வரலாற்றின் கருத்து முழுமையும் தன்னுள்ளடக்கி நின்ற நம்பியாண்டார் நம்பிகள் அந்தாதி ஒவ்வொன்றை இச்சரிதமுகப் பிலமைத்தனம்.

இனி இதன் கீழ்முறையேநாம் குறிப்பிட்ட திருத்தொண்டரறுபத்து மூவரில், எறிபத்தர், திருமூலர், மெய்ப்பொருணயனர், பெருமிழலைக்குறும்பர் தண்டியடிகள், கூற்றுவர், நரசிங்கமுனையரையர், காரியர், இடங்கழிநாயனர், கணம்புல்லர், முதலியபதின்மர் செங்குந்தமரபின ரென்பதற்கு ஆதரவாகக்கிடைத்த வித்வசிரோமணி புகழேந்திப்புலவர் திருவாய்மலர்ந்த "செங்குந்தர் திருக்கைவழக்கத்தையும்" திருக்காஞ்சி முத்தமிழ்ச்சூரி வீரபத்திர தேசிகர் திருவாய்மலர்ந்த "செங்குந்தர் சிலாக்கியர்மாலைத்" திருவிருத்தத்தையும், மேற்கோளாக்கி இங்கெடுத்துக்கொண்ட திருத்தொண்டர் வரலாற்றையும் இனிது முடிப்பாம்.

### அறுபத்துமூன்று நாயன்மார்களிற் பதின்மர் துதி

### எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

---

மலர்வீழ்த்தயானைகரந் துணித்தோர் வேதமந்திர மாப்பகர்ந்தோர்
நீற்றுண்மை கொண்டோர்
வலமை பெறுமாரூரர் முன்படர்ந்தோர் வாவியினுற் கண்பெற்றோர்
மாதேவன்று
ணிலவுமுடி யெனப்பூண்டோ ராதிரைக்கனினிதியமளிப்போர்
புற்றீப மெரிப்போர்பாப்
பலமூவேந்தர்க்குரைப்போர முதளிப்போர் குந்தப்படைக்குலத்தி லவதரித்த
பதின் மரையும்பணிவாம்.

(இ-ள்) சிவகாமியாண்டார் கொண்டுவந்த பள்ளித்தாமத்தைப்பறித்து தறியயானையைத் தடிந்த எறிபத்தநாயனரும்.

(2) வேததாற் பரியங்களனைத்தையும் மூவாயிரம் திருமந்திரமாகத் திருவாய்மலர்ந்த திருமூலநாயனாரும்.

(3) திருவெண்ணீற் றினுண்மையைக் கடைப்பிடியாகக் கொண்டிருந்த மெய்ப்பொருணாயனாரும்.

(4) ஆளுடைய நம்பிகள் திருக்கைலைக் கெழுந்தருளுவதுணர்ந்து யோகத்தால் அவரைத் தியானித்துக்கொண்டு அவர்க்குமுன் சென்றருளிய பெருமிழலைக் குறும்பநாயனாரும்.

(5) சமணர்களுடன் வாதிட்டுக் குளந்தோண்டிக் கண்பெற்றுக் கொண்ட தண்டியடிகணாயனாரும்.

(6) சிவபெருமான் திருவடி சூட்டப்பெற்றமையையே முடியாகக் கொண்டுலை காண்ட கூற்றுவநாயனாரும்.

(7) பிரதிர திருவாதிரை நக்ஷத்திரத்தினன்றும் சிவனடியார்கட்குப் பொருளளித்துவந்த நரசிங்கமுனையரைய நாயனாரும்.

(8) தமிழ்க்கோவைபாடி மூவேந்தற்கும் பொருளுணர்த்திவந்த காரி நாயனாரும்.

(9) சிவனடியார்க் கமுதளித்துவந்த இடங்கழிநாயனாரும்.

(10) கணம்புல்லெரித்து சிகைமீட்டி முத்திபெற்ற கணம்புல்லநாயனாரும், என்று சொல்லத்தக்க செங்குந்தர் குலத்திலவதரித்த இப்பதின்மரையும் வணங்குவாம். எனவரும் செய்யுட்கருத்தைக் கவனிக்கத் தக்கது.

---

## இந்நாயன்மார் பதின்மரும் செங்குந்தர் மரபினர் என்பதற்குப் பிரமாணங்கள்.

---

(1)

**எறிபத்தநாயனார் யானையைத்துணித்தா ரென்பதை.**

ஊர்மதின் மூன்றட்டவுத்தமர்க் கொன்றோருயர்தவத்தோன்
றூர் மலர்கொய்யாவரு பவன்றண்டின் மலர்பறித்த
வூர்மலை மேற்கொளும் பாகருடனுணியாக்குமவ
னேர்மலி மாமதில் சூழ்கருவூரிலெறிபத்தனே

**எனவரும் நம்பியாண்டார் நம்பி திருவந்தாதியாலறிக.**

—பம்புவியில்

வெள்விடையோர்க் காமலரை விழ்த்திபதும்பிக்கையறக்
கொள்விடை கூறும் பரசாற் கொய்திடுகை.

**எனவரும் செங்குந்தர் திருக்கை வழக்கத்தானும்,**

என்று மலர் பறித்தேறார் திக்காரமியற்றுந் தொண்டர்
நின்றலறச்சிந்துந் தும் பியொடைவர் நெடுமழுவாற்
பொன்றவிகுத்திறைமெய்யன்புக்கினுயிர்போக்கவெண்ணிச்
சென்றவுயிரை மீள்வித்தோர் செங்குந்த சிலாக்கியரே.

எனவருஞ் செங்குந்த சிலாக்கியர் மாலைத் திருவிருந்தாந்தானும் தெளிக.

(2)

திருமூலதேவர் திருமந்திரம் பாடின ரென்பதை.

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மெய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன்றன்னை முழுத்தமிழின்
படிபன்னு வேதத்தின் சொற்படியே பரவிட்டெனுச்சி
யடிமன்ன வைத்தபிரான் மூலனுகின்ற வங்கணனே.

எனவரும் நம்பியாண்டார் நம்பிதிருவந்தாதியாலறிக.

—மறை நெறியின்

மூவாயிர மறுவை முல்லையானுக்கைபுக்கு
நாவிலினிதுரைத்த நன்னயக்கை.

எனவும்.

ஒப்புயர்வற்ற சிவாகமமேழ் நான்கினுண்மையெலா
மெப்புவனத்தும் விளங்கவாமேக்கிக் கிறந்தவுட
லிற் புகுந்தாண்டுக்கொன்றாகவே மூவாயிரமனுவைச்
செப்புறு ஞானக்கதிரோர் செங்குந்த சிலாக்கியரே.

எனவும் வருவனவற்றுனுந் தெளிக.

(3)

மெய்ப்பொருண் மூர்த்தி திருவெண்ணீற்றினுண்மையைக்
கடைப்பிடியாகக்கொண்டிருந்தவரென்பதை.

கற்ற நன்மெய்த்தவன் போலொரு பொய்த்தவன் காய்சினத்தாற்
செற்றவன்றன்னை யவனைச்செறப்புகலுந்திருவான்
மற்றவன்றத்தா நமரே யெனச்சொல்லிவானுலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொருளாமென்று பேசுவரே.

என வருவன வற்றனறிக.

—புல்லான்

பொரவிளைத்து வஞ்சவாட் புத்தகம் போதிப்பான்
வரவிளைக்காதாரு யிரீவண்கை.

எனவும்.

பன்முறையா யோதனத்தெய்த்த மேவலன்பட்டிமையாற்
கொன்முறைபாய்ந்தரன் சின்னங்குலவுறு கோலமுடன்
சொன்முறை நூல் கரவான் மறைத்தெய்தச் சோர்வின்றியுயிர்
சென்முறை செல்லவிடுத்தோர் செங்குந்த சிலாக்கியரே.

என வருவனவற்றனுந்தெளிக.

(4)

பெருமிழலைப் பொருந்தனை யோகத்தாற் கைலையை
முந்தியடைந்தனரென்பதை.

சிறை நன்புனற்றிரு நாவலூராளி செழுங்கயிலைக்
கிறை நன்கழனணையெய்து மவனருள் போற்றவின்றே
பிறை நன்முடியனடியடைவேனென் றுடல்பிரிந்தா
னறை நன்மலர்த்தார் மிழலைக்குறும்பனெனு நம்பியே.

என வநவனவற்றனறிக.

—யம்பொன்முடி

வன்றொண்டன் வேதண்ட மன்னு முனேயோ கற்ற
மன்றொண்டை யாங்குகைகத மாண்புக்கை.

எனவும்.

கருக்கலை நேர்குழற் சங்கிலி கேள்வனைக்காதலித்த
பெருக்கமதாற் சித்தியானையும் பெற்றவன் பிஞ்ஞகன்பா
லிருக்கைபெற லறிந்தாற்றுது யோகிலிணங்கி முன்னர்
திருக்கயிலைப்பதிமேயோர் செங்குந்த சிலாக்கியரே.

(5)

என வருவனவற்றனுந்தெளிக.

தண்டியடிகள் சமணருடன் வாதிட்டுக்குளந்
தோண்டிக்கண்பெற்றனரென்பதை.

கண்ணார் மணியொன்று மின்றிக்கயிறு பிடித்தரற்குத்
தண்ணார் புனற்றடந் தொட்டலுந்தன்னை நகுமமணர்
கண்ணாங்கிழப்பவமணர் கலக்கங்கண்டம் மலர்க்கண்
விண்ணாயகனிடைப் பெற்றவனார் விறற்றண்டியே.

என வருவனவற்றனறிக.

—நாட்டக்

குறையை யமணர் கொளக்குண்ட மெடுத்து
நிறைபுனல் செய்திட்ட நிமலக்கை.

எனவும்

முகைத்த பொழுதே பெறுங்குருடேகிக்கண் முன்றெரிய
விகைத்தகயத் தொண்டினிதின் முற்றிப்புகலீறி லொட்டாற்
பகைத்தவமணர் குருடாகியேந்தற் பணிப்பினவர்
திகைத்துகிலேவிடச் செய்தோர் செங்குந்த சிலாக்கியரே.

எனவருவன வற்றுனுந் தெளிக.

(6)

கூற்றுவந்தலைவர் சிவபிரான் திருவடியே முடியாகக்கொண்டுலகாண்டாரென்பதை.

நாதன் றிருவடியே முடியாகக்கவித்து நல்ல
போதங்கருத்திற் பொறித்தமையா லதுகைகொடுப்ப
வோதந்தழுவிய ஞாலமெல்லா மொருகோலின்வைத்தான்
கோதை நெடுவேற்களப்பாளனாகிய கூற்றுவனே.

எனவருவனவற்றனறிக.

—மின்னார் பொ
னம்பலவன் றாட்டுணையையாயு மணிமுடியாய்
நம்பியணிந்தே யுலகாளுயகக்கை,

எனவும்.

ஏர்சான்ற செம்பியர்க்கல்லாலிடோ முடியென்னத்தில்லை
யூர்சான்ற வந்தணரோதவுமாகுல முற்றரன்றா
ளேர்சான்ற மாமுடியாகுறவேண்டி நெடுங்கனவிற்
சீர்சான்ற வாதுபெற்றுண்டோர் செங்குந்த சிலாக்கியரே.

எனவருவன வற்றுனுந்தெளிக.

(7)

நாசிங்கமுனை யரையர் திருவாதிரை நட்சத்திரந்தோறும், பொன்னளித்து வந்தாரென்பதை,

புகழும்படி யெம்பரமேதவர்க்கு நற்பொன்னிடுவோ
னிகழும்படியோர்தவன் மடவார்புனை கோலமெங்கு
மிகழும்படிகண்டவற் கன்றிரட்டி பொன்னிட்டவனி
திகழுமுடி நரசிங்க முனையரசன் றிறமே.

எனவருவன வற்றனறிக.

—சேவினன்ற
னாதிரை தோறெண்ணிலடியவர்க்குப் பொன்னூறு
தீதிரியவே யளிக்குந் தேசிகக்கை.

எனவும்.

ஒரு நூறு பொன்னை யுலப்பிலி நாட்சைவவுத்தமர்க்குத்
தரு நூறிலன்புக் கெதிர்தூர்த்த வேடன்றனித்துறலு
மிருநூறு பொன்றந்திகலும் புறமதரே விடும்பற்
செருநூறும் வாழ்க்கை சிவன்வேவோர் செங்குந்த சிலாக்கியரே.

என வருவனவற்றனுந்தெளிக.

(8)

கணம்புற்றபதர் கணம்புல்லாற்றிப மெரித்தா ரேன்பதை.

நன்னகராய விருக்குவேளூர் தனினல் குரவாய்ப்
பொன்னகராய நற்றில்லை புகுந்து புலீச்சுரத்து
மன்னவராய வரற்கு நற்புல்லால் விளக்கெரித்தான்
கன்னவிறேளைத்தை தந்தைபிரானெங்கணம் புல்லனே.

என வருவனவற்றனறிக.

—பெள்ளுறுபுல்

வீட்டி விளக்கெரித்தவின் பணிமுட்டச்சிகையை
நீட்டிவிளக்கெரித்த நேர்மைக்கை.

எனவும்.

தொகைபெறும் பல்பொருளாற் சிவன்கோயிலிற்றாய் விளக்கிட்
டகமீகிழ் காலின் மையெய்திக் கணம்புலறுத்துவிற்று
மிகை கெடலின்றியதையே யெரித்தது மிக்கின்மையாற்
சிகை யெரித்திட்ட செயலோர் செங்குந்த சிலாக்கியரே.

என வருவனவற்றனுந்தெளிக.

(9)

காரித்தேசிகர் மூவேந்தர்க்கும் பாடல் பாடிப்பொருளும் பெற்றரேன்பதை.

புல்லனவாகாவகை யுலகத்திற் புணர்ந்தனவுஞ்
சொல்லினவுக் நயமாக்கிச்சுடர் பொற்குவடுதனி
வில்லனை வாழ்த்தி விளங்குங்கயிலை புக்கானென்பராற்
கல்லின மாமதில் சூழ்கடவூரினிற் காரியையே.

என வருவனவற்றனறிக.

—தப்பதமிழ்

கோவை பலதம் பெயராற் கூறி மூவேந்தரிடந்
தேவை பொருள் கொண்டு பணிதேடுங்கை.

எனவும்.

ஆரணமோது மபிடேகர் தம்மிலவதரித்துப்
பூரண நற்றமிழ்க் கோவைகள் பாடிப்புரவலர் பா
லேரணவப்பொருள் கூறிப்பொன் பெற்றிறையின் பணிகள்
சீரணவச் செய்திறலோர் செங்குந்த சிலாக்கியரே.

என வருவனவற்றுனுந்தெளிக.

(10)

இடங்கழிப்பெருமான் அடியார்க்கிழதளித்து வந்தாரென்பதை.

சிங்கத்துருவனைச் செற்றவன் சிற்றம்பலமுகடு
கொங்கிற் கனகமணிந்த வாதித்தன் குலமுதலோன்
றிங்கட் சடையர் தமரதென் செல்வமெனப் பறைபோக்
கெங்கட்கிறைவனிருக்கு வேளூர் மன்னிடங்கழியே.

என வருவனவற்றனறிக.

—யிரவிகுல

மன்னுயுல கோம்பிமா நிதியச்சாலை திறந்
தென்னுதல்றொண்டர் கொள்ளைக்கிட்டிடுகை.

எனவும்.

நன்னரசிற் சைவமாநெறி வைதிகஞ்சார் நெறி கண்
மன்னுறு நாளிலரன்றொண்டர்க்குண்டி வழங்கலற்ற
வின்னலொடே நெற்களவாடுவோன் முனிவையவரே
தின்ன நிதியும் விடுத்தோர் செங்குந்த சிலாக்கியரே.

எனவும் வரும்.

பிரமாண முதந்தான், இந்நாயன்மார் பதின்மரும் செங்குந்த மரபினரென்பதற் கெட்டுணையுமைய்யமின்றாம்.

இது காறுஞ் சேக்கிழார் சுவாமிகளருளிய திருத்தொண்டர் புராணத்திற் கண்டுள்ள தனித்திருத்தொண்டரறுபத்துமூவருள் அப்புராணத்திற்கு முதனூலாய் நாரையூர் நம்பிகளருளிய வந்தாதியில் மரபுகுறித்திராத்திருத்தொண்டர் தரத்தைப்பற்றிப் பேசினும். இனி இச்செங்குந்தர் மரபிற்றோன்றிய சிறப்புமிக்க புலவர் பெருமான்களின் தரத்தைப்பற்றிச்சில பேசுவாம்.

ஆறும் அத்தியாயம் முற்றிற்று.

## ஏழாம் அத்தியாயம்

## செங்குந்தர் புலமை.

---

செங்குந்த மரபினிற்றோன்றிச் சிவசாரூப்யம் பெற்றதிப் பியப்புலவர்களின் சிறந்த சரிதங்களைச் செங்குந்தர் குலப்பிரகாசிகையின் கண் வரிசைக்கிரமமாக வெளியிடவேண்டு மெனப்பன்னெடுநாட்களாக நாம் முயற்சித்தும், பலபிரதிகளைத்தேடியும், அபிப்ராயப்பட்டப்படி அப்புலவர் பெருமான்களின் சரிதங்கள் தகுந்தபடி கிடைக்கக்கூடவில்லை. "பாவலர் சரித்திரதீபகம்" புலவர் புராணம், தனிப்பாடற்றிரட்டு, தொண்டமண்டலசதகம், முதலிய நூல்களைச் செவ்வனே யாராய்ந்ததில், விரும்பிய சரிதங்களிரண்டொன்றில் மட்டும் சிலது குறிப்பிடப்பட்டிருந்தன. யென்றாலும், அவைகளும் ஒழுங்கின்றி யொன்றுக்கொன்று மாறுபட்டும், சிலது விடுபட்டும், மற்றது மரபு நிலைதவறியும் விளங்கின. இங்ஙனம் முன்னுக்குப் பின்முரண்பட்டுநின்ற புலவர் வரலாற்றுக் குறிப்புக்களில் ஆராய்ந்தறிந்தவற்றில் அவசியமானதை யேற்று, அல்லாதவைகளையகற்றி, வேண்டுவனவற்றிற்கு ஆங்காங்கு தேடிச் சேகரித்த் சிலவற்றையும், மதுரைத் தமிழ்ச்சங்கச் செந்தமிழ் பத்திரிகையிலும் வெளிவந்த புலவர் வரலாற்றுக் குறிப்புகளையுங்கொண்டு இன்னோர் சரிதங்களை ஒழுங்கு பெறத்திரட்டிப் பூர்த்தியாக்கிப் இப்புலவர் சிரோமணிகள் செங்குந்த மரபினர்களெனத் திருஷ்டாந்தப் படுத்துவதற்குத் திருக்காஞ்சி முத்தமிழ்ச் சூரிவீரபத்திரதேசிகர் திருவாய்மலர்ந்த செங்குந்தச் சிலாக்கியர் மாலைத் திருவிருத்தத்தை மேற்கோளாகக்கொண்டு, இன்னவர் தெய்விகப் புலமைகளின் மேம்பாடாதிய சிறப்பினைகளும், மற்றுமிவர் வாழ்ந்திருந்த கால நிர்ணயமாதிய விஷயங்களையுந் தக்க ஆதரவுகளோடு வெளியிட முற்பட்டதென்க. மிக முயன்று பரிசோதித்து வெளிவந்த இவ்வித்வமணிகளின் சரிதங்களைக்கண்டு கற்றோர்கள் காதலித்துக் களிகூர்தல் சிறப்பாம். மற்றுமிதன் கண்ணே தேனும் தவறுதல்கள் நேர்ந்திருந்தாலும், முன்னோர்கள் கிரந்தவழி யென்பதையும், பண்டைப்படியே சரிதக்கோர்வைகள் கிடைக்காத் தோஷமே யென்பதையுமெண்ணி நம்மீது முனிவு கொள்ளாதிருக்குமாறு வேண்டாநின்றனம்.

இனிவிதன் கீழ்முறையே செங்குந்தப்புலவர்களின் சரிதங்களைக் கிரமப்படி கூறத்தொடங்குவாம்.

---

## செங்குந்தப் புலவர்கள் துதி.

எண்சீர்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கூடனகர்ச்சங்கத்தார்சிரமசைக்கக்குலவுதில்லை யரன்பொற்கா சளிக்கக்கந்தன், பாடல்பகரெனக்கேட்கக்கம்பருலாப்பாடப் பண்மையுரைகண்டுரைக்கக்குகன்கோயிலமைக்கப், பீடமையுந்தணிகை மான்மியங்காந்தக்காண்டம் பிறங்கியவாசிட்டவுரைபெருக்கிக்கூற, நீடருள்சேர்கவிவாணர்முதற்செங்குந்தநெறிமரபோர் திருவடிகணினைந்துவாழ்வாம்.

(இ-ள்.) மதுரையென்னும் க்ஷேத்திரத்தில் வாழ்ந்திருந்த கடைச்சங்கத்தார்கள் சிரமசைக்கச்செய்தவர் "பொய்யா மொழிப்புலவர்" விளக்கமுற்றிருந்த சிதம்பரத்தில் வீற்றிருந்தருளும் நடராஜமூர்த்தி பொற்காசளித்தருளப் பெற்றவர் "படிக்காசுப் புலவர்" திருச்செந்தூர் முருகக்கடவுள் நம்மீது பாடல்பாடுவா யெனக்கேட்கப் பெற்றவர் "பகழிக்கூத்தர்" ஏகாம்பரநாதருலாப் பிரபந்தம் பாடியவர் "இரட்டையர்கள்" இலக்கணமமைந்த உரிச்சொல் நிகண்டுரைத்தவர் "காங்கேயர்" திருப்போரூரில் குமாரக்கடவுளின் ஆலயம் புதுக்கியவர் "சிதம்பர சுவாமிகள்" பெருமையமைந்த தணிகைச் சரிதத்தை திருவாய்மலர்ந்தவர் "கச்சியப்ப முனிவர்" மஹாகாந்தத்தின் ஏழாவது காண்டமாகிய உபதேசகாண்டத்தை அருளிச்செய்தவர் "கோனேரியப்ப நாவலர்" உலகெங்கும் பரவியிருக்கும் ஞானவாசிட்டமென்னும் நாலுக்கு விருத்தியுரை யியற்றியவர் பிறசை, "அருணசல சுவாமிகள்" இங்ஙனம் விசேடத்திருவருளைப்பெற்ற பாவலர்கள் முதலாக ஒழுக்கமமைந்த செங்குந்த மரபினர்களின் திருவடிகளைத் தியானித்து ஈடேறுவாம். எ - று.

## (1) பொய்யா மொழிப்புலவர் சரிதம்.

பொய்யாமொழிப் புலவரைப்பற்றித் தமிழ்நாட்டில் வழங்கும் கர்ணபரம்பரைகளை நோக்கும்போது அவர் ஒப்புயர்வற்று விளங்கிய திப்பியப்புலவர்களில் ஒருவரென்பது தெரிகிறது. ஆனல், இவர் வரலாறுகள் முழுதும் ஒழுங்காக் காணப்படவில்லை. இக்குறை, ஏறக்குறைய நம் நாட்டுக்கவிஞர்கள் எல்லாரைப்பற்றியுமே அமைந்துள்ளது. நாகரிகமிகுந்த தேசத்தாரனைவரும் தங்கள் நாட்டிற் கண்மணிபோல் விளங்கிய கவிஞர் சிகாமணிகளது நூல்களைபடித்து மகிழ்வதோடு அவர்களது அழகியசரிதங்களைப் பலவழி

யாலும் ஆராச்சி செய்து நூல்கள் மூலமாக வெளியிட்டுப் போற்றுவதைப் பெருங்கடமையாகப் பூண்டுளார்கள். உத்தமமக்களது சரித்திரங்களை நன்றாகப் பரிசீலனை செய்து வெளியிடுவதால், அவர்களிடம் கௌரதாபுத்தி அதிகமாதலோடு, ஜனஸமூகவாழ்வை உயர்வும் ஒழுக்கும் பெறச்செய்வதற்கும் அது முக்கிய எதுவுமாமென்பது அன்னோர்கருத்தாகும். ஆனால் பழைய நூலாசிரியர் வரலாறுகளைத் தெரிந்துகொள்வதில் நம்முன்னோர் முற்றும் கவலை செலுத்தாதவர்கள் என்று சொல்வதற்கில்லை. ஆக்கியோன்பெயர் முதலான பதினொரு விஷயங்களடங்கிய பாயிரத்தை ஒவ்வொரு நூலு முடைத்தாகல்வேண்டுமென்றும், நூல்கேட்கப்புகுவோன் நூல் கேளாமுன் அதன் புறவுரையாகிய பாயிரங்கேட்டல் இன்றியமையாதெனவும், அவை கேளாக்கால் நூல் கேட்டற்கண் மனஊக்கஞ் செல்லா வெனவும் கருதி, "ஆயிர முகத்தா னகன்ற தாயினும், பாயிர மில்லது பனுவலன்றே" என்று, அவர்கள் கூறியிருப்பதொன்றே மேற்கூறிய உண்மையைத் தெளிவுறுத்தும். இப்பாயிரம் ஒரு நூற்குப்போலவே ஒரு சாஸ்திரத் தொகுப்பிற்கும் ஒரு பாஷைக்குமே வேண்டப்படும். "அருந்தமிழ்க்குப் பாயிரம்" என்றார் கம்பர் திருவாய்மொழியை. அத்தகைய நூலால் பாஷாஞானம் பெறுவது யாவருக்கும் எளிதாம், ஆனால் தமிழ்மொழியில் அத்தகைய நூல்கள் எழுதற்கு இன்றியமையாது வேண்டத்தக்க புலவர் சரிதங்கள்பல, எத்தனையோ மாறுபாடுகளும், புனைந்துரைகளுமாக இப்போது வழங்குகின்றன. அவற்றைத்தக்க ஆதாரங்களுடன் தூய்மைசெய்து வெளியிடின், அவையெல்லாம் திரண்டு பின்பு தமிழ்மொழியின் பாயிரத்திற்கு ஓர் அங்கமாக உபயோகப்படும். நிற்க.

பொய்யா மொழிப்புலவர் வரலாறு முழுமையும், நாம் ஒழுங்காக அறிந்து மகிழ்தற்கிடமில்லையாயினும், தமிழ்நாவலர்சரிதை என்னும் நூலிலும், சோழமண்டல சதகத்திலும் பிறவற்றிலும் காணப்படும் சில விசேடச்செய்திகளை வைத்து நாம் ஒருபடியாக அவர் வரலாற்றைக் காணக்கூடும். இக்காலத்தவர் வழங்கும் புலவர் சரிதங்களினும், நமக்கு இருநூறு முர்நூறாண்டுகட்குமுன் வழங்கிய வரலாறுகள் பெரிதும் உண்மையுடையனவாகக்கருத இடமுண்டென்பதுபற்றி, இப்புலவர் சரிதமெழுதற்கு அந்நூல்களே ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன.

இனிப், பொய்யாமொழிப் புலவர் வரலாறு வருமாறு:—பொய்யாமொழிப் புலவரது நாடு தொண்டைமண்டலமென்பது;

"கையா றிரண்டுடைக் காளைதன் வாயிற்கவிதைகொண்ட
பொய்யா மொழிக்கும் புகலிட மானது பொய்கையெல்லாம்
செய்யார் கமல மலரவன் றானங்கள் சென்றுதிகழ்
மையார் குவளை வயல்புடை சூழ்தொண்டை மண்டலமே"

என்னுஞ் செய்யுளால் அறியப்படும். "வஞ்சிப் பொய்யாமொழிஎன நச்சி னார்க்கினியருரைப் பாயிரத்தும்.

"பொதியி லகத்தியனைப் பொய்யா மொழியாய்
*அதிகை யமரப்பர்க் காளாய்த்—துதிபெருகு
செங்காட்டுக் கோட்டந் துறையூ ரெனுந்தலத்துக்
சங்காத்தங் கொண்டிருப்பாய் தான்." (தமிழ் நாவலர் சரிதை)

எனத் தமிழ்நாவலர்சரிதையினும் வருதலால், வஞ்சி, திருச்செங்காட்டங்குடி, துறையூர் என்னுந் தலங்களில் இவர் வசித்தவரென்பது விளங்கும். இவர் சிறுபருவத்தே தெய்வானுக்கிரகம் பெற்றுச்சாலவும் வாழவும் பாடவல்ல ஆற்றலுடையவராயினர். இது,

"வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
ஆய்த்த அருகா ரணிவயலிற்—காய்த்த
கதிரைமா ளத்தின்ற காளிங்கனே றுங்
குதிரைமா ளக்கொண்டு போ" (ஷை)

எனத் தமிழ்நாவலர்சரிதையில் இவர் பாடியதாகக்கண்ட பாடலால் புலப்படும். இப்பாட்டுக் கம்பர் இளம்பருவத்தே தாம் காத்துவந்த வயற்கதிரை மேய்ந்த காளிங்கராயன் குதிரை சாகும்படிபாடியதாக இக்காலத்து வழங்குகின்றதாயினும் ,பழையவழக்குப் பொய்யாமொழியார்க்கே காணப்படுகிறது.

இவர் கலைமகள் அருள்பெற்றுப் புலவர்சிகாமணியாய் விளங்கிய காலத்தே, சங்கமிருந்து தமிழாராய்ந்ததும், செந்தமிழ்க்குப் பிறப்பிடமுமாகிய மதுரையில், பாண்டியனநுமதி பெற்றுப் பழைய சங்கத்தை மறுமுறைகூட்டித் தமிழ்வளர்ச்சி புரிதலிற் பேரவாக்கொண்டவராய், பாண்டிநாடு நோக்கிப்புறப்பட்டனர். புறப்பட்டு, திருச்சிராப்பள்ளியை அடைந்து அங்குச் சிலநாள் தங்கியிருக்கும்போது சிவபிரான் அவர்முன் புலவர்வேடம் புனைந்து,

"கேட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பணைக்கை புகமடுக்கும்—கட்டாணை
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை." (ஷை)

எனத் தாமுவந்தஸ்தலம் இஃதென்பதைப் புலவர்க்கு ஞாபிக்கவும், அவர் பெரிதும் வியந்தவராய் மலைமேல் திருக்கோயில்கொண்ட நபினரை வணங்கி, அபராதக்ஷாபணம் செய்துகொண்டு,

---

*"யதிகவமண்ப்பாக்கிழாய" என்றுள்ள பிரதியிலிருந்த, இவ்வடி ஒருபடியாக அமைக்கப்பட்டது. உண்மைப்பாடந் தெளியப்படவில்லை.

"அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பனை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட் டியானையைத் தேடி விதம்விதமாய்ச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே." (ஷ)

என்று துதித்தனர். பின்பு, அதனை விட்டு நீங்கி, மதுரை நோக்கிப்புறப்பட்டு இடையிற் பாலைவனத்தைக் கடந்து பெரிதும் இளைப்புடன் வரும்போது, முருகக்கடவுள் ஒருவேடவுருக்கொண்டுவந்து 'நீவிர் யாவர் என்று கேட்ப, , "பொய்யாமொழி யென்னும் பெயருடைய புலவன் யான்" என்றிவர்கூற, ஆயின் என்மீது ஒருகவி பாடும்' என்று முருகர் சொல்ல, புலவர் 'உன் பெயர் யாது' என்று கேட்ப முருகர் 'முட்டை' அப்பெயரும் இந்நிலமும் சுரம்போக் குத்துறையும் அமைய வெண்பாவிற் "பொன்போல்" என்று தொடங்கி முடித்தி யென்றனர், என்றலும் புலவர்:—

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர் போங்
கானவேன் முட்டைக்குங் காடு" (ஷ)

என்று அம்முருகவேளாகிய வேடனைப்பாடினர். இது கேட்ட அக்கடவுள் உண் மகிழ்ந்தவராயினும், வெளிப்படப்புன்னகையரும்ப நகைத்துப்புலவன் என்பது இடையினில் ஆயிற்று நின்கவியிற் சொற்குற்றந் துவளினும் மிகையாம் பொருட்குற்ற மொன்றனைக்காட்டுகின்றும் சதுரக்கள்ளிச் செடிகள் எரிந்து பொறிபறக்கும் பெரு நெருப்புமிக்கக்காட்டினிடத்தே சிறு நெருப்பிற்குத்தாலும் வெந்து சாம்பராகும் வேலமரத்துமுட்கள் தைத்தல் யாங்ஙனம் ? ஆதலாற் பொய்யாம் மொழிப்புலவனுயினை நிற்க. யாம் பாடுகின்றேம் அதன்கட்குற்ற முளதாயின்றெரித்தி அக்கவியில் நின்பெயரும் பாலை வருணனைகளும் உரிப்பொருளும் இரங்கற்றுறையும் அமைவதன்றி நீ குற்றத்துட்டவறி விரத்திற்வரி "விழுந்ததுபோல்" என்னுங் கூட்டுமமையப்பாடுகின்றும் எனக்கூறி புலவர் பாடிய அச்சரம் போக்குத்துறையிலேயே,

"விழுந்துளி யந்தரத்தே வேமென்று வீழ்ந்தால்
எழுந்த சுடர்வருமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினள்
பொய்யா மொழிப்பகைஞர் போல்" (ஷ)

என, அப்பொய்யாமொழியாரைப் புகழ்ந்துபாடித் தம் உண்மையுருவத்தைப் புலவர்க்கு வெளிப்படுத்தி அவர் வழியிளைப்பையுமாற்றி அவர் நாவில் தம்வேலால் எழுதி அநுக்கிரகத்துச் சென்றருளினர். இதனை, அருணகிரிநாதரும்,

"முற்றித்திரி வெற்றிக் குருபர
முற்பட்ட முரட்டுப் புலவனை
முட்டைப்பெயர் செப்பிக்கவிபெறு பெருமாளே"
"முற்பா டப்பா டற்று ருக்கோர்
முட்கா டறகப் பொருளீவாய்"
புகல் கலைகற்றுர் சொற்கேட்கத் தனிவழி வருவோனே

எனப் பலமுறை திருப்புகழிற் பாடினர். மார்க்கசகாய தேவரும், திருவிரிஞ்சைப் பிள்ளைத்தமிழில்:—

"பொய்யா மொழிப்புலவர் மதுரையிற் சங்கம்
புரக்கவெழு நாள்மறவனைப்
புறவுற வளைத்தெனது பெயர்முட்டை பாடெனப்
'பொன்போலு' மென்றுபாட
வெய்யான பாலைக்கி தேலாது நும்பெயர்
விளம்பென விளம்ப வவர்மேல்
'விழுந்ததுளி' யென்றெடுத் துப்பாடி யவர்நாவில்
வேல்கொடு பதித்த சதுரா"

என்று இக்கதையினைக் குறிப்பிட்டனர். முருகக்கடவுள் தம் பெயர் "முட்டை" என்று கூறியது, இடுகுறியாக்க மென்பர் நன்னூல் விருத்திகாரர் (பெய. சூத்-௧௭. உரை). இவ்வாறு பாலைவனத்தைக்கடந்து இடைவழியிலுள்ள க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு, திருக்கானப்பேர் என்னும் காளையார்கோயிலை அடைந்தனர். அங்கே புலவர் மிசியிற் பசியால் வருந்திக் கூத்தாள் என்னுந் தாசியின் வீட்டை யடைந்து, அவர்களை உசாவ, பூர்வபாவவிசேடத்தால் அவளும் அவள் தமக்கையும் தாயும் பாட்டியும், குருடிகளாகிப் பெரிதும்வருந்துவது கண்டு இரங்கி,

† "கூத்தாண் முகத்திரண்டு கூர்வேல்கள் கூத்தாடன்
மூத்தாண் முகத்தின் முழுநீலம்—மூத்தாடன்
அன்னை முகத்தி லரவிந்த மன்னை தன்
அன்னை முகத்திலிரண் டம்பு." (௯௭)

† இஃது ஒட்டக்கூத்தர் தலயாத்திரை செய்துகொண்டிருக்கையில் திருவெண்ணைநல்லூருக் கெழுந்தருளியபோது சடையவள்ளல் கூத்தருபசரிப்பு நிமித்தம் நடத்திய நடன கேளிக்கையில் நிகரற்ற திறமைகாட்டிய தாசிகள் நால்வா பிறவிக்குருடாயிருப்பதை யுணர்ந்த இப்புலவர் அவர்கள்பா லருள் சுரந்து கண்பெறச் செய்தாரெனவும் அவர்கள் விஷயமாக இப்பாடல் கூத்தரால் பாடப்பட்டதெனவும் சிலர் கூறுகின்றனர்.

என்னும் பாடலைக்கூற, அவர்கள் நால்வரும் முன்போற் கண்தெரிந்து, தம் மியற்கையழகுசிறக்க விளங்கி, புலவர்பெருமானைப் புகழ்ந்துபசரித்தனர். இச்செய்தி அவ்வூராரை யெல்லாம் பெரிதும் அதிசயப்படுத்தியது. அப்போது அவ்வூர்த்தாசிகளில் எழுபதின்மர் புலவரது அருள்பெற்று அவராற் பாடல்பெறவேண்டி, எழுபதினுயிரம் பொன்கொணர்ந்து அவர் பாதத்தில் வைத்து, 'அநுக்கிரகிக்கவேண்டும்' மென்று பிரார்த்திக்க, புலவரும் அவர்களது உண்மையபிமானத்தைக்கண்டு உவந்து,

"வாச மலர்மடந்தை போல்வார்வன் கானப்பேர்
ஈசன் றன் மக்க ளெழுபதின்மர்—தேசத்
திரவலர்மே னீட்டுவர்கை யீண்டுலகங் காக்கும்
புரவலர்மே னீட்டுவர்பொற் கால்" (௯௨)

என்று பாடி அருளினர். இனிப், புலவரால் குருடு நீக்கப்பெற்ற தாசிகள், எல்லாரும்விரும்பத்தக்க பேரழகும் ஆடல்பாடல்வன்மையுமுடையராய்ப் பெருஞ்சம்பத்தெய்திநின்ற காலத்திலே, பொய்யா மொழியார் வேறொருமையத்து அவர்களைக்கண்டு மகிழவேண்டி இரவில் அவர்கள் வீட்டையடைந்து கதவைத் தட்ட, செல்வச் செருக்கால் அத்தாசிகள் சிறிதும்பொருட்பண்ணாது உள்ளிருந்தபோது, புலவர் வெகுண்டு "பழைய குருடிகாள்! கதவைத்திறவுங்கள்"; என்று கூறினரெனவும், உடனே அவர்கள் நால்வர்க்கும் முன்போற் கண் தெரியாதுபோக, அதற்குக் காரணம் புலவரென்பதறிந்து அவர் காலடியில் வீழ்ந்து அபராதக்ஷாபணம் செய்துகொண்டார்களெனவும் "பழையகுருடி கதவைத் திறவடி" என வழங்கும் பழமொழி அதன் பின்னரே வழங்கியதெனவும் கூறுவர்.

பின்பு, புலவர் திருக்கானப்பேரைவிட்டு நீங்கி மதுரைப்பக்க மடைந்து அப்போது பாண்டியன் மந்திரியாய்ப் புலவர்பாடும் புகழுடையோனாய் விளங்கிய மாறனுடையனான தஞ்சைவாணனைக்கண்டு அவன்பேரில் "தஞ்சைவாணன் கோவை" என்றதொரு அரிய பிரபந்தமியற்றி அவனைப்புகழ்ந்து பாடினர். இவரியற்றிய தஞ்சைவாணன் கோவையின் சொன்னயம் தொடைநயம் பொருணயங்கள் அறிஞரெல்லா மறிந்து சுவைத்தவைகளே. கோவைகளிலே, திருச்சிற்றம்பலக்கோவையை யடுத்துப் பழமை பெருமைகளாற் சிறந்து விளக்குவது வாணன்கோவையே. "மீனவர்தம் செங்கோல் முறைமை செலுத்திய வாணன்" "தென்னன் றனைப் பணித்துநற் றேவல்செய்யாது சமர்க்கெழுந்த, மன்னனைப் புறங்கண்ட வாணன்," "வேளாண் மரபு விளக்கிய வாணன், என அக்கோவையில் வருவனவற்றால், தஞ்சைவாணன், பாண்டியற்கு மந்திரியும்படைத்தலைவனுமானவனென்பதும் வேளாள மரபினன் என்பதும் விளக்கும். இப்பெருந்தகையைக் கோவையாற் புகழ அ

னும் பொய்யாமொழியார்க்குவேண்டிய † வரிசைகள் அளித்துபசரித்தான். புவர் பாண்டியனை முதன்மையாகக்கொண்டு மதுரைச்சங்கங்கூட்ட வெண்ணிய தம் கருத்தை அவனுக்கு எடுத்துரைத்த, அவனால் அதற்குரியவுதவியுடன் மதுரை யடைந்து அரசனைக்காணவேண்டி அரமனைசெல்ல, அரசன் திருவாலவாய்க்கோயிலுள்ளே சுவாமிதரிசனஞ் செய்யப்போயிருந்ததையறிந்து. நேரே அக்கோயிலை அடைந்தனர். அங்கே பாண்டியன் சுவாமிதிருமுன்பு தண்டனிட்டுவணங்குகின்ற நிலையைப் பார்த்து, 'பாதி வசையும் பாதி நசையுமாக'

"குழற்கா லரவிந்தங் கூம்பக் குமுதம் பொதியவிழ்ப்ப
நிழற்கான் மதியமன் றேநின் றிருக்குல நீயவன்றன்
அழற்கா லொளிர்சடை மீதே யிருந்துமவ் வந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோவணங் காமுடிக் கைதவனே" (ஷை)

எனச், சிவபிரான் திருமுடியை இருப்பிடமாகக் கொண்டு விளங்கும் சந்திரனதுவமிசத்து நீ பிறந்தவனாயினும், அப்பிரானது திருவடிகளை வணங்குதல், என்ன பொருத்தம்?' என்னும் கருத்தமைந்த பாடலைக் கூறினர். இதனை கேட்ட அரசன், தரிசன முடிந்ததும், புலவர் பக்கந் திரும்பி, அவர் ஊர் பெயர் முதலியவைகளையெல்லாம் விசாரித்தறிந்து, கோயிற்பிரதக்ஷிணஞ் செய்துகொண்டே, புலவர்தம்பால்வந்த நோக்கத்தை உசாவுவானாயினன். அவரும், மதுரையிற் பழைய சங்கத்தைக்கூட்டித் தமிழாராய்ச்சி செய்வித்தலே தம் முள்ளக்கிடக்கை என்று கூற, "தெய்வப்புலமை வாய்ந்த அச்சங்கத்தைக் கூட்டல் சிற்றறிவினராய நம்மால் ஆவதோ" என்று புலவரருமை அறியாது சிறிது இகழ்ச்சிக்குறிப்புத் தோன்றக் கூறிவிட்டு, சங்கத்தார் சந்நிதி நெருங்கியவளவில் "புலவரே! இச்சங்கத்தாரது திருவுருவங்களெல்லாம் சிரக்கம்பஞ் செய்யும்படி ஒரு பாடலியற்றவல்லீரேல், இறந்த சங்கத்தை நீர் எழுப்பவல்லீர் தாம்" என்று கூற உடனே புலவரும் அங்ஙனமேயாகவென்று சங்கப்புலவரை நோக்கி,

"உங்களிலே யானொருவ னொப்பேனோ வொவ்வேனோ
திங்கட் குலனறியச் செப்புங்கள்—சங்கத்துப்
பாடுகின்ற முத்தமிழென் பன்னூலு மேற்குமோ
ஏடவிழ்தா ரேழெழுவீ ரின்று" (ஷை)

என்றுபாட, அப்புலவர் திருவுருவங்களெல்லாம் சிரக்கம்பஞ் செய்தன. பாண்டியன் அதிசயமுற்று, மற்றும் சோதிக்கவெண்ணிப் புலவருடன்

† தஞ்சைவாணன் இக்கோவையை அறங்கேற்றுகையில் பாட்டொன்றுக்கு ஒவ்வொரு தேங்காயளவு பொய்யாமொழிக்கு பொன்னளித்தாரெனப் புலவர் புராணத்துக் காணப்படுகிறது.

பொற்றாமரைக்கரையடைந்து 'இப்பொய்கையில் முன்பிறந்ததாகச் சொல்லப் படும் சங்கப்பலகை மேலேமிதக்குமாறு செய்து உமது தெய்வப்புலமையைக் காட்டுவீரேல். எண்ணிய கருமம் நிறைவேற்றுவல்' என்று கூற புலவரும், "தமிழைப்போற்றும் அரசர்கள் இப்போதில்லையேயன்றி, புலவர் சிகாமணிகள் உலகில் உளரென்னும் விஷயத்தைப் பாண்டியன் நன்கறியும்படி சங்கப் பலகையே மித" என்னுங் கருத்துப்பட,

"பூவேந்தா முன்போற் புரப்பா ரிலையன்றிப்
பாவேந்த ருண்டென்னும் பான்மைதான்—மாவேந்தன்
மாற னறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித" (ஷை)

எனப்பாடலும், சங்கப்பலகை மிதந்தெழுந்து பின் தாழ்ந்ததென்பர் பாண்டியன் இவற்றையெல்லாங் கண்டு வியப்புமுவப்பும் அடைந்து. பொய்யாமொழியார்பாற் றானிழைத்த பிழைகளைப்பொறுக்குமாறுவேண்டி, பொய்யாமொழியாரே! நீர் நல்ல புலவர்" என்று அவர் தெய்வப்புலமையைப் பலவாறுபுகழ்ந்து கூற, அதுகேட்ட புலவர்,

"அறமுரைத் தானும் புலவன்முப் பாலின்
திறமுரைத் தானும் புலவன்—குறுமுனி
தானும் புலவன் தரணி பொறுக்குமோ
யானும் புலவ னெனின்" (ஷை)

என்று கூறினார். இப்பாட்டின் அருமைபெருமைகள் தமிழ் மக்கட்கெல்லாம் ஆனந்தந் தரத்தக்கன. இவ்வாறு பழைய தமிழ்ச்சங்கத்தைப் புதுப்பிக்கவேண்டிப்பாண்டியனிடம் முயன்றுவந்த பொய்யாமொழிப்புலவர் முடிவில் அச்சங்கத்தை ஸ்தாபித்திருத்தல் வேண்டுமென்றே கருதப்படுகிறது.* கடைச்சங்கத்துக்குப் பின்பு மதுரையிலே சிலசங்கங்கள் கூட்டப்பட்டிருந்தன என்பதற்குத் தக்க ஆதாரங்களுள்ளன. விக்கிரமசகம் ௫௨௬ (கி. பி. 470)-ல் பூஜ்யபாத ரென்பவர் மாணாக்கருளொருவராகிய வச்சிரநந்தி என்பவரால் தென்மதுரையில் ஒருதிராவிடசங்கம் கூட்டப்பட்டதென்னுஞ் செய்தி, திகம்பர தரிசனமென்னும் ஜைனமதகிரந்தத்திற் காணப்படுதலாலும்; ஸ்ரீசடகோபர்காலத்தே மதுரையில் ஒரு தமிழ்ச்சங்கமிருந்ததாகவும்

* கர்ணபரப்பரையில், அவர் சங்கம் ஸ்தாபிக்கவில்லையென்றும், அக்கோபத்துடன் புலவர் பாண்டியனைவிட்டகன்றாரென்றும் வழங்குகிறது. ஆனால் அதற்காதாரமில்லை. பாண்டியனிடம் தம் தெய்வப்புலமையைக் காண்பித்தும், அவனால் புகழப்பெற்றும் புலவர் விளங்கினரென்பது மேற்கண்ட அவர்வரலாறுகளால் விளங்குதலின், அக்கர்ணபரம்பரையே உண்மையென்று கொள்ளமுடியாது.

அச்சங்கத்தை ஆழ்வார் * மானபங்கப்படுத்தினதாகவும் ஸ்ரீவைஷ்ணவகுரு பரம்பரைகளாலும், "சங்கக் குவடிறக் குந்திய மாறப்பெயர்க்கோலையானை" என்னும் கம்பநாடர் வாக்காலும் விளங்குதலாலும் அச்சங்கங்களின் உண்மை விளங்கும். இவற்றுள் பிற்கூறிய ஆழ்வார்காலத்துச்சங்கமே பொய்யாமொழிப் புலவராற் கூட்டப்பட்டதெனவும்; அப்புலவரைத் தலைமையாகவுடைய கூட்டத்திலேயே திருத்தக்கதேவரால் சீவகசிந்தாமணி அரங்கேற்றப்பட்டதெனவும் ஊகிக்க இடமுண்டு; ஏனெனில், "வந்திப்பொய்யாமொழிபுகழ் மையறு காட்சித் திருத்தகுமுனிவன்" என நச்சினார்க்கினியருரைப்பாயிரத்தில்வருதலாலும், அச்சிந்தாமணி மதுரைச்சங்கத்தே அரங்கேற்றப்பட்டதாகக் கதையுண்மையாலும், அச்சங்கமும் கடைச்சங்கமன்றென்பது 'பின்னுள்ளோர் செய்த சிந்தாமணி' † என்னும் நச்சினார்க்கினியர் கூற்றால்விளங்குதலாலும் மேற்குறித்த ஊகம் பொருத்தமுடைத்தாதல் காண்க.

இனி, பொய்யா மொழியார் தம்முழுவாணாளையும் மதுரையிலே கழித்தாரென்று தோன்றவில்லை. இவர் எக்காரணத்தானோ ‡ பாண்டி நாடு நீங்கிச் சோணாடடைந்தனர். அங்கே அக்காலத்துத் தமிழருமையறிந்த பெருங் கொடைவள்ளலாய் விளங்கியவனும் சிற்றரசூர், பேரரசூர், தென்மாவை, பூந்துருத்தி, கொந்தமல்லி, கண்டி குருகாவூர் என்னும் ஊர்களுக்குத் தலைவனு

---

* இச்சங்கம் முந்நூற்றுவரடங்கியதெனக் குருபரம்பரைகள் கூறும். இச்சங்கத்தார்க்கு, பொருள்காணும்படி ஆழ்வார்விடுத்த பாசுரம் "அண்டகோளத் தாரணுவாகி' என்று தொடங்கும் அகவல்; செந்தமிழ் மூன்றாந் தொகுதி, ௪0௫-ஆம் பக்கம் பார்க்க.

† தொல்காப்பியம், செய்யுளியல் நச்சினார்க்கினியம் "பாவிலவகையே" என்னுஞ் சூத்திரவுரை.

‡ "சுவடிறக்க" என்னுஞ் சடகோபரந்தாதிச் செய்யுளில் "சங்கக்குவடிறக்குந்திய மாறப்பெயர்க்கோலையானை" எனக்கம்பர் கூறுதலாலும், ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரைகளாலும், ஸ்ரீ சடகோபர்காலத்தில் மதுரைச் சங்கம் பங்கமுற்றதென்று காணப்படுதலால், ஏதோ காரணத்தால், பொய்யாமொழியார் காலத்துச் சங்கம் கலைந்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. அவ்வாறு கலைந்தமைபற்றிப் புலவர் பாண்டி நாட்டை நீங்கியிருக்கலாம்.

குறிப்பு:—இப்பொய்யா மொழியார் வரலாற்றில், 135 - ம் பக்கத்து வரும் "அறமுரைத்தானும்" என்னும் வெண்பாவில், 'அறமுரைத்தான்' என்றது, "ஆலமர நீழ லறநால்வர்க் கன்றுரைத்த-ஆலமமர் கண்டத்தரன்" என முதற்றிருவந்தாதியினும், 'அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடி' எனத் திருவாசகத்தும் வருவனவற்றால், தக்ஷிணாமூர்த்தியாகிய சிவபிரானை யுணர்த்தி, ஈண்டு முதற்சங்கப்புலவராய் வீற்றிருந்தருளிய இறையனார் என்னும் மாத்திரையாய் நின்றது.

மான சீநக்கன் என்னும் சேனைக்கண்டார். கண்டபோது, புலவர் பெரிதும் பசியால் வாட்டமுற்றிருந்தமையால் சேக்கன் முதலில் அவர் பசியாற்றிப்பின் அளவளாவக்கருதி, அவர்க்குப் பிரியமாயிருந்த புளிஞ்சோற்றை யளித்து உபசரித்தான். புலவர் அதனை உண்டு பசியாறி, அச்சோற்றின் சுவைக்குப் பெரிதுமகிழ்ந்து.

"அளிகொ ளுந்தொடை யன்னர சைக்குமன்
ஒளிகொள் சேநக்க னின்றுவந் திட்டசீர்ப்
புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்
தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே."

என, "செந்தமிழ்ச்சுவை தெளியும்போதெலாம் புளியஞ்சோற்றின் சுவை அதற்கேற்ற உவமானமாக ஞாபகத்திற்கு வருகின்றது" என்னுங் கருத்துக் கொண்ட பாடலை அவன்முன்பு கூறினர்; இதனைச் சோழமண்டலசதக முடையாரும்,

"பொய்யா மொழியார் பசிதீரப் புளியஞ் சோறு புகழ்ந்தளித்த
செய்யூ ரரசூர்ச் சேநக்கர் செய்த தெவருஞ் செய்தாரோ
கையா ருதவி பொறையுடைமை காணி யாளர் கடனன்றோ
மையார்புவியில்முதன்மைபெற்றோர்வளஞ்சேர்சோழமண்டலமே."

எனக் கூறுதல் காண்க. இதுமுதலாக, புலவரது அருமை பெருமைகள் பழகுந்தோறும் தன்னை அதிக வியப்புறுத்தினமையால், சேக்கன் அவரை ஒரு கணத்தும் விட்டுப்பிரிய ஆற்றாதவனாய், அவரைத் தன் ஆருயிர்த்துணைவரென மதித்து வேற்றுமையின்றிக் கலந்து களித்து வந்தான். இச்சேக்கனைச் சோழனது மந்திரிகளில் ஒருவன் என்பர். இவ்வாறு ஒழுகுநாளில், இப்பிரபு மூலம் சோழவரசனையும் பார்க்க விரும்பினவராய், அவ்வாறே, அப்போது தஞ்சையிலிருந்து ஆட்சி புரிந்துவந்த சோழனிடம் சென்று அவனைக்கண்டு,

"திறையின் முறை கொணர்ந்து தெவ்வேந்த ரெல்லா
மிறையு முறைகழிக்க வொண்ணா—அறைகழற்காற்
போர்வேந்தர் போர்மாளப் போய்வா ளுறைகழித்த
தேர்வேந்தன் தஞ்சைத் தெரு."*

என, தாம் அவனகரிற்கண்ட சிறப்பைக் கூறினர். இப்பாடலைக்கேட்டும் மற்றும் புலவருமை பெருமைகளை அறிந்தும் அரசன் புலவர்க்குப் பெருவரிசை யளிக்க, அதனுடன் அரசூர் சென்று அங்கே சேக்கனோடு முன்போலக் கலந்து வாழ்ந்துவந்தனர். இதனை,

* இப்பாட்டில் வருந் தஞ்சையை, மாறநாட்டுத் தஞ்சாக்கூர் என்று கருதுவாருமுளர்.

"திறையின்முறையென் றுலகறிபச் செப்பும்பொய்யா மொழிதமிழ்க்காத்
துறையி னளகை ராஜேந்திர சோழன் வரிசை தொகுத்தளித்தே
அறையும் பெருமைச் சிநக்க ரரசூர் முதலா வேழூரும்
மறுவி லாது விளங்கியது வளஞ்சேர் சோழ மண்டலமே."

எனச் சோழமண்டலசதக முடையார் கூற்றால் உணர்க. பொய்யாமொழியாரை அபிமானித்த சோழன் இராஜேந்திரன் என்று அச்சதகமுடையார் கூறுதலால், அவர்க்கு அவ்விஷயம் ஏதோ ஓர் ஆதாரத்தின்மேலேயே தெரிந்திருக்கவேண்டுமென்று கருத விடமுண்டாகிறது.*

இவ்வாறு, அரசூரில், சிநக்கவள்ளலுடன் புலவர் விளங்கிவருநாளில், அடுத்த கண்டியூரிலிருந்த வண்ணாத்தி யொருத்தி புலவர்க்குப் பெருமகிழ்ச்சி தரும்படி அவராடைகளை மாசு நீக்கி வெள்ளையாக்கிக்கொடுத்து உபசரித்தமைக்கு உவந்து,

"தூசுதூ சாக்குவார் பாவை சுடர்த்தொடிக்கை
யாசிலாக் கண்டியூ ரரணங்கு—வாசமலர்க்
கண்ணங்கை கொங்கைமுகங் காலுங் கடிக்கமலம்
கண்ணங்கை கொங்கைமுகங் கால்" †

என்று அவளைப் புகழ்ந்தனர். பின், குலோத்துங்கச்சாவகன் என்னும் புலையன் புலவர்க்குப் பெருங்கோபமுண்டாம்படியான கொடுமையொன்று செய்ய, அது பொருக்காத புலவர்,

"கோதில் குலமங்கை குலோத்துங்கச் சாவகனென்
றோதினேன் றன்னை யொருப்பதனுன்—மாது
துளையாத முத்து வடந்தூக்கி னாளாம்
விளையாடச் செப்பிரண்டன் மேல்" ‡

---

* இவ்விராஜேந்திரப்பெயர், கி. பி. 1012-ல் பட்டம்பெற்ற, இராஜராஜன் புத்திரனுக்குமுந்திய சோழஅரசர் தரித்திருந்ததாகச் சாஸனங்களாற் றெரியவில்லை.

† வாசமலர்க்கண் நங்கை - இலக்குமி போன்றவள். நங்கையின்கண் அங்கை கொங்கை முகம் கால்—இவைகள் கடிக்கமலம் என்க. கொங்கை முகங்காலும் கடிக்கமலம் - தேனைத் தன்னிடத்திருந்து கக்குகின்ற வாசனை பொருந்திய தாமரை. கொங்கு - தேன்.

‡ குலோத்துங்கச்சாவகன் என்று கூறிய என்னை அவன் ஒருத்தமையால், கோதில் குலமங்கையாகிய அவன்மாது கண்ணீர் பெருக்கினள் என்க; என்னை ஒறுத்தலால் அவனுடல் வெடிக்க, அதனால் அவன் மனைவி கண்ணீர்வடித்தாள் என்பது குறிப்பு. துளையாத முத்துவடம்-கண்ணீர்த்துளிகள். விளையாடச்செப்பு - தனங்கள்; வெளிப்படையாகி

என்று வசைபாட, அப்புலையனுடல் வெடித்ததென்பர்; தமிழ் நாவலர் சரிதையில் "புலையன் உடல் வெடிக்கப்பாடிய வெண்பா" என்ற தலைப்புடன்மட்டும் இப்பாடல் காணப்பட்டமையால், இதன் கதை செவ்வையாக விளங்கவில்லை.

இவ்வாறு புலவர் சேக்கவள்ளலுடன் தமிழகம் புகழவாழ்ந்து வருநாளில், ஒரு நாளிரவிலே, சேக்கன் சயனிக்குங் கட்டிலின்மேலே அவனும் பொய்யாமொழியாருமாகவிருந்து நெடுநேரம் அளவளாவிக்கொண்டிருக்கையில், நாழிகையானமையாற் புலவர் சேக்கனைப் போஜனத்துக்குப் போகுமாறு செய்து, அயர்ச்சிமிகுதியால் அக்கட்டிலிற்றானே ஓர் புறமாக நித்திரை போயினர். சேக்கன் போசன முடித்துக்கொண்டு நிலாமணிமேடையிற் சென்று சிறிதுநேரம் போக்கி மீளுமுன்னே, அவன் மனைவியும், கட்டிலிற் படுத்துறங்குகின்றவரைத் தன் கணவனென்றெண்ணி, அதில் ஒருபக்கத்திற் படுத்து நித்திரை போயினாள். சேக்கன், கிரமப்படி, அங்கே படுக்கப்போக, கட்டிலிற் புலவருடன் தன் மனைவி படுத்திருத்தலைக்கண்டு, 'இஃது என் மனைவியின் அறியாமையால் நிகழ்ந்த செயலேயன்றிப் பிறிதன்று' என, புலவரது அருமை பெருமைகளையெல்லாம் நன்கறிந்தவனாதலின் அவர்பாற் குற்றத்தை நினையாதவனாய், இவ்வுண்மையைப் புலவர்க்குத் தெரிவிக்க வெண்ணி, புலவரைச் சிறிது விழிக்கும்படி தட்டியெழுப்ப, அவர் விழித்தலும், 'சிறிது விலகுதிர்; ஓர் புறமாக யானும் படுப்பேன்' என்று கூறினன். புலவர் 'இங்கே படுத்தோமே' என்று கருதினவராய் அயலிற்பார்க்க, அரசன் மனைவி தம்முடன் நித்திரைபோகின்றமையறிந்து, 'இஃதென் விளைந்தது' எனச் சரேலென்று விலகி நின்று திப்பிரமைகொண்டார். இவற்றைக்கண்ட சேக்கன் புன்முறுவல் கொண்டு 'புலவரே அஞ்சற்க: ஒன்றும் நிகழ்ந்திலது' என்னலும், இவ்விருவரது சம்பாஷணைகளால் சேக்கன்மனைவி நித்ராபங்கமுற்று விழித்துக்கொண்டு, தான் செய்த தவற்றையறிந்து வெட்கி அந்தபுர நோக்கி ஓடினள். பொழுதுவிடியவும், இச்செய்தி சிலர் பலர்க்குத் தெரிந்து சிலநாளெல்லாம் எங்கும்பரவ, ஊர்முழுதும் புலவர்மேற் பேரபவாதத்தைச் சுமத்தியது. இவ்வாறு அநியாயச்சொற்பரவிப் புலவர்காதிலும் அஃதெட்ட, அப்போது,

"தேரையார் தெங்கிளநீ ருண்ணார் பழிசுமப்பர்
நாரியார் தாமறிவர் நாமவரை நத்தாமை
கோரைவாய் பொன்சொரியங் கொற்றவன் றன்கண்டி
யூரைவாய் மூட வுரையறிந்தோ மில்லையே." *

என, 'இளநீரை யுண்ணாமலே பழிபடைந்த தேரைபோல' அரசன் மனைவியை விரும்பாதிருப்பவும் பழிசுமந்தேன்' எனப் பெரிதும் இரங்கிக் கூறி

* "தேரையார் செவ்விளநீர்" எனவும் பாடம்.

† "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான், நட்பாங் கிழமை தரும்"—என்னுந் திருக்குறளுரை காண்க.

னர், ஆயினும், சேக்கவள்ளல் இவரொழுக்கவுயர்வுகளை நன்கறிந்தவனாத லால், முன்னிலும் பதின்மடங்காக மதித்துத் தம்முயிர்த்துணைவராகக் கொண்டு புலவருடன் கலந்துகளித்துவந்தான் இவ்வாறு, ஒருயிரீருடற் றென்னும்படி அவ்விருவரும் நெடுநாள் வாழ்ந்துவருமிடையே, "உடனுயிர் நீங்குமுரிமைத்தாயது"! என்று முன்னோராற் புகழப்பட்ட உணர்ச்சியொத்த உத்தமநட்பு அவ்விருவர்க்குள்ளும் விளங்குகின்ற மாட்சியைச் சோதிப்பவன் போல, யமனானவன், சேக்கனதாருயிர்க் கிறுதிதேடவும், அப்பெருந்தகை உடனொத்த புலவர்பெருமானைத் தனியேவிட்டுத் தன்னுடலாமிரக்க வானு லகடைந்தான். இவ்வாறு தாம்வேறு அவன்வேறென்னாது அபிமானித்த பெருந்தகையும் தன்னாருயிராயிருந்தவனுமான பெருவள்ளல் சென்றதற்கு ஆற்றாதவராய், தம்வெற்றுடலைக்கொண்டு உலகில் வாழ ஒருப்படாது, சேக்க னுக்கென்று மூட்டப்பட்ட பேரெரியில் அவனுடன் விழுந்துயிர் துறப்பதே உத்தமமென்று கருதி, அப்பிரபுவினுடல் அவ்வெரியில் வைக்கப்பட்டபோது அவனை நோக்கி, "என் ஆருயிரே! அன்றுகட்டிலில் யான் உன் மனைவி யுடன் அறியாதுறங்கியபோது, என்னை 'அங்கே சிறிது நகர், ஒருபுறம் யானும் படுப்பேன்' என்றாய்; அத்தகைய நீ, இன்று இவ்வெரியில் நின்னு டன் யானும் ஒருபுறம்படுக்கும்படி சிறிது விலகுதி' என்னும் கருத்த மைந்த—

"அன்றுநீ செல்லக்கிட*வென்றாய் ஆருயிர்விட்
டின்றுநீ வானுலக மேறினாய்—நன்றுநன்று
வானக்க பூண்மடவார் மாரனே கண்டியூர்ச்
சேக்கா செல்லக் கிட."

என்னும் அருமைப்பாடலைக்கூறி அவனுடன் தீப்பாய்ந்து உயிர்நீத்தனர். இங்ஙனம் இப்புலவர் தீப்பாய்வதையறிந்து சோழன்வருந்தி மிகதடுத்துங்கே ளாது கீழ்க்காணுங்கவியைக்கூறி உடன்கட்டை யேறினாரென்ப.

வாழிசோழ வென்வாய் மொழிகேண்மோ
ஊழிநிலவெறி மாளிகையின் வயிற்
கட்டிளங்கணவன் கவின்பெறுசேக்கை
என்றறிமனவி நெடிதுயில்கொளச்
செல்லக்கிடமினெனக் கிடந்தருகெனைச்

---

* "அன்று நீ செல்லக் கட" எனவும், "சேக்கா செல்லக்கட்" என வும் பாடம்; க்கட நீ செல் - அங்கே நீ விலகு. "அக்கட விராவணற் கமைந்த வாற்றலே" எனக் கம்பர் வாக்கிலும் 'அக்கட' என்னும் இசைச் சொற் பயிறல்காண்க.

சொல்லியநண்பன்றனிச் செல்பவனே
நானுமேகுவனற் றுணையவர்க்கே.

என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

'உடனுயிர்நீங்கு மூரிமைத்தாய' பெருநட்பு முன்னர்க்கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையார்க்குள்ளே இருந்ததாகக் கேள்விப்பட்டது, † இப்போது நிகக்கன் பொய்யாமொழியாரிடத்தே நன்கு காணப்பட்டதென்று உலகம் புகழ்ந்து இரங்கியது, இவ்வாறு, பொய்யாமொழியார் தீப்புகுந்த அருஞ்செயலை, முன்னம் புலவர்மேற் சீநக்கன்மனைவி சம்பந்தமாக அபவாதங் கூறிய ஊராரெல்லாம் கேள்வியுற்று, இப்பெருந்தகைபால் அபராதம் விளைத்த எமக்கு உய்வின்மையால் "யாமும் இறப்பதே கருமம்" என்று அவர்களிற் பலரும் தீப்பாய்ந்து குற்றநீக்கினர். இச்செய்தியை,

"புரைதீ ரரசைப் பதிபுகுந்து பொய்யாமொழியார் புகழ்தமிழ்க்கா
அரசூர் முதலா வெழூரு மழலிற் புகுந்த தரிதாமோ
தரைசூழ் மதிய மறுவாற்றுஞ் சான்றோ ரவைதாற் றூரெனுஞ்சொல்
வரையா துலகிற் பெற்றோரும் வளஞ்சேர் சோழமண்டலமே"

என்னுஞ் சோழமண்டல சதகச்செய்யுளாலும்,

"சிற்றரசூர் பேரரசூர் தென்மாவை பூந்துருத்தி
கொத்தமலி கண்டி குருகாவூர்—இத்தனையும்
வாய்ப்பா யமர்ந்தருளு மன்னுகுடி யத்தனையும்
தீப்பாய்ந்த நல்ல திறம்.

என்னும் அதன் மேற்கோளாகிய பழையசெய்யுளாலும் அறிக.

இவ்வளவே, பொய்யாமொழியார் வரலாறாகத் தெரிந்தவை. இச்சரிதங்களால், பொய்யாமொழியார் தெய்வப்புலமை வாய்ந்த பெரியாரிலொருவரென்பதும், சிவபிரானாலும் முருகவேளாலும் வலிந்தாட்கொண்டு பாடப்பெற்ற பேரடியாரென்பதும், தமிழ்வளர்ச்சி புரிதற்காக அரும்பாடுபட்டவரென்பதும், தம் ஆப்தர்களிடத்தில் இவர் வைத்திருந்த பேரபிமான மளவற்றதென்பதும், மற்றும் இவரது உத்தமகுணவிசேடங்களும் நன்குவிளங்கும். இவர்க்குவழங்கிய பொய்யாமொழிப்பெயர், இவரது சத்தியவாக்கின் விசேடத்தால் எழுந்த சிறப்புப்பெயராக விருக்கலாம்; முன்னர்த் தெய்வப்புல

† "புணர்ச்சி பழகுதல்வேண்டா" என்னுந் திருக்குறட்குப் பரிமேலழகரெழுதிய விசேடவுரையிற் காண்க.

மைத் திருவள்ளுவர்க்குப் "பொய்யில் புலவன்" * என வழங்கியமை காண்க. இப்பெருந்தகை விளங்கிக் கீர்த்திபடைத்தது, நற்றமிழ யெனின், இதற்கு அதனிலும் சிறந்த பெருமையாதுளது? இனி, இப்புலவர் பெருமான் பாடியனவாக மேலே குறித்த பாடல்களில், "வாய்த்த வயிரபுரம்" என்பதும் "வாசமலர் மடந்தைபோல்வார்" என்பதும் "தேரையார் செங்கிளநீர்" என்பதும் கம்பர் வரலாற்றுடனும், "கூத்தாண் முகத்திரண்டு" என்பது காளமேகப் புலவர் வரலாற்றுடனும் இக்காலத்தார் வழங்கினர். அன்றியும், "உமையாளு நீயுமொருங்கொப்பே" † என்னும் கம்பர்வாக்குப் பொய்யாமொழியாரதாக இப்போது காணப்படுகிறது. இப்பாடல்களிலே பாடபேதங்களும் நிரம்ப வுண்டு. ஆயினும், இவையெல்லாம், தமிழ்நாவலர் சரிதை, சோழமண்டல சதகம், பாண்டி மண்டல சதகமுதலிய, நமக்குச் சில நூற்றாண்டுகட்கு முற்பட்ட நூல்களில், அவ்வப்பாடல் எழுந்த சரித்திரக்குறிப்புடன், மாறுபாடின்றி ஒப்பவழங்கப்படுதலால், இக்காலத்தவர் வழக்கினும் முன்னோர் வழக்கே நாம் கொள்ளத்தக்கதென்பது ஐயமற விளங்கும்.

இனி, பொய்யாமொழியார் காலமின்னதென்பதை ஆராய்வோம். திருப்புகழில், அருணகிரிநாதர், இப்புலவர் பெருமானுக்கு முருகக்கடவுள் அநுக்கிரகித்த விஷயத்தைப்பலமுறை கூறு மேலே அறியப்பட்டமையால், அவ்வருணகிரியார்க்குப் பெரிதுமுற்பட்டவர் நம்புலவர் பெருமானென்பது விளங்கும். அருணகிரிநாதர் காலம் இற்றைக்கு 450-ஆண்டுகட்கு முற்பட்டதென்பர். அன்றியும், நாற்கவிராச நம்பியென்பார் "சான்றோ ரிலக்கிய நோக்கி, அகப்பொருள் விளக்கமென் றதற்கொரு நாமம், புலப்படப் பொருள் விரித்திருளற வெழுதி" என்ற பாயிரப்படி, தாமே நூலு முரையுமாகச் செய்த அகப்பொருள் விளக்கத்தே, பொய்யாமொழியாரது தஞ்சைவாணன் கோவையைப் பிரபலமாக எடுத்தாளுதலின், அந்நம்பியார்க்கும் இப்புலவர் முற்பட்டவரென்பது தெளிவாகும் ‡ மேற்கூறியவாறு நம்பியாரே எழுதிய அகப்பொருளுரையில், தந்நூல் அரங்கேற்றப்பட்டது பாண்டியன் குலசே

---

* மணிமேகலை, காதை-உஉ, அடி-சுக.

† இது கம்பர்பாடியதென்பது செந்தமிழ் மூன்றாந்தொகுதி அஉ-அங-ம் பக்கங்களிற் காண்க.

‡ நம்பியார், தம்மகப்பொருளிலக்கணத்துக்குத் தஞ்சைவாணன் கோவையை இலக்கியமாகக் கொண்டாரென்பதை மாற்றி, பொய்யாமொழியார் தம் கோவையை நம்பியாரகப் பொருளிலக்கணத்துக் கொப்பவைத்துப் பாடினரென்பர் சிலர். நம்பிக்கு முற்பட்டவரென்று தெளியப்பட்ட பொய்யாமொழியார் வரலாற்றோடு இது மாறுபடுதலேயன்றி, "இலக்கியங்கண்ட தற்கிலக்கணம்" என்னும் வழக்குக்கும் விரோதமாம். அன்றியும், பெரும் புலவராய் விளங்கிய பொய்யாமொழியார், பிற்காலத்தவராகிய ஜைனரொருவர் நூலைவைத்து இலக்கியமமைத்தாரென்றல், அவர் பெருமைக்கு ஏற்றமாகாமையுங் காண்க.

கும்பகோணம்

பென்ஷன் டிராயிங்மாஸ்ட்டர்

ம-௱-௱-ஸ்ரீ, தி. மு. முக்கண்ணாச்சாரியார் அவர்கள்

இயற்றிய

**அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.**

மணிகொழிக்குங் கடலாடை மானிலத்தோர் நிருவாண மருவா வண்ணம், பணிகொழிக்குந் துகிலளித்து எவ்வெவரின் மானமதைப் பாது காக்கும், அணிகொழிக்கும் பிறப்பிலுயர் செங்குந்தர் குலவி ளக்க மாமான்றோர் நூலாம், திணிகொழிக்கும் பலசான்றுலத்தி யாய மொருபதில் சீர்த்திகழச் செய்தான்.

அன்னவ னியாரெனின் மணிகளகிற் றுண்டம்பொற் குகைகளி யானைக்கோடும், பன்னிதியும் வீசுதிரைக் காஞ்சிவளத் திருக்கோ வைப் பதியில் வாழ்வோன், தன்னிகரில் செங்குந்த குலமணியாய்ச் சண்முகவே டவத்தின் வந்த, இன்னியலின் வரம்புகண்ட வெழில் நாரா யணசாமிப் புலவ ரேறே.

---

இஃது

**கோவைச் சிவநேசச்செல்வ ரோருவர் கூறிய**

**அகவற்பா.**

வீங்குநீர்ஞாலத் திலகொளிவிரிக்கும்
பாங்கனற்கமலப் பரிதியின்விளங்குந்
தெங்குநெல்லரம்பை செவ்வளமிகுந்த
கொங்குவென்னாட்டிற் கொன்னுதனன்னகர்
கோவையெனும்பதி மேவுமோர்திலதம்
சதமருளிடமப் பதியுயர்பேரூர்
மனுமுதலீறிற் றனிப்பொருளருளி
னிகழ்நிலை குலமிவை நிலையழி வாக்கற்

புகழ்நிலையெனினும் புன்மையினியலும்
பான்மையினீக்கும் பயன்றருமாசையான்
மாண்பொருளமைய மல்குநன் னூல்கணின்
றேதமின்மேற்கோ ளேற்புழியாண்டு
பேதமின் றுணர பிறங்குதன்குலத்தோர்க்
கவருறையிடங்க ளெங்கணும்பரவ
நவையில்வாசக நற்றமிழ்நடையி
னிலவசெங்குந்தர் குலப்பிரகாசிகை
யென்றொருநூலை இன்றமிழ்வல்லோர்
மகிழ்வுடனேற்ப வகுத்தனனவன்றான்
கோவையின் பதியிற்செங் குந்தர்மரபின்
மேவியமாமணி விஞ்சையரிலங்குஞ்
சாரதாவிலாச சற்சபைவிளங்க
சிரியபயிற்சி சிறக்கவாய்ந்துள்ளோன்
காமற்கடந்த கவினா ராயுண
சாமிப் பெயரவன் சண்முகமழவே.

தயார்! தயார்!! விற்பனைக்குத் தயார்!!!

1908௵ பிப்ரவரி௴ 10உக்குள் புத்தகம் அவசியம் வெளிவரும்.

சொற்பகாபிகளே அச்சிடப் படுவதால் முன்னாடியே
தங்களுடைய பெயரை ரிஜிஸ்டர் செய்து கொள்ளவும்.
பின்னால் மனஸ்தாபம் வேண்டாம்.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# செங்குந்தர் குலப்பிரகாசிகை.

ஒப்பற்ற ஒரு முதற்றனிக் கடவுளாகிய ஸ்ரீ சிவபெருமான் றிருவருள் நோக்க உற்பவரும், அச்சிவ பெருமானால் ஒழுக்க நிலைகளை நோக்கிக் கைக்கோளரெனப் பெயர்தரப் பெற்றவரும், பார்ப்பதியார் பரிந்தளித்த குந்தப் படையினரும், சிவசமய பரிபாலகரும், செவ்வேளின் றுணைவரும், தேவமானவ மென்னும் இருவகைத் தசாங்கம் பெற்றவரும் மனு குலத்துவந்த முசுகுந்த வேந்தனின் அருந்தவவரப் பிரசாதருமாகிய செங்குந்த மரபினர்களுக் கோர் விகய விஞ்ஞாபனம்.

நமரங்காள்! நீடிய புகழ்பெற்ற மலைமேல் தீபமெனச் சிறக்கும் நம்மனோர் பெருமைகள் காலாந்தரத்து இயற்கை திரிந்து நிற்பது நம்மவர் ஆசாரவனுஷ்டானக் குறைவேயாம். அத்தகைய குறை நிவர்த்திக்குக் காரணமாக நிற்பது கல்வியில்லாமையினாலே யாமென்பது உலகறிந்த தோருண்மை அஃதை நம்மனோர் பலர் கல்லாமையான் நம்மரபின் நூல்களைக் கருதுத்தலு மொழிந்தனர். இவற்றால் நம்மனோர் பூர்வ சரிதங்கள் லேசமாய் நாமவற்றைக்கண்டு களிப்பதற்கு மேதுவில்லாம லொழிந்தன. உலகினில் ஒப்புயர்வற்று விளங்கும் நம்மவர் பெருமை இங்ஙனம் **மலினமடைந்து** வருவதையும், நாம் க்ஷீணகதிக்காளாகுவதையும் நிவர்த்திக்க நம்மில் ஒரு மகான் தோன்றி பழமைபோல் நம்பூர்வ ஸ்திதியின்படி எக்காலத்து உயரவைப்பாரோ? அக்காலமே நற்காலமேயாம். ஆனால் நம் பெரியார் கிரமப்படி யொழுகி நடந்த பூர்வ சவிஸ்தாரங்களை நூன் முகத்தாலறிந்து அவைகளின் மூலமாகச் சிறிது சிறிதாக நல்வழி யடையலா மென்றாலோ? அவற்றிற் சேனும் அரிய நங்குலப் பிரபந்தங்க ளொன்றும் உள்ளபடி வெளிவருவதைக் காணோம்.

இத்தகைய கவலைக் குள்ளமிழ்ந்து நெடுநாள் வருந்தி நின்ற சமயத்து "கோயமுத்தூரில் நம்மரபின் வழிவந்த சி. து. நாராயணசாமி முதலியாரென்பா" ரொருவர், பல சாத்திரங்களினின் றுந் திரட்டிக் கோர்வையாக்கிச் "செங்குந்தர் குலப் பிரகாசிகை" யெனும் பெயரிட்டு ஒரு புத்தகம் எழுதி முடித்து வைத்திருப்பதாகக் கேள்விப் பட்டபடி அடியிற் கையொப்பமிட்ட நாம் அப்பிரதியை வரவழைத்து அவற்றிலுள்ள விஷயங்கள் முழுமையும் தக்கபடி பரிசீலனைசெய்தும், தகுந்தவர்களைக்கொண்டு பார்வையிடுவித்தும் நாமறிந்தவை, அப்புத்தகத்திலுள்ள அம்சங்கள் முழுமையும் நம்மவ

ராவா ரொவ்வொருவரும் அத்தியாவசியம் அறிந்திருக்கவேண்டுவது இன்றியமையாக் கடனென்பது நம்மறிவிற்கு ஒருமுகமாய்ப் பட்டதே.

இந்நூலிலுள்ள "செங்குந்த நுற்பவம்" "செங்குந்தர் பராக்கிரமம்" "செங்குந்தர் விஜயம்" "செங்குந்தர் வெற்றி," "செங்குந்த மன்னர்." குந்த மகான்கள்." "செங்குந்தர் புலமை," "செங்குந்தர் சிறப்பு." "செங் "செங்குந்தர் தற்காலநிலமை." "செங்குந்தர் குலவொழுக்கம்" ஆகிய அத்தியாயங்கள் பத்தும், கிரமப்படி தொகுக்கப்பட்டு நம்மரபினர்க் கோர் நம்பிக்கைவாய்ந்த நல்வழிகாட்டியாகவு மிருக்கின்றன.

எனவே, நம்மவ ரொவ்வொருவரிடமும் இப்புத்தகம் ஒவ்வொன் றிருக்க வேண்டுவது முக்கியமென்ற நாம் மிக வற்புறுத்துகின்றோம்.

குலாபிமானிகளாயுள்ளார் யாவரும் இந்நூலைப் பெரிதும் ஆதரித்தல் வேண்டுமெனத் திருவருளைச் சதா சிந்திக்கின்றனம்.

இங்ஙனம்,

திருச்செங்கோட்டு மஹாநாட்டுச் செங்குந்தர்கள்

உத்திரவுப்படி,

நாட்டாண்மை,

தே. கந்த முதலியார்.

காரியஸ்தர்கள்.

1 மொ. செங்கோட முதலியார்
2 ஆ. நமசிவாய முதலியார்
3 கூ. சுப்பராய முதலியார்
4 கோ. அர்த்தநாரி முதலியார்
5 பு. கந்தசாமி முதலியார்
6 மொ. இராமசாமி முதலியார்
7 ப. தாண்டவராய முதலியார்
8 தே. கவலைமுத்து முதலியார்

முக்கியகுறிப்பு.—இப்புத்தகம் யாவரும் எளிதில்பெற்று வாசித்து மகிழும்பொருட்டே இதன்விலை 12-அணாவாக ஏற்படுத்தப்பட்டது.

இது டிம்மி 8 பேஜ் சைசில் 176-பக்கங்கள் கொண்டதாய் பளபளப்பான காகிதத்தில் முத்துப்போன்ற எழுத்தில் நாகரீகமாகப் பதிப்பிக்கப்படுகிறது.

இப்புத்தகம் வேண்டுவோர்கள் கீழ்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

சி. கு. நாராயணசாமி முதலியார்,

செங்குந்தர் குலப்பிரகாசிகையின் ஆசிரியன்,

நெ-118. தாம்ஸன் தெருவு, கோயமுத்தூர்.

CAXTON PRESS, MADRAS.